# நற்சிந்தனை

C.NO.200

JAFFNA HINDU LADIES' COLLEGE * LIBRARY *

S. 918

# நற்சிந்தனை

சிவதொண்டன் நிலையம்
யாழ்ப்பாணம்

இது
யாழ்ப்பாணச் சிவதொண்டன் நிலையத்து
வெளியீடு

சென்னை, அடையாறு, பிரம்மஞான சங்கம்
வஸந்தா பிரஸில் அச்சிடப்பட்டது

உ

சிவமயம்

ஸ்ரீ [illegible] பண்டார, [illegible],
[illegible]யவர்கள், [illegible]
ஸ்ரீ [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]. ஆகில் ஸ்ரீ [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible] [illegible]
[illegible]

நாங்கள் சிவனடியார்கள். எங்களுக்கு ஒரு குறைவுமில்லை. சிவதொண்டு செய்வதே எங்கள் தொழில். அதற்காகவே நாங்கள் பூமியில் வாழுகிறோம்.

சந்திரன் சிவதொண்டு ஆற்றுகின்றது. சூரியனும் ஏனைய கிரகங்களும் அத்திருப்பணியையே செய்கின்றன. தேவர்களும் அசுரர்களும் கின்னரர், கிம்புருடர், வித்தியாதரர்களும் அப்படியே தொண்டாற்றி வருகின்றனர்.

அனைத்துஞ் சிவன் செயல், அவனன்றி அணுவும் அசையாது. நாம் இழந்து போவதுமொன்றுமில்லை. ஆதாயமாக்கிக் கொள்வதும் ஒன்றுமில்லை. இருந்தபடியே இருக்கின்றோம்.

நமக்கு ஒப்பாரும் மிக்காரும் ஒருவருமில்லை. நமக்கு இதம் அகிதம் இல்லை. மரணம் பிறப்பில்லை. வேண்டுதல் வேண்டாமை இல்லை. மண்ணுதி ஆசை யில்லை. மனமான பேய் இல்லை. காலதேச வர்த்தமானம் நமக்கில்லை. நாம் அனைத்துக்கும் சாட்சியாக விளங்குகின்றோம்.

ஓம் தத் சத் ஓம்

நாங்கள் சிவனடியார்; நாங்கள் சிவனடியார்; நாங்கள் சிவனடியார்; நாங்கள் சிவனடியார். இது சரியை; இது கிரியை; இது யோகம்; இது ஞானம்; இது மந்திரம்; இது தந்திரம்; இது மருந்து.

இந்தத் தியானத்தில் நிலைத்தலே நிஷ்டை; இந்த நிஷ்டை யுடையோர்க்குச் சீலமில்லை; தவமில்லை; விரதமில்லை; ஆச்சிரமச் செயலில்லை.

இவர்கள் தாம் விரும்பிய வண்ணம் மண்ணில் வாழ்ந்தார்கள்; வாழுகிறார்கள்; வாழ்வார்கள். இவர் பெருமை யாவருமறியார்; கற்கண்டின் இனிமை கற்கண்டை உமிபவர்க்கே தெரியும்.

ஒரு பொல்லாப்பு மில்லை.
எப்பவோ முடிந்த காரியம்.
நாமறியோம்.
முழுதும் உண்மை.

சிவதொண்டன் மலர் 3: இதழ் 11, 12—37


# சிவதொண்டன் வரவு

### நிலைமண்டில ஆசிரியப்பா

ஓங்கா ரத்தி னுயர்பெரும் பொருளினை
யாங்கணும் பரப்ப எழுந்துள தொண்ட!
அண்டத்து வதியும் பிண்ட வுருவினர்
ஒண்டொடி மாதரை மண்டிடும் பொருளை
மண்ணினைச் சதமெனக் கண்ணெனத் தமதென
எண்ணியாங் கெய்தப் பண்ணிடும் முயற்சியிற்
றுன்புற் றயர்ந்தும் இன்புற்று மகிழ்ந்தும்
இருவினை யரவால் வெருவுற்ற காலை
அஞ்சல் அஞ்சலென் கிஞ்சுகக் கிள்ளைகாள்!
எஞ்சலில் இன்பம் ஈகுவன் யானெனாக்
கொஞ்சிக் காத்திடுங் குணப்பெருந் தந்தாய்!
ஊனஞ் சுருக்கி ஞானம் பெருக்கிக்
கண்ணென வுயிர்களைக் காத்திடு மன்னாய்!
நம்மை யறியவும் செம்மை செறியவும்
எம்மருந் தலைவன் இறைவனை யுன்னி
வெம்மைப் பிறவி வேரறக் களையவுந்
துணையா வதியும் இணையில் துணைவி!
திங்கள் தோறும் எங்களைக் காணுஉ
பொங்கிய வுவகையிற் போற்றுமெந் துணைவ
மிக்கநல் குரவிற் பொக்கிஷ மீயும்

ஒக்கலை நிகர்வோய்! மிக்கநற் கலையோய்!
உற்றுழி யுதவும் பெற்றியிற் சிறந்த
அன்புசால் நண்ப! குன்றிடா இன்ப!
திருந்திய அறிவு தெருட்டுசீர்க் குரவ!
குழலையும் பழிக்கும் மழலை மொழியினால்
இழுமெ னோசை தழுவும் பாலக!
ஆசை யறுத்திடும் அச்சமில் கேசரீ!
ஐம்புல வேட்டைசெய் அரச ரேறே!
மந்தார தருவே! நந்தா விளக்கே!
சிந்தா மணியே! சிவப்பெருங் கொழுந்தே
வேதசித் தாந்த சமரச வினோத!
ஓதலி லென்றும் உயர்வுற் றொளிர்வோய்
சோதிட மணியே! தூஉய வைத்திய!
சாதலும் பிறப்பும் தவிர்த்திடும் உணர்வினோய்
மாதிடப் பாகனை மருவிடச் செய்வோய்!
கண்மையும் வண்மையும் தண்மையும் ஒண்மையும்
உண்மையும் திண்மையும் நுண்மையும் நன்மையும்
யாவு மானோய்! யாவரு மானோய்!
தேவரும் மூவரும் ஏவருங் காணாப்
பூவடி போற்றும் புனித! வருக
கண்ணே வருக கருத்தே வருக
எண்ணே வருக எழுத்தே வருக
பொன்னே வருக மணியே வருக
இன்னே வருக எந்தாய் வருக
தன்னே ரில்லோய் தானே வருக
அப்ப வருக சுந்தர வருக
ஒப்பில் லாமணி வாசக வருக

ஞானப் பாலைத் தேனொடு சொரியும்
கானசம் பந்தக் களிறே வருக
வருக வருக தொண்டனே வருக
அவதொண்ட ரறியாச் சிவதொண்ட வருக
உவருந் தவரும் எவரும் புகழ
வருகநீ டூழி வருக வருகவே!



அப்பனும் அம்மையும் சிவமே
அரிய சகோதரரும் சிவமே
ஒப்பில் மனைவியும் சிவமே
ஓதரும் மைந்தரும் சிவமே
செப்பில் அரசரும் சிவமே
தேவாதி தேவரும் சிவமே
இப்புவி யெல்லாம் சிவமே
என்னை யாண்டதும் சிவமே.

# நற்சிந்தனை

## எங்கள் குருநாதன்

என்னையெனக் கறிவித்தா னெங்கள்குருநாதன்
இணையடியென் தலைவைத்தா னெங்கள்குருநாதன்
அன்னைபிதாக் குருவானு னெங்கள்குருநாதன்
அவனியெல்லா மாளவைத்தா னெங்கள்குருநாதன்
முன்னைவினை நீக்கிவிட்டா னெங்கள்குருநாதன்
மூவருக்கு மறியவொண்ணு னெங்கள்குருநாதன்
நன்மைதீமை யறியாதா னெங்கள்குருநாதன்
நான்தானுய் விளங்குகின்று னெங்கள்குருநாதன். 1

தேகம்நீ யல்லவென்று னெங்கள்குருநாதன்
சித்தத்திற் றிகழுகின்று னெங்கள்குருநாதன்
மோகத்தை முனியென்று னெங்கள்குருநாதன்
முத்திக்கு வித்தென்று னெங்கள்குருநாதன்
வேகத்தைக் கெடுத்தாண்டா னெங்கள்குருநாதன்
விண்ணும் மண்ணு மாகிநின்று னெங்கள்குருநாதன்
தாகத்தை யாக்கிவிட்டா னெங்கள்குருநாதன்
சத்தியத்தைக் காணவைத்தா னெங்கள்குருநாதன். 2

வாசி யோகந் தேரென்று னெங்கள்குருநாதன்
வகாரநிலை அறியென்று னெங்கள்குருநாதன்
காசிதேசம் போவென்று னெங்கள்குருநாதன்
கங்குல்பக லில்லையென்று னெங்கள்குருநாதன்
நாசிநுனி நோக்கென்று னெங்கள்குருநாதன்
நடனந்தெ ரியுமென்று னெங்கள்குருநாதன்
மாசிலோசை கேட்குமென்று னெங்கள்குருநாதன்
மற்றுப்பற்றை நீக்கென்று னெங்கள்குருநாதன். 3

இருவழியை அடையென்று னெங்கள்குருநாதன்
எல்லாம் விளங்குமென்று னெங்கள்குருநாதன்
கருவழியைக் கடவென்று னெங்கள்குருநாதன்
கட்டுப்படும் மனமென்று னெங்கள்குருநாதன்
ஒருவரும றியாரென்று னெங்கள்குருநாதன்
ஓங்கார வழியென்று னெங்கள்குருநாதன்
நிருமலனு யிருவென்று னெங்கள்குருநாதன்
நீயேநா னென்றுசொன்ன னெங்கள்குருநாதன். 4

திக்குத் திகாந்தமெல்லா மெங்கள்குருநாதன்
சித்தத்துள் நிற்கவைத்தா னெங்கள்குருநாதன்
பக்குவமாய்ப் பேணென்று னெங்கள்குருநாதன்
பார்ப்பதெல்லாம் நீயென்று னெங்கள்குருநாதன்
அக்குமணி யணியென்று னெங்கள்குருநாதன்
அஞ்செழுத்தை ஓதென்று னெங்கள்குருநாதன்
நெக்குநெக்கு உருகென்று னெங்கள்குருநாதன்
நித்தியன்நீ யென்றுசொன்ன னெங்கள்குருநாதன். 5

தேடாமல் தேடென்று னெங்கள்குருநாதன்
சிவன் சிவனென்று னெங்கள்குருநாதன்
நாடாமல் நாடென்று னெங்கள்குருநாதன்
நல்லவழி தோன்றுமென்று னெங்கள்குருநாதன்
பாடாமற் பாடென்று னெங்கள்குருநாதன்
பத்தரினஞ் சேரென்று னெங்கள்குருநாதன்
வாடாமல் வழிபடென்று னெங்கள்குருநாதன்
வையகத்தில் வாழென்று னெங்கள்குருநாதன். 6

இத்திக்கு மொருமொழியா லெங்கள்குருநாதன்
சின்மயத்தைக் காணவைத்தா னெங்கள்குருநாதன்
எத்திக்கு மாகிநின்று னெங்கள்குருநாதன்
எல்லாம்நீ யென்றுரைத்தா னெங்கள்குருநாதன்
வித்தின்றி நாறுசெய்வா னெங்கள்குருநாதன்
விண்ணவரு மறியவொண்ணு னெங்கள்குருநாதன்
தத்துவா தீதனு னெங்கள்குருநாதன்
சகல சம்பத்துந்தந்தா னெங்கள்குருநாதன். 7

ஆதியந்த மில்லையென்று னெங்கள்குருநாதன்
அதுவேநீ யென்றுரைத்தா னெங்கள்குருநாதன்
சோதிமய மென்றுசொன்ன னெங்கள்குருநாதன்
சுட்டிறந்து நில்லென்று னெங்கள்குருநாதன்
சாதி சமயமில்லா னெங்கள்குருநாதன்
தானய் விளங்குகின்று னெங்கள்குருநாதன்
வாதியருங் காணவொண்ணு னெங்கள்குருநாதன்
வாக்கிறந்த இன்பந் தந்தா னெங்கள்குருநாதன். 8

முச்சந்திக் குப்பையிலே எங்கள்குருநாதன்
முடக்கிக் கிடந்திடென்று னெங்கள்குருநாதன்
அச்சமோடு கோபமில்லா னெங்கள்குருநாதன்
ஆணவத்தை நீக்கிவிட்டா னெங்கள்குருநாதன்
பச்சைப் புரவியிலே எங்கள்குருநாதன்
பாங்காக ஏறென்று னெங்கள்குருநாதன்
தச்சன்கட்டா வீட்டிலே எங்கள்குருநாதன்
தாவுபரி கட்டென்று னெங்கள்குருநாதன். 9

நாமேநா மென்றுரைத்தா னெங்கள்குருநாதன்
நமக்குக்குறை வில்லையென்று னெங்கள்குருநாதன்
போமேபோம் வினையென்று னெங்கள்குருநாதன்
போக்குவர வில்லையென்று னெங்கள்குருநாதன்
தாமேதா மென்றுரைத்தா னெங்கள்குருநாதன்
சங்கற்ப மில்லையென்று னெங்கள்குருநாதன்
ஓமென் றுறுதிதந்தா னெங்கள்குருநாதன்
ஊமையெழுத் தறியென்று னெங்கள்குருநாதன். 10

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

மலர் 2 : இதழ் 1—16-12-35

---

## தொண்டர் நாங்களே

இராகம்—மாயாமாளவகௌளை. தாளம்—திஸ்ர ஏகம்

**பல்லவி**

தொண்டர் நாங்களே—சிவ
தொண்டர் நாங்களே.

**அநுபல்லவி**

அண்டத்தில் பிண்டத்தில்
ஆண்டவனைக் காணும் (தொண்)

**சரணம்**

மண்டு பிணியால் வருந்த மாட்டோம்
மாதாக் கருப்பையின் மீண்டு வாராத் (தொண்)

பண்டு செய்வினையெலாம் பறந்து போச்சு
பாரிலனைத்தும் உறவே யாச்சு (தொண்)

கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்
கென்று மாளாகி எப்போதும் வாழும் (தொண்)

வேதாந்த சித்தாந்தம் வேறாகக் காணோம்
வீட்டு நெறியினில் நாட்டம் மிகவுள்ள (தொண்)

சிவ சிவ வென்றெந்த வேளையுஞ் சொல்லிச்
சீவன் சிவனென்று சித்தத்திற் கொள்ளும் (தொண்)

இருந்த இடத்தினில் எல்லாம் பார்ப்போம்
பொருந்திய வண்ணம் பூமியில் வாழும் (தொண்)

*மலர் 1 : இதழ் 4—14-3-35*

## சர்வம் பிரம்ம மயம்

இராகம்—கமாசு. தாளம்—ஆதி

பல்லவி

*சாந்தம் உபசாந்தம்*
*சர்வம் பிரம மயம்* (சாந்)

சரணம்

*சாந்தனையும் மாந்தரன்பு*
*கூர்ந்திதனைக் கூறுவீர்* (சாந்)

*சார்ந்த இடமெங்குஞ் சிவ சிவ*
*தங்கும் பரிமளம் பொங்கும் சிவ* (சாந்)

*தாம் திமிதிமி தரிகிட கிடசெம்*
*நாம் அதுவென அறிவது கவசம்* (சாந்)

*தொதிந்தத் தாதாதா தரிகிட*
*ஏனிந்தப் பாடெங்குஞ் சிவ சிவ* (சாந்)

*அண்ட பிண்டமெங்கும் அதுவெனக்*
*கண்டு தொண்டு செய்வது தகுதி* (சாந்)

*மலர் 1 : இதழ் 5—14-4-35*

## ஒழுக்கம்

### நிலைமண்டில ஆசிரியப்பா

எழுக புலருமுன் ஏத்துக பொன்னடி
தொழுது வணங்குக தூநீறணிக
பழுதிலெழுத்தும் பன்னுக பன்முறை
அழுது புலம்புக வாய்விட்டரற்றுக
அன்னையப்பர் அடியிணை வணங்குக
தன்னைப் போலச் சகலமும் ஓம்புக
விண்ணைப் போல வியாபகம் ஆகுக
கண்ணைப் போலக் காக்க அறத்தை
செய்வன எல்லாஞ் செவ்வனே செய்க
கையும் மெய்யும் கருத்திற் கிசைக
அழுக்காறு கோபம் அவாஅ ஒழிக்க
விழுப்பம் மிக்க மேன் மக்கள் தம்மை
ஒருபோதும் மறவா துறவு கொள்ளுக
கருவினில் வாராக் காரணங் காண்க
தன்னை அறிக தானே ஆகுக
மின்னை ஒத்த வாழ்வை வெறுக்க
வறுமை வந்துழி மனம் தளரற்க
மறுமை இன்பம் மறவாது நாடுக
அடியார் தங்கள் அடியிணை மலர்க்கீழ்
குடியாய் வாழுக் குறைவெலாந்தீர்க
ஈசன் அடியிணை ஏற்றி ஏற்றி
வாச மலர்கொடு வாழ்த்தி வாழ்த்தி
மத்தன் இவனென மண்ணவர் பேசவும்
சித்தன் இவனெனத் தேவர் கொண்டாடவும்
இவ்வண்ணம்
ஒத்தன ஒத்தன ஊரவர் பேசிடச்
சித்தந் தெளிந்து சிவாய நமவென
நின்று மிருந்துங் கிடந்தும் நினைந்து
பொன்றும் உடலைப் போற்றுதல் ஒழிந்து

நன்மை தீமை நாடாதொருவி
அன்னை போல அன்பிற் சிறந்து
பின்னை ஒன்றும் பேசா தடங்கி
என்றும் வாழ்ந்தினி திருத்தல் இன்பமென்.

மலர் 1: இதழ் 6—14-5-35

---

## முத்தி சேர்குவமே

நேரிசை ஆசிரியப்பா

இன்ப துன்பம் இவையே மாயை
அன்பு சேர் ஆன்மா அறிவே வடிவம்
ஆதலால் நின்னை அவையோ தீண்டா
கானல்நீ ரால்நிலங் கரைவது முண்டுகொல்
ஞான சற்குரு நற்றிருப் பாதம்
ஆன மட்டும் அகங் குழைந் துருகிப்
போன காரியம் புந்தியில் நினையா
திடைவி டாதுநின் றேத்திப் போற்றி
மடையினீர் பெருகி வழிவது போல
இடையறு தினிய ஏகாந்தனுகிச்
சங்கற்ப விகற்பந் தவிர்ந்திடு சமாதியிற்
பொங்கிடும் அமிழ்த மோனக மருந்தி
இருந்தாங் கினிதே இருந்து
திருந்திய விதேக முத்திசேர்குவமே

மலர் 1 : இதழ் 7—15-6-35

---

## சிவாயவே

### கலிவிருத்தம்

அந்தம் ஆதியும் இல்லான் அடியரை
எந்த நேரமும் நீங்கா இறையவன்
கந்த மாமலர்ப் பாதத்தைக் கைதொழ
வந்த வல்வினை மாளும் சிவாயவே. 1

ஆடுபாம்பணிந் தம்பலத் தாடுவான்
பாடுவார் பவம் தீர்க்கும் பராபரன்
தேடுவார் தங்கள் சித்தத் திருந்திடும்
பாடு நீங்கிடும் பற்றுச் சிவாயவே. 2

இளமை மூப்பிலான் எம்மிறை எம்பிரான்
களவு செய்யும் கருமிகள் தங்கட்கும்
அளவிலா அருள் ஈயும் அளியினன்
உளம் பொருந்தி இருக்கும் சிவாயவே. 3

ஈரவார் சடை எந்தை எமக்கெலாம்
பேரருள் செய்யும் பெற்றியன் பேயுடன்
ஆரவாரமாய் ஆடுவன் காட்டினில்
நேரதாய் என்முன் நிற்குஞ் சிவாயவே. 4

உலகம் யாவையும் தந்திடும் உத்தமன்
அலகிலா விளையாட்டயர் தத்துவன்
பலகலையெலாம் பாலிக்கும் வித்தகன்
சில கணமும் பிரியான் சிவாயவே. 5

ஊன் பொதிந்த உடலும் உயிரவன்
நான் படும் பாடு நன்றாய் அறிபவன்
மான் படுங்கையன் மாமலர்ச் சோதியான்
தான் வதிந்தானென் சித்தஞ் சிவாயவே. 6

எள்ளும் எண்ணெயும் போன்ற இறையவன்
கள்ளுலாவுங் கடிமலர்க் கொன்றையான்
உள்ளுவார் தங்கள் உள்ளத்தில் உள்ளவன்
நள்ளுவார் தமை நாடும் சிவாயவே. 7

ஏழை பங்கன் எருதில் வருபவன்
தாளை நம்பித் தவஞ் செய்யுந் தாபதர்
நாளை இன்றென நாடி நலிகிலர்
ஏழையேன் எனை ஆளும் சிவாயவே. 8

ஐயமில்லா அருந்தவர் நெஞ்சில் வாழ்
தெய்வ மென்னுடைச் சித்தத்திலும் முளன்
உய்வ முய்வ மொரு குறையும் மில்லை
வைய மெங்கும் வணங்கும் சிவாயவே. 9

ஒருவனாலே உலகம் உதித்ததே
ஒருவனாலே உலகம் நிலைத்ததே
ஒருவனாலே உலகம் ஒடுங்கிற்றே
ஒருவனே என் உறுதி சிவாயவே. 10

ஓங்காரத்தில் உதித்த துலகெலாம்
ஓங்காரத்தில் நிலைத்த துலகெலாம்
ஓங்காரத்தில் ஒடுங்கும் உலகெலாம்
ஓங்காரத்தில் உறுதி சிவாயவே. 11

*மலர் 1 : இதழ் 9—17-8-35*

---

## சிவத்தியானம்

அன்னை பிதாக் குருவாய்
ஐயனென்னை ஆண்டு கொண்டான்
என்னை அறிந்தேனெடி—கிளியே
இச்சை யெல்லாம் போச்சுதெடி

இளங்குயிலே நடந்து வாடி
எல்லாம் சிவ ரூபமெடி
அளந்தறிய முடியா தெடி
தளர்ந்திடாமல் தொடர்ந்து வாடி
தானதாம் தானதாம்
தானதாம் தானதாம். 1

பொன்னாசை பெண்ணாசை
மண்ணாசையால் மனிதரெல்லாம்
சின்னபின்ன மானாரெடி—கிளியே
சிவத்தியானம் செய்திடுவோம்

சிங்காரமான பூங்குயிலே
அங்குமிங்கு மலையாதே
கங்குல்பக லற்றகாட்சி
காட்டி வைப்பேன் கண்ணே வாராய்
எங்கு மவனெடி எங்கு மவனெடி
எல்லா மவனெடி எல்லா மவனெடி. 2

விண்ணாணம் பேசியன்றோ
வீண்காலம் போக்குகின்றோம்
பொன்னான மேனியரைக்—கிளியே
பூவெடுத்துப் பூசைசெய்வோம்

பூவையே நீ புகலக் கேளாய்
சேவை செய்தவர் சீவன்முத்தர்
நாவை நீ காத்துக் கொள்ளடி

நானெனும் ஆணவம் நீக்கிக்கொள்ளடி
நாமதுவெடி நாமதுவெடி
நாமதுவெடி நாமதுவெடி. 3

மலர் 1: இதழ் 12—16-11-35

---

## தன்னையே

ஓதி ஓதி யுணர்வதுந் தன்னையே
நீதி பேசி நினைவதுந் தன்னையே
சாதி பேசிச் சலிப்பதுந் தன்னையே
ஆதி ஆதியென் றுய்வதுந் தன்னையே. 1

ஆறிஆறி அறிவதுந் தன்னையே
தேறித்தேறித் தெளிவதுந் தன்னையே
மாறிமாறி நினைவதுந் தன்னையே
கூறிக்கூறிக் குறிப்பதுந் தன்னையே. 2

சிவத்தை நோக்கித் தெளிவதுந் தன்னையே
பவத்தை நீக்கிப் பணிவதுந் தன்னையே
தவத்தை ஆற்றி அறிவதுந் தன்னையே
உவத்தல் காய்தல் ஒழிப்பதுந் தன்னையே. 3

வாதம் பேசி மதிப்பதுந் தன்னையே
காதம் ஓடியும் காண்பது தன்னையே
பூதம் ஐந்தனுட் போற்றலுந் தன்னையே
நாதம் விந்தென நச்சலுந் தன்னையே. 4

ஓடி ஓடி உவப்பதுந் தன்னையே
தேடித் தேடித் தெளிவதுந் தன்னையே
நாடி நாடி நகைப்பதுந் தன்னையே
கூடிக் கூடிக் குறிப்பதுந் தன்னையே. 5

மலர் 1: இதழ் 10—17-9-35

---

## எங்கள் வளநாடு

அன்பர்பணிந் தேத்திநிற்கும் நாடெங்கள் நாடே
அரனுறைதற் கிடமான நாடெங்கள் நாடே
துன்பங்களைப் போக்கி நிற்கும் நாடெங்கள் நாடே
தூயவருள் மழை பொழியும் நாடெங்கள் நாடே
இன்பப்பயிர் ஓங்கிவளர் நாடெங்கள் நாடே
இந்திரியக் கள்வரற்ற நாடெங்கள் நாடே
என்புநனி நெக்குருக என்னை வலிந்தாண்ட
என்குரவன் காட்டிவைத்த தெங்கள்வள நாடே.

ஆதியந்த மில்லாத நாடெங்கள் நாடே
அம்பரம்போ லேநிறைந்த நாடெங்கள் நாடே
தீதிலருட் கடல்சூழ்ந்த நாடெங்கள் நாடே
திக்கெட்டும் பெருகிவளர் நாடெங்கள் நாடே
சோதிமய மானவுயர் நாடெங்கள் நாடே
சுருதிஎல்லாம் ஓலமிடும் நாடெங்கள் நாடே
ஓதாம லோதுவித்த உயிர்க்குயிராம் நாதன்
ஒண்கழல்கள் காட்டிவைத்த தெங்கள்வள நாடே.

கட்டுநமன் கிட்டரிய நாடெங்கள் நாடே
கன்றுமன வெப்பொழிக்கும் நாடெங்கள் நாடே
வெட்டவெளி யாறோடும் நாடெங்கள் நாடே
மீதான வெற்புடைய நாடெங்கள் நாடே
பட்டப் பகல் போலொளிரும் நாடெங்கள் நாடே
பகலிரவு தோன்றாத நாடெங்கள் நாடே
மட்டுப்படா மயக்மெலாந் தீரவெனை ஆண்டான்
மலர்ப்பாதங் காட்டிவைத்த தெங்கள்வள நாடே.

வெய்யபுலிப் பார்வை யொழி நாடெங்கள் நாடே
மேலான பூரணமாம் நாடெங்கள் நாடே
துய்யவறி துயில் புரியு நாடெங்கள் நாடே
தூயசுக வாரிதிதோய் நாடெங்கள் நாடே

செய்யநடங் கண்டுகளி நாடெங்கள் நாடே
சிந்தைஇறந் திட்டதனி நாடெங்கள் நாடே
ஐயனடி யேனறியாப் பருவத்தே வந்து
ஆட்கொண்டு காட்டிவைத்த தெங்கள்வள நாடே.

விஞ்சுபிறப் பிறப்பறுக்கும் நாடெங்கள் நாடே
மெய்யிற் சிவம் பிறக்கவைக்கும் நாடெங்கள் நாடே
செஞ்சரண நிலவுவிரி நாடெங்கள் நாடே
திரையற்ற நீர்போன்ற நாடெங்கள் நாடே
அஞ்சிமிக வழியறியா தயர்ந்து மனந் துடித்து
ஆருக விழிபெருக அலமந்து வாடித்
தஞ்சமென்ற எளியனெனை அஞ்சலென்று காத்த
தவஞானக் குருவடிவம் காட்டிவைத்த நாடே.

மலர் 2 : இதழ் 1—16-12-35

---

## வழி

### நிலைமண்டில ஆசிரியப்பா (குறளடியாசிரியப்பா)

முத்திக்கு வழியை மொழியக் கேண்மோ!
சத்தியம் பொறுமை சாந்த மடக்கம்
நித்தியா நித்திய வத்து விவேகம்
பத்திசெய் யடியரைப் பணிதல் பகலவன்
எழுமுன் எழுதல் இரும்புன லாடல்
வழுவிலைந் தெழுத்தும் வரன்முறை பயிலல்
குருபதம் பணிதல் கோலநீ றணிதல்
வரும்பசிக் குண்ணல் வாயுற வாழ்த்தல்
சாத்திரம் பயிலல்; தன்போற் பிறரையும்
பார்த்தல்; பணப்பற் றொழித்தல்; பண்புடன்
வார்த்தையாடல்; வாதனை தீர்த்தல்
கோத்திரங் குலமெனுங் கோட்பா டொழித்தல்
எட்டுணை யேனும்
வேண்டுதல் வேண்டாமை யின்றி யென்றும்
ஆண்டவ னடிக்கீ ழமர்ந்து வாழ்தலே.

மலர் 3 : இதழ் 1—15-12-36

---

## விரைந்தன்பு செய்.

### நிலைமண்டில ஆசிரியப்பா

சென்றன சென்றன வாழ்நாள் அனைத்தும்
குன்றின குன்றின செல்வமும் இளமையும்
ஒன்றிய வகையால் உருற்றுக அறனைக்
கன்றிய காலன் கணத்தினில் வருவான்
ஆதலின்,
நின்றும் இருந்தும் நடந்தும் நினைமின்
பொன்றும் உடலைப் போற்றுத லொழிமின்
நன்றுதீ தென்னும் நாட்டம் விடுமின்
அன்றும் இன்றும் என்று மான்மா
இருந்த படியே இருக்குஞ் சீரை
அருந்தவ யோக ரறிந்தாங் கறிந்து.
தெளிந்து சீவன் முத்தராய் உலகில்
பொருந்தி வாழ்தல் போற்றுந் தகைத்தென்.

### நேரிசை ஆசிரியப்பா

அன்பே சிவமென ஆன்றோ ரிசைத்த
இன்பந் ததும்பும் இனியவா சகத்தை
இன்னு மறிந்திலேன் இரவும் பகலும்
பொன்னும் பொருளும் போகமும் வேண்டினேன்
காக்க வேண்டும் கடைக் கண்ணாலே
நோக்க வேண்டும் நூல்வல் லோனே
சேர்க்க வேண்டும் திருவடி யதனில்
ஆர்க்கு முணர அரியபெம் மானே
ஐயனே! அரசே! ஆருயிர்க் குயிரே!
வையக நடனம் செய்யுமா தவனே!
பொய்யுங் கொலையும் புலையும் தவிரவும்
சைவ மோங்கவுஞ் சத்தியந் தழைக்கவும்
தெய்வமுண் டென்னுஞ் சித்தந் திகழவும்
கைவினை செய்து கழலடி போற்றவும்

செய்வன எல்லாஞ் செவ்வனே செய்யவும்
மெய்யடி யார்கள் மேன்மேற் கிளைக்கவும்
தையலார் தம்மைத் தாயெனப் பேணவும்
நைந்துநைந் துருகி நைந்து நைந்தேற்றி
நமச்சி வாயவென நாம்வாழ் குவமே.

*மலர் 2: இதழ் 2—14-1-36*

---

## வேல் வேல்

திருநீறும் ஐந்தெழுத்தும் வேண்டும்—வேல் வேல்
சீவனே சிவனென்று தெரிந்து கொள்ள வேண்டும்—
வேல் வேல்
உருவேற வேசெபிக்க வேண்டும்—வேல் வேல்
ஒருவருக்கும் பொல்லாங்கு செய்யாமை வேண்டும்—
வேல் வேல்
கருவூரில் வாராமை வேண்டும்—வேல் வேல்
கண்கவரும் மின்னாரை எண்ணாமை வேண்டும்—
வேல் வேல்
குருபாதம் மறவாமை வேண்டும்—வேல் வேல்
குறைவொன்று மின்றிநாம் வாழ வேண்டும்—வேல் வேல்
கொல்லாமை கள்ளாமை வேண்டும்—வேல் வேல்
கோபம் பொறாமை கொள்ளாமை வேண்டும்—வேல் வேல்
எல்லார்க்கு மன்பு செய்ய வேண்டும்—வேல் வேல்
எனதுயா னென்பதை விட்டுவிட வேண்டும்—வேல் வேல்
நல்லோ ரிணக்கமே வேண்டும்—வேல் வேல்
நடுநிலைமை மாறாதிருக்க வேண்டும்—வேல் வேல்
சொல்போலே சொல்லுறுதி வேண்டும்—வேல் வேல்
சும்மா விருக்கும் சுகமறிய வேண்டும்—வேல் வேல்.

*மலர் 1 : இதழ் 3—13-2-36*

---

## அருள்

அண்ட சராசரம் அவன்திரு மேனி
அண்ட சராசரம் அவன்திரு ஆடல்
அண்ட சராசரம் அவனே ஆகும்
அண்ட சராசரம் முழுதும் அதிசயம்.

அஞ்செழுத் தாலே அனைத்தும் ஆயின
அஞ்செழுத் தாலே அனைத்தும் உதித்தன
அஞ்செழுத் தாலே அனைத்தும் நிலைத்தன
அஞ்செழுத் ததிசயம் ஆரறி வாரே.

அன்பே கடவுள் அன்பே உலகம்
அன்பே உயிர்கள் அன்பே அனைத்தும்
அன்பே ஆவதும் அழிவதும் போலாம்
அன்பின் அதிசயம் ஆரறி வாரே.

ஆதியும் அந்தமும் இல்லா ஒருவன்
ஆதியும் அந்தமு மாய்வரு காரணம்
ஆதிதன் அருள்கொண் டறிவதே அன்றி
ஓதி அறிந்தவர் ஒருவரும் இலரே.

அலகில் உயிர்களை ஆக்குவான் அவனே
அலகில் உயிரென நிற்கும் அதிசயம்
அலகில் வானவர் தானவர் அறியார்
அலகில் பேரருள் ஆரறி வாரே.

*மலர் 2 : இதழ் 5—13-4-36*

## சிவனடிக் கன்பு

சிவனடிக் கன்பு செய்குவர் பெரியர்
சிவனடிக் கன்பு செய்கிலர் சிறியர்
சிவனடிக் கன்பு சிறப்பினை அளிக்கும்
சிவனடிக் கன்பு சீவன் முத்தியே.

சிவனடிக் கன்பு தீவினை ஒழிக்கும்
சிவனடிக் கன்பு தெளிவினை அளிக்கும்
சிவனடிக் கன்பு சித்தங் களிக்கும்
சிவனடிக் கன்பு சின்மய மாக்குமே.

சிவனடிக் கன்பு செய்பவம் போக்கும்
சிவனடிக் கன்பு திருவருள் ஆக்கும்
சிவனடிக் கன்பு சிவகதி ஆக்கும்
சிவனடிக் கன்பு செப்பும் தகைத்தோ.

சிவனடிக் கன்பே சிவயோக மாகும்
சிவனடிக் கன்பே சிவஞான மாகும்
சிவனடிக் கன்பே சிவபோக மாகும்
சிவனடிக் கன்பே சிவமய மாமே.

சிவனடிக் கன்புசெய் தேகம் பொன்மயம்
சிவனடிக் கன்புசெய் தேகம் சின்மயம்
சிவனடிக் கன்புசெய் தேகம் நம்வயம்
சிவனடிக் கன்புசெய் தேகம் சிவமயம்.

சிவனடிக் கன்பு திரிகால மறியும்
சிவனடிக் கன்பு திரிலோக மறியும்
சிவனடிக் கன்பு திரிமூர்த்தி யறியும்
சிவனடிக் கன்பு திரிதோஷ மிறக்குமே.

சிவனடிக் கன்புசெய் திரிசிய மிறக்கும்
சிவனடிக் கன்புசெய் திருக்குப் பிறக்கும்
சிவனடிக் கன்புசெய் திரிகுண மிறக்கும்
சிவனடிக் கன்புசெய் சித்தந்தித் திக்குமே.

சிவனடிக் கன்புசெய் தேவரும் இல்லை
சிவனடிக் கன்புசெய் சீவரும் இல்லை
சிவனடிக் கன்புசெய் சித்தரும் இல்லை
சிவனடிக் கன்புசெய் அனைத்தும் சிவமே.

*மலர் 2 : இதழ் 6—14-5-36*

---

## தெய்வமிது தானே

அன்னைபிதாக் குருவாகி யாண்டுகொண்ட தெய்வம்
அடியவர்தம் மனத்திலே ருசிக்கின்ற தெய்வம்
என்னையெனக் கென்னாலே யறிவித்த தெய்வம்
எல்லாமா யல்லவுமா யிருக்கின்ற தெய்வம்
முன்னைவினை யெல்லாம் முடித்தாண்ட தெய்வம்
மூதாதை மாரெனக்குக் காட்டிவைத்த தெய்வம்
தென்னைபனை சேரிலங்கை வாழ்கின்ற தெய்வம்
சிவனென்ற நாமமுள்ள தெய்வமிது தானே. 1

கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பளிக்குந் தெய்வம்
காணாத காட்சியெல்லாங் காட்டுகின்ற தெய்வம்
நில்லாத நீர்ச்சடைமேல் நிற்கவைத்த தெய்வம்
நெற்றியின்மே லொற்றைக்கண் நேரவைத்த தெய்வம்
எல்லார்க்குந் தெய்வ மென்னுடைய தெய்வம்
இதையறிந்து வாழுவார் எல்லாருந் தெய்வம்
செல்லாரு மிலங்கையில் வாழ்கின்ற தெய்வம்
சிவனென்ற நாமமுள்ள தெய்வமிது தானே. 2

நம்பினபேர் தமக்கருளை நயந்தளிக்குந் தெய்வம்
நாதாக்கள் போற்றுகின்ற மெய்ஞ்ஞானத் தெய்வம்
வெம்பிணிக்கு மருந்தாக விளங்குகின்ற தெய்வம்
வேதாந்தத் தெய்வமுயர் சித்தாந்தத் தெய்வம்
அம்பிகைதம் பாகமா யமர்ந்திருக்குந் தெய்வம்
அவரவர்க்கு அதுவதுவா யிருக்கின்ற தெய்வம்
தும்பிமுக னறுமுகவன் தோத்திரஞ்செய் தெய்வம்
சோலைசூழிலங்கைவாழ் தெய்வமிது தானே. 3

இம்மைக்கும் மறுமைக்குந் துணையான தெய்வம்
எழிலாருஞ் செஞ்சடையில் மதிவைத்த தெய்வம்
அம்மையா யப்பனு யாதரிக்குந் தெய்வம்
அவனிமே லென்போல வழங்குகின்ற தெய்வம்
பொய்ம்மாயச் செருக்கெல்லாம் புறக்கணிக்குந் தெய்வம்
போதாரும் மலர்தூவிப் போற்றுகின்ற தெய்வம்
செம்மைசே ரிலங்கையிலே வாழுகின்ற தெய்வம்
சித்தத்துட் டித்திக்குந் தெய்வமிது தானே. 4

பொறியைந்தும் வென்றவர்பாற் பொருந்துகின்ற தெய்வம்
போக்குவர வில்லாமல் நிறைகின்ற தெய்வம்
அறிவொன்றை நினைப்பவர்பா லமர்ந்திருக்குந் தெய்வம்
அம்புவியில் மாமனுய் வழக்குரைத்த தெய்வம்
குறியொன்று மில்லாமற் கூத்தாடுந் தெய்வம்
குழந்தைவடி வேலவனைக் கொண்டாடுந் தெய்வம்
வெறிகமழுஞ் சோலைசூ ழிலங்கைவாழ் தெய்வம்
விருப்புவெறுப் பில்லாத தெய்வமிது தானே. 5

மலர் 2 : இதழ் 9—16-8-36

## மலரடி

வாச மலரடி பேச இனியது
ஆசை விடுவிடு ஆரு மிணையிலர். 1

ஈச னிணையடி ஏத்து மடியவர்
நாச மடைகிலர் நாடு திடமுடன். 2

எந்த நேரமும் இறைவ னிணையடி
சிந்தை செய்பவர் சீவன் முத்தரே. 3

நீறு பூசிய நிமல னடியிணை
கூறு வார்தமைக் கூடி டாவினை. 4

ஆறு சூடிய அழகன் சேவடிப்
பேறு பெற்றவர் பிறப்ப தில்லையே. 5

சிறப்புஞ் செல்வமுந் தந்த சேவடி
மறப்பில் லாதவர் மாழ்வ தில்லையே. 6

வீடு சேர்வதில் விருப்ப முள்ளவர்
பாடு வார்தினம் பரமன் பாதமே. 7

வேண்டு வார்வினை நீக்கு மாண்டவன்
நீண்ட சேவடி நினைக்க முத்தியே. 8

மாண்டு போனவர் என்பர் மார்பினில்
பூண்ட அன்பனைப் போற்ற இன்பமே. 9

பித்த னென்றவர் பிறவி நீக்கிய
அத்தன் சேவடி அடைய இன்பமே. 10

மலர் 2 : இதழ் 10—16-9-36

## பாரில் வாழ்வரே

மத்த மாமலர் வைத்த வள்ளலை
நித்தம் போற்றுவார் நீடு வாழ்வரே. 1

மனத்தில் வஞ்சகம் வைத்த பாவிகள்
இனத்தைச் சேர்ந்திடில் ஈனம் ஈனமே. 2

இளமை இன்பத்தில் இச்சை வைத்திடில்
எழுமை யுந்துன்பம் எய்தும் எய்துமே. 3

சூல பாணியைத் துதிக்கும் அன்பரைக்
காலன் கண்டிடிற் கலங்கி ஓடுமே. 4

அம்மை அப்பனை ஆர்வ மாய்த்தொழ
இம்மை நற்பயன் எய்துந் திண்ணமே. 5

வேள்ப டச்செய்த விமல னைத்தொழ
ஊழ்வி னைப்பயன் ஒன்று மில்லையே. 6

கொச்சை மக்களைக் கூடு மூடர்கள்
அச்சத் தால்மனம் அலைவர் திண்ணமே. 7

தனக்குத் தானிக ரான சங்கரன்
துணைப்ப தத்தினைத் துதிக்க இன்பமே. 8

நீல கண்டனை நினையு மன்பர்கள்
ஞாலம் மெச்சவே நாளும் வாழ்வரே. 9

கோல மாமலர் கொண்டு போற்றுவார்
பாலர் போலவே பாரில் வாழ்வரே. 10

மலர் 2 : இதழ் 11—17-10-36

## வருக வருக

### நிலைமண்டில ஆசிரியப்பா

அந்தமும் ஆதியும் அகன்றோன் வருக
செந்தண்மை பூண்ட செல்வன் வருக
பந்தமும் வீடும் படைப்போன் வருக
எந்தமையாளும் இறைவன் வருக
கற்பனை கடந்த கடவுள் வருக
சொற்பதங் கடந்த தொல்லோன் வருக
பாரொடு விண்ணாய்ப் பரந்தோன் வருக
சீரொடு பொலியும் சிவனவன் வருக
சிந்தா மணியென் தேவன் வருக
நந்தா விளக்கே நலஞ்சுடர் வருக
நீற்றொடு பொலியும் நிமலன் வருக
ஆற்றொடு தோற்றும் அமலன் வருக
அற்புதன் வருக அநேகன் வருக
பொற்புட னடஞ்செய் புனிதன் வருக
விற்பொலி நுதலாள் விமலன் வருக
சொற்றுணை வேதியன்
பொற்றா ளிணைகள் பொலிந்து வாழ்க
கற்றோ ரேத்துங் கழலடி வாழ்க
மற்றோ ரறியா மலர்ப்பதம் வாழ்க
அற்றோர்க் குதவும் அருட்பதம் வாழ்க
தன்னே ரில்லாத் தாளிணை வாழ்க
என்போல் வந்த இணையடி வாழ்க
கண்போற் காக்குங் கழலடி வாழ்க
விண்போல் விளங்கும் மெய்யடி வாழ்க
பெண்பா லுகந்த பித்தன் வாழ்க
மண்மேல் மலரடி வைத்தோன் வாழ்க
தற்பரன் வாழ்க சதாசிவன் வாழ்க
சிற்பரன் வாழ்க சின்மயன் வாழ்க
முழுதுமாய் நின்ற முதல்வன் போற்றி

தொழுமடியார்கள் துணைவா போற்றி
என்றுமெ னுளத்தில் இருப்பாய் போற்றி
மன்று ளாடு மணியே போற்றி
பொன்று முடலைப் பொறுக்கேன் போற்றி
சென்றடை யாத செல்வா போற்றி
ஆதி போற்றி அரனே போற்றி
சோதி போற்றி சுடரே போற்றி
நீதி போற்றி நிறைவே போற்றி
மாதொடு பாக மலர்ப்பதம் போற்றி
ஏதொரு பற்றிங் கில்லைப் போற்றி
போற்றி போற்றி பொன்னடி யென்றும்
போற்றி போற்றி சிவசிவ போற்றி.

மலர் 2 : இதழ் 12—16-11-36

---

## பாரையனே

இராகம்—ஆரபி. தாளம்—ஆதி

பல்லவி

பாரையனே—கடைக்கண்ணால்—பாரையனே

சரணங்கள்

பாரையனே மனம் பதையாம லடியேனைச்
சேரையனே யுன்செழுங்கழற் கடைக்கலம். 1

ஆரையனே துணை அடியேற் குனையல்லால்
தீரையனே மிடி திருவடிக் கடைக்கலம். 2

ஊருந் துணையில்லை உற்றார் துணையில்லை
ஆருந் துணையில்லை அடியே னடைக்கலம். 3

சீருந் துணையில்லை செல்வந் துணையில்லை
சீரார் திருவடிக் கடியே னடைக்கலம். 4

சிந்தையில் அன்பு பொருந்த அடியேற்குத்
தந்திடு நின்னருள் தாளிணைக் கடைக்கலம். 5

எந்தையே எம்பெரு மானே என்றடியார்கள்
வந்தனை செய்யும் மலரடிக் கடைக்கலம். 6

கொத்தார் குழலுமை கொண்டாடு மையனே
செத்தா ரெலும் பணி செல்வநிற் கடைக்கலம். 7

வித்தார விடையேறி வெளியில் நடம்புரி
அத்தா உன் பொன்னடிக் கடியே னடைக்கலம். 8

தத்தாதித் தோம்திமி தாந்தோ மென்றாடிடும்
கத்தாவே யுன்னுடைக் கழலடிக் கடைக்கலம். 9

நெடியமாலயன் தேடிக் காணாமல் நின்றிடும்
நிமலனே நின்னடிக் கடைக்கல மடைக்கலம். 10

மலர் 3 : இதழ் 3—12-2-37

---

## கூவு குயிலே

கூவு குயிலே பறந்து கூவுகுயிலே
கும்பிடுவார் மனத்தானைக் கூவுகுயிலே. 1

நாவுக் கினியவனை நல்லகுயிலே
நம்பனை யிங்குவரக் கூவுகுயிலே. 2

சிவன் சிவனென்று சொல்லும் சித்தர் குழாம்
தேடும் பொருளைவரக் கூவுகுயிலே. 3

நாவலரும் பாவலரும் பணிந்தேத்தும்
நல்ல சிவனிங்கு வரக் கூவுகுயிலே. 4

தேன் சொரியும் சோலையில்வாழ் தெய்வக்குயிலே
தேவாதி தேவன் வரக் கூவுகுயிலே. 5

நான்படும் பாடனைத்தும் நயந்து சொல்லி
நாதனை இங்குவரக் கூவுகுயிலே. 6

இளமையு மூப்புமில்லா எம்பிரானை
இங்கே எனைத்தேடி வரக் கூவுகுயிலே. 7

இளம்பிறை அணிந்தபிரா னிங்கே வர
எழிலுடன் பறந்து போய்க் கூவுகுயிலே. 8

ஓயாமல் உள்குவார்தம் உள்ளத்தானை
உத்தமனை இங்கேவரக் கூவுகுயிலே. 9

வாயாரப் பாடுவார்தம் மனத்தானை
வள்ளலை யிங்குவரக் கூவுகுயிலே. 10

மலர் 3: இதழ் 4—14-3-37

---

## சிவன் செயல்

அனைத்துஞ் சிவன்செயலென் றறிந்த பெரியோர்க்கு
மனத்துயர் வந்திடுமோ—குதம்பாய்
மனத்துயர் வந்திடுமோ. 1

ஆன்மாவே நாமென்னும் அறிவை மறந்ததனால்
வீண்பாவ மாச்சுதடி—குதம்பாய்
வீண்பாவ மாச்சுதடி. 2

இரவும் பகலுமற்ற இன்பநிட்டை பொருந்தினவர்
பரமபதம் பெற்றாரடி—குதம்பாய்
பரமபதம் பெற்றாரடி. 3

ஈசன்மேல் நேசமாய் இருக்கின்ற தாசருக்கு
பாசபந்தம் வந்திடுமோ—குதம்பாய்
பாசபந்தம் வந்திடுமோ. 4

உண்மை முழுதுமென்ற ஒருமொழியால் இவ்வுலகில்
என்னை மறந்தேனடி—குதம்பாய்
இரவு பகலற்றதடி. 5

ஊரும் பேருமில்லா ஒருபொருளைக் கண்டவர்கள்
ஆருக்கு மஞ்சுவரோ—குதம்பாய்
ஆருக்கு மஞ்சுவரோ. 6

எனக்குந் தனக்கும்பிரி வில்லைஎன்ற என் ஆசான்
தனக்குவமை சொல்வதுண்டோ—குதம்பாய்
தனக்குவமை சொல்வதுண்டோ. 7

ஏதும் சிவன் செயலென் றெண்ணும் பெரியோர்க்குத்
தீதுதான் ஆவதுண்டோ—குதம்பாய்
தீதுதான் ஆவதுண்டோ. 8

ஐயமெல்லாம் நீக்கி என்னை அன்புசெய்ய வைத்தவனை
வையகத்தில் மறப்பேனோ—குதம்பாய்
வையகத்தில் மறப்பேனோ. 9

ஒருவனே தெய்வமெனும் உண்மைதனைச் சொல்லிவைத்த
குருபரனை மறப்பேனோ—குதம்பாய்
குருபரனை மறப்பேனோ. 10

ஓங்காரத் தினுள்ளே ஒளிரும் சிவனடியை
நீங்கும் நெறியுண்டோ—குதம்பாய்
நீங்கும் நெறியுண்டோ. 11

ஔவிய மில்லா வறிவுடைய பெரியோர்கள்
திவ்விய பார்வையாலே—குதம்பாய்
சென்ம மெல்லாம் தீர்ந்ததடி. 12

மலர் 3 : இதழ் 5—13-4-37

## நாமும் நாமாகி

கங்கை சடையுடைய கடவுளைக் கும்பிட்டாற்
பங்கந்தான் வந்திடுமோ—குதம்பாய்
பங்கந்தான் வந்திடுமோ. 1

எங்கும் சிவனடியைக் கண்டிறைஞ்சும் மாதவர்க்குக்
கங்குல் பகலுண்டோ—குதம்பாய்
கங்குல் பகலுண்டோ. 2

சுத்தசிவ மொன்ருன தன்மையைக் கண்டுவிட்டால்
நித்திய வாழ்வாகுமடி—குதம்பாய்
நித்திய வாழ்வாகுமடி. 3

ஞமனு மணுகுவனே நாதனைநாம் பணிந்தால்
சமனுக நின்றிடடி—குதம்பாய்
சமனுக நின்றிடடி. 4

விடத்தை மிடற்றில் வைத்த விமலனருளைப் பெற்ருல்
சடத்தின்மேல் ஆசையுண்டோ—குதம்பாய்
சடத்தின்மேல் ஆசையுண்டோ. 5

இணக்கமாயிருந்து பார்த்தால் எல்லாம்
சிவன்செயலாகும்
பிணக்கை நீவிட்டிடடி—குதம்பாய்
பிணக்கை நீவிட்டிடடி. 6

தன்னையறிந் தோர்க்குத் தாழ்வுண்டோ வையகத்தில்
பின்னையினிப் பேசுவதென்—குதம்பாய்
பின்னையினிப் பேசுவதென். 7

நாமும் நாமாகி நமக்குள்ளும் நாமானுல்
போமுன் வினையனைத்தும்—குதம்பாய்
போமுன் வினையனைத்தும். 8

பண்டுமின்று மென்றும் ஒருபடித்தாய் நிற்பவனைக்
கண்டு தொண்டு நாம்செய்வோம்—குதம்பாய்
கண்டு தொண்டு நாம்செய்வோம். 9

மங்கையொரு பாகமாய் மருவும் பெருமானே
எங்கள் குலதெய்வமடி—குதம்பாய்
எங்கள் குலதெய்வமடி. 10

அயனு மரியு மறியாமல் நின்றவன்றன்
தயவு நமக்குண்டடி—குதம்பாய்
தயவு நமக்குண்டடி. 11

அரகர வென்றுதினம் அரற்றுஞ் சிவனடியவர்க்கு
மரணம் பிறப்பில்லையடி—குதம்பாய்
மரணம் பிறப்பில்லையடி. 12

மலர் 3: இதழ் 6—14-5-37

---

## சிவதொண்டு

சிவதொண்டு செய்வார்க்குச் செல்வமுண்டு கல்வியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சீருமுண்டு பேருமுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சிந்தைத் தெளிவுமுண்டு
சிவதொண்டு செய்வார்கள் சேருவரோ தீநெறியில். 1

சிவதொண்டு செய்வார்கள் திசையெட்டு மாளுவார்
சிவதொண்டு செய்வார்கள் சென்மமல நீங்குவார்
சிவதொண்டு செய்வார்கள் தேவரையு மேவல் கொள்வார்
சிவதொண்டு செய்வார்கள் செத்துப் பிறவார்கள். 2

சிவதொண்டு செய்து திருமா லுலகாண்டான்
சிவதொண்டு செய்துதிரு வாரூரன் சிவமானான்
சிவதொண்டு செய்தரசன் சேர்ந்தான் கழல்முன்னாள்
சிவதொண்டு செய்வார்க்கு முண்டோ குறைசொல்வார். 3

சிவதொண்டு செய்வார்க்குச் சினமில்லை அச்சமில்லை
சிவதொண்டு செய்வார்க்குத் தீயவகங் காரமில்லை
சிவதொண்டு செய்வார்க்கு இரவும் பகலுமில்லை
சிவதொண்டு செய்வார்க்குப் பழியூ ணுணவுமில்லை. 4

சிவதொண்டு செய்வார்க்குச் சாந்தம் பொறுமையுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் திரிகால வுணர்ச்சியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் தீயபிணி நோயில்லை
சிவதொண்டு செய்வார்கள் தெய்வமே போல்வார். 5

*மலர் 3 : இதழ் 7—14-6-37*

---

## நல்வரவு சொல்லு சிறு பல்லி

எல்லாஞ்செய வல்லபிரான் இங்குவரு மாகில்
ஏத்துவார் மனம்வாழும் ஈசன்வரு மாகில்
கல்லார்க்கும் அருள்புரியுங் கடவுள்வரு மாகில்
களிப்புடனே நல்வரவு சொல்லுசிறு பல்லி! 1

காமாதி குணமெல்லாங் கட்டவிழு மாகில்
கருணையே வடிவான கடவுள்வரு மாகில்
தானாக எழுந்தருளும் தாணுவரு மாகில்
சடுதியாய் நல்வரவு சொல்லுசிறு பல்லி! 2

தத்துவம் ஆறாறும் வெந்துவிடு மாகில்
தானான தன்மைவந்து தலையெடுக்கு மாகில்
பத்தர்களை நீங்காத பரமன்வரு மாகில்
பக்குவமாய் நல்வரவு சொல்லுசிறு பல்லி! 3

ஒளிக்கொளியைக் கொடுக்கின்ற ஒருவன்வரு மாகில்
உண்மைநிலை என்மனத்தில் மெல்லவரு மாகில்
வழியடிமை கொள்கின்ற வள்ளல்வரு மாகில்
வருத்தமின்றி நல்வரவு சொல்லுசிறு பல்லி! 4

சொல்லமுடி யாதபொருள் சொல்லவரு மாகில்
சும்மா இருக்கின்ற சுகங்கிடைக்கு மாகில்
எல்லாருங் காணவெனைப் பித்தேற்று மாகில்
இன்னுமொருக் கால்வரவு சொல்லுசிறு பல்லி! 5

தேனுந்து கொன்றையணி செல்வன்வரு மாகில்
சிவகாமி பங்கிலுறை தெய்வம்வரு மாகில்
நானும்நீயும் ஒன்றாகி நிற்கவரு மாகில்
நல்லகுரல் நல்வரவு சொல்லுசிறு பல்லி! 6

வேதமறி யாதபொருள் விரைந்துவரு மாகில்
மேவுமிட மெங்குமறி வாகிவரு மாகில்
நாதமுடி மேல்நடனம் நாங்காணு மாகில்
நல்லகுரல் நல்லதிசை சொல்லுசிறு பல்லி! 7

தொந்தோமென் றாடுந்திருப் பாதம்வரு மாகில்
சுரிகுழலார் பாகனார் இங்குவரு மாகில்
வந்தோம்வந் தோமென்னும் அடிகள்வரு மாகில்
வளப்பமுடன் நல்லகுரல் சொல்லுசிறு பல்லி! 8

வெள்விடைமேல் உவந்தேறும் விமலன்வரு மாகில்
வேதத்தி னுட்பொருள் விளங்கவரு மாகில்
எல்லவர்க்கும் பொதுவில்நடம் நாங்காணு மாகில்
இன்னுமொருக் கால்வரவு சொல்லுசிறு பல்லி! 9

பூதங்கள் ஐந்தான புனிதன்வரு மாகில்
புன்னெறியிற் செல்லாத சிந்தைவரு மாகில்
தாதவிழும் சடையப்பன் இங்குவரு மாகில்
தண்மையுடன் நல்வரவு சொல்லுசிறு பல்லி! 10

பாடல்பத்தும் படிப்போர்கள் கேட்போர்கள் எல்லாம்
பங்கமின்றி வாழ்ந்துபின் பரமனரு ளாலே
வீடகத்தே புகுந்திடுவர் மெய்ம்மையிது வாகும்
விட்டுவிட்டு நல்லகுரல் சொல்லுசிறு பல்லி! 11

மலர் 3 : இதழ் 8—16-7-37

## உந்தீபற

மானும் மழுவுங் கரந்து மண்மிசைக்
காணும் படி வந்தானென் றுந்தீபற
கவலை ஒழிந்ததென் றுந்தீபற. 1

சிந்தையில் வெந்துயர் தீர எனக்கொரு
மந்திரந் தந்தானென் றுந்தீபற
மாயை அழிந்ததென் றுந்தீபற. 2

மன்னவனாகி மதுரையை ஆண்டவன்
பொன்னம் பலவனென் றுந்தீபற
பூரண ஞானனென் றுந்தீபற. 3

திக்குத் திகாந்தமுங் கைவசமாய் வரப்
பக்குவ மானேனென் றுந்தீபற
பரமான்மா நானென் றுந்தீபற. 4

அஞ்செழுத்துள்ளே அனைத்தையுங் காட்டியென்
நெஞ்சத்துள் நின்றானென் றுந்தீபற
நீயோநா னானேனென் றுந்தீபற. 5

திங்களுங் கங்கையுஞ் சென்னியில் வைத்தவன்
மங்கை மணாளனென் றுந்தீபற
மறுபிறப் பில்லையென் றுந்தீபற. 6

தத்துவம் யாவும் சடமென்று காட்டியென்
சித்தத்துள் நின்றானென் றுந்தீபற
தேவாதி தேவனென் றுந்தீபற. 7

ஆதாரத்தாலே நிராதாரஞ் சென்றபின்
பாதார விந்தமென் றுந்தீபற
பலித்தது பூசையென் றுந்தீபற. 8

அல்லும் பகலும் அறிவாகி நிற்கவோர்
சொல்லைத்தந் தானென் றுந்தீபற
தோன்றாத் துணைவனென் றுந்தீபற. 9

சீவன் சிவனென்று தேறித் தெளிந்தார்க்கு
அபாய மில்லை யென்றுந்தீபற
அன்பே சிவமென் றுந்தீபற. 10

பத்துப் பாட்டும் படிப்பவர் கேட்பவர்
வித்தக ராவாரென் றுந்தீபற
வீடு நமக்கென் றுந்தீபற. 11

*மலர் 3: இதழ் 9—16-8-37*

---

## சிவதொண்டன்

### நேரிசை யாசிரியப்பா

சிவனடி யாரைச் சிவனென வணங்கும்
சிவதொண்ட னென்னுஞ் செல்வச் சிறுவன்
பவவரு டத்துப் பன்னுமார் கழி மதி
எவரும் மகிழ இந்நிலம் போந்தான்
இவனே,
சிறுபிள்ளை யாயினுஞ் செய்தவப் பயனால்
அறிவு மிகுந்த ஆண்டகை யாவான்
தினைத்துணை நன்றி செய்யினு மதனைப்
பனைத்துணை யாக்கொள்ளும் பயனைத் தெரிபவன்
அனைத்துஞ் சிவன் செயலாமென அறிபவன்
சினத்தைச் செற்ற திருவினை யுடையான்
சத்தியம் பொறுமை சாந்தம் நிறைந்தவன்
நித்தியா நித்தியந் தெரியும் நிபுணன்
அத்துவா மார்க்கம் ஆறையு மகற்றித்
தத்துவா தீதத் தன்மையை யுணர்ந்தோன்
வறுமையிற் கலங்கான் செல்வத்தின் மகிழான்
பொறுமை மிக்குடைய புண்ணிய புருடன்
தருமநன் னெறியிற் சற்றும் வழுவான்

கருமத்திற் றகையுங் கடவுளிற் கருத்துமா
யிருநிலம் மதிக்க வாழு மியல்பினன்
குருபரன் கூறிய நெறியே செல்பவன்
திங்க டோறும் திருவக லாத
உங்கள் மனைக்கே யுவப்புடன் போந்து
நற்சிந் தனையும் நல்ல சமயமும்
அற்புத மான போற்றித்திரு வகலும்
விற்பன மாக விளங்கு யோகமும்
சொற்பொருட் சுவைசேர் சூடாலை சரிதமும்
இன்னும் பற்பல வினியகட் டுரைகளும்
கொண்டுடன் மகிழ்ந்து கும்பிடு மிவனை
வாரி யெடுமின் மடிமீது வைம்மின்
சீரிய வாயாற் செந்தமிழ் பாடுமின்
பாலுந் தேனும் பாகும் பருப்பும்
நாலுங் கலந்து நன்று யூட்டுமின்
பட்டாடை சுற்றுமின் பலபணி புனைமின்
மட்டார் நறுமலர் மாலை சூட்டுமின்
எட்டாப் பேரின்ப மெய்தி
இட்டார் பெரியோர் எனவாழ் வீரே.

மலர் 4: இதழ் 1—15-12-37

---

## முனி சொன்மொழி

### கலிவிருத்தம்

ஒருபொல் லாப்பு மில்லையென் றுரைத்தவன்
திருவ டிதனைச் சிந்தை மறக்குமோ?
ஒருவடி வன்றி யுள்ள முவக்குமோ?
கருவழி யினிற் சென்று கலங்குமோ? 1

நாம றியோமெ னச்சொலு நன்மொழி
தாம றிந்தவர் சஞ்சலங் கொள்வரோ?
சாம ளவுமத் தண்ணருள் வாசகம்
சேம நன்னிதி செப்புந் தகையதோ? 2

ஆர றிபவ ரென்னஅ டிக்கடி
வீர மாக நகைத்து விளம்புவார்
ஈர கத்தொடு நின்று வணங்கினு
மார மற்றவர் போல இகழ்வரே. 3

எப்ப வோமுடி வானதென் றெங்கட்குச்
செப்பு வாரவர் சிந்தை தெளிந்திட
ஒப்பில் லாதபல வார்த்தைக ளோதுவார்
அப்பில் உப்பென வானதென் சிவனே. 4

முழுதுமுண்மை யெனமுனி சொன்மொழி
எழுதிக்காட்டிட் என்னு லிசையுமோ?
அழுது வாழ்த்திய மேத்திய மன்பர்காள்
தொழுது கொள்வதல் லாலென்ன சொல்லுகேன். 5

மலர் 4 : இதழ் 2—14-1-38

## இணையடி வாழ்க.

### நிலைமண்டில ஆசிரியப்பா

இங்களுங் கங்கையும் சென்னியிற் றாங்கிய
எங்கள் பெருமான் இணையடி வாழ்க
ஒரு பொல்லாப்பு மில்லையென்(று) ஓதிய
குருபரன் குஞ்சித பாதம் வாழ்க
நாமறி யோமெனும் நல்ல திருமொழி
தாமறி வோனிச் சகத்தினில் வாழ்க
எப்பவோ முடிவான தென் றெமக்குச்
செப்பிய வாசகம் சிறப்புடன் வாழ்க
ஆரறி வாரெனும் அருமைத் திருமொழி
தாரணி தன்னிற் சந்ததம் வாழ்க
முழுதுமுண் மையென முனிவன் சொன்மொழி
தொழுது வாழ்த்தும் சுதந்திரம் வாழ்க
இன்ன தன்மையன் இவனென எவரும்
என்று மறியா இணையடி வாழ்க
முந்திய பொருட்கெலா முதலா யுள்ளோன்
சிந்தையிற் பூத்த சிவபிரான் வாழி.

மலர் 4 : இதழ் 3—12-2-38

## எந்தையே

### நேரிசை வெண்பா

எந்தையே! எந்தையே! என்றேத்து மெய்யடியார்
சிந்தை குடிகொண்ட தெய்வமே!—முந்துங்
கருணைத் திருஉருவே! கண்ணிறைந்த இன்பே!
தருணமிஃ தாளாய்நீ தான். 1

தானந் தவமிரண்டுஞ் சற்றுமிலாப் பாவியேன்
ஞான முளேன்போல் நடிக்கின்றேன்—வானில்
வளர் பிறையைச் செஞ்சடையில் வைத்தபிரானே!
தளர விடா தாளாய்நீ தான். 2

தானான தன்மை தனையறிந்த மாதவர்கள்
வானாதி மாயையினால் வாடுவரோ—தேனாரும்
கொன்றைச் சடைமுடியாய்! கோலவேற் றார்தியாய்!
என்றுமெனை யாளாய்நீ யிங்கு. 3

ஆளான அன்பர் அகநிறைந்த பாக்கியமே
சூளா மணியே துரந்தரனே!—மீளா
அடிமை நானன்றோ அறியார்போல் விட்டுப்
படர்தல் முறையோ பகர். 4

பகருவார் நெஞ்சம் பதைக்குமோ பாரில்
நிகரில் இறைவ! நெடிதெய்த்தேன்!—பகருற்றேன்
உண்டோ வுலகத் துறுதெய்வம் நீயல்லால்
உண்டோ துணைவேறிங் கோது. 5

ஓதுவார் நெஞ்சில் உதிக்கும் பரஞ்சுடரே!
மாதுசேர் பாகா! மறைநான்கும்—ஓதுகிலா
உன்புகழை ஓதினே னுன்னடியான் யானன்றோ
என்பிழை உட்கொள்ளே லினி. 6

இனியவனே! யெவ்வுயிர்க்கு மீசனே! ஆளும்
பனிமொழியாள் பாகனே! மாயோன்—நனிவருந்த
நீண்ட சுடராகி நின்றாய் நினைவேனை
ஆண்டருள வேண்டு மறி. 7

அறிவுக் கறிவாகி நின்றாய்! அறிஞர்
பிறிவறவுன் னுள்நிற்பர் பெம்மான்—நெறியறியேன்
பொல்லாப் புலைநாயேன் போற்றும் வகையறியேன்
சொல்லாய் எனக்கேற்ற சொல். 8

சொல்லிற் கலந்த சுவையறியாப் பாவியேன்
அல்லும் பகலும் அரற்றுகின்றேன்—தொல்லுலகில்
வாராயோ என்முன்னே வந்து வறுமைபிணி
தீராயோ வாய்திறந்து செப்பு. 9

செப்புந் தரமோ சிவனேநின் சீரடியார்
அப்பிலுப் பொப்பான ஆக்கத்தை—இப்புவியில்
என்னையு மவ்வா றினிநீ கலப்பாயேல்
உன்னைத் தடுப்பவரா ரோது. 10

மலர் 4 : இதழ் 4—14-3-38
5—13-4-38

## அன்னைப் பத்து

மண்ணையும் விண்ணையும் மற்றுள யாவையும்
எண்ணுமுன் னேயாக்கும் அன்னே யென்னும்
எண்ணுமுன் னேயாக்கும் என்போல வந்தவஃ
தென்ன அதிசயம் அன்னே யென்னும். 1

கஞ்சனும் மாலயனும் காணுக் கடவுளர்
சஞ்சலந் தீர்ப்பரால் அன்னே யென்னும்
சஞ்சலந் தீர்த்தென்னைத் தானகச் செய்தனர்
வஞ்சகந் தீர்ந்தது அன்னே யென்னும். 2

எட்டு மிரண்டு மறியா வெனக்கொரு
பட்ட மளித்தனர் அன்னே யென்னும்
பட்ட மளித்திந்தப் பாரோடு விண்ணும்
இட்ட முளதென்றூர் அன்னே யென்னும். 3

சிவாய நமவென்று சிந்திக்கச் சொல்லியென்
அபாய மறுத்தனர் அன்னே யென்னும்
அபாய மறுத்தென்னை யாண்டு கொண்டாரவர்
உபாயத்தாற் காணேணூர் அன்னே யென்னும். 4

விருப்பு வெறுப்பினை விட்டிடவே சொல்லிக்
கருப்புகா மற்காத்தார் அன்னே யென்னும்
கருப்புகா மற்காத்துக் கங்குல் பகலற்ற
இருப்பை யளித்தவர் அன்னே யென்னும். 5

நாமறி யோமெனும் நல்ல திருமொழி
நாமறியச் செய்தார் அன்னே யென்னும்
நாமறியச் செய்து நாமே நீயென்று
சேம மளித்தன ரன்னே யென்னும். 6

ஆரறி வாரென அன்று சொன் னமொழி
ஆரறிய வல்லார் அன்னே யென்னும்
ஆரறிய வல்லா ராயினு மன்பர்கள்
சீரறிவார் திண்ணம் அன்னே யென்னும். 7

என்னை யறிவித் தெனக்கருள் செய்தவன்
என்னிலும் வேறலன் அன்னே யென்னும்
என்னிலும் வேறலன் எல்லாம் வல்லவன்
மண்ணினில் வந்தனன் அன்னே யென்னும். 8

வாக்கால் மனத்தால் தொடர்வரி தானவன்
வாக்கால் திடம் பெற்றேன் அன்னே யென்னும்
வாக்கால் திடம் பெற்றேன் வாஞ ளாசையைத்
தீக்கிரை யாக்கினன் அன்னே யென்னும். 9

எல்லாஞ் சிவன்செயல் எல்லாஞ் சிவன்வடி
வெல்லா மவனன்றோ அன்னே யென்னும்
எல்லா மவன்வடி வெங்குமவ னென்றால்
பொல்லாப்பிங் கேதடி அன்னே யென்னும். 10

மலர் 4: இதழ் 6—14-5-38
7—15-6-38

---

## ஞானகுரவனே

### கலிவிருத்தம்

ஆர கத்தினுஞ் சென்றவ ருண்கிலர்
ஏர கத்தம ரேந்தலை யொப்பவர்
தார கப்பொருள் தந்த தலைவனூர்
நீர கத்தினர் நெஞ்சங் குடிகொண்டார். 1

சிரித்து நல்லூர்த் தெருவிற் றிரிபவர்
வெறித்த பார்வையர் வேடம் விரும்பிலர்
கறுத்த மேனியர் கந்தைத் துணியினர்
எரித்தனர் பவ மினியெனக் கில்லையே. 2

மூண்ட வல்வினை முற்றுந் துறந்தவர்
ஆண்ட வர்க்கன்பு பூண்ட வகத்தினர்
தூண்டு சோதிச் சுடர்விடு தூய்மையர்
ஆண்டு கொண்டன ரன்றெனை நல்லையில். 3

பாதிச் சாமத்தின் பின்பள்ளி கொள்பவர்
வீதி யிற்செல்லும் வீணர்கள் தங்களைப்
பேதிக் கும்படி வேண்டியே பேசுவார்
சோதித்தே யெனைச் சும்மா விருத்தினார். 4

எந்த வேளையு மென்னவோ மெத்தெனச்
சிந்தை தன்னிலே செப்பிக் கொண்டேயவர்
வந்த பேருக்கு வாழ்வை யளிப்பவர்
எந்தன் சிந்தையைக் கோயிலாக் கொண்டவர். 5

கோல மொன்றும் விரும்பிலன் கும்பிடச்
சால வன்புடன் தான்வரும் பக்தரைக்
கால னென்னக் கறுத்துடன் சீறுவான்
சாலஞ் செய்தெனைத் தன்வய மாக்கினான். 6

ஆக்கினா னெனை அண்மையிற் சென்றிடின்
தாக்கு வானெனைத் தாக்கற மில்லென
நோக்கு வானெனை நோக்கிப் பல சொல்வான்
நோக்க மொன்றற நோக்கிய நோக்கமே. 7

பாவனை யொன்று பண்ணவும் விட்டிலன்
சேவனை யொன்று செய்யவும் விட்டிலன்
ஆவதொன்று மறியவும் விட்டிலன்
தேவன் செய்திட்ட சித்திர மிட்டமே. 8

இட்ட மிட்ட மிவன்பணி விட்டிலன்
இட்ட மென்ன அறியவும் விட்டிலன்
இட்ட சித்திக ளெய்தவும் விட்டிலன்
இட்ட மாக்கின னென்ன வியப்பதே. 9

வியக்க வொன்று மிலையென விட்டனன்
வியக்கும் மாந்தரைச் சேரவும் விட்டிலன்
தயக்க விட்டனன் தன்னடி யார்களை
ஞயக்க விட்டனன் ஞான குரவனே. 10

மலர் 4 : இதழ் 8—16-7-38
9—17-8-38

# திருத்தாள் வாழ்க

## உயிர்வரிசை மோனை

### வெண்செந்துறை மாலை

அத்துவா மார்க்கமாறும் அகற்றியே யடியனேனைத்
தத்துவா தீதனுக்குஞ் சற்குரு தாள்கள் வாழ்க. 1

ஆக்கைநீ யல்லை நீயோ ஆன்மாவென் றெனக்குச் சொல்லித்
தீக்கைவைத் தாண்டுகொண்ட தேசிகன் றிருத்தாள் வாழ்க. 2

இருந்துபா ரென் றெனக்கோர் இனியநல் வாக்குத் தந்த
அருந்தவன் என்னும்வல்ல ஆசான்றன் தாள்கள் வாழ்க. 3

ஈயாத புல்லர்தங்கள் இல்லத்திற் கேகா வண்ணம்
தாயாரைப் போல்வந்தாண்ட சற்குரு தாள்கள் வாழ்க. 4

உன்மத்தன் போலே வந்தென் னுடல் பொருளாவி மூன்றும்
தன்னத்தம் வாங்கிக் கொண்ட சற்குரு தாள்கள் வாழ்க. 5

ஊனுமாய் உயிருமாகி உள்ளுமாய்ப் புறம்புமாகி
நானுமாய் நீயுமாகி நடஞ்செய்யுந் திருத்தாள் வாழ்க. 6

எண்ணிய வண்ணம் வாழ எனக்குநல் லருளைத் தந்த
கண்ணிய முடைய செல்வன் கழலடி யென்றும் வாழ்க. 7

ஏடவிழ் கோதை மாதர் எழில்கண்டு மயங்கா வண்ணம்
தாடலை தன்னில் வைத்த சற்குரு தாள்கள் வாழ்க. 8

ஐயமேன் காணுமென்றே அடியனேன் தன்னை நோக்கி
உய்யநல் லருளைத்தந்த உத்தமன் பாதம் வாழ்க. 9

ஒரு மொழி யதனுலென்னை ஓவியம் போல வாக்கி
வருபயம் நீக்கியாண்ட வள்ளல்தம் திருத்தாள் வாழ்க. 10

ஓமெனும் எழுத்தினுள்ளே உலகெலாம் விளங்கக் காட்டி
நாமென்று சொல்லுகின்ற நற்றவன் திருத்தாள் வாழ்க. 11

ஔவனத் தில்லைதன்னில் அழகிய ஆடல் காட்டிச்
செவ்விதி னுண்டுகொண்ட செல்வன்றன் தாள்கள்
வாழ்க. 12.

அஃகமுங் காசுந்தேடி அலைந்து நான் திரியாவண்ணம்
நஃகுதல் செய்த நல்ல நாதன்றாள் வாழ்க! வாழ்க! 13

மலர் 4: இதழ் 10—17-9-38
11—17-10-38

---

## ஐயனே சற்குரு நாதா

இராகம்—சஹாநு. தாளம்—ஆதி

பல்லவி

ஐயனே சற்குரு நாதா—உனை
யண்டிவந் தேனருள் தாதா
துய்யனே சொற்பிர போதா—உனைத்
தோத்திரஞ் செய்தேன் பொற்பாதா— (ஐய)

சரணம்

ஈயாத புல்லரைக் கூடி—நானும்
இடர்ப் பட்டேன் வெகுகோடி
ஓயாம லுன்புகழ் பாடி—நானும்
ஓடிவந் தேனுனைத் தேடி— (ஐய)

ஆதார மாறையும் தாண்டி—அருள்
அம்பலத்தே நின்று வேண்டி
சூதான மனந்தினந் தூண்டி—நானும்
தொடர்ந்து வந்தேனினைத் தேண்டி— (ஐய)

மலர் 4: இதழ் 12—16-11-38

---

## குரு திருத்தாள் வாழ்த்து

குறள்வெண்செந்துறை

*அகரமாம் எழுத்துப் போல அனைத்தினும் கலந்து நின்றே*
*இகபரம் இரண்டு மீந்த எழிற்குரு திருத்தாள் வாழ்க.* 1

*ஆணுமாய்ப் பெண்ணுமாகி அன்னையும் பிதாவுமாகிக்*
*காணவே கண்முன் வந்த கழலடி யென்றும் வாழ்க.* 2

*இருவினை நீக்கி எம்மை இன்பமாம் நிலத்தில் வைக்கத்*
*திருவுருத் தாங்கி வந்த செல்வ! நின் திருத்தாள் வாழ்க.* 3

*ஈன்றிடு தந்தை தாயோ டெய்திய சுற்றமாகித்*
*தோன்றிய குருவுமான துணைவ! நின் திருத்தாள் வாழ்க.* 4

*உணர்ந்தார்க்கு முணர வொண்ணு ஒருவனே என்போல் வந்து*
*குணங்காட்டி ஆண்டு கொண்ட குருவின்சீர்ப் பாதம் வாழ்க.* 5

*ஊசிமே னுனியி னின்றே உக்கிர தவத்தை யாற்றும்*
*மாசில்மா தவருங் காணு மலர்ப்பதம் மனத்தில் வாழ்க.* 6

*என்னைநீ வேறு யெண்ணி இடர்ப்பட வேண்டா வென்று*
*தன்னைத்தந் தாண்டு கொண்ட சற்குரு தாள்கள் வாழ்க.* 7

*ஏதுமொன் றறநில் லென்றே யெனக்குநல் லருளைத் தந்த*
*தீதிலாத் தேசிகன்றன் திருவடி வாழ்க! வாழ்க!* 8

*மலர் 5: இதழ் 1—16-12-38*

## வேண்டும்

சிவநாம மைந்தெழுத்துஞ் சிந்தித்திட வேண்டும்
சிந்தித்திட வேண்டும்
சிவதொண்டன் தொண்டு செய்ய முந்திவிட வேண்டும்
தவநெறியில் வழுவாமல் தான் வளர வேண்டும்
தான் வளர வேண்டும்
தந்தைதாய் சுற்றத்தைத் தழுவிக் கொள்ள வேண்டும். 1

ஐந்தாண்டு விழாவதனைக் கொண்டாட வேண்டும்
கொண்டாட வேண்டும்
அவரவரின் விருப்பப்படி பொருளுதவ வேண்டும்
மந்தார மல்லிகையால் மாலை கட்ட வேண்டும்
மாலை கட்ட வேண்டும்
வந்தசிவ தொண்டனுக்கு வாழ்த்தியிட வேண்டும். 2

கொஞ்சங் கொஞ்ச மாய்மனத்தை யடக்கிக்
கொள்ள வேண்டும் அடக்கிக் கொள்ள வேண்டும்
குருநாதன் திருவடியைக் கும்பிட்டிட வேண்டும்
அஞ்சி யஞ்சிப் பாவத்தை யகற்றி விட வேண்டும்
அகற்றிவிட வேண்டும்
ஆர்மீதும் அன்பாக இருந்துவிட வேண்டும். 3

அளவுக்குப் போசனத்தை யருந்திவிடவேண்டும்
அருந்திவிடவேண்டும்
அறிவுடைய எப்பொழுதும் வருந்தி விடவேண்டும்
இளமையிலே வித்தைதனைக் கற்று விடவேண்டும்
கற்று விடவேண்டும்
ஈயாத மனிதர் பற்றை யகற்றிவிட வேண்டும். 4

குடிப்பிறந்தா ரோடுறவு கொண்டு விடவேண்டும்
கொண்டு விடவேண்டும்
குறைவில்லை யென்று சொல்லிக் குதூகலிக்க வேண்டும்
உடன்பிறந்தார் சுற்றத்தாரை ஓம்பிவிட வேண்டும்
ஓம்பிவிட வேண்டும்
உள்ளும் புறம்பு மொன்ருய் வாழ்ந்து விட வேண்டும். 5

தன்னை மறந்தருளித் தான் நிலைக்க வேண்டும்
தான் நிலைக்க வேண்டும்
சந்தேகம் வாராமல் தான் தொலைக்க வேண்டும்
பின்னை யாசான் பெருமை தன்னைப் பேசியிட வேண்டும்
பேசியிட வேண்டும்
பித்தனென்ற பிறர் வசையை வீசியிட வேண்டும். 6

மலர் 5 : இதழ் 2—14-1-39

---

கண்ணுக்கு அணிகலம் குருநாதன் பாதம்
விண்ணுக்கு அணிகலம் சந்திரன் விளம்பு
மனத்திற்கு அணிகலம் மாசற்ருர் கேண்மை
தனத்திற்கு அணிகலம் தண்ணருள் தானம்
வனத்திற்கு அணிகலம் மயிலும் குயிலும்
தினத்திற்கு அணிகலம் தினகரன் சேவடி
பணத்திற்கு அணிகலம் பசித்தோர்க்கு உணவு.

---

## ஆடு மயிலே

இராகம்—ஆனந்தபைரவி

ஆடுமயிலே பணிந் தாடுமயிலே
ஆண்டவனைக் கண்டு தெளிந் தாடுமயிலே.

வீடுநமக் கெப்போதும் சொந்தமென்றே
வீணாசைப் படுவதெல்லாம் பந்தமென்றே
கூடுவிட் டுயிர்போமுன் கும்பிட்டுக்கொண்டே
குழைந்து குழைந்துநின் றாடுமயிலே. (ஆடுமயிலே) 1

பொறிவழி போம்மனத்தை அடக்கிக் கொண்டே
பூரண நிட்டையிலே மடக்கிக் கொண்டே
அறிவறி யாமையிரண்டும் நாமல்ல வென்றே
ஆனந்தமாய்ப் பணிந்தெழுந் தாடுமயிலே.
(ஆடுமயிலே) 2

எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணிக் கொண்டே
இரந்திரந் தைந்தெழுத்தைப் பன்னிக் கொண்டே
ஔவியம் பொறாமை கோபம் அகற்றிக் கொண்டே
ஆண்டவனைக் கண்டுதெளிந் தாடுமயிலே.
(ஆடுமயிலே) 3

ஒருபொல்லாப்பு மில்லையென்ற புத்தியைக் கேட்டே
ஓம்சிவாய நமவெனச் செபித்துக் கொண்டே
குருநாதன் திருவடியைக் கும்பிட்டுக் கொண்டே
கூடிக் களித்து நின் றாடுமயிலே. (ஆடுமயிலே) 4

தேசகாலம் யாவையும் மறந்து நின்றே
சிறுபிள்ளையைப் போலமனம் சிறந்து கொண்டே
பேசவு மறியாமற்பேய்க் கோலங் கொண்டே
பெருமானைப் பார்த்து நின் றாடுமயிலே.
(ஆடுமயிலே) 5

*மலர் 5: இதழ் 3—13-2-39*

---

## சிவநாமம்

இராகம்—செஞ்சுருட்டி. தாளம்—ஆதி

பல்லவி

சிவநாமஞ் சொல்லித் தெளியோமோ
திருவடி கண்டு களியோமோ. (சிவ)

உவமை கடந்த வின்பம் எமக்குள்ளே யுண்டு
ஓகோ உணர்ந்து செய்சிவ தொண்டு. (சிவ) 1

தத்துவம் யாவும் சடமென அறிவோம்
சத்தியம் ஆன்மா நித்தியம் உய்வோம். (சிவ) 2

அறிவறி யாமை யிரண்டும்நீ யல்லை
அரிய தத்துவம் தெரிவது தொல்லை. (சிவ) 3

பொறிவழி மனத்தைப் போகாமற் கொல்வோம்
பூரணமான நிட்டையிற் செல்வோம். (சிவ) 4

விருப்பும் வெறுப்பும் வீணெனக் குறிப்போம்
வேதாந்த சித்தாந்தஞ் சமமெனத் தெரிப்போம். (சிவ) 5

நன்றியை நாங்கள் மறந்திட மாட்டோம்
நாடெங்குஞ் சென்று சிவதொண்டு செய்வோம். (சிவ) 6

உத்தம நட்பை ஒருநாளும் பிரியோம்
ஓம் சிவாய நமவென் றுரைப்போம். 7

அனைத்தும் சிவன்செய லென்னநா மெண்ணுவோம்
ஆன்மாக்க ளிடத்தில் அன்புநாம் பண்ணுவோம். (சிவ) 8

குருவடி ஒருபோதும் கும்பிட மறவோம்
கூடாத கூட்டத்திற் கூடயாம் அறியோம். (சிவ) 9

இன்பமே யல்லாமற் றுன்பம் நமக்கில்லை
ஈசனை மறந்தால் வந்திடுந் தொல்லை. (சிவ) 10

மலர் 5: இதழ் 4—14-3-39

---

## எல்லாமவன் செயலே.

### வெண்பா

எல்லா மவனேயா மெல்லா மவன்செயலே
கல்லாய் மனிதா கவலையேன்—நில்லாயோ
நீள நினையாய் நினைந்து நினைந்துருகி
வாழ நினையாய் மதி. 1

மதிக்கு மதியீ மதிசூடு வானை
மதிக்கு முனக்கு மரணம்—உதிக்குமோ
மார்க்கண்ட னுக்காக மறலிபட்ட பாட்டினைப்
பார்க்கிலுனக் கென்ன பயம். 2

பயமுண்டோ பஞ்சப் பொறிவழிபோ க்கார்க்கு
நயமுண்டோ நாட்டமுண்டோ நாடில்—உதிக்குமோ
என்ன குறைதானுண் டெங்கெழிலென் ஞாயிறு
சொன்னே னதுவே சுகம். 3

சுகதுக்கம் ஒன்றுமுனக் கில்லைநீ தூயோன்
அகநெகவே யாண்டவனை யந்தி—மிகுசந்தி
ஏத்தித் துதித்துநீ எல்லார்க்கு நன்மைசெய்
போற்றிப் புகழ்ந்து புறம். 4

புறத்தி லலையாதே போனவற்றை யெண்ணி
அறத்தை மறவாதே யாண்டான்—திறத்தையே
சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தனை தீதனுய்
அந்தி பகலறியா தான். 5

மலர் 5: இதழ் 5—14-4-39

## என்மனமே

கும்பிடுவார் நன்மனத்தைக் கோயிலாய்க் கொண்டருளும்
எம்பெருமான் திருவடியை இறைஞ்ச வா என்மனமே. 1

எல்லாமா யல்லவுமா யிருக்குந் திருவடியைச்
சொல்லாமற் சொல்லித் துதிக்க வா என்மனமே. 2

எங்கேநீ அங்கேநான் என்ற திருமொழியை
இங்கே யான் கண்டேத்த இயந்து வா என்மனமே. 3

ஒன்று யிரண்டா யொருமூன்றாய் நின்றவனை
நன்றாய்த் தொழுதிறைஞ்ச நயந்து வா என்மனமே. 4

பற்றற்றார் பற்றும் பரமகுரு வருளை
மற்றுப் பற்றின்றி வணங்க வா என்மனமே. 5

மனவாசகங் கடந்த மாறாக் கருணையனைத்
தினமும் பணிந்தேத்தச் சீக்கிரம் வா என்மனமே. 6

காதலிக்கு மெய்யடியார் கருத்திற் கருத் தாயிருக்கும்
நாதனை நான் கண்டு தொழ நடந்து வா என்மனமே. 7

அண்ட பிண்ட மெல்லா மடக்கி ஒரு வடிவாய்
நின்றவனைக் காண நீவாராய் என்மனமே. 8

நீயேநா னென்றென்று நேர்நேராய்ச் சொன்னவனைப்
பேயேன் வணங்கவென் பின்வாராய் என்மனமே. 9

முழுதுமுண்மை யென்ற முனிவன் திருவடியைத்
தொழுது வணங்கச் சுறுக்காய் வா என்மனமே. 10

பத்தும் படிப்போர்கள் கேட்போர்கள் பாரின்மிசை
உத்தமராய் வாழ்வா ருறுதியிதே என்மனமே. 11

மலர் 5: இதழ் 6—15-5-39

## நல்லைக் குருமணியே போற்றி

### அறுசீரடி ஆசிரிய விருத்தம்

அன்பு நெறியு மருணெறியு மறியாதேனை நயந்து வந்தே
இன்ப நெறியிற் புகுத்திட்ட எந்தாய் நல்லைப் பதிக்கரசே
துன்ப மறியேன் சுகமறியேன் தொல்லை வினையும்
யானறியேன்
முன்பு மறியேன் பின்பறியேன் முழுதுமுண்மை
யெனுமுனியே. 1

முனியே! முனிவர் முழுமுதலே! மூர்க்கனேனை
ஆண்டுகொண்ட
தனியே தன்னொப்பா ரில்லாத் தலைவா! சகமீரேழுக்கும்
இனியாய்! என்னை நீங்கா இறைவா! நல்லைக் குருமணியே!
புனிதா! போற்றி புண்ணியர்கள் நண்ணும் பொருளே
போற்றி! 2

### எண்சீரடியாசிரிய விருத்தம்

போற்றி யொரு பொல்லாப்பு மில்லை யென்ற
பூங்கழல்க ளவைபோற்றி புவியுள்ளோர்கள்
ஏற்றுகின்ற திருவடிக ளென்றும் போற்றி
எளியேனை யாண்டுகொண்ட கருணை போற்றி
சாற்றரிய மலர்ச்சோலை தயங்குகின்ற
தண்புனல்சேர் நல்லூரிற் குருவாய் வந்து
வீற்றிருந்தென் வினைதீர்த்த விமலா வுன்னை
வேறாக எண்ணுதற்கு விதியுமுண்டோ. 3

உண்டோதா னுனைப்போல ஒருவரிந்த
உலகத்தில் உறுதிதந்தோ ருணர்ந்து பார்க்கில்
எண்டோள னுவாய்நீ என்னை யுன்னை
எவர்பிரித்துச் சொல்ல வல்லார் எந்தாய்! எந்தாய்!
வண்டோதை குறையாத வளஞ்சேர் நல்லைக்
குருமணியே! மவுனத்தின் வைப்பே! யுன்னைக்
கண்டோர்க்குங் குறையுண்டோ கலந்துகொண்டேன்
கள்ளுண்ட வண்டு போலாயி னேன். 4

ஆயுநான் மறை தேடியறியா வுன்னை
யாரறிவா ரரும் பொன்னே மணியே முத்தே
மாயவுட லுண்மையென மதித்து வாடி
மயங்காம லடியேனை நல்லூர் தன்னில்
தோயுமருட் குருவாகிச் சொரூபங் காட்டிச்
சுகம்பெறவே யிருத்தி வைத்தா யினியெனக்கு
வாயுமுண்டோ வணங்குதற்கு வழி வேறுண்டோ
வள்ளலே யுள்ளதைநீ வழுத்து வாயே. 5

மலர் 5: இதழ் 7—15-6-39

---

## சொல்லு சிவமே

சொல்லு சிவமே சொல்லு சிவமே
சுகம் பெற மார்க்க மொன்று சொல்லு சிவமே
வெல்லும் பகை யொழியச் சொல்லு சிவமே
வேறு பொருளில்லை யென்று சொல்லு சிவமே
அல்லும் பகலுமறச் சொல்லு சிவமே
அன்பே சிவமென்று சொல்லு சிவமே
கல்லுங் கரையக் கவி சொல்லு சிவமே
காயமே கோயிலென்று சொல்லு சிவமே. 1

அல்லலற்று வாழவழி சொல்லு சிவமே
அகம்பிர மாஸ்மியென்று சொல்லு சிவமே
எல்லவர்க்கு நல்லனென்று சொல்லு சிவமே
எல்லாஞ் சிவன்செயலாய்ச் சொல்லு சிவமே
நில்லாதிவ் வாழ்வென்று சொல்லு சிவமே
நீயுநானு மொன்றென்று சொல்லு சிவமே
பொல்லாப்பிங் கில்லையென்று சொல்லு சிவமே
புத்தடியோம் நாங்களென்று சொல்லு சிவமே. 2

கொல்லாமை பெரிதென்று சொல்லு சிவமே
கூசாமல் எவர் முன்னுஞ் செல்லு சிவமே
நல்லோர் நடுவிருக்கச் சொல்லு சிவமே
நாமே யனைத்துமென்று சொல்லு சிவமே
உல்லாசமா யெங்குஞ் செல்லு சிவமே
உண்மை முழுதுமென்று சொல்லு சிவமே
கல்லார்க்குங் கதியென்று சொல்லு சிவமே
கட்டி மனத்தையாளச் சொல்லு சிவமே. 3

மலர் 5: இதழ் 8—17-7-39

---

## எழில் நல்லைவாசன்

இராகம்—இந்தோளம். தாளம்—ஆதி

பல்லவி

எங்கள் குருநாதன் எழில் நல்லைவாசன்
இங்கும் அங்கும் எங்கும் பிரகாசன் (எங்)

அநுபல்லவி

மங்கள கரமான வாக்யப்ர சாதன்
மாறாத மௌன தியானப்ர வேசன் (எங்)

சரணம்

அன்பர்கள் சகாயன் ஆனந்தசாகரன்
அல்லும் பகலும் நல்லை வீதியிற் சேகரன்
என்பிழை யாவும் பொறுத்தெனை யாண்டவன்
இரவும் பகலுமெந்தன் மனத்தினில் தாண்டவன் (எங்)

வஞ்சம் பொறாமை கோபம் வைத்திடும் மாந்தர்க்கும்
அஞ்சாதே யென்றருளை யீந்திடுஞ் சுதந்திரன்
கஞ்ச மலர்ப்பதத்தைக் கனவிலும் மறவோர்க்குப்
பஞ்சா மிர்தம்போ னெஞ்சிற் பண்புட னினிப்பவன்
(எங்)

மலர் 5: இதழ் 6—17-8-39

---

## எங்களையாள் குருநாதா

இராகம்—சஹானா. தாளம்—ஆதி

### பல்லவி

எங்களை யாள்குரு நாதா—நின்
இணையடி பணிந்திட வரந் தாதா

### சரணம்

செந்நெலும் கன்னலும் செறியும்நல் லூராய்
செல்லப்ப னென்னுந் திருப்பெயர்க் குடையாய்
அன்னைபி தாக்குரு தெய்வமு மானாய்
அண்டிவந் தேனெனை யனுதினம் காப்பாய். (எங்)

உல்லாசமான நடையுடை யோனே
உன்போ லொருவர் உலகினிற் கிடையார்
எல்லாம் வல்லவர் செயலையா ரறிவா
ரேத்தி யேத்தித் தொழ வெனைக் குறியாய். (எங்)

பித்த னென்றுபலர் பேசிய திறத்தாய்
பெற்றி பிறரா லறியொணாத் தரத்தாய்
அத்தனே யுனக்கே யபய மபயம்
ஆருக்கு மினிமே லெனக்கென்ன பயம். (எங்)

மலர் 5: இதழ் 10—17-9-39

## கண்டபத்து

(நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா)

பொறி வழியே போய்ப்புகுந்து புலம்பித் திரிவேனை
நெறிவழியே நிறுத்தி நீயே நா னென்றுரைத்த
பெரியவனைப் பித்தனெனப் பிறர் பேசும் பெருமானைச்
செறி பொழில்சூழ் நல்லை நகர்த் தேரடியிற் கண்டேனே. 1

தந்தை தாய் மைந்தர் தமர்தார மென்றடியேன்
பந்தத்துட் பட்டுப் பாழாகப் போகாமே
சிந்தை தெளிவித்துச் சீரடியார் நடுவைத்த
எந்தை பெருமானை யிலங்கு நல்லைக் கண்டேனே. 2

தேகமே மெய்யென்று சிதடனாய்த் திரிவேனை
மோக மறுத்தாண்ட முழுமுதலை மொய்குழலாள்
பாகம் மறைத்துப் பரிந்துவந்த பாக்கியத்தை
நாகமலர் சொரியும் நல்லைநகர்க் கண்டேனே. 3

இருவினையான் மதிமயங்கி யிடர்ப்பட்டுக் கிடப்பேனைக்
கருணையினா லாண்டுகொள்ளக் கடவுடிரு வுளங்கொண்டு
அருள்மேனி தாங்கி யவனியிலே வந்தானைத்
திருவாழும் நல்லைநகர்த் தேரடியிற் கண்டேனே. 4

காட்டிலே காளியுடன் கூத்தாடுங் கண்ணுதலோன்
நாட்டிலே ஞானகுருவாய் நயந்துவந்து
மீட்டா னவன்றன் விரையார் மலரடியை
மாட்சிமைசேர் நல்லைத்தேர் மாணடியிற் கண்டேனே. 5

மாலயனுந் தேடி யறியா மலரடிகள்
கோலவருட் குருவாய்க் குவலயத்தி லேபோந்து
சாலப்பெரும் பகையைத் தானீக்கி யாண்டானை
ஞாலம்புகழு நல்லைத் தேரடியிற் கண்டேனே. 6

நானுரென் னுள்ளமா ரெனநாடு மெய்யடியார்
தானாக நின்றருள்செய் சங்கரனே தாரணியிற்
கோனாக வந்தாண்டான் குளிரார் திருவடியைத்
தேனார் பொழில் நல்லைத் தேரடியிற் கண்டேனே. 7

எட்டு மிரண்டு மறியா வெனக்கு நல்ல
பட்டமளிக்கப் பரிந்துவந்த மெய்ப்பொருளை
வட்டஞ்சூழ்ந் தடிபரவும் மங்கைமார் கொண்டாடுஞ்
சிட்டர்வாழ் நல்லைநகர்த் தேரடியிற் கண்டேனே. 8

என்னையன்றி வேறொன்று மில்லை யெனச்சொன்ன
அன்னையினு மன்புடைய வாசா னவனிதனிற்
கன்னலொடு செந்நெல் கமுகு கதலி பலா
மன்னுநல்லை மாநகரிற் றேரடியிற் கண்டேனே. 9

இரவுபக லற்ற ஏகாந்த வீட்டிலெனைப்
பரவிப் பணிய்வைத்த பரமன் குருவாகிச்
சரண கமலமலர் தலைதனிலே வைத்தவனைக்
குரவு மலர்ச்சோலையாக் குளிர்நல்லைக் கண்டேனே. 10

மலர் 5: இதழ் 11—17-10-39
12—16-11-39

## சிவதொண்டன் வாழ்த்து

வெண்பா

செல்வச் சிவதொண்டன் சீரடி யார்தங்கள்
நல்லமனக் கோயில்கொண்ட நாளிதுவால்—எல்லவரும்
தீர்த்தீங்களாடித் திரிகரணம் தூய்மை செய்மின்
பார்த்தவிட மெங்கும் பரம்.

அகவல்

ஓமெனுந் தாரகம் ஒண்முடி சுமந்து
நாமெலாஞ் சிவனடி யாரென நவின்று
ஆரறி வாரென வாசான் தந்த
சீரிய மந்திரம் சிந்தையிற் செபித்துச்
சிவநெறி வழுவாச் சிவதொண்ட னென்பவன்
பவவரு டத்துப் பன்னுமார் கழிமதி.
எவரு முவப்ப யாழ்ப்பா ணத்தில்
வண்ணை மாநகர் வைத்திய நாதன்
றன்னரு ளாலே தானவ தரித்தான்
இன்னவன்,
வயதிற் சிறியன் மதியிற் பெரியன்
நியதி மார்க்க நிலையைக் கடவான்
சாந்தம் பொறுமை தயவுதன் னடக்கம்
வாய்ந்தவ னன்ப ரிதயமா மலரில்
ஏய்ந்தவன் போடு மினிது வளர்ந்தவன்
ஐந்தா மாண்டகன் றுறும் பருவம்
சுந்தர நடையுடன் துலங்கு முங்கள்
மங்களம் பொலியும் மாளிகை தனக்குத்
திங்கள் தோறும் சிறப்புடன் வருவான்
அங்கவன் றன்னை யார்வமொ டணைத்துத்
துங்கநீ றணிந்து சொர்ணத்தா லாய
பூம்பட் டாடை பொலிவுறப் புனைந்துடுத்து
ஆம்பொருள் வழங்கி யகமகிழ் வித்து
நாம் மென்று,
நாத கீத வாத்தியம் முழங்கக்
காத லாற்கசிந் தாடல்நம் கடனே

கலிவிருத்தம்

தாரகத்தனி மந்திர மோதியே
பாரகத்திற் பணிசெய் சிவதொண்டன்
ஏர கத்தடி யாரக மேகுவான்
நீர கத்துட னேர்பெறு திங்களில்.

மலர் 6 : இதழ் 1—16-12-39

---

## திருவுந்தி

சிவனடியார்கள் சீராய் வளர்க்கும்
சிவதொண்டன் வந்தானென் றுந்தீபற
சிவமே நாமென் றுந்தீபற. 1

பவவரு டீத்துப் பன்னுமார் கழிமதி
சிவதொண்டன் வந்தானென் றுந்தீபற
தீவினை யில்லையென் றுந்தீபற. 2

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றான் வந்தானென் றுந்தீபற
நித்தியா னந்தனென் றுந்தீபற. 3

மனத்துக்கண் மாசிலா மாதவத் தோர்தம்
இனத்தவன் வந்தானென் றுந்தீபற
ஈடேறி னோமென் றுந்தீபற. 4

அறவாழி அந்தணன் றாள்சேர்ந்த தொண்டன்
பிறவா னிறவானென் றுந்தீபற
பிரமமே நாமென் றுந்தீபற. 5

மலர் 6 : இதழ் 1—16-12-39

---

## திருவருள் காப்பாம்

அத்துவி தப்பொருள் காப்பாம்—எனக்
கடியார்க ளென்றென்றுங் காப்பாம்
சித்தரும் தேவரும் காப்பாம்—எந்தன்
சித்தத் திலங்கும் திருவருள் காப்பாம். 1

அட்ட வசுக்களும் காப்பாம்—எனக்
கானந்த மான பராபரங் காப்பாம்
எட்டுத் திசைகளும் காப்பாம்—எனக்
கெங்கும் நிறைந்த சிவசக்தி காப்பாம். 2

பிராண னபானனுங் காப்பாம்—என்னைப்
பிரியா திருக்கும் பிரணவங் காப்பாம்
அராவணி வேணியன் காப்பாம்—எனக்
கருளை அளிக்கும் குருபரன் காப்பாம். 3

பஞ்சப் புலன்களும் காப்பாம்—என்னைப்
பரவு மடியவ ரனுதினங் காப்பாம்
குஞ்சர முகத்தவன் காப்பாம்—நல்ல
குழந்தை வடிவேலன் என்றென்றுங் காப்பாம். 4

சந்திர சூரியர் காப்பாம்—எங்கும்
தங்கு முயிர்க ளனைத்துமென் காப்பாம்
மந்திரந் தந்திரங் காப்பாம்—நான்கு
மறைகள் சிவாகமம் மாநிலங் காப்பாம். (அத்து) 5

3-1-40—மலர் 20 : இதழ் 10—1956

## திருவம்மானை

ஐயடித்தரவு கொச்சகக்கலிப்பா

அரியயனுந் தேடி யறியாத் திருப்பாதம்
பெரிய புவ னத்திடையே பேயேனை யாண்ட
உரிமை நினைந்துருகி யுள்ளத் துவகை பொங்க
இரு விழியும் நீரிறைப்ப விரவுபக லேத்தி
அரியதிருப் புகழையே அறையுதுங்கா ணம்மானாய். 1

ஆட வெடுத்த அடித்தா மரைபரவி
வேடம் பொலிய விரைந்துவந்த மெய்யடியார்
தாடலைமேற் கொண்டு சற்குருவைப் போற்றி
நாடறிய வெண்ணை நல்ல தொண்டு செய்யவைத்த
கேடறியாத் திருவடியே கிளத்துதுங்கா ணம்மானாய். 2

பாதிமதி சூடிப் பவளம்போன் மேனியிலே
பூதி யணிந்து புதுக்கொன்றைப் பூச்சூடிப்
பாதியுரு பெண்ணாகிப் பல்கோடி பூத கணம்
வீதியிலே சூழ விளையாடும் மெய்ப்பொருளை
ஆதி பகவனையே யன்பு செய்வோ மம்மானாய். 3

விடையேறு மெய்ப்பொருளை விண்ணோர் பெருமானைக்
கடையேனை யாண்டுகொண்ட கருணைத் திருவுருவைத்
தடையேது மில்லாத தத்துவனைத் தானாக
அடியேனை ஐம்புலனு மறியாத வித்தகனைப்
படிமீதிற் பாடிப் பணியுதுங்கா ணம்மானாய். 4

வேதம் வகுத்தானை வேதத்தி னுட்பொருளைப்
பாதந் தொழுவார்கள் பாக்கியத்தைப் பச்சைமால்
பேதந் தவிர்த்தாண்ட பிஞ்ஞகனைப் பிறப்பிலியை
மாதவி புன்னை மௌவல் வளர்ந்தோங்கு நல்லூரில்
பாதம் பரவிநாம் பாடுதுங்கா ணம்மானாய். 5

உயிருக் குயிராகி யுள்குவா ருள்ளத்தே
பயிலுந் திருவுருவைப் பற்றற்றார்க் குறுதுணையைக்
கயிலைப் பதியானைக் காளகண்டங் கொண்டவனை
மயிலைப் பொருவுமையாண் மருவுதிருப் பாதியனைத்
துயிலை யறநீக்கித் தோத்தரிப்போ மம்மானாய். 6

மலர் 6 : இதழ் 2—14-1-40
3—13-2-40

---

## நல்லைப்பதிக் கரசே

நல்லைப் பதிக்கரசே! நல்லைப் பதிக்கரசே!
நல்ல வழிகாட்டி நாயேனை யாண்டிடடா. 1

கல்லை நிகர்த்தமனங் கரையவருள் தந்திட்டா
எல்லையில்லா வின்பத்தே யெனையிருத்தி வைத்திடடா. 2

ஆன்மாவை நித்தியமென் றறிய வரந் தந்திடடா
வீண்பா வனையெல்லாம் விலக்க வருள் தாடா. 3

மாயப் பிணியகல மருந்தெனக்குத் தந்திடடா
காயங் குலையுமுன்னர்க் காண வருள்தாடா. 4

சித்தத்தினுள்ளே சிவலிங்கங் காட்டிடடா
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிடடா. 5

எல்லா ரையுமீச னிடத்திலே காட்டிடடா
எல்லாரு மீச னிடத்திலே காட்டிடடா. 6

கொல்லா வரமெனக்குக் குவலயத்தில் வேணுமெடா
எல்லா ரிடத்துமன்பாய் இருப்பதெனக் கிச்சையடா. 7

என்றும் மறவா வரமெனக்கு வேணுமெடா
குன்றுபோ னிற்கக் குருவே வரந்தாடா. 8

மலர் 6 : இதழ் 4—14-3-40

---

## சிவனடியார்

### வெண்பா

*நாற்றிசை யுஞ்சென்று நல்ல சிவதொண்டன்*
*ஏற்றிவரு மீச னிணையடியைப்—போற்றிச்*
*சிவனடியார் நாமென்று திங்கடொறுஞ் சொல்லு*
*மவனை மறவா தகம்.* 1

*அகந்தூய்மை வேண்டுமுய ரைந்தெழுத்தை நெஞ்சி*
*லுகந்துரைக்க வேண்டுமொழி யாமற்—சகந்தனிலே*
*வேள்வியும் வேண்டுமோ வேறாய்க் கடவுளுண்டோ*
*தாழ்வுண்டோ தொண்டர் தமக்கு.* 2

*தானான சற்குருவைத் தான்போற் றிடுஞ்செல்வக்*
*கோனுஞ் சிவதொண்டன் கொண்டுவருந்—தேனூர்ந்த*
*கட்டுரையைக் கண்டு களிக்குஞ் சிவனடியார்*
*நட்பே நலனளிக்கும் நாடு.* 3

*நாடுவார் நாட்டிலே நல்லமழை பெய்யுந்*
*தேடுவார் சிந்தையிலே தித்திக்கும்—பாடுவார்*
*பாவமெல்லாம் போக்கும் பலஞான மாக்குமே*
*சீவன் சிவமென்று தெளி.* 4

*தெளியவழி காட்டுஞ் சிவதொண்ட னன்பாற்*
*பொழியுங் கவிமாரி போதம்—வெளியாக்கி*
*வேதாந்தஞ் சித்தாந்தம் வேறல்ல வென்றுலகில்*
*நாதாந்தங் காட்டும் நமக்கு.* 5

*மலர் 6: இதழ் 5—13-4-40*

## முழுவதும் உண்மை

### பல்லவி

முழுவதும் உண்மை யென்று
மோனமுனி சொன்னனன்று. (முழு)

### அநுபல்லவி

பழுதொன்று மில்லை யென்று
பண்ணுவாய் சிவதொண்டு. (முழு)

### சரணம்

ஒழிந்து போகும் பிறவி
அழிந்து போம் பழிபாவம்
எழுந்திரு விழித்துக் கொள்
எல்லாம் உனக்கு வெற்றி. (முழு) 1

தளர்ந்துபோ காதே குரு
சாற்றிய ஞான மொழி
தெளிந்து கொண்டாற் சீவன்
சிவனெனக் காணலாம். (முழு) 2

சொல்லித் துதிக்கும் யோக
சுவாமியைத் தினங் காக்கும்
செல்வன் திருப் பாதமே
யல்லும் பகலுந் துணை. (முழு) 3

*மலர் 6 : இதழ் 6—14-5-40*

---

## உண்மை முழுதும்

### வெண்பா

உண்மை முழுதுமென ஓதுமொரு மொழியால்
என்னை மறந்தேன் இடரகன்றேன்—பின்னையிங்கோ
ராச்ச ரியங்காணேன் அண்டபிண்ட மெல்லாமே
போச்சுதொன் ருகப் புகழ். 1

ஆறும் குளனும் அருவரையுஞ் சோலைகளுஞ்
சேரு மிலங்கைச் சிவனடியீர்—கூறுஞ்
சிவதொண்டனைக் காக்கச் சிந்தைவேண் டாவோ
அவற்குத் துணையார் அறை. 2

கன்னலொடு செந்நெல் கதலி கமுகுபலா
மன்னு மிலங்கையில்வாழ் மாந்தர்காள்—இன்னும்
சிவதொண்டன் தொண்டில்மனஞ் செல்லா திருந்தால்
அவனை யோம்புவரார் அறை. 3

செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்கலென
நல்ஒளவை முன்னுள் ளவின்றனளாற்—செல்வச்
சிவனடியீர் தொண்டதனைச் செய்யத் தவருதீர்
கவனஞ் செலுத்துவீர் காப்பு. 4

மலர் 6 : இதழ் 6—14-5-40

## ஸ்ரீ நடராஜன்

இராகம்—சுருட்டி. தாளம்—ஆதி

பல்லவி

இராஜாதிராஜன் ஸ்ரீ நடராஜன்

அநுபல்லவி

ஆசா பாச மகற்றும் அன்பு விலாசன்

சரணம்

மாசில்லா மாதவர் தம் மனத்திற்பிர காசன்
மறுமைக்கும் இம்மைக்கும் இவனென் சிநேகன்.
(இராஜா)

தேசம் புகழுந்திரு வண்ணையில் வாசன்
சிவகாமி யம்மை சேவிக்கும் நேசன். (இராஜா)

மலர் 6 : இதழ் 9—16-8-40

---

## நமச்சிவாய

அடியவர் மனத்தை நீங்கா
அப்பனே கருணை வாழ்வே
வடிவுடை மழுமா னேந்தும்
வள்ளலே நமச்சி வாய. 1

ஆக்கையே கோயிலாக
வகஞ்சிவ லிங்க மாக
நீக்கமற் றெங்கும் நிற்கும்
நிமலனே நமச்சி வாய. 2

இணையடி பணிவார் தம்மை
யின்பவீ டடையச் செய்யுந்
துணைவனே சோதி வெற்பே
தூயனே நமச்சி வாய. 3

ஈசனே யெம்மை நீங்கா
இறைவனே யிமையோர் போற்றும்
வாசமார் கமல பாதா
வள்ளலே நமச்சி வாய. 4

உள்குவா ருள்ளத் தெல்லாம்
உடனிருந் தறியுந் தேவே
கள்ளுலாங் குழலாள் பாகா
கடவுளே நமச்சி வாய. 5

ஊமைபோ லிருந்தே யுண்மை
யுணருவார் தங்கட் கெல்லாம்
தாய்போ லருளைச் செய்யுஞ்
சங்கரா நமச்சி வாய. 6

எண்ணுவா ரெண்ணந் தோன்று
மிடமெனப் பெரியோ ருன்னைத்
திண்ணமாய்ச் சொல்லும் நல்ல
தெய்வமே நமச்சி வாய. 7

ஏகம்ப மேவி யந்த
ஏந்திழை கலக்கந் தீர்த்த
ஏகனே யெல்லாம் வல்ல
எந்தையே நமச்சி வாய. 8

ஐயந்தீர்த் தடியேன் றன்னை
யன்றுநல் லூரி லாண்ட
துய்யனே துரிய வெற்பே
சுந்தரா நமச்சி வாய. 9

ஒன்பதுவாய்த் தோற்பை தன்னில்
உயிரடங்கி நிற்க நல்ல
அன்புசெய் தெய்வ மேயென்
அமுதமே நமச்சி வாய. 10

மலர் 6 : இதழ் 10—16-9-40
11—17-10-40

## சிவதொண்டன் தொழுமின்

### வெண்பா

பவவருடம் மார்கழியிற் பார்தனிலே யெங்கள்
சிவனருளால் வந்தசிவ தொண்டன்—இவனையுடன்
ஏந்தி யெடுத்தணைத்தா ரின்போ டடியார்கள்
சாந்திஓம் சாந்திதத் சத். 1

கண்ணையிமை காப்பதுபோற் காத்த வடியவர்க்கு
வண்ணையில்வா மீசன் வரந்தருவான்—திண்ணமிது
சேருங்க ளொன்றாய்ச் சிவசிவா வென்றுகளி
கூருங்க ளெல்லாங் கொடுத்து. 2

கொடுத்தார்க்கு முண்டோ குறைதா னவனை
யடுத்தார்க்கு முண்டோ வடுக்கல்—எடுத்தான்
தலைபத்துந் தத்தளிக்கச் செய்த சிவனைத்
தலையால் வணங்குந் தமர்க்கு. 3

ஆறுவருடமவ னன்புடனே செய்த தொண்டு
கூறுந் தரமோ குவலயத்திற்—றேறீர்
எழுமின் விழிமினெல்லா மீசன் செயலாய்த்
தொழுமி னதுவே சுகம். 4

மலர் 7 : இதழ் 1—15-12-40

---

## தம்பிமாரே

ஒழுக்கம் விழுப்பந்தரும் தம்பிமாரே
ஓம் என்று சிந்தை செய்வீர் தம்பிமாரே
அழுக்கா றவாவெகுளி தம்பிமாரே
ஆன்மாவைப் பந்திக்கும் தம்பிமாரே
வழுக்கி விழுந்தாலும் தம்பிமாரே
மலரடியைச் சிந்தைசெய்வீர் தம்பிமாரே
பழுத்த வடியருடன் தம்பிமாரே
பாடிப் பணியவேண்டும் தம்பிமாரே
மூப்புவந் தடையமுன்னே தம்பிமாரே
முழுதும் அறியவேண்டும் தம்பிமாரே
நாப்பிளக்கப் பொய்யுரைத்துத் தம்பிமாரே
நாட்டிற் பொருள்தேட வேண்டாந் தம்பிமாரே
ஆதியந்தம் நமக்கில்லைத் தம்பிமாரே
ஆன்மாவே நாங்கள் காணும் தம்பிமாரே
ஓதி யுணரவேண்டுந் தம்பிமாரே
உய்ய வழி யதுகாணுந் தம்பிமாரே
சாதி சமயபேதம் தம்பிமாரே
சங்கற்ப மென்றறிவீர் தம்பிமாரே
வாழி வாழி சிவன் நாமம் தம்பிமாரே
மனசாரச் சொல்லுங்கள் தம்பிமாரே
வாழிசிவ னடியார்கள் தம்பிமாரே
மன்னவனுஞ் செங்கோலுந் தம்பிமாரே.

மலர் 7: இதழ் 2—14-1-41

## அருமையான தெய்வம்

அண்ணன்மாரே தம்பிமாரே ஆச்சிமாரே கேளீர்
அருமையான தெய்வம் நாங்கள் அதையறிந்து வாழீர். 1

இன்னதன்மை என்றுநம்மை எடுத்துச்சொல்வா
ருண்டோ
என்னபய மெங்களுக்கு எல்லாஞ்சிவ மன்றோ. 2

அவனன்றி யோரணுவு மசையாதெனப் பெரியோர்
அன்றுசொன்ன நிறைமொழியை மறப்பதுவுஞ்
சரியோ ? 3

அங்கிங் கெனுதபடி யெங்குஞ்சிவ மென்று
அறிந்தடங்கி யகிலத்திலே வாழ்வதுவே நன்று. 4

காணுங்கண்ணிற் கலந்தகண்ணே என்னுஞ்
சிவதொண்டர்
கருத்தைக்கண்டு வருத்தமற்று வாழ்தல் சிவ
தொண்டு. 5

அனைத்துமொன்று யிருக்குதென வறிந்த பெரியோர்கள்
அடியிணையை முடிதனிலே அணிந்து கொண்டேன்
சிறியேன். 6

மலர் 7 : இதழ் 3—12-2-41

## சிந்திமின்

### அகவல்

இளம்பிறை சூடிய எந்தை பெருமான்
வரம்பெறுந் திருவடி வாழ்த்தி வணங்கி
அன்னை தந்தை யாசா னடியார்
என்னு மிவர்களை யிணையடி பணிந்தே
ஒரு பொல்லாப்பு மில்லையென் றோதிய
குருபரன் திருவடி கும்பிட்டுக் கொண்டிங்
கறஞ்செய விரும்பென ஔவைப் பிராட்டி
சிறந்த மொழியை நினைந்து சிந்தையிற்
சிவதொண்டன் பணிக்குத் துணைசெயுந் தொண்டர்
எவர்க்கும் யாமீண் டியம்புதுங் கேண்மோ!
அடியார் பலரிவ் வாண்டே மளவும்
மிடியறக் காசு மிகவு மனுப்பினர்
அந்தண ரடியார் தொகையோ குறைவாய்
வந்ததா லடியோம் வாளா விருந்தனம்;
இனிமே லெவரும்,
வருடந் தொறுமூன்று ரூபா வழங்கிற்
கருமம் கடைப்பிடித் தாற்றுதுங் காண்க.

### வெண்பா

போது மளவும் பொருளீந்த மெய்யடியீர்!
ஏதுங் குறைவேயிலை நீங்கள்—ஓதுமென்
சிந்தைகளி கூரச் சிவதொண்டு செய்வதற்குத்
தந்திடுவீர் மூன்றுரூபா தான்.

மலர் 7 : இதழ் 4—14-3-41

## குதம்பைப் பாட்டு

எள்ளுக்கு ளெண்ணெய்போ லெங்கு மிருப்பான்
எங்க ளிறைவனடி—குதம்பாய்
எங்க ளிறை வனடி. 1

உள்ளவுள்ள மெல்ல மெல்ல வெளி யாகும்
உறுதி யாயிரடி—குதம்பாய்
உறுதி யாயிரடி. 2

வெள்ளம் பள்ளத்தை நாடுமது போல
விமல னுவனடி—குதம்பாய்
விமல னுவனடி. 3

துள்ளித் திரியும் மனத்தை யடக்கினுல்
துரிய மடைந்திடலாம்—குதம்பாய்
துரிய மடைந்திடலாம். 4

எங்கெங்குச் சென்ருலு மங்கங்கு மீசன்
இருப்பதைக் கண்டிடடி—குதம்பாய்
இருப்பதைக் கண்டிடடி. 5

தெங்கி லிளநீர் சேர்ந்திருந் தன்மைபோல்
தெய்வ மிருக்குதடி—குதம்பாய்
தெய்வ மிருக்குதடி. 6

மலர் 7: இதழ் 5—13-4-41

## குருநாதா

செல்வக் குருநாதா! செல்வக் குருநாதா!
சிந்தைதடு மாறுதெடா! திருவருளைத் தந்திடடா! 1

அல்லலெல்லாம் நீக்கி யாளாக்க வேண்டுமெடா
எல்லையில்லா வின்பத்திலே யென்னையிருத்தி
வைத்திடடா. 2

கல்லை நிகர்த்தமனங் கரையவரந் தந்திடடா
தொல்லைவினை நீக்கிச் சுகமெனக்கே யீந்திடடா. 3

நீயேநா னென்னும் நிச்சயத்தைக் காட்டிடடா
பேயேபோல் நானிருந்து பிரமை கொள்ள
வைத்திடடா. 4

அங்குமிங்கு மோடி யலைந்து திரிகிறெண்டா
எங்குமுனைக் காண வெனக்குவரந் தந்திடடா. 5

வலைப்பட்ட மான்போல் மயக்கமிக வாகுதெடா
சிலைப்பட்ட பண்டம்போற் சித்தஞ் சிதறுதெடா. 6

எனக்குள்ளே நீயிருக்கும் எழிலைத்தான் காட்டிடடா
உனக்குள்ளே நானிருக்கு முண்மையிலே
மாட்டிடடா. 7

பேசா மந்திரத்தின் பெருமைநீ தந்திடடா
ஆசா பிசாசை யகற்றவழி காட்டிடடா. 8

என்னோ டுடன்பிறந்தா ரெல்லோரும் மாண்டார்கள்
உன்னுறவே யல்லாம லோருறவு மில்லையெடா. 9

மலர் 7 : இதழ் 6—14-5-41

## முத்தி நல்குமே

### குறள் வெண்செந்துறை

தான மிடுங்கள் தவம் புரியுங்கள்
ஞான வீடு நமக்கெளி தாமே. 1

பூவின் மணம்போற் பொருந்திய புருடனை
நாவினால் நமச்சிவாய வென் றுரைமின்! 2

ஆவிக்கு ளாவி யாகிய வமலனைச்
சேவிக்க வல்லார் சிவகதி பெறுவார். 3

பாவிக ளறியார் பரம்பொருள் பதமலர்
கூவி யழைமின் கூற்றுவன் வருமுன். 4

உன்னை முழுவதும் ஒப்புக் கொடுத்தால்
அன்னையைப் போலே யாதரிப் பாரே. 5

பெரியவன் சிறியவ னென்பது பேதைமை
யரிதினு மரிதே யதனை யறிதல். 6

பொறிவழிச் செல்லும் பொல்லா மனத்தை
யறிவா லடக்கி லானந்த மாமே. 7

அஃதை யறிவோ ரதுவே யாவர்
இஃதஃ தென்போ ரிழிந்தோ ராவர். 8

எல்லாஞ் சிவன்செய லென்பர் பெரியோர்
மல்லா கத்தானை மறவாது வாழுக. 9

சொல்லாமற் சொன்ன சொல்லி னுறுதி
நல்லோ ரறிந்து நாடுவர் முத்தியே. 10

வானவர் தானவர் வணங்கினு மறியார்
ஞான முடையோர் நம்மை யறிவார். 11

போன நாட் கிரங்கும் புந்தியை நீக்கி
மோன நிலையில் நிற்றலே முறைமை. 12

வானகம் மண்ணகம் வந்துதாழ்ந் திடினுந்
தானவ னானேன் சஞ்சல மடையான். 13

வெய்ய காமம் வெகுளி குரோதம்
வையார் மனத்திடை மாசில் லாரே. 14

வெறும்வீண னெத்தனை வித்தைகற் றாலும்
தறுகுறும் பானவை தான்தீ ரானே. 15

பொறுமையும் அடக்கமும் பூரண சாந்தியும்
மறுமை யின்பம் பயக்குமா நிலத்தே. 16

பலபல வாக விரியும்பாழ் மனத்தை
மெலமெல வாக வெற்றிகொள் வாயே. 17

அகல நீளங் காண வரியது
பகலு மிரவு மற்ற பரம் பொருள். 18

இனியதி லினியது ஈசன்மே லன்பு
முனிய வினியது மோகமுங் கோபமும். 19

பிறப்பிறப் பற்ற பெருமான் மலரடி
மறப்பில் லாதார் மையல்தீர் வாரே. 20

அளவுக்கா காரம் அறிந்துண் ணாதான்
பிளவள வேனும் பேரின்ப மெய்தான். 21

உயிரெலாந் தன்னுயிர் போல வுணர்ந்தோன்
பயிலு மிடமது பரகதி யாமே. 22

ஒடுங்கு மனத்தில் உண்மை புலப்படும்
படும்பய னதுவே பற்றற் றோர்க்கே. 23

தமஞ்சம மிரண்டின் தன்மையை யறிந்தோன்
அமரர்நா டாளு மாணை நமதே. 24

எவரேனு மீசனை யிடைவிடா தெண்ணில்
அவரே நமக்குநல் அன்பராங் கண்டீர். 25

வலமிட மோடும் வாசியை யறிவோர்
அலகிலா வாண்மை யடைவர் சத்தியம். 26

குலநல முணராக் கூசாச் சிந்தையர்
மலரடி பெறுவர் மாநில மிசையே. 27

உலகத்தோ டொட்ட வொழுக வறியார்
பலகற்று மொன்றும் பயன்பெற மாட்டார். 28

அட்டாங்க யோக மறிந்து மாவதென்
இட்ட னீச னெனவறி யார்க்கே: 29

ஆவதும் அழிவதும் அறியாப் பொருளை
நோவதால் வருபயன் உண்டோ நுவலுமின். 30

சாவதும் பிறப்பதுந் தவிர்த்தெனை யாண்டான்
போவதும் வருவது மில்லாப்புங் கவனே. 31

சித்தத்தி னுள்ளே தித்திக்குந் தேனைப்
பித்தர் அறிவரோ பேசுமின் பேசுமின். 32

நாளுக்கு நாளாக நாட்கள் கழிந்தன
பாழுக் குழைத்துப் பயனற் றேனே. 33

ஐந்தெழுத் துள்ளே யனைத்தையுங் கண்டேன்
சஞ்சலந் தீர்ந்தேன் தனிமைபெற் றேனே. 34

நஞ்சணி கண்டனை நான்முகன் மாலிவர்
அஞ்சலி செய்தும் அறிந்தில ராமே. 35

நெஞ்சகம் நின்று நினைக்கும் பொருளைப்
பஞ்சமா பாதகர் பாரில் அறிந்திலர். 36

அதுநா னென்னு மகலாத் தியானத்தால்
மதுவுண் வண்டுபோ லாயினர் பலரே. 37

பேதங்க ளெல்லா மாயினும் பேதங்கள்
பேதியா வொன்றைப் பிரியவொண் ணாதே. 38

வேதமோ டாகம மறியா விமலனை
நாதனு மம்மைசி வாயவென் போமே. 39

காணுங் கண்ணிற் கலந்த கண்ணது
ஆணும் பெண்ணு மலியு மானதே. 40

ஆதார ஆதேய மானவப் பொருளின்
பாதார விந்தம் பணிதல் பயனே. 41

சூதான தற்ற வெளியிற் சுகமாய்
நீதா னிருத்தல் நிச்சய மாமே. 42

தேகம் விழுமுன் செல்வத்துட் செல்வத்தை
அகத்துட் காண்டல் அறிவென் பாரே. 43

போக போக்கியம் எல்லாம் வீணென
யோக சமாதியி லிருந்துணர் வாயே. 44

ஏக மாகிய ஒன்றே எல்லாமாய்த்
தியாக மானது சிந்தித் தறிநீ. 45

முற்று முணர்ந்தவ ரில்லை முழுதும்
பெற்றோ மென்று பெருமை கொள்ளலை. 46

சிற்றம் பலவன் திருந்து சேவடி
பெற்றவர் உலகிற் பிறந்த தில்லை. 47

சற்றுஞ் சந்தேகங் கொள்ளலை சாட்சிநீ
முற்று மதன் வினை யாட்டென முன்னுதி. 48

என்செயல் யாதொன்று மில்லை யாவும்
உன்செயல் என்றே யுணர்ந்தேன் யானே. 49

முன் செய்த தீவினை முற்றும் வெந்தன
பின் செயும் தீவினை பிறவா வெனக்கே. 50

தருமமு மில்லைத் தானமு மில்லைக்
கருமமு மில்லைக் கண்டுகொண் டேனே. 51

மண்டல முழுதும் மன்னிய பொருளைக்
கண்டுகொண் டேனே கவலைதீர்ந் தேனே. 52

அண்டமும் பிண்டமு மடங்கலு மதுவே
தொண்டர்கள் கண்டு துயர்தீர்ந் தாரே. 53

முண்டக மலர்த்தாள் முடிமிசைக் கொண்டேன்
அண்டரு மறியா ரதிசய மதிசயம். 54

பண்டைசெய் வினையெலாம் பறந்தன பறந்தன
தண்டையம் மலர்த்தாள் தான்பணிந் தேனே. 55

காலை எழுந்து கைகால் சுத்திசெய்
தாலயம் மேவி அரனடி பணியே. 56

சீலமும் அதுவே செய்விரதமும் அதுவே
ஞாலமுள் ளளவும் நன்மை யுண்டாமே. 57

காலனு மணுகான் கருமமு மணுகா
ஆல முண்ட கண்ட னுணையே. 58

தூல சூக்கும காரண மறிந்தால்
ஏலமர் குழலி எழிலருள் வருமே. 59

நூலறி வாளரும் நுணுகியு மறியார்
மாலய னொடுமறு தேவரு மறியார். 60

பிறப்பிறப் பில்லாப் பொருளே நீ
மறப்பி ல்லாமல் மனனஞ்செய் நாளும். 61

சிறப்பு மிதுவே செல்வமு மிதுவே
அறனு மிதுவே அருளு மிதுவே. 62

உறவு மிதுவே உண்மையு மிதுவே
திறனு மிதுவே சித்தியு மிதுவே. 63

சிந்தி சிந்தி சிந்தி சிவகதி
மந்திர மிதுவே மனத்திடை மதியே. 64

யோக நாதன் உரைத்த மொழியை
மோகம் தீர்த்து முத்தி நல்குமே. 65

மலர் 7: இதழ்—7, 8, 9, 10, 11, 12—1941
மலர் 8: இதழ்—3, 4, 5—1942

---

## பொன்னடியைப் போற்றுதுமே

### தரவு கொச்சகக் கலிப்பா

இன்றாகி நாளையா யிருப்பானை எப்பொழுதும்
நன்றாக நினைவார்கள் நாடார்கள் பிறபொருளை
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்த பெருமானைப்
பொன்றாத மலர்தூவிப் பொன்னடியைப்
போற்றுதுமே. 1

என்னரசை ஆரமுதை யெந்தையெம் பெருமானை
முன்னரசை மூவர்களும் வணங்கிநின்ற மூர்த்திதனைத்
தன்னரசைத் தானான தத்துவனைத் தயாபரனைத்
சொன்னவர்க ளினிவந்து தோன்றார்க ளிதுதிண்ணம். 2

பூதங்க ளாந்தாகிப் போக்குவர வில்லானை
நாதமெலாங் கடந்துநின்ற நம்பனை நாடோறும்
வேதமுறை தவறாம லர்ச்சிப்பார் வியனுலகில்
பாதமலர் காண்பார்கள் பணிவார்கள் பிறவாரே. 3

என்பிழைகள் பொறுப்பானை எங்குமா யிருப்பானை
அன்பிலரை யடையானை அஞ்செழுத்துப் பொருளானை
நன்மலர்கொண் டெந்நாளும் நாட்கழித்தல் நலமென்றே
சொன்னவர்தந் திருப்பாதம் தொழுவேனே எந்நாளும். 4

மந்திரமாய்த் தந்திரமாய் மருந்தாகி விருந்தாகி
எந்திரமாய் என்துணையாய் எல்லாமா யல்லவுமாய்ச்
சந்திரனுய்ச் சூரியனுய்ச் சமரசரம் யாவுமாய்
எந்தைபிரா னிருந்தநிலை கண்டார்கள் பிறவாரே. 5

பிறவார்கள் இறவார்கள் பிறிதொன்று லயரார்கள்
கரவார்கள் உழலார்கள் கண்டதிலே மனம் வையார்
அறநெறியில் வழுவார்கள் அன்பர்பணி மறவார்கள்
பிறவொன்று மறியார்கள் பிரியாத சிந்தையரே. 6

ஈரவார் சடையானை இளமதியை அணிந்தானை
மாரனைக் காய்ந்தானை மங்கைஇடம் வைத்தானை
தாரமரும் மார்பானைச் சங்கரனைத் தாணுவை
ஆர்வமொடு துதிப்பார்கள் ஆனந்தம் பெறுவாரே. 7

என்னுயிருக் குயிரானை யெரியேந்து மியல்பானை
மன்னுயிர்க ளெல்லாமாய் மருவிநின்ற திறலானைப்
பொன்னுயர் மெய்ப்பொரு ளானைப் போக்குவர
வில்லானை
உன்னுபவர் உலகத்தி லினிப்பிறப்ப தொழிந்தாரே. 8

மருவாருந் தாரானை வானவர்கள் பெருமானைத்
திருவாரும் மார்பானைச் சிவக்கொழுந்தைச் சின்மயனை
அருவானை உருவானை அங்குமிங்கு முள்ளானைக்
குருவாய்க்கோ னுனைக் கண்டுள்ளம்
குளிர்ந்தேனே. 9

இப்பிறவி தீர்ப்பானை இனிப்பிறவா தருள்வானை
எப்பிறப்பும் என்னோடே உடனாக இருந்தானை
ஒப்பினுய் ஒருதானுய் ஊழியெல் லாம்நின்றானைச்
செப்புமவ ரினிப்பிறப்போ டிறப்பொன்றுஞ் சேராரே. 10

மலர் 8 : இதழ்—6, 7, 8—1942

## சற்குரு துணை

உலக முவக்கவும் உன்மனங் களிக்கவும்
கழறும் வாசகங் கருத்தி லிருத்துக
ஒன்றே தெய்வ மொன்றே உலகம்
நன்றே என்றும் நாடிப் புரிவாய்
நீசடப் பொருளல நிறைதரு சித்து
பேச வரிதுன் பெருமையெவ ராலும்
ஆதலா லுன்னை யங்கி சுடாது
காதல்சேர் காற்றும் உலர்த்தா கவலல்
மாதிரந் தானும் வருத்த முடியாது
ஓதிடு மப்புவுங் குளிரச்செய் யாதுனை
ஈறிலாப் பொருணீ எள்ளள வேனும்
மாறிலா மகிழ்ச்சி மனத்திடைக் கொள்வாய்
சாதி சமயம் யாவுமுனக் கில்லை
நீதி யொன்றை நெஞ்சிடை வைத்திடு
உபாதி செய்யும் புலன்வழி யுருதே
அபாய மொன்று மென்று முனக்கில்லை
செய்ய வேண்டிய செவ்வனே செய்வாய்
உய்ந்தாய் முன்னர் உலகமுன் கைவசம்
சந்தேக மில்லைச் சாற்றினன் கேணீ
சற்குரு உன்துணை சாட்சிநீ யாவாய்
அற்புத னடியிணை யென்றும் வாழ்கவே.

*மலர் 8 : இதழ் 9—17-8-42*

## இலங்கையானே

### கலிவிருத்தம்

மதியும் நதியும் வைத்த சென்னியன்
விதியு மதியு மறியா விமலன்
துதிசெ யடியார் துன்பந் தீர்ப்பவன்
மதில்சே ரிலங்கை மாநக ரானே. 1

நீருங் காலும் நிலனுந் தீயும்
ஆரும் வானு மம்புலி கதிரும்
சீருந் திருவுஞ் சிறப்பு முடையான்
நேரு மிலங்கை நெல்வய லானே. 2

எண்ணி யெண்ணி யுருகு மடியார்
மண்ணில் வந்து பிறவா வண்ணம்
உண்ணின் றருளை யுதவும் நாதன்
எண்ணில் வளஞ்சே ரிலங்கை யானே. 3

போக்கும் வரவும் இல்லாப் புனிதன்
ஆக்கும் அழிக்கும் அவனி யெல்லாங்
காக்கும் அடியார் கவலை தீர்க்கும்
பூக்கும் இலங்கைப் பொன்னக ரானே. 4

பொன்னும் பொருளும் புகழுந் தருவான்
முன்னும் பின்னும் இல்லா முதல்வன்
என்னுள் அறிவா யென்றும் விளங்கும்
துன்னும் வரைசூழ் இலங்கை யானே. 5

நினைக்கு மடியார் நெஞ்சத் துள்ளே
முனைக்குங் காமக் குரோதம் மோகம்
அனைத்தும் போக்கும் அம்மான் பெம்மான்
சுனைச்சே ரிலங்கைத் தொன்னக ரானே. 6

மூவ ரறியா முதல்வ னுலகில்
தேவ ராலு மறியாத் தெய்வம்
யாவ ரேனுந் தொழுவார் பாவம்
வேவ வருளு மிலங்கை யானே. 7

செக்கர் போலும் மேனிச் செல்வன்
அக்கு மாலை யணியு மமலன்
சொக்க னென்னுஞ் சொந்தப் பெயரான்
இக்கு மலியு மிலங்கை யானே. 8

ஆளும் பெருமா னகத்து ளிருக்க
நாளுங் கோளு நங்கட் கெங்கே
வீழு மருவி விளங்கு மிலங்கை
வாழும் பெருமான் மலர்த்தாள் காப்பே. 9

மலர் 8 : இதழ்—10, 11, 12—1942

---

## நானுமவனே நீயுமவனே

ஊனு மவனே உயிரு மவனே
நானு மவனே நீயு மவனே
கோனு மவனே குருவு மவனே
மானும் வார்த்தை பிறிதறி யேனே. 1

அறியும் பொருளும் அறிபடு பொருளும்
செறியும் பொருளும் செறியாப் பொருளும்
குறியும் குணமு மற்ற கோவென
அறிவா ரீண்டு பிறவா ராமே. 2

---

## இலங்கையீர்

### வெண்பா

பாவம்போம் பொல்லாப் பழிபோகும் பாருலகிற்
சேவற்கொடியோன் றிருவடியைச்—சாமளவுஞ்
சிந்திப்பீர் செல்வஞ் செறியிலங்கை நன்னாட்டீர்
வந்திப்பீ ரென்றும் மகிழ்ந்து. 1

காமமுத லாறுங் கடிந்து கடிகமழுஞ்
சேமந் தருந்திவ்ய பாதத்தை—ஆமளவும்
போற்றிப் புகழுவீர் பொன்னிலங்கை நன்னாட்டீர்
மாற்றிப் பிறக்க மருந்து. 2

புன்னுனிமேல் நீர்போல் நிலையாத பொய்யுடலை
என்னினிநீர் எண்ணி வருந்துவீர்—மண்ணுலகில்
ஆறுமுகன் பாதத்தை யன்பா யிலங்கையீர்
கூறு மதுவே குணம். 3

இளமை நிலையா தெனவறிந்து வேலன்
பழமை தருமடியைப் பற்றும்—எழுமையும்
இன்பந் தருமே யிலங்கைமா நன்னாட்டீர்
அன்பிற் பணிவீ ரறிந்து. 4

அறிவுக் கறிவாகி யப்பாற்கப் பாலாய்ச்
செறியும் முருகன் திருவடி—நெறியுடனே
பற்றிப் பணிந்திடுவீர் பல்கா லிலங்கையீர்
வெற்றிதரு மென்றும் விழைவு. 5

விளையுமிச்சை யெல்லாம் வெறுத்தே யெஞ்ஞான்றும்
இளையோன் றிருப்பாத மேத்த—மழைபோற்
கருணைவருமே கருதிலங்கை நாட்டீர்
தருண மிதுகண்டீர் தான். 6

*மலர் 9 : இதழ் 1—16-12-42*

---

## துறவி

### ஆசிரியப்பா

அன்பே வடிவாய் அமைந்த துறவி !
அன்பே யன்றி யாற்றலு முண்டோ ?
இன்பமே யுலகி லெங்கணுஞ் செறிக
துன்பமாம் மாயை தொடரா தொழிக
எல்லியு மல்லு மீசனைப் போற்றுக
கல்லுங் கரையக் கவிமழை சொரிக
கங்குல்பக லற்ற காட்சி பெறுக;
எங்குஞ் சிவத்தைக் கண்டின் புறுக
மங்குவார் செல்வம் மதியா தொழிக
இங்கு நீ,
இருந்த படியே யிருந்து வாழுதி
அருந்துயருன்னை யடையா வன்றே. 1

வஞ்சகம் நீக்கி வாழுந் துறவி !
அஞ்செழுத் துட்பொரு ளாகிய அமலனை
நெஞ்சத் துள்நீ வைத்து வணங்குதி
கஞ்சத் தேவனுங் கண்ணனுங் காணார்
தன்போற் பிறரைத் தானென நினைந்திடு
உன்போற் பிறரிவ் வுலகி லுண்டோ
முன்பு நீ
செய்த வல்வினை தீர்ந்திடுந் தியானஞ்
செய்தினஞ் சீவன் சிவனே யன்றோ. 2

ஒருமை மனம்படைத்த வுத்தமத்துறவி !
இருமையு மளிக்கு மிறைவன் திருவடி
அந்தியுஞ் சந்தியு மகலாது போற்றிப்
பந்தித்து நின்ற பாவம் போக்குதி
சிந்தித்துச் சிந்தித்துச் சிவபோத நீக்குதி
நிந்திப் பார்களை நேசத்தால் வெல்லுதி
சந்தேகமில்லை
நீயோ நித்தியன் நினக்கயல் கற்பனை
நீயோ நிராமயன் நினைவொழிந்து வாழ்தி. 3

மலர் 9 : இதழ் 2, 3—14-1-43

## இலங்கை மாமணியே

### தரவு கொச்சகக்கலிப்பா

அப்பனே ஆருயிரே யன்பேயென் ணுதரவே
ஒப்பிலா வொன்றே ஊழியெலா மானவனே
வைப்பிலா வாழ்வே மவுனமணிப் பெட்டகமே
இப்புவியெ லாம்புகழு மிலங்கைநக ரீஸ்வரனே. 1

ஆறுபிறை கொன்றை தும்பை யரவு சடையாட
நீறுபொலி மேனி நின்னெழிலைக் காட்டியிட
மாறுபடு மரக்கன் மலரடியின் கீழ்க்கிடக்க
ஆறுபொலி யிலங்கை யாண்டவனே நினக்கபயம். 2

இருநிலனுய்த் தீயா யிரவி மதியாகி
வருபுனலாய் மாருதமாய் மறிகடலாய் மன்னுயிராய்க்
குருவாகிச் சீடனுய்க் கூறவொண் ணுச்சுடராய்
மருவிநிற் கும்மிலங்கை மணியே யுனக்கபயம். 3

ஈரவார் செஞ்சடையாய் எழிலார் மழுப்படையாய்
பாரமார் கொம்மைமுலைப் பாவை யிடமுடையாய்
கோரமார் கொல்புலியைக் கொன்றுடுத்த கொற்றவனே
ஆரமுதே நல்லிலங்கை யாண்டவனே யுனக்கபயம். 4

உயிரெல்லா மாகியு மாகாத வுன்பெருமை
பயிலப் படும்விதமோ பாரளந்தோன் காணரிய
உயிருண் சுடர்மணியே உம்பர்பணி மெய்ப்பொருளே
மயில்குயில் பயிலிலங்கை மாமணியே நானபயம். 5

ஊருமில்லாய் பேருமில்லாய் உற்றூர்பெற் றோருமில்லாய்
சீருஞ் சிறப்புமுள்ளாய் செக்கர்வான் மேனியனே
ஆரும் புகலரிய ஆற்றல்விடை யேறுமையா
காரும் தொழுமிலங்கைக் கடவுளே யுனக்கபயம். 6

எல்லாஞ் செயவல்ல விறைவனே யென்குருவே
நல்லார் தொழுதேத்தும் ஞானமணிப் பூடணமே
கொல்லா நெறிநின்ற குரவர்தொழும் மெய்ப்பொருளே
எல்லா வளமுஞ்சே ரிலங்கைமன்னே யுனக்கபயம். 7

ஏக னனேகனென்று மிமயமலை வாசனென்றும்
மோகமார் தக்கனைமுன் முடித்த முதல்வனென்றும்
போகமார் பூண்முலையாள் பொருந்திய பாகனென்றும்
யோகநாதன் பணியிலங்கை நாதா உனக்கபயம். 8

ஐயம் புகுந்துமுனி ஆணவத்தை முன்னழித்தாய்
தையல் தனக்குந்தன் பாதி உடல்கொடுத்தாய்
வெய்ய மதனுகம் வெந்துவிழ நீவிழித்தாய்
தெய்வமே இலங்கைநகர்ச் சிவனே உனக்கபயம். 9

ஒன்பதுவாய்த் தோற்பைக்கா யிரவு பகலுழலும்
என்மதிக் கின்னு மிரங்காமல் நீயிருந்தால்
என்செய்வே னென்குருவே யெவர்க்குநா னெடுத்
துரைப்பேன்
சொன்னம் மலியிலங்கைச் சோதீ யுனக்கபயம். 10

மலர் 9 : இதழ் 4, 5, 6—1943

## குருதரிசனம்

### வெண்பா

*கருத்தில் நினைந்துருகிக் கைகூப்பும் மெய்யடியார்*
*வருத்த மெலாந்தீர்க்கும் வடிவேல்—திருத்தலத்தில்*
*தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்*
*ஆரடாநீ யென்றான் அவன்.* 1

*தன்னை யறியத் தவமுஞற்றும் மாதவரை*
*அன்னையைப்போ லாதரிக்கு மாறுமுகன்—சந்நிதியில்*
*தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்*
*தேரடாவுள் ளென்றான் சிரித்து.* 2

*வண்டுபண் செய்யும் வளம்பெருகு நல்லூரில்*
*மிண்டு மனத்தவரை மேனிலைக்குக்—கொண்டுவரும்*
*தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்*
*தீரெடாபற் றென்றான் சிரித்து.* 3

*கன்னலொடு செந்நெல் கதலிபலா மாவர்க்கந்*
*துன்னுநல்லூர்ச் சாமி திருமுன்றில்—மன்னுசீர்த்*
*தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்*
*சீரடியார் சூழ்ந்துநின்றார் தேர்.* 4

*அயலறியா வந்தணர்க ளான்றநல் லூர்ப்பதியிற்*
*கயற்கணார் காமவலை சேரா—வியல்புடைய*
*செல்லப்ப னென்னுஞ் சிவகுருவை நான்கண்டேன்*
*நல்லதப்பா வென்றான் நயந்து.* 5

*ஒன்றே யிரண்டோ வொருமூன்றோ வென்றெவரும்*
*அன்றுதொட் டின்றுவரை யாராய—ஒன்றுக்கும்*
*எட்டாமல் நின்றா னெழிற்குருவாய் நல்லூரிற்*
*பட்டமளித் தானெனக்குப் பார்.* 6

*நீராய் நெருப்பாய் நெடுநிலனாய்க் காற்றாகி*
*ஆராலுங் காணா வமலனங்கே—நேராகச்*
*சற்குருவாய் வந்தேயென் சந்தேகந் தீர்த்தாண்டான்*
*நிர்க்குணம் பூண்டேன் நினை.* 7

புனலொழுகப் புள்ளிரியும் பொன்னீழ நாட்டில்
அனலேந்து வான்றன் புதல்வன்—மனமார
வாழ்நல்லை யம்பதியில் வாழ்வளிக்கச் சற்குருவாய்த்
தாள்காட்டி யாண்டான் தனி. 8

மலர் 9 : இதழ் 8—15-6-43
9—16-7-43

---

## பார்மீதி லென்ன பயம்

தையலார் மையலிற் றன்மயங்கும் மாந்தர்காள்
வையமெல்லா மாள மருந்துண்டே—ஐயன்றாள்
காலையொடு மாலை கடல்சூ ழிலங்கையீர்
சாலவே போற்றுவீர் தான். 1

செல்வச் செருக்கினுற் றீவினையை யாற்றுவீர்
அல்லற் கடற்குள்ளே ஆழ்ந்திடுவீர்—வல்லபரன்
தந்த முருகன் றளைப்பற்றீ ரிலங்கையீர்
அந்தமிலா வானந்த மாம். 2

நில்லாத செல்வத்தை நேராகப் பெற்றக்கால்
இல்லாத வர்க்கீந்தே யீசன்றாள்—நல்லாய்த்
தொழுவார்க்குண் டோகுறைதான் தொல்லிலங்கை நாட்டீர்
எழுபிறப்பு மேமாப்போம் யாம். 3

பொல்லாப் புழுமலியும் புன்குரம்பை யாமுடலை
நல்லோர் நயப்பரோ நாடோறும்—கொல்லாமற்
கூர்வேலன் பாதங் குறிப்பீ ரிலங்கையீர்
பார்மீதி லென்ன பயம். 4

மலர் 9 : இதழ் 10—17-9-43

---

## எல்லா மவன் செயல்

### வெண்பா

தாமரையில் நீர்போற் சகத்திலே தம்பிநீ
சேமமுடன் வாழ்வாய் சிவனைநினை—ஆமளவும்
நன்மையையே செய்வாய்நீ நல்லோரைப் பேணிநட
தன்னை யறியலாந் தான். 1

தந்தைதாய் மற்றுந் தமர் தாரமெல்லாருஞ்
சந்தையி ற்கூட்டமிது தப்பாது—எந்தைபால்
எப்போது மன்புவை எல்லா மவன்செயலே
இப்போ சமய மிணங்கு. 2

---

### கலிவிருத்தம்

எனக்கினி யான்பிறர் யாவர்க்கு மினியான்
தனக்கொப்பி லாதான் தத்துவா தீதன்
சினக்குங் கரியுரித்துத் திருமேனி போர்த்தான்
வனப்புறுஞ் சோலைசூ ழிலங்கை மன்னுமே. 1

எங்கு முள்ளவன் எல்லாம் வல்லவன்
மங்கையோர் பாகன் மான்மழுக் கையினன்
பங்கயன் மால்பறந் திடந்துங் காணுன்
கொங்கவிழ் காவிலங்கை கோயில் கொண்டானே. 2

என்னை யென்னு லெனக்கறி வித்தவன்
அன்னை தன்னினு மன்புமிக் குள்ளவன்
தன்னை யெவரு மறியாத் தலைமையன்
தென்னைசே ரிலங்கை தேடியாண் டானே. 3

*மலர் 9 : இதழ் 11—17-10-43*

---

## திருநாடு

### தரவு கொச்சக் கலிப்பா

*எல்லார்க்குந் தம்பிரா னென்னைவந் தாண்டுகொண்டான்*
*கொல்லேன்பொய் சொல்லேன்யான் குருமொழியை மறக்கிலேன்*
*நில்லாத காயத்தை நிலையெனவே எண்ணுகிலேன்*
*செல்லாரும் பொழில்சூழு மிலங்கையென் றிருநாடே.* 1

*என்னைவிட் டகலாம லெப்போது மிருக்கின்ற*
*அன்னையொப் பானவனை யடியேன்யான் மறப்பேனோ*
*முன்னைநா ளிராவணன்றன் முடிபத்தும் நெரித்தவன்*
*தென்னைபனை சேரிலங்கை சிறியேன்றன் திருநாடே.* 2

*நீர்நிலந்தீ கால்வானாய் நின்றபிரான் சிறியேனை*
*ஓர்கணமும் பிரிவறியான் உத்தமர்தஞ் சிந்தையான்*
*கார்நிற மேனியனுங் கமலவனுங் காண்கிலான்*
*சீர்பெறூஉ மிலங்கையென் றிருநாடு கண்டுகொளே.* 3

*பொறிவழிபோ யலையாமல் பூவுலகிற் காத்தபிரான்*
*அறிவுக் கறிவானான் ஆரணமு மறியகில்லான்*
*குறிகுணங்க ளற்ற வொன்றைக் கும்பிடுவோ மெப்போதும்*
*செறிபொழில்சூ ழிலங்கையே சிறியேன்றன் றிருநாடே.* 4

*முற்றாத பின்மதியம் முடிதனியே வைத்தபிரான்*
*அற்றார்க்கு மலந்தார்க்கு மருள்புரியு மம்பலவன்*
*நற்றா மரைப்பாதம் நாள்தோறுங் கைதொழுவார்*
*வற்றாத வளஞ்செறியு மிலங்கையென் றிருநாடே.* 5

*மலர் 9 : இதழ் 12—1943*

## அம்மானை

### தரவுகொச்சகம்

*அம்மையு மப்பனுமாய் நின்ருரா ரம்மானை*
*இம்மை மறுமைக் கிறைவர்கா ணம்மானை*
*இம்மை மறுமைக் கிவரிறைவ ராஞக்கால்*
*தம்மையறிந் தார்தலை யாவரோ அம்மானை*
*செம்மைமன முண்டாஞற் சேர்வர் தலையிடத்தில்*
*உம்மை யங்கே காண முடியாதா மம்மானை.* 1

---

## இலங்கையான்

### கலிவிருத்தம்

*நேசத் தாலரன் நீள்கழல் போற்றுவார்*
*பாசத் தாற்றுயர் பாரினி லெய்திடார்*
*வாசக் காபல சேரு மிலங்கையித்*
*தேசத் தான் சொல்லைச் சிந்தையிற் கொண்மினே.* 1

*எல்லாம் வல்ல இறைவன் றிருப்பதம்*
*சொல்லும் பூக்கொடு தோத்திரஞ் செய்பவர்*
*கல்லா ராயினுங் கதியுண் டிலங்கையான்*
*சொல்லைச் சிந்தித்துத் துன்பத்தைத் தீர்மினே.* 2

*மொழிக்கு நற்றுணை முன்னஞ் செழுத்துமே*
*விழிக்கு நற்றுணை மென்மலர்த் தாள்களே*
*வழிக்கு நற்றுணை வண்புகழ் பாடலே*
*களிக்கு மிலங்கையான் கட்டுரை கேண்மினே.* 3

*பொறிவ ழிமனம் போயலை யாமலே*
*நெறிவ ழிநிற்கக் கற்றுக் கணந்தோறும்*
*அறிவ ழிந்திட ரெய்தீ ரிலங்கையான்*
*குறிவ ழிச்செலக் கூடிடும் முத்தியே.* 4

புன்னெ றிசெலும் போக்கை யொழித்து நீர்
நன்னெ றிதனில் நாட்டத்தை வைத்திடிற்
சென்னெ றிக்குநற் செல்வ மிலங்கையான்
சொன்னெ றிதனைச் சோரா துணர்மினே. 5

சமைய தீக்கையைப் பெற்றுப்பின் சற்குரு
அமையு மப்பா லவன்வழி செல்விரால்
தமையுணரு மறிவு தலைப்படும் லங்கையான்
சுவை தருஞ் சொல்லைக் கேட்பது தக்கதே. 6

காண்பான் காட்சி காட்சிப்பொ ருளிவை
மாண்பாய் விட்டு மலரடி சிந்தித்தால்
வீண்பாவங்கள் வெருண்டோடு மிலங்கையான்
மாண்பாச் சொன்னது மனத்திடை வைம்மினே. 7

இருப்பி னும்நடந் தெத்திசை செல்லினும்
பொருப்பில் வாழ்ந்திடு புங்கவன் பொற்பதம்
விருப்ப மாவிளம்பீ ரிவ்வி லங்கையான்
விருப்பமான சொல் வீட்டை யளிக்குமே. 8

அம்மை யப்ப னரிய சகோதரர்
இம்மை யில்லிறை யென்றுநீ ரெண்ணியே
மும்மைக் காலத்தும் போற்றீ ரிலங்கையான்
செம்மை யானசொன் முத்தியிற் சேர்க்குமே. 9

போன காலத்தை யெண்ணிப் புகையுவீர்
ஞான நாயகன் நற்பதம் போற்றுவீர்
ஈன மானவை யேகு மிலங்கையான்
மோன நல்கு மொழிதனை உள்ளுமின். 10

*மலர் 10 : இதழ் 1—17-12-43*

## போற்றித் தெளி

### குறள் வெண்பா

அறிவுடைய ரெல்லா முடைய ரெனவே
செறிவுபெறச் சொன்னார் தெரி. 1

அலையு மனத்தை யடக்கிய பெரியோர்
தொலையாப் பிறவி தொலைத்தார். 2

ஆவது மழிவது மான்வாவுக் கில்லையெனச்
சேவடி போற்றித் தெளி. 3

இல்லையென் றுமலே யிட்டிங்கு வாழ்பவர்க்
கெல்லையில்பே ரின்ப மெழும். 4

ஈசனை யெல்லையில் லாத விறைவனை
வாச மலர்தூய் வணங்கு. 5

உலகு முயிரு மொன்றி நிறையுங்
குலதெய்வத் தைக்கும் பிடு. 6

ஊட்டி வளர்க்க ஒருவ னிருக்கவே
வாட்டமுனக் கேனோ மகிழ். 7

எழுதவே யொண்ணு விறைவ னடியைத்
தொழுவார் மனந்தூ யவர். 8

ஏக னநேகனு யுற்றவெம் மீசனைத்
தேகம்போ முன்னர்த் தொழு. 9

ஐயப் படாத வகத்தின ரெல்லார்க்குந்
தெய்வத்தா லெய்துந் திடம். 10

ஒன்பதுவாய்த் தோற்பை யுடைவதற்கு முன்னரே
யன்பா லவனை யணை. 11

ஓடும் புளியம் பழமும்போ லீங்குநீ
பீடுடனே வாழ்க பிழைத்து. 12

ஔவியஞ் செல்வ மனைத்து மழிக்குமே
கவ்வியரன் பாதங் கருது. 13

அக்கினறு மாலை யணியுமெந் தேவனைப்
பக்குவத்தி னோடு பணி. 14

கங்கையொடு திங்கள் புனைந்த கடவுளை
மங்கைபங் காளனை வாழ்த்து. 15

அங்கிங் கெனும லகண்டமாய் நின்றவப்
புங்கவன் பாதமலர் போற்று. 16

சங்கரன் தாளிணை தாம்பணி வாரெய்தும்
இன்பமும் வீடும் எளிது. 17

ஞமன்வரும் முன்னரே யெம்மான்றன் பாதம்
தமவென்க் கொள்வாரஞ் சார். 18

இடபந் தனிலேறு மீசனைத் தேவர்
தொடர வொண்ணனைத் தொழு. 19

இணங்கிவாழ் மாந்தர்க ளின்பவீ டாள்வார்
பணம்பொரு ளெல்லாம் படைத்து. 20

தத்து பரிநரி யாகச் சமைத்தானை
நித்தமு மேத்துக நேர்ந்து. 21

நன்மையுந் தீமையும் நாடாத நாதனைச்
சொன்னவர் தாமேதூ யோர். 22

பந்தஞ்செய் பாசமே பாறிடும் வண்ணநீ
அந்தமில் லாதவற் போற்று. 23

மன்றுள்ளே பாடுமெம் மாமணி தன்னைநீ
என்றும் மனத்து ளிருத்து. 24

இயக்கர் முனிவர்கள் ஏத்து மவனை
வியக்க வாழ்த் திற்பெறுவர் விண். 25

அரவுசேர் மேனியெம் மண்ண லடியைப்
பரவுவார் சேர்வர் பரம். 26

அலகிலாச் சோதியை யன்போடு பாடின்
உலகிற் பெறுவர் உயர்வு. 27

வண்டார்க்குங் கொன்றையம் வார்சடை யோனடித்
தண்டா மரையே சரண். 28

அழகாரு மம்புலியுங் கொன்றையு மங்கை
அழலும் புனைவோ னரண். 29

அளவில் மதந்தோறு மாங்காங்கே நின்று
விளைவோ னெமக்குத் துணை. 30

அறம் பொரு ளின்பமும் வீடுமளிக்கும்
பரனை நினைந்தென்றும் பாடு. 31

அன்னத்தோ டாடை யளிக்கு மொருவனை
இன்னோ னெனவுணர்ந்தோர் யார். 32

மலர் 10 : இதழ் 2, 3, 4—1944

## திருத்தாண்டகம் (1)

தேனுந்து முக்கனித்தீஞ் சுவையர் போலும்
சிவகாமி யம்மையிடப் பாகர் போலும்
வானுந் திசையெட்டு மானார் போலும்
மறிகடலும் மதிகதிரு மானார் போலும்
தானும்நானு மொன்றா யிருப்பார் போலும்
சாதலொடு பிறத்தலுந் தவிர்ந்தார் போலும்
மானும் மழுவுந் தரித்தார் போலும்
மன்னியென் னுள்ளத்தி னுண்ணின் றாரே. 1

ஆயிரந் திருநாம முடையார் போலு
மஞ்செழுத்து மெட்டெழுத்து மானார் போலும்
தீயினும் மேனி சிறந்தார் போலும்
சென்னி மிசைக் கங்கையினைச் செறித்தார் போலும்
தாயினும் நனிமிக்க வினியார் போலும்
சாமகா னப்பிரிய முடையார் போலும்
நாயினுங் கடையேனை யாண்டார் போலும்
நன்மையொடு தீமையொன்று மில்லார் தாமே. 2

எல்லாஞ் செயவல்ல சித்தர் போலும்
ஏக மனேகமாய் நின்றார் போலும்
கல்லார்க்குங் கற்றார்க்கு மருள்வார் போலும்
காமனையுங் காலனையுங் காய்ந்தார் போலும்
சொல்லாலே சும்மா இருக்கவைத்தார் போலும்
சுருதிமுத லாகமங்கள் கானார் போலும்
எல்லாமா யல்லவுமா யிருந்தார் போலும்
என்னிதயம் நீங்காத விறைவர் தாமே. 3

சிரித்துப் புரமூன்றுஞ் செற்றார் போலும்
திருவெல்லா மொருங்கே திரண்டார் போலும்
அரிக்கு மயனுக்கு மெட்டார் போலும்
ஆவத மிவ தில்லார் போலும்

கரிக்குரு விக்கரு ளீந்தார் போலும்
காட்டானைத் தோலுரித்து மகிழ்ந்தார் போலும்
மரித்தல் பிறத்த லில்லார் போலும்
மன்னியென்ற னுள்ளத்தி னுண்ணின் ருரே. 4

மண்தீகால் வானமெலா மானுர் போலும்
மாசில்லாச் சோதியாய் நின்ருர் போலும்
கண்முதலா மிந்திரிய மானுர் போலும்
காண்புவனும் காட்சியு மானுர் போலும்
எண்ணில் சமயங்க ளானுர் போலும்
என்னையென்னு லறிவித்த இறைவர் போலும்
மண்ணிலினிப் பிறவாமற் காத்தார் போலும்
மன்னியென்ற னுள்ளத்தி னுண்ணின் ருரே. 5

---

## திருத்தாண்டகம் (2)

இருநிலனே டிரவிமதி யாயி ஞன்காண்
என்னிதயம் நீங்காத இறைய வன்காண்.
அரும்பொன்காண் அம்மைகாண் அப்பன் ருன்காண்
அன்றுமின்று மென்றுமப் படியுள் ளான்காண்
தருமமே உருவாகச் சமைந்த வன்காண்
தன்னெப்பா ரில்லாத தத்து வன்காண்
அருவன்கா ணுருவன்கா ணருவுருவ மாய
அன்பன்கா ணவனுயிருக் குயிரா னுனே. 1

பெருமான்காண் பிறப்பிறப்பில் லாத வன்காண்
பேச்சிறந்த பெரியான்காண் பெருமுடியு மடியுங்
கருமாலும் நான்முகனு மறியா தான்காண்
கங்கைமதி யணிந்தான்காண் கசிந்து போற்றும்
திருவாளர் சித்தத்துட் டித்திப் பான்காண்
திருவரையை யெடுத்ததிற லரக்கன் றன்னைப்
பெருவிரலா லடர்த்தபின் னருள்செய் தான்காண்
பிஞ்ஞகன்காண் பிரியாதென் னுள்ளத் தானே. 2

நம்பன்காண் நரியெல்லாம் பரிசெய் தான்காண்
ஞாலமுதற் றத்துவங்க ளாயி னுன்காண்
செம்பொனம் பலத்திலே யாடுவான்காண்
திகழ்சூலப் படையன்காண் திருநீற் றன்காண்
உம்பரெல்லாம் போற்றவிடை யூரு வான்காண்
ஒருவன்காண் உள்ளத்தி னுள்ளே நின்ற
இம்பருளார் காதலிக்கு மெளியார்க் கென்று
மெளியான்கா ணவனென்ற னிதயத் தானே. 3

பண்ணவன்கா ணிசையவன்காண் பரவு வார்கள்
கண்ணவன்காண் கங்காள வேடத் தான்காண்
எண்ணவன்காண் எழுத்தவன்காண் எங்கு மான
விண்ணவன்காண் விளங்குமதிச் சென்னி யன்காண்
பெண்ணவன்காண் ஆணவன்காண் பெருமான் தான்காண்
மண்ணவன்காண் மாருதம்வா னுயி னுன்காண்
அண்மையன்காண் சேய்மையன்காண் அன்று மின்று
உண்மையன்காண் என்னுயிருக் குயிரா னுனே. 4

வடிவுசேர் மழுவேந்தி யாடு வான்காண்
மாணிக்க வாசகனுக் கருள்செய் தான்காண்
கடிகமழுங் கொன்றையங் கண்ணி யன்காண்
கரும்புதரு சுவையெனக்குக் காட்டி னுன்காண்
படிபுகழும் பாசுபத வேடத் தான்காண்
பகலோடி ராவறியாப் பண்பி னுன்காண்
நெடியமா லயன்தேட நீண்டு நின்ற
நிறைசோதிப் பிழம்பன்காண் நெஞ்சுள்ளானே. 5

வேறு

நீறணிந்த திருமேனி பொலிந்து தோன்றும்
நெற்றிமேற் கண்தோன்றும் மதியந் தோன்றும்
ஆறணிந்த சடைதோன்றும் அம்மை தோன்றும்
அரைக்கசைத்த புலியாடை அசைந்து தோன்றும்

ஏறமர்ந்த எழில்தோன்றும் இசையுந் தோன்றும்
எடுத்ததிருப் பதந்தோன்றும் மழுமான் தோன்றும்
பேறளிக்குந் திருக்கரத்தின் பெருமை தோன்றும்
பிரியாமல் என்னையாள் பெருமா னுர்க்கே. 1

கறுத்திருண்ட கண்டத்தின் பெருமை தோன்றும்
கதிகாட்டுங் கண்ணிணைகள் கலந்து தோன்றும்
செறுத்தவர்தம் புரமட்ட சிரிப்புத் தோன்றும்
தேவர்கணம் சூழ்ந்திருக்கும் சிறப்புத் தோன்றும்
ஒறுத்தவர்தம் மென்பெல்லா முடம்பிற் தோன்றும்
ஒளிதோன்றும் ஓங்கார வாசி தோன்றும்
சிறுத்தவிடை யுமையாளோர் பாகந் தோன்றும்
சிவசிவா சீவன்சிவ னெனக்கண் டேனே. 2

ஆறணிந்த திருச்சடையா யமரர் கோவே
அங்குமிங்கு மெங்குநீ அரசே ஐயா
நீறணிந்த திருக்கோல முடையாய் நின்னை
நேரிழையாள் பாகமாய்க் காணப் பெற்ருல்
தாரணியிற் பிறவியென்னும் தளைகள் போமே
சாயுச்ய பதவியுந்தான் தப்பா தெய்தும்
ஆரறிய வல்லாருன் பெருமை தன்னை
அப்பனே ஆருயிரே ஆளு வாயே. 3

மலர் 10 : இதழ் 5, 6, 7—1944

---

## வறுமைப் பிணி

இராகம்—சங்கராபரணம். தாளம்—ரூபகம்

வறுமைப் பிணிக்கு மருந்தொன் றிருக்குது
வந்து பாருங்கள் நல்லூரில்
வந்து மருந்தை அருந்திய மாதவர்
வாழ்ந்தார் வாழ்ந்தார் வாழ்ந்தாரே. 1

வாசம் பொருந்திய மாமலர்ச் சோலையில்
வந்து குயில் கூவும்
மற்ற மாதரும் நாடக மாதரும்
வந்து மகிழ்ந்து வணங்கிடுவார். 2

வீதிக்கு வீதி வெளிச்சமும் அங்கே
வீற்றிருந் தாடவர்கள்
சோதிப் பிரகாச வேலனைக் கொண்டாடித் 3
துதிப்பதைப் பார்த்திடுவோம்.

மலர் 10 : இதழ் 8—16-7-44

---

## வேலைத் தூக்கி

இராகம்—எதுகுலகாம்போதி. தாளம்—மிசிரம்

பல்லவி

வேலைத் தூக்கிவிளை யாடுந் தெய்வமே—யென்
வினைப்பகைதீர் தெய்வமே.

அநுபல்லவி

காலைத்தூக்கி யாடும் கண்ணுதல் தந்த
கதிர்காமத் தையனே கழலடி நம்பி வந்தேன்.
(வேலைத்)

சரணம்

எங்கெங்குந் திருமுகம் எங்கெங்குந் திருவிழி
எங்கெங்குந் திருச்செவி எங்கெங்குந் திருக்கரம்.

எங்கெங்குந் திருவடி எங்கேநீ அங்கே நான்
ஈசனே கதிர்காம வாசனே முருகேசா. (வேலைத்)

மலர் 10 : இதழ் 9—16-8-44

---

## நல்லூரான் கிருபை

இராகம்—சுருட்டி. தாளம்—ஆதி

பல்லவி

நல்லூரான் கிருபை வேண்டும்—நாம் எந்நாளும்
பாடவேண்டும்—வேறென்ன வேண்டும்.

அநுபல்லவி

சொல்லும் பொருளுமற்றுச்—சும்மா விருக்க வேண்டும்
தூய குருவின் பாதம் துணையாகக் கொள்ள வேண்டும்.
(நல்லூ)

சரணம்

அல்லும் பகலும்சிவ நாமத்தைச் சொல்ல வேண்டும்
ஆசை மூன்றையும் அடியோடு கொல்ல வேண்டும்
கண்டு கண்டு மனங் குளிர்ந்திட வேண்டும்
காமக்குரோத மோகத்தைத் தீர்க்க வேண்டும்.
(நல்லூ) 1

பொறிவழி போய்மனம் அலையாமை வேண்டும்
பூரண மான நிஷ்டையும் வேண்டும்
எல்லாரிடத்து மன்பு செலுத்த வேண்டும்
எழில்பெறுஞ் சுழுமுனை வழிச்செல்ல வேண்டும்.
(நல்லூ) 2

மலர் 10 : இதழ் 10—16-9-44

---

# நல்லூரைக் கும்பிடு

இராகம்—ஜோகினி. தாளம்—ஆதி

## பல்லவி

*நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு அதனுலே*
*நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்.*

## அநுபல்லவி

*செல்லாதே வெறுங் கையாய் செல்லப்பன் வாழ்ந்த நாடு*
*தேங்காயுடன் பழம் கொண்டு நீ செல்லு.*

## சரணம்

*வாடி உன்மனம் ஓடினுலும் வருத்தங்கள்*
*கோடி கோடியாகக் கூடினுலும்—குறைகள் வந்து*

*தேடி உன்னை மூடினுலும்—செல்லப்பன் பாதம்*
*சிந்தித்தால் ஓடி ஓடிப்போமே.*

*பெண்டு பிள்ளைகளென்று பேதைமை கொண்டு நீ*
*கண்ட கண்ட இடம் கலங்கி நீ திரியாதே.*

*மலர் 10: இதழ் 11-17-10-44*

## ரங்க நின் திருவருள்

இராகம்—காபீ. தாளம்—ஆதி

### பல்லவி

*ரங்கநின் திருவருள் தரலாகாதா—ஸ்ரீ*

### அநுபல்லவி

*தேசகாலம் யாவும் மறந்து*
*தேவா உன்றனருள் நிறைந்து—திரு*

### சரணம்

*பாதகன் கஞ்ச னனுப்பிய பூதகி*
*பாரில் மாளவே செய்தாய்*
*அதுபோல் அடியேன் ஆணவமொழிய*
*அருள்நீ தருவாய் ஐய.* (திரு) 1

*வேத புராணம் காண வொண்ணுத*
*வித்தகனே பக்தர் வேண்டும்*
*விமலா அமலா கமலக் கண்ணு*
*விரைவாய் நீ வருவாயே.* (திரு) 2

*மலர் 10 : இதழ் 12—16-11-44*

## அரகர சிவசிவ மறையோனே

அன்பர்தஞ் சிந்தையில் உறைவோனே
அரகர சிவசிவ மறை யோனே. 1

பொன்னே மணியே பூங்கோவே
புலவரெல் லாம்புகழ் எங்கோவே. 2

காணுங் கண்ணிற் கலந்தவனே
கதிரொளி போலெங்கும் நிறைந்தவனே. 3

ஆணும் பெண்ணும் ஆனவனே
அடியவர் பேணும் வானவனே. 4

கோணிய பிறையை முடித்தவனே
கொல்புலித் தோலை யுடுத்தவனே. 5

பாற்கடல் தன்னை அழைத்தவனே
பாரொடு விண்ணுய்ப் பரந்தவனே. 6

நூற்பொருள் தன்னை விரித்தவனே
நுண்ணிடை யாள்தன் இடத்தவனே. 7

தில்லையில் ஆடிய சிற்பரனே
சிவசிவ சிவசிவ தற்பரனே. 8

எல்லையில் லாவருள் தந்தவனே
என்போல் நல்லையில் வந்தவனே. 9

*மலர் 11 : இதழ் 1, 2—16-12-44, 14-1-45*

## தொண்டு செய்வார்

தொண்டுசெய் வாருக் குண்டே ஞானம்
தொண்டுசெய் வாருக் குண்டே மோனம்
தொண்டுசெய் வாருக் குண்டே தானம்
தொண்டுசெய் வாருக் குண்டே கானம். 1

எல்லா ரிடத்தும் அடியேன் வாழ்வேன்
எல்லா ரிடத்தும் அடியேன் தாழ்வேன்
எல்லார்க்கு மென்றும் அடியேன் கேள்வன்
சொல்லாற் பயனிலை யென்றே சூழ்வன். 2

எல்லா ருருவமு மென்னுரு வாகும்
எல்லார் நலன்களு மென்னல மாகும்
எல்லார் பலமு மென்பல மாகும்
நல்லோர் என்னுரை நயந்துகொள் வாரே. 3

வருவன வெல்லாம் வந்தே யேகுக
கருதுவ வெல்லாங் கருதித் தீருக
ஒருவரு மறியா வொண்செஞ் சீரடி
குருபரன் திருவடி கொண்டா டுதுமே. 4

ஒன்றிரண் டென்றே யுரையார் பெரியார்
கன்றும் மனத்தைக் கண்டாற் பரிவார்
கொன்றுயிர் வாழக் குறியார் திரிவார்
நன்றிது தீதென நவியார் அரிஓம். 5

எல்லா ரிடத்தும் உள்ளாய் தூயாய்
எல்லா எழிலும் நீயே யானாய்
கல்லாய் மலையாய்க் கவின்பெறு மரமாய்ப்
புல்லாய்ப் பூடாய்ப் பொலிவாய் நீயே. 6

உன்துணை யன்றி உயிர்த்துணை காணேன்
பின்னை என்னைப் பிரியா துறைவாய்
அன்னையுந் தந்தையும் ஆசானும்நீ
முன்னைப் பொருட்கெலாம் முன்னைப் பொருள்நீ. 7

உடல்பொருள் ஆவி உன்னதே இறைவா!
திடம்பெற ஞானத் தெளிவை நல்குதி
கண்ணே கருத்தே எண்ணே எழுத்தே
விண்ணே விண்ணில் விளங்கும் மதியே. 8

பண்ணே பண்ணிற் கனியே பரம!
எண்ணேன் இனிப்பிற தெய்வம் நாயேன்
ஏத்தி ஏத்தி இணங்கி வணங்கச்
சாற்றிய கவியை ஏற்றிடு வாயே. 9

மலர் 12 : இதழ் 2, 3—1948

---

## நல்வரம்

### கலிவிருத்தம்

என்னை யென்னு லெனக்கறி வித்தவன்
தென்னை மாப்பனை சேரும்நல் லூருளான்
அன்னை தன்னினும் மேம்படு மன்புளான்
தன்னை நாடினன் தந்தன னோர்வரம். 1

மதியி லேரவி வைத்திடும் மாதவர்
துதிசெய் தூய மலரடி யென்னுளம்
பதிய வைத்திடும் பாக்கியம் யான்பெற
மதியை வேண்டினேன் தந்தரு ளிவ்வரம். 2

இருவி னைக ளெனைக்கண்ட ா லஞ்சவும்
வருவி னைகளிவ் வையத்திற் கெஞ்சவும்
குருப ரனுடன் கூடிச் சிறக்கவும்
மருவு பாவம் மறக்கவுந் தாவரம். 3

அதுவி துவென்ற வவையெல்லாங் கண்டாருக்
கதுவி துவுமாய் நின்ற பரம்பொருள்
பொதுவி னில்நடங் கண்டு களிக்கவுன்
புதும லரடி போற்றிடத் தாவரம். 4

ஆதா ரத்தால் நிராதாரஞ் சென்றியான்
பேதா பேதங்கள் காணுப் பெருமையை
வேதாக மத்தில் விளங்கும் விமலனே
நாதா நீதா எனக்கிந்த நல்வரம். 5

மலர் 12 : இதழ் 4—1948

---

## இன்பம்

### கலிவிருத்தம்

எல்லாம் நீயென எண்ணுதல் இன்பமே
எல்லாம் நானென எண்ணுதல் இன்பமே
எல்லாம் சிவன்செயல் என்பதும் இன்பமே
எல்லாம் என்செயல் என்பதும் இன்பமே. 1

குருபரன் அடியிணை ஏத்துதல் இன்பம்
குருபரன் அருட்பணி ஆற்றுதல் இன்பம்
குருபரன் அருள்வாக் காக்கிடும் இன்பம்
குருபரன் சரண்புகக் கூடிடும் இன்பமே. 2

மோனத் தாழுதல் முடிவிலா இன்பம்
ஞானத் துயருதல் நவையறு மின்பம்
மானமார் நற்றவம் மதிப்பரு மின்பம்
யானென தற்றிடல் எல்லையில் இன்பமே. 3

தன்னலம் வீந்திடத் தோன்றிடு மின்பம்
இன்னல்செய் வினையற இயைந்திடு மின்பம்
துன்னிய மலமறத் தழைத்திடு மின்பம்
மன்னிய பிறப்பற மலர்ந்திடு மின்பமே. 4

ஐம்புலப் பந்தனை அற்றிடல் இன்பம்
வெம்புறு வெகுளி விலக்குதல் இன்பம்
துன்புறு காமத் தொடக்கறல் இன்பம்
வம்புறு மயக்கற வாய்த்திடும் இன்பமே. 5

மன்னுயி ரெல்லாம் மகிழ்ந்திடல் இன்பம்
என்னுயிர் போலவை ஓம்பிடல் இன்பம்
இன்னுயி ரிவையெலா மிறைவன் வடிவென
உன்னிடும் மெய்யுணர் வுற்றிட லின்பமே. 6

யாவருஞ் சமமென வுணர்ந்திட லின்பம்
யாவருஞ் சகோதர ரென்பது மின்பம்
யாவரும் நலனுற வுழைத்திட லின்பம்
யாவரு மொன்றென வொன்றிட லின்பமே. 7

பணிதலைக் கொள்ளல் பாரினி லின்பம்
பணிபயன் கருதா தாற்றிட லின்பம்
பணிமுயன் ருற்றி முற்றுற லின்பம்
பணியெலாஞ் சிவபணி யாக்கிட லின்பமே. 8

கூசுங் கொலைகள் வொழித்திட லின்பம்
மாசுடை மதுவகை நீக்கிட லின்பம்
பூசலும் பகைமையும் போக்கிட லின்பந்
தேசத் தொற்றுமை யோம்பிட லின்பமே. 9

நல்லன புரிந்திடல் நவின்றிட லின்பம்
அல்லன வஞ்சி யகற்றிட லின்பம்
புல்லியோர் பிழையெலாம் பொறுத்திட லின்பந்
தொல்லைக ளல்லல்கள் தாங்கிட லின்பமே. 10

வாய்மையும் ஆற்றலும் வளர்த்திடல் இன்பம்
தூய்மையும் அழகும் ஆர்த்திடல் இன்பம்
மேயநன் னீதி மேவிடல் இன்பம்
நேயஅன் புலகினில் நிறைந்திடல் இன்பமே. 11

பாமர மக்கட் பணிசெயல் இன்பம்
தோமற அவர்வாழ் வுயர்த்துதல் இன்பம்
சேமமர் சாலைகள் நிறுவுதல் இன்பம்
வாமநூற் கலைகள் வகுத்திடல் இன்பமே. 12

முத்தமிழ்ச் சங்கம் மல்குதல் இன்பம்
வித்தகர் சங்கம் விரவிடல் இன்பம்
பத்தர் சங்கம் பரவுதல் இன்பம்
நற்றவர் சங்கம் நாட்டிடும் இன்பமே. 13

எங்கும் மாதவர் மாமறை முழக்கம்
எங்குஞ் சான்றோர் அறவுரை முழக்கம்
எங்குந் தொண்டர் சுதந்திர முழக்கெனிற்
பொங்கும் இன்பம் புவிமிசைச் சிறந்தே. 14

பவநெறி கடக்கப் பிறந்திடு மின்பம்
அவநெறி துடைப்ப அணைந்திடு மின்பம்
தவநெறி தலைப்படத் தழைத்திடு மின்பஞ்
சிவநெறி பூத்திடுஞ் சச்சிதா னந்தமே. 15

மலர் 12 : இதழ் 5, 6, 7—1948

## கும்மி

கும்மியடி பெண்ணே கும்மியடி குரு
நாதனைப் பாடிக் கும்மியடி
இம்மை மறுமைக்கும் எங்களை யாட்கொண்ட
எழிலைப் பாடிக் கும்மியடி. 1

சிவனொ ருத்தனே தெய்வமடி தோழி
சென்னியிற் கங்கை பாயுதடி
அவனி டத்தினிற் பெண்ணைநீ பாரடி
எண்ணி யெண் ணிக்கடைத் தேறடி. 2

அவனன்றி யொன்றும் இல்லையடி பெண்ணே
அங்கையி லங்கியெ ரியுதடி
அவன்ற னுகத்தில் நாகமடி பெண்ணே
அரையி லேபுலி யுடையடி. 3

அடிக்கீ ழரக்கன் கிடக்கி றானடி
அங்கையி லேமழு மானடி
துடியொடு கையில் தோன்றுதடி பெண்ணே
சூலமுங் கையிற் றுலங்குதடி. 4

குடி முழுதையும் ஆண்டு கொண்டானடி
கொல்லும் நமனை யுதைத்தா னடி
அடிமுடி யொன்று மில்லையடி பெண்ணே
ஆனந்தமாய்க் கும்மி பாடடி. 5

தூக்கிய பாதத்தின் தோற்றத்தைப் பாரடி
தொந்தோம் தோமென்ற நாதத்தைக்கேளடி
ஆக்கி யழிக்கவும் வல்லவ னவனடி
ஆனந்த மாய்க்கும்மி பாடுமடி. 6

பாம்பும் புலியும் பார்த்திருந் தாரடி
பாரளந் தோனயன் பாடுபட்டாரடி
நாம்பு கழ்ந்திட நற்றரு ணமடி
நங்கைய ரேகும்மி பாடுமடி. 7

மாறிப் புலன்வழி போகா தேயடி
மதிக்குள் ளேரவி சேர்த்திடடி
ஆறி யிருந்து பாரடி பெண்ணே
அவனை நீகண்டு தேறடி. 8

சித்தத்துள் நித்தந் தித்திக்குந் தேனடி
தீராப் பிணியைத் தீர்க்கும் மருந்தடி
பத்தர்கள் கண்டு பரவு வாரடி
பாவைய ரேகும்மி பாடுமடி. 9

*மலர் 12 : இதழ் 8, 9—1948*

## அந்த வாக்கும்

இராகம்—நடனபைரவி. தாளம்—ஆதி

### பல்லவி

அந்த வாக்கும் பொய்த்துப் போமோ
ஆசான் நல்லூர் வீதியி லருளிய. (அந்த)

### அநுபல்லவி

இந்த ஆன்மா நித்திய மென்ற. (அந்த)

### சரணங்கள்

மங்கைய ராடவர் மைந்தர்கள் கூடி
மகிழ்ந்தும் புகழ்ந்தும் வரதனைத் தேடி
வந்தனை புரிய வருவார் கோடி
செந்தமிழ் நாவலன் செல்லப்பன் சொன்ன. (அந்த)

தேங்கா யிளநீர் தீங்கனி கொண்டு
திருவடித் தொண்டு செய்வதைக் கண்டு
ஐம்புல னடங்கி நின்றவ ருண்டு
ஆரறி வாரென ஆசான் சொன்ன. (அந்த)

கௌரிம ஞேகரி ஆனந் தாச்சி
கமல ஆச்சிசெல் லாச்சி ஐவரும்
உவந்து சேவடி கும்பிடு முத்தமன்
தவத்தைச் செய்திடத் தந்திடு மருளே. (அந்த)

மலர் 12 : இதழ் 10—1948

## ஓலாட்டு

அன்பே யுருவா யமர்ந்த அடியவருக்
கின்பந் தருமுதல்வ! இறைவ! நீ கண்வளராய். 1

ஆருயிர்கள் தோறும் அதுவதுவாய்த் தோன்றி நிற்கும்
பேருருவே! இன்பப் பெருக்கே! நீ கண்வளராய். 2

இல்லையென்று சொல்லுவார் இல்லத்திற் செல்லாமல்
நல்ல அருள்தந்த நல்லூரா! கண்வளராய். 3

இனிய அருள்சொரிந் திடர்நீக்கி யாண்டருளுந்
தனிமுதலே! எங்கள் தயாபரனே! கண்வளராய். 4

ஈன்றாளு மாயெமக் கெந்தையுமாய்க் குருபரனாய்ச்
சான்றோர்நெறி காட்டுந் தற்பரனே! கண்வளராய். 5

உன்னை மறப்பேனோ உயிர்நான் தரிப்பேனோ
என்னை மறப்பாயோ ஈசனே கண்வளராய். 6

ஊனாய் உயிராய் உளத்திற் சுவையளிக்குந்
தேனாய்த் தெவிட்டாத தெள்ளமுதே கண்வளராய். 7

எல்லாமா யல்லவுமா யிருக்கும் பராபரனே
நல்லூரில் வாழ்வே நாயகமே கண்வளராய். 8

ஏக னநேக னிறைவனடி வாழ்கவெனும்
ஆகமத்தி னுட்பொருளே யையனே கண்வளராய். 9

ஐயமே னென்றுரைத்த வாசான் திருவாக்கை
வையமுய்யத் தந்தருளும் வாழ்வேநீ கண்வளராய். 10

ஒருமொழியா லெந்த னுள்ள முவக்கவைத்த
திருவேயென் செல்வமே தெய்வமே கண்வளராய். 11

ஓம்நமசி வாயவென வுருவேற வேசெபிப்பார்
வீம்பிடம்பம் மேவுவரோ மெய்ப்பொருளே
கண்வளராய். 12

ஔவியம் பேசி யறியாமல் வையகத்திற்
றெய்வம் போல் வாழச் செய்வாய்நீ கண்வளராய். 13

மலர் 12 : இதழ் 11, 12—1948

---

## யோகமறியேன்

யோக மறியேன்யான் யோகியரை யும்மறியேன்
ஆகுநெறி மற்ருென் றறியேன் யான்—தேகமிது
வீழ்வதன் முன்னுன் விரையார் மலர்த்தாளைச்
சூழப் பணியாய் தொழுது. 1

தொழுது வணங்கிநின் தூநெறியே செல்லும்
முழுமனத்தார் தங்கூட்டம் முன்னி—அழுதே
உருகி யுருகி யுளநைந்து கண்ணீர்
பெருகி வரத்தருவாய் பின். 2

பின்ன ரெனக்குப் பிறப்போ டிறப்பென்னும்
மன்னுபெரு வாதைமற் றென்செய்யும்—உன்னைச்
சரணென் றடைந்த தகவுடையார் பாதம்
அரணென் றிருந்தேற் கறி. 3

அறிவுக் கறிவாகி யப்பாலுக் கப்பாற்
பிறிவற் றிருக்கும் பெருமான்—நெறிநின்ருர்
நீடூழி வாழ்வாரே நீநா னவனென்று
பாடுபட மாட்டார் பரிந்து. 4

பரிந்து பணியாற்றிப் பாவமெல்லாம் தீர்த்தேன்
இருந்த படியிருக்கு மெம்மான்—வருந்த
வழியு மினியுண்டோ வாழ்வுடன் தாழ்வோ
செழுமலர்ப் பாதஞ் சிரம். 5

சென்னிக் கணியுன்தாள் சேவித்து நிற்றலே
பண்ணுக் கணியுன்னைப் பாடுதலே—கண்ணுக்
கணியுன் வடிவுகண் டானந்தங் கொள்ளல்
பணியை யணிந்தாய் பரம். 6

பரவுமடி யார்க்கருளைப் பாலிக்கும் ஐய!
இரவுபகல் காணுநின் றேத்த—வரமருள்வாய்
வாய்விட்டுச் சொல்ல வகையெனக்கிங் கில்லையே
நீவிட் டிடாதே நினை. 7

நினைவி னினைவாகி நீயிருக்க நாயேன்
வினைவழியே சென்று மெலிகோ—எனையும்
இடுக்க ணெனக்கில்லை நின்செயலே யாவும்
நடுக்கமெனக் குண்டோ நவில். 8

நவிலு மறைநான்கு மாகமமுந் தேடி
நவில முடியாத நாத—தவமுடையார்
தம்மனத்தாய் நாயடியேன் சாற்றுங் கவிக்கிரங்க
எவ்வமுண்டோ கூறு யினி. 9

இனிப்பிறவா நன்னெறிக்க ணெய்தினார் சேவைக்
கினிப்பிறக்க வென்னைப் பணியாய்—இனித்ததிருக்
கோலத்தா லைந்தொழிலுங் கூட்டிக் குனித்தருளுஞ்
சீலத்தாய் தில்லைச் சிவ! 10

மலர் 13 : இதழ் 1, 2—1948-49

---

## ஔவையார் திருமொழி

அறஞ்செய விரும்பென ஔவையார் தந்த
சிறந்த திருமொழி தீவினை தெறுமே. 1

ஆறுவது சினமெனு மரிய மந்திரங்
கூறுவார் நாவிற் குலவும்சொல் லணங்கே. 2

இயல்வது கரவே லெவரே யாயினும்
பயில்வுறப் பயில்வுறப் பாவங் கெடுமே. 3

ஈவது விலக்கே லெல்லாந் தந்து
சேவைகள் செய்யத் திறங்கொடுக் கும்மே. 4

உடையது விளம்பே லுணர்வார்க் கெல்லாந்
தடையிலா வான்ம சக்தியீ னும்மே. 5

ஊக்கமது கைவிடே லூழ்வினை நீக்கும்
தேக்குமா னந்தச் சித்தியுந் தருமே. 6

மலர் 13 : இதழ் 3—1949

---

## பணியவா என் மனமே

நித்தியர்நா மென்னும் நினைவுதடு மாறுமற்
பத்திபண்ணிப் பாடிப் பணியவா என்மனமே. 1

முத்திக்கு வித்தை முனையில்வைத்துச் சீராட்டித்
தித்திக்குந் தேனருந்தச் சீக்கிரம்வா என்மனமே. 2

அத்து விதப்பொருளை அருந்தவர்கட் காரமுதைச்
சித்தத்துட் கண்டு தெளியவா என்மனமே. 3

எத்திக்கு மாகி என்னிதயத் தேவாழும்
தத்துவத்தைக் கண்டு சலிப்பறவா என்மனமே. 4

சித்திதருந் தேவாய்த் திகழும் பரம்பொருளின்
வித்தகத்தாள் வாழ்த்த விரைந்துவா என்மனமே. 5

உத்தமர்கள் போற்றும் ஓங்காரத் துட்பொருளைப்
பத்தியொடு பாடிப் பணியவா என்மனமே. 6

மலர் 13 : இதழ் 4—1949

---

## நல்லூர் வெளியில்

நல்லூர் வெளியிலே பொதுநடம் புரிகிறான்
நங்கள்குரு நாதன் எங்கும் பிரகாசன்
எல்லாரை யுந்தன் னிடத்திலே காண்பவன்
இயம நியமங்களில் எள்ளளவு மோபிசகான்

பொல்லாப்பிங் கில்லையென்று போதனை செய்வான்
புகழ்ச்சியு மிகழ்ச்சியு மொன்றாகக் காண்பவன்
செல்லப்ப னென்னுந் திருப்பெய ருடையான்
சிங்கார நடையொடு சிரிப்பினை யுடையான்.

ஆரறி வாரென அடிக்கடி சொல்லுவான்
தேரடிப் படியிலே சிங்கார மாய்க்கிடப்பான்
பேரறி வாளனெனப் பிறரெவரு மோவறியார்
பித்தனென் றுலகோர் பேசுவா ரேசுவார்.

மலர் 13 : இதழ் 6—1949

---

## நித்தியரா மென்றுணர்வீர்

சூரியன் வருவது யாராலே தூமதி தவழ்வது யாராலே
விண்மீன் மிளிர்வது யாராலே வெய்யி லெறிப்பது
யாராலே
கண்ணிணை காண்பது யாராலே காற்று மடிப்பது
யாராலே
தண்ணீர் பெருகுதல் யாராலே தக்கோர்புகழ்வது
யாராலே
பூமி சுழல்வது யாராலே பூக்கள் மலர்வது யாராலே
கால்கண டப்பது யாராலே கைக ளெடுப்பது யாராலே
எண்ணிப் பார்நீ யறிவாயே எல்லாஞ் சிவன்செயல்
குறியாயே
சொல்லு சுதந்திரம் பெறுவாயே சுவாமி வாக்கிது
தெரிவாயே.

### வெண்பா

அச்சம் ஒழியும் அவமிருத்துத் தானொழியும்
இச்சை யொழியும் இடுக்கணொடு—பச்சைமலை
உச்சியினின் ருேறுழியு மோங்கிலங்கை நன்னாட்டீர்
நித்தியரா மென்றுணர்வீர் நீர்.

மலர் 14 : இதழ் 1-7—1950

## அன்னை பிதாக்குருவானான்—அரன்

அன்னை பிதாக்குரு வானான்—அரன்
ஆகாய மாதி பூதங்க ளானான்
என்னையுந் தன்னையும் பிரியான்—அரன்
ஏக னநேகன் என்பார் பெரியோர்
முன்னைப் பொருட்கெல்லாம் முன்னோன்—அரன்
மூர்த்தி தலந்தீர்த்த மாதற் குரியோன்
அண்ட சராசர மெல்லாம்—அரன்
ஆடலைக் கண்டு தொண்டுசெய் வோமே
சண்டை யிடும்போதுஞ் சலியான்—அரன்
தன்னி லையினிற் சற்றுஞ் சலியான்
ஆணென்றும் பெண்ணென்று மறியான்—அரன்
அப்போர்த்தைக் கப்போ தாடல் புரிவான்
வீண்புகழ் தன்னை விரும்பான்—அரன்
வேதாந்த சித்தாந்த சமரசந் தருவான்
கூறும்நா முதலாக யாவும்—அரன்
கொண்டாடு மிடமென்று கண்டுகொள் வோமே
நித்திய வாழ்வினைத் தந்தான்—அரன்
நீநா னென்பதை நீங்கினன் றானே.

### வெண்பா

சிந்தனைக் கெட்டாத தெய்வத்தை நாம்நிதமும்
வந்தனை செய்து வணங்குவோம்—பந்தமுண்டு
முத்தியுண் டென்று முனைத்துநில் லாமலே
நித்தியனு மென்றே நினை.

*மலர் 14 : இதழ் 8—1950*

## தம்பி, ஆராதனை செய்

ஆதியு மந்தமு மில்லான்—தம்பி
ஆதியு மந்தமு முள்ளான். 1

சாதி சமயங்க ளில்லான்—தம்பி
சாதி சமயங்க ளுள்ளான். 2

ஓதி யுணர முடியான்—தம்பி
ஓதி யுணரும் வடிவான். 3

நீதி குருபர னானன்—தம்பி
நீர்நிலந் தீகால் வானமு மானன். 4

சந்திர சூரிய ரானன்—தம்பி
தாரா கணங்களு மானன். 5

மந்திர தந்திர மானன்—தம்பி
மருந்து மருந்து மவர்களு மானன். 6

இந்திர ராதியோ ரானன்—தம்பி
எல்லா வுலகமுந் தானே யானன். 7

இந்த வுயிருட லானன்—தம்பி
இருக்கு முதலிய வேதங்க ளானன். 8

பந்தமும் வீடும் படைப்பான்—தம்பி
பந்தமும் வீடுந் துடைப்பான். 9

அந்தியுஞ் சந்தியு மிதனை—தம்பி
ஆரா தனைசெய் தறிவாய் சிவனை. 10

மலர் 14 : இதழ் 9—1950

## பெரியதிற் பெரியது ஆன்மா

பெரியதிற் பெரியது சிறியதிற் சிறியது
அரியதில் அரியது ஆன்மா அதுதான்
ஒன்றென இரண்டென ஓதவொண் ணாதது
நன்றெனத் தீதென நாடவொண் ணாதது
என்று மிருந்த படியே யிருப்பது
என்று மெம்மை விட்டுப் பிரியாதது
இன்பம் படைப்பது துன்பந் துடைப்பது
முன்னிலைச் சுட்டு முளையா திருப்பது
ஆவது மழிவதும் அற்ற மெய்ப்பொருள்
தேவரும் முனிவருந் தேடியுங் காண்கிலர்
அப்படி யுள்ளது அடியேன் மனத்திலும்
செப்படி வித்தை செய்து நிற்குமே.

மலர் 14 : இதழ் 10—1950

---

## ஈழநாடு வாழவந்த சிவதொண்டன்

ஈழநாடு வாழவந்த எழில்மிகுந்த தொண்டன்
எளியவர்க்கும் பெரியவர்க்கும் ஏவல்செய்யுந் தொண்டன்
தாளமேள மில்லாமலே தான் வளரும் தொண்டன்
தன்னைப்போல அயலவரைத் தான்நினையுந் தொண்டன்
காளகண்ட னடியவர்க்குக் காவலான தொண்டன்
கங்குல்பகல் காணுமற் கருமமாற்றுந் தொண்டன்
நீளநினை நித்தியன்நீ யென்றுரைக்குந் தொண்டன்
நிட்டையிலே யெந்நாளும் நிலைத்துநிற்குந் தொண்டன்.

சூழமிக நினைந்துவினை யாற்றுமெங்கள் தொண்டன்
சோம்பலே பாவமென்று சொல்லுகின்ற தொண்டன்
கூழெனினும் கூடிக்குடி யென்றுசொல்லுந் தொண்டன்
கூச்சமின்றி யுலகத்திலே குடியிருக்குந் தொண்டன்
ஆழநினை யகம்பாவம் போகுமெனுந் தொண்டன்
அடியவர்கள் திருவடியைச் சிரசில்வைக்குந் தொண்டன்
வாழிமிக வாணிச்சிக்கா மண்சுமந்த மாறன்
மாபெருமை வழுத்துகின்ற மாண்புமிக்க தொண்டன். 2

*மலர் 14 : இதழ் 11, 12—1950*

---

## வஞ்சகமற்று வாழ்வீர்..

### ஆசிரிய விருத்தம்

*ஆவதோ ஒன்றும் இல்லை அழிவதோ ஒன்று மில்லை
நோவதேன் பிறர்தம் மாட்டு நூதனம் ஒன்று மில்லை
தேவனை வேண்டி நின்றால் சீவனே சிவனாய்த் தோன்றும்
பூவலந் தன்னில் மீண்டும் பிறப்பரோ புகலு வாயே. 1*

*புகல்வதற் கொன்று மில்லை புண்ணிய பாவ மில்லை
இகல்செயும் மனத்தை வென்றே யீசனை வேண்டி நின்றால்
நிகருனக் கியாரு மில்லை நீயிதை யறிந்து மண்ணில்
இகலுடன் வாழு வாயே இதுதிட மறிகு வாயே. 2*

*அறிகுதி யறிவி னாலே யறிகுதி தன்னை யென்றான்
பிறிவற நின்று பார்த்தாற் பிரமமே நீயும் நானும்
குறிகுண மொன்றும் இன்று கூடுதல் பிரித லின்று
செறிதரு முயிர்க ளென்று செப்புதற் கொன்று மின்றே. 3*

*இன்றென நாளை யென்றே எண்ணுதற் கிடனோ வில்லை
அன்றுசெய் வினையி னாலே அவனியிற் பிறந்தோ மென்று
கன்றினைப் பிரிந்த கற்றாக் கடுப்பவே கதறு கின்றோம்
மன்றினின் றாடு மீசன் மலரடி வழுத்து வோமே. 4*

வழுத்துதற் கொன்று மில்லை மாரனை நெற்றிக் கண்ணாற்
கொளுத்திய குழகன் றன்னைக் கும்பிட்டுக் கூற்றை முன்னர்
விழுத்திய பரிசு கண்டே வேறொரு நினைப்பு மின்றி
வழுத்தியைந் தெழுத்தை நெஞ்சில் வஞ்சக மற்று வாழ்வீர். 5

*மலர் 15 : இதழ் 1—1951*

---

## விரும்பவும் மாட்டேன்

### கலிவிருத்தம்

ஒன்றென இரண்டென எண்ணவும் மாட்டேன்
நன்றெனத் தீதென நண்ணவும் மாட்டேன்
அன்றென இன்றென அறையவும் மாட்டேன்
சென்றன வருவன தெரிந்திட மாட்டேன். 1

ஒருபொல்லாப்பு மிலையென ஓரவும் மாட்டேன்
குருவென்றுஞ் சிஷனென்றுங் கொள்ளவும் மாட்டேன்
இருவினை யுண்டென இயம்பவும் மாட்டேன்
சுருதியின் முடிவெனச் சொல்லவும் மாட்டேன். 2

இகழ்ச்சி புகழ்ச்சியென ஏங்கவும் மாட்டேன்
மகிழ்ச்சியி லேமனம் வைக்கவும் மாட்டேன்
முகமன்சொல் வாரிலே மோகமும் வையேன்
அகம்பிர மாஸ்மியென் றனுதினம் நையேன். 3

இடையரு அன்பென எடுத்துநான் சொல்லேன்
கொடைகொடு விடுவெனக் கூறவும் மாட்டேன்
மடையரை ஞானியரை மதிக்கவும் மாட்டேன்
இடைநடு முடிவென இயம்பவும் மாட்டேன். 4

அஞ்சென ஆறென எட்டென அறியேன்
வஞ்சனை சூதென மனத்தினிற் குறியேன்
நஞ்சிது அமுதென நயக்கவும் மாட்டேன்
வெஞ்சினம் சஞ்சலம் விரும்பவும் மாட்டேன். 5

*மலர் 15: இதழ் 2—1951*

---

## திருநாமத்தைச் செபித்திடடா

அனைத்துயிரும் நீயே தம்பி
அதை யறிந்து வாழ்ந்திடடா
தினைத்துணையும் மறந் திடாமல்
திருநாமத்தைச் செபித்திடடா. 1

வினைப் பகையை வென்றிடுவாய்
வேறு பொரு ளில்லை யெடா
முனைத்து வரும் சினத்தை வென்றால்
மூவர்களும் ஏவல் செய்வார். 2

உனைப் போலே உத்தமர்கள்
உலகத்தினி லில்லை யெடா
நினைத்தபடி நடந்திடடா
நிட்டையிலே பொருந்திடடா. 3

ஆவதில்லா அழிவதில்லா
ஆன்மாவை யறிந்திடடா
தேவர்களும் முனிவர்களும்
சித்தத்திலே திகழுகின்றார். 4

ஒரு பொல்லாப்பு மில்லைத் தம்பி
உண்மையே முழுது மெடா
குருநாதன் கூற்றி தெடா
கும்பிட்டுக்கொண் டாடிடடா. 5

*மலர் 15 : இதழ் 3—1951*

## கடவுள் கண்டீரோ

### கலித்தாழிசை

காணுங் கண்ணிற் கலந்து நிற்பது
    கடவுள் கண்டீரோ
ஆணும் பெண்ணும் அலியு மானது
    அதுநீர் குறியீரோ. 1

பாரும் விண்ணும் ஆகி நிற்பது
    அதுநீர் பாரீரோ
சீரும் திருவும் ஆகி நிற்பது
    அதுநீர் தெரியீரோ. 2

தாயுந் தந்தையும் ஆகி நிற்பது
    தாணு வதைநீர் தரியீரோ
நீயும் நானும் ஆகி நிற்பது
    நினைந்து பார்த்து நில்லீரோ. 3

காயும் கனியும் ஆகி நிற்பது
    கண்ணுற் கண்டு களியீரோ
தேயு வாயு ஆகித் திகழ்வது
    சிந்தித் துநீர் தெளியீரோ. 4

மாயும் மனிதரை மாயாது வைக்கும்
    மருந்தை யுண்டு மகிழ்வீரோ
பேயொடு காட்டி லாடும் பிரானைப்
    பேத மின்றிப் பாரீரோ. 5

மலர் 15 : இதழ் 4—1951

## பூங்குயிலே கூவாய்

காட்டகத்தே வாழுங் கருங்குயிலே! கேளாய்
பாட்டகத்தே நின்றுருக்கும் பரமன் கருணையினல்
நாட்டகத்தே நம்போல நல்லூரில் வந்தானெம்
ஏட்டகத்தே எழுந்தருளும் வண்ணம்வரக் கூவாயே. 1

அஞ்சுகங்கள் நாகணவாய் அழகன் மயிற்குலங்கள்
மிஞ்சும் விரிபொழில்வாழ் வித்தாரப் பூங்குயிலே!
பஞ்சின் அடிமடவாள் பாகர் பகர்நல்லூர்
வந்தா னவனை வரும்வண்ணம் கூவாயே. 2

பூப்பொலியுங் கொம்பரில்வாழ் பூங்குயிலே! நீகேளாய்
காப்பொலிகள் ஓவாக் களிதூங்கும் நல்லூரில்
நாப்பொலிவு தோன்ற வந்தாண்டான் நீயவனை
வாய்ப்பொலிவு தோன்ற வரும்வண்ணங் கூவாயே. 3

தேனுந்து சோலைத் திருமனையில் வாழ்குயிலே!
மானும் மழுவும் மறைத்துவந்து நல்லூரில்
நானும் அடியவரும் நன்கு களிசிறக்கப்
பேணும் குருபரனைப் பிரியமுடன் வரக்கூவாய். 4

காதலாற் பாடிக் கசிந்துருகும் பூங்குயிலே
தீதெலாம் நீக்கச் சிவபெருமான் என்போலப்
பூதலத்தில் நல்லூரிற் போந்தான் அவனைவர
நீதயவாய் எங்கும் தேடிநினைத் துக்கூவாய். 5

*மலர் 15 : இதழ் 6—1951*

## தம்பி! கேளடா

தாவித் தாவிச் செல்லும் மனத்தைத் தம்பி கேளடா
கூவிக் கூவி யழைத்துக் கூடக் குடியிருத்தடா. 1

சேவித்துஞ் சென்றிரந்துந் தம்பி கேளடா
சிவமேநா மென்றுதினஞ் சிந்தை செய்யடா. 2

பாவித்தும் பாட்டிசைத்தும் தம்பி கேளடா
மூவிதமாம் ஆசைதன்னை முனிந்து வெல்லடா. 3

வாவியாறு சேரிலங்கை நல்ல நாடடா
பாவியென்ற நாமந்தன்னைப் பகைத்து நில்லடா. 4

தூவிமயி லேறும்வேலைத் துதித்துக் கொள்ளடா
நாவினில் நமச்சிவாயம் நவின்று நில்லடா. 5

### வெண்பா

தன்னை யறியத் தனக்கொருகே டில்லையென
முன்னைப் பெரியோர் மொழிந்தனரால்—தென்னைபனை
சேரிலங்கை வாழுஞ் சிவநேயச் செல்வர்காள்!
தேரீரிச் சீவன் சிவம்.

மலர் 15 : இதழ் 7—1951

## குரு புங்கவ சிங்கமே

வேத சாத்திரங் கற்றிடல் இன்பமே
வீணர் நட்பினை விட்டிடல் இன்பமே
ஊதம் மும்மழை பெய்திடல் இன்பமே
மாத ராசையை நீக்கிடல் இன்பமே
நாதன் நாமத்தை ஓதுதல் இன்பமே
நாம் சிவமென நாடுதல் இன்பமே
பேதம் யாவையும் நீங்கு பெரியவ!
பெருமை சேர்குரு புங்கவ சிங்கமே! 1

எங்கும் ஈசனைக் காணுதல் இன்பமே
ஏதி லார்பால் இரங்குதல் இன்பமே
பொங்கு கோபத்தைப் போக்குதல் இன்பமே
புவியின் ஆசையை நீக்குதல் இன்பமே
தங்கும் யோகத் தமருதல் இன்பமே
தானே தானய்த் தனைத்திடல் இன்பமே
இங்கெனக் கின்பம் எளிதில் விளக்கிய
என்கு ருபர புங்கவ சிங்கமே! 2

அஞ்செ ழுத்தினை யோதுதல் இன்பமே
அறிவால் அஞ்சையும் வென்றிடல் இன்பமே
நெஞ்சில் வஞ்சகம் நீக்குதல் இன்பமே
நியம நிட்டைகள் ஆற்றுதல் இன்பமே
தஞ்ச மென்றடி சாருதல் இன்பமே
தன்னைப் போற்பிறர் பாலன்பில் இன்பமே
அஞ்சல் அஞ்சலென் றருளிய ஐயனே
ஆண்மை சேர்குரு புங்கவ சிங்கமே. 3

ஒன்றி லொன்றி யிருந்திடல் இன்பமே
ஓம் சிவாய நமவெனல் இன்பமே
என்றும் வாழக் கருதுதல் இன்பமே
எல்லாம் ஈசன் செயலெனல் இன்பமே

நன்று தீதை யகற்றுதல் இன்பமே
நல்லோர் பாதத்தை நண்ணுதல் இன்பமே
ஒன்றும் நீயலை யென்றெனக் கோதிய
உண்மை சேர்குரு புங்கவ சிங்கமே! 4

சுழிமு னைக்குள் ஒடுங்குதல் இன்பமே
சோதி ரூபத்தைக் காணுதல் இன்பமே
பழியும் பாவமும் நீக்குதல் இன்பமே
பதியி லேஇளைப் பாறுதல் இன்பமே
வெளியி லேயொளி காணுதல் இன்பமே
விண்ணைப் போல விளங்குதல் இன்பமே
ஒழிக உன்பவம் என்ன உரைத்திட்ட
ஒருமை சேர்குரு புங்கவ சிங்கமே! 5

மலர் 15 : இதழ் 8—1951

---

## அறிந்திடடா

அன்பே சிவம் அறிந்திடடா
அதுவே நாமெனத் தெரிந்திடடா
என்புருகப் பாடிடடா
எழுந்திரடா நடந்துவாடா
எல்லாம் சிவ ரூபமெடா. 1

விண்ணைப் போல விளங்கிடடா
வீணாசையை விட்டிடடா
கண்ணைப் போலக் காத்திடடா
கருமத்தைச் செய்திடடா
கலங்காமல் நடந்திடடா
இலங்கை எங்கள் நாடிதடா. 2

பெண்ணும் ஆணும் இல்லையடா
பேதா பேதம் இல்லையடா
மண்ணும் விண்ணும்ஒன் ருச்சுதடா
மகத்துக்களின் பேச்சிதெடா
மகிழ்ந்து வாடா நடந்து வாடா
மாநிலத்தை ஆள்வோ மெடா. 3

தன்னைத் தன்னு லறிந்திடடா
தானே தானென் றிருந்திடடா
அன்னை போல வந்தானடா
அழகாரும் நல்லூரடா
பின்னைப் பேச்சில்லையடா
பெருமை சிறுமை தொல்லையடா. 4

மலர் 15 : இதழ் 9—1951

---

## மார்க்கம்

மார்க்கம் சன்மார்க்கம்
மகரிஷிகள் கண்டமார்க்கம் மார்க்கம் 1

மூர்க்கமான குணம் போக்கும்
முழுதும் உண்மையென ஆக்கும் மார்க்கம் 2

பார்க்கப் பார்க்க இன்பந்தேக்கும்
பரமானந்த நிலையை நோக்கும் மார்க்கம் 3

ஆர்க்கும் சுதந்திரத்தை யாக்கும்
அனைவரையும் முத்தியிலே சேர்க்கும் மார்க்கம் 4

பக்திசெய் யோக சுவாமி பாட்டு
படிப்பவருக்கு நல்ல வழிகாட்டும் மார்க்கம் 5

மலர் 15 : இதழ் 10—1951

---

## கும்பிட்டேன் குருநாதா

### பல்லவி

கூத்தாடுதே மன மென்ன கொடுமை
கும்பிட்டேன் குருநாதா உன் அடிமை.

### அநுபல்லவி

தீர்த்தங்க ளாடினேன் யாத்திரை செய்தேன்
சித்தந் தெளியவில்லை என்னநான் செய்வேன்.
கூத்தாடுதே

### சரணம்

பார்த்த விடமெங்கும் நீ யல்லா தில்லை
பாராமல் நானும் பட்டேன் தொல்லை
காத் தெனை யாள்வ துன்றன் கடமை
கருணைக் கடலே நான்உன் உடைமை.
கூத்தாடுதே 1

பக்திசெய் யோக சுவாமி பாட்டைப்
பாடிப் படிப்பவர் பல்லூழி காலம்
உத்தம ராக உலகினில் வாழ்ந்து
வித்தகன் சேவடி விரவிநிற் பாரே.
கூத்தாடுதே 2

மலர் 15 : இதழ் 11—1951

# சிவனே ஓம்

## ஆசிரிய விருத்தம்

திங்கட் சடையாய் எங்களை யுடையாய் சிவனே ஓம்
சீரிய அடியார் சிந்தையிலுறையும் செல்வா ஓம்
மங்கையை யுடையாய் மழவிடையானே மாதவனே ஓம்
மண்ணும் விண்ணும் ஒன்ருய் விளங்கும்
மணியே ஓம்
அங்கையிலங்கி தங்கியபரனே அரனே ஓம்
ஆருயிரெல்லாம் நீயேயாகி அமர்ந்தாய் ஓம்
கங்குலும் பகலும் இல்லாக்காட்சி தருவாய் ஓம்
கருதும் நல்ல பித்தனையென்றும் காப்பாய் ஓம். 1

சிறையார் வண்டறை கொன்றைப் போதனே
சிவனே ஓம்
சிவன்சிவனுய்ப் பாவனை செய்வார் திருவே ஓம்
குறையாவன்பு தரவேவருவாய் குருவே ஓம்
கூடிக்கூடி உன்னடிபாடல் கொடுப்பாய் ஓம்
பிறையார் சடையாய் பேராயிரமே யுடையாய் ஓம்
பேசப்பேச இன்பம் பெருகும் பிரானே ஓம்
அறையார்கழலே அல்லாற் சிறியே னறியேன் ஓம்
அன்புசெய் பித்தனை என்றும் ஆளக் கடவாய் ஓம். 2

மலர் 15 : இதழ் 12—1951

---

## வேண்டும்

### கட்டளைக் கலிப்பா

தன்னைத் தன்னால் அறிந்திட வேண்டுமே
தானு யெங்குஞ் செறிந்திட வேண்டுமே
பொன்னை மாதரைப் போக்கிட வேண்டுமே
புவியி னாசையை நீக்கிட வேண்டுமே
கண்ணைப் போலறங் காத்திட வேண்டுமே
கமல பாதந் தொழுதிட வேண்டுமே
எண்ணம் யாவு மிறந்திட வேண்டுமே
என் குருபர ! புங்கவ சிங்கமே. 1

கசடு தீர்த்தறங் கற்றிட வேண்டுமே
கல்வியாற் பயன் பெற்றிட வேண்டுமே
அசடர் நட்பை அகற்றிட வேண்டுமே
அந்தி சந்தி அடி தொழ வேண்டுமே
நிசசொரூபம றிந்திட வேண்டுமே
நீங்கா தென்று மிருந்திட வேண்டுமே
அசலு னக்கிலை யென்ற குருபர
ஆண்மை விஞ்சிடும் அற்புதச் சிங்கமே. 2

மூன்று மொன்ருய் முடிந்திட வேண்டுமே
முனையின் வாசல் திறந்திட வேண்டுமே
ஊன்று பாதத் துறங்கிட வேண்டுமே
உள்ளே யானந்தம் பொங்கிட வேண்டுமே
தூண்டு சோதி விழுங்கிட வேண்டுமே
தூய நிர்க்குண அற்புத பொற்பதம்
ஈண்டு தந்த இனிய குருபர !
என்னை யாண்டவ ! இங்கித சிங்கமே. 3

இருளை நீக்கி இருந்திட வேண்டுமே
எங்குந் தெய்வத்தைக் கண்டிட வேண்டுமே
பொருள றிந்தினிப் போற்றிட வேண்டுமே
பொய்ய ழுக்கா றகற்றிட வேண்டுமே

மருளைத் தந்து மயக்கும் பொருள்களை
மாற்றி யேயரு ளாக்கிட வேண்டுமே
பெருமை யிற்பிறர் பேசுங் குருபர
பெத்த னென்னையும் பேணிய சிங்கமே. 4

அஞ்சும் மூன்றும் அறிந்திட வேண்டுமே
ஆணவத்தை ஒழித்திடல் வேண்டுமே
இஞ்சி சூழும் இலங்கையில் ராவணன்
ஏத்திப் போற்றி இசைத்த முதல்வனே
நஞ்சுகண்டத்திற் கொண்டவ நம்பனே
நம்மை யாளுவான் நண்ணும் முதல்வனே
பஞ்சின் மெல்லடிப் பரம குருபர
பாவி யேனையு மாட்கொண்ட சிங்கமே. 5

---

## உண்டு

### கலிவிருத்தம்

தெய்வம் எல்லோர் சித்தத்தினு முண்டு
உய்யும் மார்க்கம் உணர்ந்தோர்க் குண்டு
பொய்யும் பொறுமையும் புன்மையோர்க் குண்டு
ஐயன் அடியிணை அன்பர்கட் குண்டே. 1

கல்லா தார்பாற் கபட முண்டு
எல்லா ரிடத்து மீச னுண்டு
வில்லாரிடத்தில் வீத்தொழில் உண்டு
எல்லாச் சக்தியும் இறைபால் உண்டே. 2

தேடுவார் மாட்டுச் செல்வம் உண்டு
தேடுவார் மாட்டுத் தெய்வம் உண்டு
நாடுவார் மாட்டு நன்மை உண்டு
பாடுவார் மாட்டுப் பரமன் உண்டே. 3

சீவன் சிவனெனல் தேறினர்க் குண்டு
ஆவதும் அழிவதும் அசடர்க் குண்டு
ஈவது விலக்கார்க் கெல்லா முண்டு
தேவ தேவன் திருவடி உண்டே. 4

அன்பு சிவமெனல் அறிஞர்க் குண்டு
பொன்புரை மேனி புனிதர்க் குண்டு
தன்போற் பிறரெனல் தக்கோர்க் குண்டு
விண்போல் விரிவு மேலோர்க் குண்டே. 5

---

## இல்லை

### கலிவிருத்தம்

தன்னை அறிந்தால் தவம்வே றில்லைத்
தன்னை அறிந்தால் தான்வே றில்லைத்
தன்னை அறியச் சகலமு மில்லைத்
தன்னை அறிந்தவர் தாபத ராமே. 1

பொன்னை யன்றிப் பொற்பணி யில்லை
என்னை யன்றி ஈசன்வே றில்லைத்
தன்னை யன்றிச் சகம்வே றில்லைத்
தன்னை அறிந்தவர் தத்துவா தீதரே. 2

ஆதியும் இல்லை அந்தமும் இல்லை
நீதியும் இல்லை நெறியும் இல்லை
சாதியும் இல்லைச் சமயமும் இல்லை
ஓதி உணர்ந்தவர் உறுதி மொழியே. 3

நன்மையும் தீமையும் நங்கட் கில்லைத்
தொன்மையும் புதுமையும் தூயோர்க்கில்லை
அன்னையும் தந்தையும் ஆன்மாவுக் கில்லைச்
சொன்ன சுருதியின் துணிபிது வாமே. 4

காலமு மில்லைக் கட்டுமில்லை
மூலமு மில்லை முடிபு மில்லை
ஞாலமு மில்லை நமனுமில்லைச்
சால அறிந்த தவத்தினோர்க்கே. 5

---

## பணிக

### கண்ணிகள்

சொல்லால்வருங் குற்றமெல்லாம்
நல்லோர் பொறுத்திடுவார்
எல்லாம் அவன்செயலே—கிளியே
ஏத்திப் பணிவோமே. 1

எல்லாஞ் சிவன் செயலே
எப்படியா யிருந்தாலும்
நல்ல மலரெடுத்துக்—கிளியே
நாம்ஏத்திப் பணிவோமே. 2

போக்குவர வில்லாத
பொன்னடியை எப்பொழுதும்
வாக்காலும் மனத்தாலும்—கிளியே
வாழ்த்தி வணங்குவோமே. 3

காயம் அழிந்துவிடும்
காண்பனவும் ஒழிந்துவிடும்
மாயமான வாழ்வை விட்டுக்—கிளியே
மலரடியைப் பணிவோமே. 4

ஆன்மா அழியாப் பொருள்
அப்பொருளை அறிந்து விட்டால்
வீண்பாவனை யெல்லாம்—கிளியே
வெந்துநீ றாய்விடுமே. 5

பொறி வழியே போயலையும்
பொல்லா மனத்தை வென்றால்
அறியாமை விட்டுக்—கிளியே
அரன்பதம் சேர்ந்திடலாம். 6

மலர் 1: இதழ் 8—16-7-35

---

## தானதாம்

காலை எழுந்திருந்து
கை கால் முகங் கழுவி
கோல மலரெடுத்துக்—கிளியே!
குரு பதத்தைக் கும்பிடுவோம்
கோபம் காம மோகமாகிய
கூடாத கூட்டங் கூட்டாதே
நாடாதே—என்றுந்—தேடாதே
நாமதுவெடி நாமதுவெடி. 1

பொறிவழியே போயலையும்
பொல்லா மனத்தை வென்றால்
அறிவறியாமை எல்லாம்—கிளியே!
அப்பொழுதே மாய்ந்து விடும்
அஞ்சாதே நீ கெஞ்சாதே
அங்கு மிங்கு மோடாதே
எங்கும் நாமெடி எங்கும் நாமெடி
எல்லாம் நாமெடி எல்லாம் நாமெடி. 2

தன்னை அறிந்து விட்டால்
தானந் தவம் அதுவே
தனக்குவமை இல்லையடி—கிளியே!
தாளிரண்டும் பூட்டிவிடு
தங்கமே நீ இங்கே வா
எங்கும் அவன் சங்கையிலை
தானதாம் தானதாம்
தனதாம் தனதாம். 3

மலர் 1: இதழ் 11—17-10-35

## அடியார்

ஆடுவர் பாடுவர் அந்தியும் சந்தியும்
கூடுவர் குணம்பல பேசிக்கை கூப்புவர்
தேடுவர் செய்வதொன் றறிகிலர் திடமுடன்
நாடுவர் வாடுவர் நம்பர்தம் அடியரே. 1

அச்சமும் கோபமும் அறிகிலர் பிரிவிலர்
பிச்சையே நச்சுவார் பிணங்குவார் இணங்குவார்
நிச்சமும் நோயிலர் நேயமே உருவினர்
நச்செழில் மிடறுடை நம்பர்தம் அடியரே. 2

நீறணி நின்மலா நெற்றியங் கண்ணனே
ஆறணி சடையனே அம்பிகை பாகனே
சீறர வணிதரு செல்வமே எனப்பல
கூறியே குரைகழல் கூடுவர் அடியரே. 3

அந்தமும் ஆதியும் அறியொணு ஒருவனே
எந்தையே ஈசனே எனப்பல சொல்லியே
கந்தமா மலர்கொடு காலையும் மாலையும்
வந்திப்பர் மலரடி வரங்கிளர் அடியரே. 4

சந்திரன் தவழ்தரும் சடையனே விடையனே
இந்திரன் முதலியோர் இறைஞ்சிடும் இறைவனே
சுந்தரர்க் காகமுன் தூதுசெல் சோதியே
எந்தையே எனச்சொலி ஏத்துவார் அடியரே. 5

*மலர் 2 : இதழ் 4—13-3-36*

## குருபதம் பணிதல்

சிவனொரு வனே திசைமுக னானன்
சிவனொரு வனே திருமா லானன்
சிவனொரு வனே சீருருத்திர னானன்
சிவனொரு வனென் சிந்தைநின் றானே. 1

### நேரிசையாசிரியப்பா

எப்பவோ முடிந்த காரிய மிந்தெனச்
செப்பிடு மாசான் சேவடி
முப்பொழு தேத்த முன்வினை அறுமே.

அப்படித் தானிந்து அன்றுதொட் டின்றெனச்
செப்பிடு மாசான் சேவடி
முப்பொழு தேத்த முன்வினை அறுமே. 2

### குறள்வெண்செந்துறை

எல்லாம் வல்ல இறைவன் சேவடி
பொல்லாங் ககலப் போற்றுவம் யாமே
ஒருகுறை இல்லையென் றுண்மையைக் கூறும்
குருபதம் ஏத்தக் கூடும்நல் வினையே. 3

நாள்களுக் கஞ்சலன் நவைகள் செய்திடும்
கோள்களுக் கஞ்சலன் குணமில் வெள்ளையன்
சூள்களுக் கஞ்சலன் சுவாமி! உன்மலர்த்
தாள்களுக் கஞ்சியே சரணம் புக்கயான். 4

ஆக்குவ துயிரெலாம் அருளின் துணைகொடே
காக்குவ தவ்வுயிர் கருணை யானநீ
போக்குவ தவ்வுயிர் பொன்னடிக் காமெனில்
ஆக்கமுங் கேடுமுன் ஆணையே யல்லவோ. 5

மலர் 2 : இதழ் 7—14-6-36

## வாமனமே

அன்பு சிவமென் றருளாளர் சொன்னமொழி
என்புருகச் செய்யுமன்றோ என்பின்னே வாமனமே!
மண்புகுந்த மாலும் மலரோனுங் காணரிய
எண்குணத்தான் பொன்னடியை ஏத்தஎன்பின்
வாமனமே! 1

கண்ணிறைந்த செல்வத்தைக் கங்குல்பகல் காணுமல்
உண்ணிறைந்த பேரன்பால் ஓதவென்பின் வாமனமே!
பொன்போலும் மேனியனைப் பூரணனைப் புண்ணியனை
என்போல நின்றானை ஏத்தஎன்பின் வாமனமே! 2

தன்னொப்பா ரில்லாத தத்துவனைத் தண்ணருளைச்
சுண்ணவெண் ணீற்றானைத் தொழவென்பின் வாமனமே!
ஒன்றாய் இரண்டாய் ஒருமூன்றாய் நின்றானை
என்றாயாய் நின்றானை ஏத்தவென்பின் வாமனமே! 3

உணர்ந்தார்க் குணர்வரிய ஓங்கார மெய்ப்பொருளைக்
கணந்தான் மறவாமல் கைதொழவா என்மனமே!
சித்தத்துள் தித்திக்கும் தெள்ளமுதைத் தெய்வத்தை
எத்திக்கும் போற்று தற்கு என்பின்னே வாமனமே! 4

முத்திக்கு வித்தான மூவா முழுமுதலைப்
பத்திக்க என்பின்னே பறந்துவா என்மனமே!
சத்தி சிவமாகித் தன்னிலையிற் பிரியாத
வித்தகனைப் போற்றுதற்கு விரைந்தென்பின்
வாமனமே! 5

*மலர் 2: இதழ் 8—16-7-36*

## சிவநாமஞ் சொல்லுவோம்

இராகம்—நாட்டை. தாளம்—ரூபகம்

### பல்லவி

நாமஞ் சொல்லுவோம்—சிவ
நாமஞ் சொல்லுவோம்.

### சரணம்

நாமஞ் சொல்லுவோம் நமனை வெல்லுவோம்
நாமே அவனென்று நடந்து செல்லுவோம். (நா) 1

சோம சுந்தரன் பாதங் காணுவோம்
சும்மா இருக்கின்ற சூட்சம் பேணுவோம். (நா) 2

சினத்தைக் கொல்லுவோம் மனத்தை வெல்லுவோம்
அனைத்து மவனென்று அகத்தி லெண்ணுவோம். (நா) 3

கையில் மலர் கொண்டு காலை மாலையும்
செய்ய மேனியன் அடியில் வீழுவோம். (நா) 4

என்பு பூண்டவன் என்னை யாண்டவன்
இவனை வேண்டினல் என்று மின்பமே. (நா) 5

சிரித்து முப்புர மெரித்த தேவனை
சிந்தை செய்குவோர் தேவராவரே. (நா) 6

கமல நான்முகன் கண்ணன் காண்கிலான்
எமது நாயகன் என்பர் பெரியரே. (நா) 7

வழிகள் இரண்டையு மடைக்க வல்லவர்
ஒழியா இன்பத்தி லுற்று வாழ்வரே. (நா) 8

தேனும் பாலினு மினிய தெய்வத்தை
நானும் நீயுமாய் நாளும் போற்றுவோம். (நா) 9

மலர் 3 : இதழ் 2—14-1-37

## முழுது முண்மை

### நிலையியலாசிரியப்பா

*அன்பே சிவமெனு மான்றோர் வாக்கை*
*யென்பே யுருக வெடுத் தெடுத் தோதும்*
*சிவதொண்ட னென்னுஞ் சின்னக் குழந்தை*
*சிவபெருமான்றன் திருவரு ளாலே*
*எவருமுவப்ப யாழ்ப்பாணத்திற்*
*பவவரு டத்துப் பன்னுமார் கழிமதி*
*அவதரித் தானவன் றனையனை வோருங்*
*கவனமாய்க் கண்ணை இமைகாப் பதுபோல்*
*வளர்த்து வந்தார் வருட மாறளவுந்*
*தளர்ச்சி யென்பது தானறி யாதே*
*பலன்கருதாது பணியாற் றுதலே*
*நலந்தரு கரும யோகமென் றடியார்*
*அறிந்தே யாற்றின ராத லாலே*
*அடியே னவர்தம் மழகிய பொன்னடி*
*முடிமிசைச் சூடினன் முழுதுமுண் மையே.*

*மலர் 6 : இதழ் 12—1940*

---

## ஈழத்து நற்றமிழ் நாடனே

*அந்தி சந்தியுஞ் சிந்திக்கு மெய்யன்பர்*
*பந்த பாசங்க டீர்க்கும் பரிசினன்*
*அந்த மாதியு மில்லா வியல்பினன்*
*இந்த லங்கை யெழில்நக ரானே.* 1

*ஆடு பாம்பணிந் தம்பலத் தாடுவான்*
*பாடு வார்பவந் தீர்த்திடும் பண்பினன்*
*ஓடு கங்கை யுடன்வைத்த சென்னியன்*
*நாடு மீழத்து நற்றமிழ் நாடனே.* 2

இருவினை வந்தெனைத் தாக்கா திருக்கவும்
கருவி கரணமென் கட்டளை கேட்கவும்
அருவி கண்களி லாறது பெருகவும்
தருக யருளீழத் தண்ணக ரானே. 3

ஈவது கடைப்பிடித் தென்று மொழுகவும்
நோவது பேசாது நோன்பைப் பிடிக்கவும்
சாவது வந்தாலு முண்மையிற் றழைக்கவும்
தேவர்தொழு மிலங்கைத் திருநக ரானே. 4

ஊனு யுயிரா யுடலா யுறுப்பாய்க்
கோனாய்க் குருவாய்ச் சீடனாய் நீநின்றாய்
யானு மறிவே னம்பலத் தரசே
தேனார் இலங்கைத் திருநக ரானே. 5

உண்டான போதுநா னுற்றார்க் குதவவும்
சண்டாள ரோடுசச் சரவின்றி வாழவும்
கண்டொன்று சொல்லாமற் காலங் கழிக்கவும்
மண்டலம் புகழிலங்கை மாநக ரானே. 6

ஐயா றகலாத வானந்தக் கூத்தனே
தையலாள் தன்னைப் பிரியாத தாணுவே
மையல்சேர் மாரனை நீறுசெய் வள்ளலே
தெய்வமே யீழச் செழுநக ரானே. 7

ஒப்பற்ற தெய்வமே உயிருக்கு ளுயிரே
தப்பற்ற மாதவர் தாங்தொழுங் கோவே
துப்பிதழ் மடந்தை சேவிக்குஞ் செல்வமே
இப்புவி யீழத் தெழில்நக ரானே. 8

ஓதுவார் தீவினை உடன்தீர்க்குந் தெய்வமே
மாதுமை பாகனே மான்மழுக் கையனே
பாதுகாப் பதுகடன் பாரேழு முன்னிடம்
மீதுநீ கிருபைவை வேலையிலங் கையானே. 9

ஔவிய மில்லா மனந்தா அடியாரைத்
திவ்வியமாய்ப் பாடுஞ் சித்தமும் நீதா
நவ்வியைப் பாராட்டும் நம்பா நடராஜா
கௌரிதன் பாகனே கடியிலங்கை நகரானே. 10

*மலர் 8 : இதழ் 1—1941*
*,, 2—1942*

---

## வேண்டும்

'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்'.

### கட்டளைக் கலிப்பா

வேண்டில் வேண்டாமை வேண்டிட வேண்டுமே
மிக்க அன்பருள் வாழ்ந்திட வேண்டுமே
மாண்டு மாண்டு பிறந்திட நேரினும்
மாதவ ! மனம் மற்றொரு பற்றின்றி
ஊன்று பாதத் துறங்கிட வேண்டுமே
ஓம் சிவாய நமவென வேண்டுமே
ஈண்டெ னக்கொரு சொல்லா லுணர்த்திய
என்கு ருபர புங்கவ சிங்கமே ! 1

மண்ணி னோசை மறந்திட வேண்டுமே
மதியி லேரவி சேர்ந்திட வேண்டுமே
விண்ணி னோசை விளங்கிட வேண்டுமே
வேறொன் றின்றித் துலங்கிட வேண்டுமே
பண்ணும் ஓசையும் போன்ற பரமனைப்
பாடியாடிப் பணிந்திட வேண்டுமே
என்னு ளேஅருள் காட்டிய அண்ணலே
என்கு ருபர புங்கவ சிங்கமே. 2

நரியை நற்பரி ஆக்கிட வேண்டுமே
நானும் நீயும்ஒன் றாகிட வேண்டுமே
திரிபு ரத்தை எரித்திட வேண்டுமே
தேவ தேவனைக் கண்டிட வேண்டுமே
பெரியர் தம்பணி பேணிட வேண்டுமே
பிறவி யின்பயன் பெற்றிட வேண்டுமே
வறிய னேனையும் வாழ்வித்த அண்ணலே
வாழ்கு ருபர புங்கவ சிங்கமே. 3

வெளியிலே யொளி கண்டிட வேண்டுமே
வீணர் தங்களை விட்டிட வேண்டுமே
சுழியி லேயிருந் தாறிட வேண்டுமே
துரிய வீட்டி லிருந்திட வேண்டுமே
களிகொள் யானையைக் கட்டிட வேண்டுமே
காரணத்தை அறிந்திட வேண்டுமே
தெளிய வேயருள் காட்டிய தெய்வமே
தேவர் போற்றும் குருபர சிங்கமே. 4

காலைக் கட்டித் தவஞ்செய்ய வேண்டுமே
காமன் தன்னை எரித்திட வேண்டுமே
மேலை வாசல் திறந்திட வேண்டுமே
வெளியி லேநடங் கண்டிட வேண்டுமே
மூல மந்திரம் ஓதிட வேண்டுமே
முத்தி சேர விரும்பிட வேண்டுமே
ஞால மெங்கும் புகழ்ந்திடு தெய்வமே
நற்கு ருபர புங்கவ சிங்கமே. 5

மலர் 1 : இதழ் 9—1935

---

## உன் நினைவல்லால்,

இராகம்—காபி. தாளம்—ஆதி

'ஜெகதோ காரணு' மெட்டு

### பல்லவி

உன்னினை வல்லால் இல்லை
உயிர்த்துணைவோனே—உம்பர்கோனே.

### அநுபல்லவி

அன்னைபிதா குருநீயே அண்டினேன்
வன்மமேனோ வினைதானோ. உன்னினை

### சரணம்

பொன்னம் பலவாணனே
புலவர்தம் பெருமானே
கன்னலே கட்டித்தேனே
கனிரசமே—எம்மானே. உன்னினை

புன்னெறி செல்லும் பொல்லாப்
புந்தியை வென்று மேலாம்
நன்னெறி செல்ல வைத்து
நமக்கருள் தா—எங்கோனே. உன்னினை

உரையற்ற ஊமர் போலாய்
உள்ளமு வந்து மேலாம்
தரைதனில் யோக சுவாமி
தான் கடைத்தேற—ஈடேற. உன்னினை

மலர் 6: இதழ் 7—1940

## தேடி நின் திருவடியை

இராகம்—உசேனி. தாளம்—ஆதி

பல்லவி

தேடி நின் திருவடியை செல்வமென நாடிவந்தேன்
திருவருள் தந்தாளும் தேவா—சற்குருநாதா.

அநுபல்லவி

பாடி மகிழும் சிவபாக்யம் பாரினில் தேட
மூடிய மாயஇருள் ஓட அருள் குருவே. தேடி

சரணம்

அடியேனைக் கைவிடுதல் ஆகுமோ இது தகுமோ
அன்பிலா திருப்பது அடிகளுக் கழகாமோ
அரசே நல்லூரில் வாசா ஆரறிவாரென்று சொன்ன
அருந்தவனே ஒப்பில்லானே அப்பனே செல்லப்பனே.
தேடி

மலர் 6 : இதழ் 8—1940

---

## பணியாமற் பணிந்தேனடி குதம்பாய்

ஓங்கார மேடையின் மேலேறி நின்றேன்
ஒன்றையுங் காணேனடி—குதம்பாய்
ஒன்றையுங் காணேனடி. 1

தூங்காமல் தூங்குஞ் சுகம் வந்து வாய்த்தது
சும்மா இருந்தேனடி—குதம்பாய்
சும்மா இருந்தேனடி. 2

ஆங்காரம் போச்சுது ஆனந்தம் போச்சுது
அவனேநா ஞனேனடி—குதம்பாய்
அவனேநா ஞனேனடி. 3

நீங்காத நின்மல நிஷ்டை பலித்தது
நீ நா னில்லையடி—குதம்பாய்
நீ நா னில்லையடி. 4

ஒன்றென இரண்டென ஓதமுடியாமல்
ஓவிய மானேனடி—குதம்பாய்
ஓவிய மானேனடி. 5

நன்றெனத் தீதென நவில முடியாத
நாதன் தாள் சேர்ந்தேனடி—குதம்பாய்
நாதன் தாள் சேர்ந்தேனடி. 6

கண்ணுக்குக் கண்ணு யிருக்கின்ற கர்த்தனைக்
கண்டு களித்தேனடி—குதம்பாய்
கண்டு களித்தேனடி. 7

அண்டமும் பிண்டமும் ஒன்றோ இரண்டோ வென்று
அறியா திருந்தேனடி—குதம்பாய்
அறியா திருந்தேனடி. 8

ஆதார மாறும் அவத்தையோ ரைந்தும்
அடியோடு போச்சுதடி—குதம்பாய்
அடியோடு போச்சுதடி. 9

பாதார விந்தத்தைக் காணுமற் கண்டு
பணியாமற் பணிந்தேனடி—குதம்பாய்
பணியாமற் பணிந்தேனடி. 10

மலர் 16 : இதழ் 1—1952

---

## ஆனந்தக் கூத்தாடினுன்

ஆனந்தக் கூத்தாடினுன் தொண்டன்
ஆனந்தக் கூத்தாடினுன் தொண்டன். 1

தானதாம் என்று பாடி
சாந்தம் பொறுமை கூடி. ஆனந்த 2

மோனந் தனைத் தேறி
முழுதும் உண்மையென்று கூறி. ஆனந்த 3

வேதாந்த நிலை மேவி
வேறில்லை எனக் கூவி ஆனந்த 4

தாதா தரிகிடதோம்
ஜனத ஜனத தீமென்று. ஆனந்த 5

மலர் 16 : இதழ் 2—1952

---

## குரு பக்தி

குரு பக்தியே பெரும்பேறு
கொண்டாடிக் கொண்டாடி ஆறு. 1

தரும நிலையிலே ஏறு
சங்கர சிவனே யென்றுகூறு. 2

ஒருபொல்லாப்பு மில்லையென்று தேறு
உண்மை முழுது மென்றுகூறு. 3

திருவருளை நாடிநீ செல்லு
சிவாயநம வென்று நீசொல்லு. 4

தன்னைத்தன் ஞல்அறிய வேண்டும்
சாந்தம் பொறுமை உன்னில் தோன்றும். 5

பின்னை உனக்குத் துணைநீயே
பேதாபேத மெல்லாம் அணையே. 6

முன்னைவினை யென்றும் நினையாதே
மூவாசை போக்க நினைவாயே. 7

மலர் 16 : இதழ் 3—1952

---

## திருவாய்மொழி

செல்லப்பன் என்னுந் திருவுடையான் தேரடியில்
பொல்லாப் பிலேயென்ருன் போற்று. 1

முழுதுமுண்மை என்று முனிவனவன் சொன்னுன்
எழுதமுடியா திதை. 2

நாமறியோம் என்னும் நறிய திருவாக்குச்
சேமமுறச் சொன்னுன் தெரி. 3

முடிந்த முடிபென்று முன்னுளிற் சொன்னுன்
அடியார்கள் முன்னர் அவன். 4

இடமகன்ற ஞாலத்தே எத்தனையோ அன்பர்
திடந்தந்து போனுர் தெரி. 5

தன்னை அறிந்தார் தலையாவர் தாரணியில்
பின்னையவர்க் கில்லைப் பிறப்பு. 6

மூன்றுமொன் ருன முறைமை அறிந்தவரே
ஆன்ருேர்; அவரை அறி. 7

அறிவுக் கறிவாகி அப்பாற்கப் பாலாய்க்
குறிகுணம் அற்ருேன் குரு. 8

கும்பிடுவார் தம்மனத்தைக் கோயிலாய்க் கொண்டுள்ள
தம்பிரான் தானே தலை. 9

தலையில் இரந்துண் ணும் தம்பிரான் தன்னை
அலையா மனத்தால் அறி. 10

எல்லாரகத்தும் இருந்துநான் நானென்று
சொல்வானைக் கண்டு சுகி. 11

கட்டுப்பா டில்லாதார் கானகத்தில் வாழுகின்ற
துட்டவிலங் கொப்பரெனச் சொல். 12

நித்திரையை நீக்கி நினைவாக நிற்பவர்க்குக்
கர்த்தனருள் மேவுமெனக் காண். 13

தத்துவங்கள் ஆறாறும் தாமல்ல வென்று கண்டார்
பத்தர்க்குப் பத்தரவர் பார். 14

அண்டபிண்ட மெல்லாம் அனைத்துஞ் சிவரூபம்
கண்டு தொண்டு செய்வாய் கதி. 15

மண்டலம் மூன்றும் மருவிநின்ற மெய்ப்பொருளைக்
கண்டு களிப்பாரைக் காண். 16

காணுகின்ற கண்ணிற் கலந்த பெருமானே
நான் நீ அவனென் றறி. 17

முத்திக்கு வித்தை முனையில் வைத்துச் சீராட்டும்
பத்தர்களைக் கண்டு பணி. 18

சென்றன சென்றன வாழ்நாள் என்று தேம்பாதே
என்றென்று முள்ளாயென் றெண்ணு. 19

பாலகற்குப் பாற்கடலைப் பாரில் அழைத்தபிரான்
கோலமே யாவுங் குறி. 20

காலனைக்கா லாலுதைத்தான் காமனையுந் தானெரித்தான்
ஆலமுண்ட கண்டன் அறி. 21

எல்லாமாய் அன்றி இயங்கா தியங்குகின்ற
வல்லபத்தை யாரறிவார் மன். 22

எங்கேநாம் அங்கே இறைவன் எனவுணர்ந்தார்
சங்கையின்றிச் சொல்லுவார் தாம். 23

மந்திரமுந் தந்திரமும் வேண்டா மகத்துக்கள்
சுந்தரத் தாளே துணை. 24

மலர் 16 : இதழ் 4, 5—1952

## நல்ல சமயம் இது தம்பி

நல்ல சமயம் இது தம்பி
நம்மை நா மறிந்து கொள்ளத் தம்பி. 1

எல்லார்க்கும் நன்மை செய் தம்பி
இறைவன் உன் னிடமுண்டு தம்பி. 2

கொல்லாதே கோபம் வையாதே
கும்பிடு காலைமாலை தம்பி. 3

சொல்லாலே பயனில்லைத் தம்பி
சும்மா விருந்துபார் தம்பி. 4

கண்ணல்ல காதல்ல தம்பி
கண்ணுக்குக் கண்ணெடா தம்பி. 5

எண்ணி லடங்காதெடா தம்பி
எல்லா மதுவெடா தம்பி. 6

மண்ணாசை வையாதே தம்பி
மற்றிரண்டும் அப்படியே தம்பி. 7

ஒன்றுக்கும் அஞ்சாதே தம்பி
ஓடி ஒளியாதே தம்பி. 8

பண்டும் இன்றும் உள்ளதெடா தம்பி
பாடிப் பணியெடா தம்பி. 9

அகம்பிரம் மாஸ்மி என்று தம்பி
அனுதினமும் சாதனை செய் தம்பி. 10

இகலோகம் பரலோகம் தம்பி
இங்கேநீ கண்டுகொள்வாய் தம்பி. 11

மலர் 16 : இதழ் 7—1952

---

## ஒரு சொல்

### ஆனந்தக் களிப்பு

*தானு தனு தந்தனன—தன*
*தானு தனு தந்தனு தந்தனன.*

ஒரு சொல்லால் உளந் தூய்மையாச்சே—சிவசிவ
ஒன்றிரண் டென்றிடும் பேதமும் போச்சே
இருவினை யென்பதும் பேச்சே
என்னை அறிந்தேன் இடரற்றுப் போச்சே. (தானு) 1

எல்லாமென் கைவச மாச்சே—சிவசிவ
எடுத்த பிறப்பின் பயன் சித்தி யாச்சே
உல்லாச மாய்த் திரிவ தாச்சே
உலகெலா மெனக் குறவாகிப் போச்சே. (தானு) 2

சொல்லாலே வாய்த்த சுகத்தை—சிவ சிவ
சுகிப்பதே யல்லாமற் சொல்ல வொண்ணுதே
கல்லாதே யாவும் கற்றேனே
காயத்தையும் என்தன் கைக்குள்வைத் தேனே.
(தானு) 3

அண்ட சராசர மெல்லாம்—சிவ சிவ
அகத்திலே கண்டு தரிசித்துக் கொண்டேன்
முண்டக மலர்ப் பாதங் கண்டேன்
மூவருந் தேவரும் முளைத்ததுங் கண்டேன். (தானு) 4

உருகி உருகி உணர்ந்தேன்—சிவ சிவ
ஒன்றையும் காணுமல் ஏங்கிநான் நின்றேன்
மரும மிதுபெரும் மருமம்
மகத்துக் களாலும் சொல்லொணு மருமம். (தானு) 5

மலர் 16 : இதழ் 8—1952

## வேல் வேல்

அன்புடனே ஐந்தெழுத்தைச் சொல்லு—வேல் வேல்
ஆசானடிக்கீழ் அமர்ந்து நீ நில்லு
கொஞ்சங் கொஞ்ச மாய்மனத்தை வெல்லு—வேல் வேல்
கூடாத கூட்டத்தை விட்டு நீ நில்லு. 1

வஞ்சியர் ஆசையைத் தள்ளு—வேல் வேல்
வாளுள் ஆசையைப் பேணுமல் கொள்ளு
சஞ்சலம் வந்தால் வரட்டும்—வேல் வேல்
சற்றும் அலையாமல் சாந்தத்தில் கட்டு. 2

அஞ்சு பூதமும் நீயல்ல நம்பு—வேல் வேல்
ஐம்பொறி ஐம்புலனும் நீயல்ல நம்பு
வெஞ்சினம் நெஞ்சில் வாராமல் காப்பாய்—வேல் வேல்
வேறு பொருளில்லா நிட்டையில் சேர்ப்பாய். 3

பஞ்சம் படைவந்த போது—வேல் வேல்
பரமன் திருப்பெயர் தப்பாமல் ஓது
நஞ்சைப்போல் பிறன் பொருள் எண்ணு—வேல் வேல்
நாங்கள் சிவமெென நாளும் நீ நண்ணு. 4

கஞ்ச மலர்ப்பதம் வாழ்க—வேல் வேல்
கருணை நிறைந்த பெரியோர்கள் வாழ்க
இந்திரன் முதலியோர் வாழ்க—வேல் வேல்
இவ்வுலகி லுள்ளோர் யாவரும் வாழ்க. 5

மலர் 16 : இதழ் 9—1952

## சிவனடி

சிவனடியைச் சிந்தை செய்வோமே—இந்தச்
சீவன் சிவனென்று தெளிந்துகொள் வோமே. 1

அவனரு ளாலே அவன் தாள்—நாங்கள்
ஆராதனை செய்து சீராய்வாழ் வோமே. 2

உவமை கடந்த பேரின்பம்—எங்கள்
உள்ளத்தில் உண்டொரு பொல்லாப்பு மில்லை. 3

சிவனடி யாரொடுங் கூடி—நாங்கள்
சிவபுராணந் தினம் படித்துவரு வோமே. 4

ஐம்பூதம் நாமல்ல காணும்—நாங்கள்
ஐம்பொறியும் ஐம்புலனும் நாமல்ல அறியும். 5

அந்தக் கரண நாமல்லப் பேணும்—இந்த
ஆன்மாவே நாமென் றறிந்திட வேணும். 6

வாழிசிவ னடியார்கள் வாழி—இந்த
வையகத்தில் வாழும் உயிரெல்லாம் வாழி. 7

ஆழிசூழ் இலங்கையும் வாழி—எங்கள்
அப்பனும் அம்மையும் எந்நாளும் வாழி. 8

மலர் 16: இதழ் 10—1952

## மறப்பெனோ குருநாதன்

இல்லையென் றுமல் இரப்போர்க்கொன் றீவரேல்
தொல்லைவினை யெல்லாம் தொலைந்துபோம்—நல்லைக்
குருநாதன் கூறினன் பொல்லாப் பிங்கில்லை
உருகாதோ நெஞ்சம் உவந்து. 1

உண்மை முழுதுமென ஓதுங் குருநாதன்
தன்னை மறப்பெனோ தாரணியில்—பின்னையினித்
துஞ்சல் பிறப்புண்டோ சோர்வச்சம் தீருண்டோ
கஞ்சமலர்த் தாளென்றும் காப்பு. 2

காக்குந் திருவடிகள் எந்நாளும் என் மனத்தில்
பூக்கும் பொறிவழியே போகாமல்—நோக்குமென்றும்
தேக்கும் சிவானந்தத் தேனமுதை யுண்டு மனம்
நீக்கமின்றி நிற்கும் நினை. 3

நினைக்கு மடியாரை நீயே நானென்றே
அணைக்குந் திருக்கரந்தா னென்னே—கனைக்கும்
கடல்சூழ் கவினிலங்கைக் கார்சூழ் நல்லூரான்
தொடுக்கும் வல்வேலைத் துதி. 4

துதிக்க மதிதந்த தூயோன்றன் பாதம்
துதிக்க வினைகள் துகளாம்—மதிக்கருளும்
ஐயன் திருமதலை ஆறுமுகன் வீதியிலே
தெய்வமென நின்றான் தெளி. 5

மலர் 16: இதழ் 12—1952

## தம்பி வந்தனை செய்திடடா

உண்ணுதே உறங்காதே ஊரூராய்த் திரியாதே
பெண்ணுசை வையாதே—தம்பி பிரமத்தை
அறிந்திடடா. 1

கண்ணுரக் கண்டிடடா காலைமேல் ஏற்றிடடா
விண்ணுணம் பேசாதே—தம்பி வேறுபொரு
ளில்லையடா. 2

எண்ணுமல் எண்ணிடடா இயந்தபடி நடந்திடடா
மண்ணுசை வையாதே—தம்பி மலரடியைப்
போற்றிடடா. 3

சுண்ணுகத்தானை யென்றும் தோத்திரம் நீ செய்திடடா
அன்னை பிதாக்குருவை—தம்பி அன்புடனே
போற்றிடடா. 4

வலமிடமாய்ச் செல்லுகின்ற வாயுவை நீ தம்பியடா
பலம் உனக்கு வந்துவிடும்—தம்பி பற்றற்று
நின்றிடடா. 5

குல நலம் பாராதே கோபம் நெஞ்சில் வையாதே
தலமாறும் தாண்டிடடா—தம்பி தனிமையை நீ
நாடிடடா. 6

உண்டில்லை யென்று சொல்லி உரையாட
வேண்டாமெடா
கண்டு களித்திடடா—தம்பிகருணை வெள்ளம்
பெருகுமெடா. 7

பண்டு செய்த வல்வினை நோய் பாரில் பறக்குமெடா
நன்றென்றும் தீதென்றும்—தம்பி நடுவாக
நின்றிடடா. 8

கொன்ருென்றும் புசியாதே குருவாக்கை மறவாதே
அன்று மின்று மென்றும்—தம்பி அப்படியே
உள்ளதெடா. 9

மன்று பறித்துண்ணுதே மாயத்திற் சிக்காதே
குன்றுபோல் நின்றிடடா—தம்பிகுறை வொன்று
மில்லையெடா. 10

இந்தப் பத்துப் பாட்டையும் நீ இரவும் பகலும் சொல்லி
வந்தனை செய்திடடா—தம்பி வறுமைபிணி தீருமெடா. 11

கைதடி, சிவராத்திரி—12-2-1953

---

## அன்னையொத்த செல்வன் அறி

### வெண்பா

ஒருபொல்லாப் பில்லையென ஓதும் திருவாக்கால்
உருகி யுருகி யுணர்வற்—றிரு நிலத்தில்
இன்பதுன்பம் என்னுமவை என்றுமொப்பாந்
தன்மைகண்டேன்
என்னப்பன் செல்லப்பன் என்று. 1

உண்மை முழுதுமென ஓதுந் திருமொழியின்
தன்மையினைக் கண்டேன் தலைப்பட்டேன்—பின்னைப்
பிறப்பும் இறப்புமிலைப் பேதை மடநெஞ்சே
மறப்பின்றி ஏத்தி மதி. 2

முடிந்த முடிபென்று முன்னின்று சொல்லப்
படிந்ததென் உள்ளம் பதியில்—முடிந்ததே
மாயவிருள் மந்திரமும் தந்திரமும் நான்மறந்தேன்
தாயனைய செல்லப்பன் தான். 3

நாமறியோ மென்று நகைத்தென்னை நோக்கிக்
காமங் கடந்தோன் கழறினன்—சேமமுடன்
சிந்தித்துச் சிந்தித்துச் சேவடியே தஞ்சமென்று
வந்தித்து நின்றேன் மகிழ்ந்து. 4

ஆரறிவார் என்றே அடிக்கடி யேநகைக்கும்
பேரறி வாளனையும் பித்தனென்றே—பாரிற்
பலரே இகழுவார் சில்லோர் புகழ்வர்
சலனமற்று வாழுவார் தாம். 5

கரைகாணு இன்பக் கடலாடு வானை
உரையாட யாருக்கிங் கொல்லும்—தரைமீது
நால்வேதங் காண்கிலவே நற்றவத்தோர் தாமறியார்
மால்பிரமன் தேரார் மதி. 6

ஆசைக் கடலி லலைந்து திரிவார்கள்
ஆசை கடந்தவனை ஆரறிவார்—மாசற்ற
மேகத்தை சந்திரனை மின்மினிதான் மூடுமோ
மோகத்தை யின்றே முனி. 7

உயர்ந்ததிருக் கோபுரமும் ஓங்கெயிலுங் கண்டு
வியந்து விழுந்தெழுந்து விம்மி—அயர்ந்து நிற்கும்
ஆடவரும் மங்கையரும் மற்றுள்ள அன்பர்களும்
பாடவருவார் தினமும் பார். 8

எட்டும் இரண்டும் அறியாத என்னையும்
நட்டஞ்செய் செல்லப்பன் நல்லூரில்—திட்டமுடன்
நீயேநா னென்று நினைந்துருக வைத்தனனே
தாயே யனையா னவன். 9

ஆதியந்த மில்லையென்று சொல்லாமற் சொன்னான்காண்
நீதிநெறி விளங்கும் நல்லூரில்—வீதியிலே
என்னைத் தானுக்கி எடுத்தாண்டான் யாரென்னின்
அன்னையொத்த செல்வன் அறி. 10

மலர் 17 : இதழ் 1, 2—1952-53

---

## இன்பமாய் வாழ்ந்திடடி

அங்கிங்கென் றெண்ணுதே அவனிவனென் றுன்னுதே
எங்குஞ் சிவத்தைக்கண்டு—தங்கமே இன்பமாய்
வாழ்ந்திடடி. 1

ஆசை வலையிற்சிக்கி—ஆண்டவனை நீமறந்தாய்
பூசைசெய்து பொன்னடியை—தங்கமே பூரணமாய்
வாழ்ந்திடடி. 2

இல்லையென்றும் உண்டென்றும் எடுத்துச்சொல்ல
வொண்ணுத
நல்லூரான் திருவடியை—தங்கமே நாடோறும்
போய்வணங்கு. 3

ஈடேற வேண்டுமென்ருல் எல்லாம் சிவன்செயலாய்
நாடோறும் வேண்டிப்பணி—தங்கமே நல்லூரான்
கிருபையுண்டு. 4

உண்மை முழுதுமென்ற உயர்ந்த திருவாக்கை
எண்ணுமல் எண்ணிப்பணி—தங்கமே எல்லாங்கை
கூடுமெடி. 5

ஊரும்பேரு மில்லாத உத்தமனைச் சித்தத்தில்
சேரும் வண்ணம் நாள்தோறும்—தங்கமே தியானம்
செய்து வாழ்வமே. 6

என்னப்பன் எம்பிரான் எல்லார்க்கு மீசனென்று
சொன்ன திருவாக்கே—தங்கமே சுந்தரமென்
றெண்ணியிரு. 7

ஏழுலகும் தொழுதேத்தும் எம்பெருமான் திருவடியை
நாளும் மறவாதே—தங்கமே நானுமில்லை நீயுமில்லை. 8

ஐம்பூதம் நீயல்லை அறிந்திதனைக் கொள்ளுவாய்
ஆன்மாநீ மறந்திடாதே—தங்கமே ஆட்சிசெய்ய
வேண்டாமடி. 9

ஒன்பது வாயிலுள்ள உடம்பு சிவன் கோயில்
என்பதை மறந்திடாதே—தங்கமே ஏத்திஏத்திப்
பணிந்திடடி. 10

ஓதுவதொ ழியேலென்ற உண்மையைநீ மறவாதே
ஏதுக்கு மஞ்சாதே—தங்கமே எல்லாம் சிவமயமே. 11

ஔவியம் பேசாதே ஆவியுள்ள மட்டும்நீ
தெய்வம் ஒருவனென்று—தங்கமே திடமுடன்
வாழ்ந்திடடி. 12

அஃகமும் காசும்தேடி அம்புவியில் அலையாதே
வெஃகாதே பிறன்பொருளைத்—தங்கமே வீடுனக்குச்
சொந்தமடி. 13

மலர் 17 : இதழ் 3—1953

---

## ஆசானைக் கண்டேன்

ஆசானைக் கண்டேன் அருந்தவர்வாழ் நல்லூரிற்
பேசா தனவெல்லாம் பேசினான்—கூசாமல்
நின்றேன்நீ யாரடா வென்றே அதட்டினான்
அன்றேயான் பெற்றேன் அருள். 1

அருளொளிக்குள் ளேபுகுந்து சென்றேன்யான் ஆங்கே
இருள்சூழ்ந் திருப்பதைக் கண்டேன்—பொருளறியேன்
ஓர்பொல் லாப்பில்லையென வோதினான் கேட்டுநின்றேன்
மார்மந்தே ராது மலைத்து. 2

மலைத்துநின்ற என்னை மனமகிழ நோக்கி
அலைத்துநின்ற மாயை அகலத்—தலைத்தலத்திற்
கைகாட்டிச் சொல்லலுற்றான் கந்தன் திருமுன்றில்
மெய்ம்மறந்து நின்றேன் வியந்து. 3

வியந்துநின்ற என்றனக்கு வேதாந்த உண்மை
பயந்திரும் வண்ணமவன் பண்பாய்—நயந்துகொள்
அப்படியே உள்ளதுகாண் ஆரறிவார் என்றானல்
ஒப்பில்லா மாதவத்தோன் உற்று. 4

உற்றாரும் போனார், உடன்பிறந்தார் தாம்போனார்
பெற்றாரும் போனார்கள் பேருலகில்—மற்றாரும்
தன்னொப்பார் இல்லாத் தலைவன் திருவருளால்
என்னொப்பார் இன்றி யிருந்தேன். 5

*மாசிமகம், மலர் 17 : இதழ் 4—1953*

---

## நானே நீ

### வஞ்சித்துறை

நானே நீ நீயே நான்
கோனே நீ குருவே நீ. 1

வானே நீ மண்ணே நீ
தேனே நீ தெருளே நீ. 2

ஊனே நீ உயிரே நீ
மீனே நீ வெண்மதி நீ. 3

ஆனே நீ அடல்விடை நீ
கானே நீ கடலே நீ. 4

சாணே நீ சதுரே நீ
ஆணே நீ பெண்ணே நீ. 5

தூணே நீ துரும்பே நீ
ஊணே நீ உடையே நீ. 6

பொன்னே நீ பொருளே நீ
எண்ணே நீ எழுத்தே நீ. 7

நானே நீ நன்மதி நீ
தானே தான் தானே தான். 8

பூதம் நீ பொறியும் நீ
வேதம் நீ வேதியன் நீ. 9

காதல் நீ கருத்தும் நீ
ஆதலால் அறிவார் யார். 10

*மலர் 17 : இதழ் 5—1953*

---

## வேடிக்கை செய்கிறானே

### பல்லவி

வேடிக்கை செய்கிறானே—பரமபிதா
வேடிக்கை செய்கிறானே.

### அநுபல்லவி

வேடிக்கை செய்கிறான் கூட இருக்கிறான்
வேறாய் இருப்பதுபோற் பாசாங்கு பண்ணுகிறான்.
(வேடி)

### சரணம்

பாடுகிறான் படிக்கிறான் பக்தரினம் சேர்கிறான்
நாடுகிறான் நன்மைதீமை நாமல்ல என்கிறான்
ஓடும் இருநதியும் ஒன்றாகக் காண்கிறான்
ஒன்றோ இரண்டோவென ஓதியறிய வொண்ணான்.
(வேடி)

மலர் 17 : இதழ் 6—1953

---

## எங்கும் திருக்கூத்து

அங்கும்இங்கும் எங்கும்திருக் கூத்து—அடடா
அதையறிதல் பத்தரைப்பொன் மாற்று. 1

பொங்கிவரும் காமமே கூற்று—அடடா
புலன்வழியில் போகாமல் தேற்று. 2

இடைபிங்க லயிரண்டும் சேர்த்து—அடடா
எழிலான சுழுமுனைக்குள் ஏற்று. 3

மடைதிறந்தாற் போலவரும் ஊற்று—அடடா
மாமாயை சாராதெனச் சாற்று. 4

பொங்கிவரும் அமிர்தத்தை உண்டு—அடடா
பூரண நிட்டையிற்சேர் நன்று. 5

மங்கள கரமாக வாழ்த்து—அடடா
மௌன நிலையிலே ஆழ்த்து. 6

சங்கரன் திருப்பாதம் போற்று—அடடா
சாயுச்சியப் பதவியில் ஏற்று. 7

நல்லூரான் திருப்பாதம் காப்பு—அடடா
நமக்குக்குறை வில்லைநல்ல வாக்கு. 8

சொல்ல முடியாத தீர்ப்பு—அடடா
சுவாமி கிருபையுனக்கு ஆப்பு. 9

*மலர் 17 : இதழ் 7—1953*

---

## வரம் தருவார்

வருவார்வ ருவார்வரம் தருவார் சுவாமி
வஞ்சம்பொ றாமைகோபம் நெஞ்சினில் நீவையாதே—
(வரு) 1

ஒருவரும் இருவரும் மூவரும் ஆனவர்
ஓங்காரத் துட்பொருள் ஆகியே நிற்பவர்— (வரு) 2

கருமத்தைச் செய்பலன் கருதாமல் உலகத்தில்
காயமே கோயிலாய்க் கண்டு வணக்கம்செய்— (வரு) 3

தருமநெறி பிசகாமல் தாரணி தனில்வாழ்
தன்னைத்தன்னால் அறியத் தியானத்தில் நீமூழ்கு—
(வரு) 4

மருமம றிந்தவர்கள் மண்ணிற்பி றவாரென்று
மகத்துக்கள் வாக்கியத்தை மறவாமல் நினைத்துக்
கொள்— (வரு) 5

திருவாரும் நல்லூரில் செல்லப்பன் மாணாக்கன்
திருவாளன் சொன்னசொல்லைச் சிந்திக்கச்
சீவன்முக்தி— (வரு) 6

*மலர் 17 : இதழ் 8—1953*

---

## பதைப்பற்றிரு நெஞ்சமே

இராகம்—தன்னியாசி. தாளம்—ஆதி

பல்லவி

*பார்ப்பதெல் லாம்சிவ மாகவே கண்டு*
*பதைப்பற்றிரு நெஞ்சமே.* (பார்)

அநுபல்லவி

*பதைப்பற்ற பேர்க்கேசிவ பாக்கிய முண்டு*
*பஞ்சேந் திரியம் ஐஞ்சையும் வென்று.* (பார்)

சரணம்

*மார்க்கம் சொல்லும் வழிதனிற் செல்லு*
*மாறுத மௌனத் தியானத்தில் நில்லு*
*தீர்க்க ஞானகுரு செல்லப்பன் பாதம்*
*சிந்திக்கும் யோகசுவாமி வந்திக்கும் கீதம்.* (பார்)

வெண்பா

*ஒருநேரம் நெல்லரிசி யூணை அருந்தின்*
*வருமோ வறுமைபிணி மாந்தீர்—கருதுவீர்*
*காயத்தைத் தேற்றிக் கடவுள் திருவடியில்*
*நேயத்தை வைப்பீர் நிறைந்து.*

*மலர் 17 : இதழ் 9—1953*

## அவரடியே தஞ்சமெடி

பிறியென்றான் பிறியாமற் பிறியென்றான் பேசாமல்
நெறிநின்று பாரென்றான்—கிளியே
நீயேநா னென்றுரைத்தான். 1

ஒருசொல் லாப்புமில்லை என்றே யுரைத்தான்
உண்மை முழுதுமென்றான்—கிளியே
ஊமைபோ லிருந்தானெடி. 2

முடிந்த முடிபென்றான் முன்னும்பின்னு மில்லையென்றான்
இடிபோ லுரைத்தானெடி—கிளியே
இனியென்ன சொல்வேனெடி. 3

அப்படியே உள்ளதென்றான் ஆரறிவா ரென்றானெடி
ஒப்புவமை காணேனெடி—கிளியே
ஓவியம்போ லானேனெடி. 4

நாமறியோ மென்றுசொன்னான் ஞான குரவனெடி
சேமமாய் வாழவைத்தான்—கிளியே
தீவினைகள் போச்சுதெடி. 5

அண்டபிண்ட மனைத்தும் ஒன்றாகக் கண்டேனெடி
கண்டவெனைக் காணேனெடி—கிளியே
காரணமும் போச்சுதெடி. 6

நல்லைநகர் வாசனெடி நாட்டிலவன் திருநாமம்
செல்லப்ப னென்றுசொல்வார்—கிளியே
தேரடியி லிருப்பானெடி. 7

சொல்லித் துதிக்குந்தொண்டர் சுயநல மற்றவர்கள்
அல்லும் பகலுங்காணார்—கிளியே
அவரடியே தஞ்சமெடி. 8

மலர் 17 : இதழ் 10—1953

## ஆனந்தக்களிப்பு

உவமா னம்கடந்த கடவுள்—கேண்மின்
உள்ளத்திருக்க ஊரெல்லாம் ஓடி. 1

அவமானப் படுவதில் கண்ட—லாபம்
அகிலத்தி லுண்டோ அறிமின் தெளிமின். 2

தவஞ்செய்து தன்னைத்தன் னாலே—கேளும்
தானாய் அறியும் சலாக்கியம் உண்டே. 3

அவனிவ னென்றதை நீக்கி—யாவும்
அவனா யிருப்பதைத் தேக்கி. 4

சிவனடி யாருடன் கூடி—உங்கள்
சித்தம் தெளிந்திட நாடி. 5

சிவசிவ என்றுதினம் பாடி—உங்கள்
சித்தம் தெளிந்திடத் தேடி. 6

கவனமாய்க் கருமத்தை ஆற்றி—கேளும்
காலையும் மாலையும் போற்றி. 7

நவநவ மாய்வரும் சேதி—நாம்காண
நல்லூர்க்குப் போவோம்போம் வியாதி. 8

மலர் 17 : இதழ் 11—1953

## நல்லமழை பெய்யாதோ

நல்லமழை பெய்யாதோ நாடு சிறவாதோ
எல்லவரும் இன்புற்று வாழாரோ—நல்லூரான்
ஆசானய் வந்தே யடியேனை யாண்டுகொண்டான்
பேசானு பூதியென் பேறு. 1

நற்சிந் தனையென்னும் நல்லமுதம் உண்டக்கால்
கற்கும் நெறியுண்டோ காசினியில்—விற்றூண்
ஒன்றுமே யில்லாத உன்மத்தன் யோகனுக் (கு)
என்றுமின்ப மென்றே யிசை. 2

பாட வறியான் பலகலையுந் தானறியான்
தேட வறியான் சிவயோகன்—நாடறியப்
பிச்சைச்சோ றுண்டு பிறவிப் பிணிதீர்ந்தான்
அச்சமிவற் கில்லை யறி. 3

இச்சையில் லோரே யிடும்பைக் கிடும்பையை
நிச்சய மாய்ப்படுப்பர் நீயறியாய்—அச்சமற்று
வாழ்சிவ யோகனைமுன் வந்துவலிந் தாண்டுகொண்டான்
கேள்கிளைகள் நீங்கக் கிளர்ந்து. 4

எழுவாய் பயனிலைகள் இல்லாமற் பாடித்
தொழுவான் சிவயோகன் சொல்லின்—அழுவான்
விழுவான் விதிர்விதிர்ப்பான் ஆரறிவார் என்று
தழுவுவான் தன்னையுன்னித் தான். 5

மலர் 17: இதழ் 12—1953

## பத்தரேயாவார் பணி

### குறள் வெண்பா

ஒருபொல்லாப் புமில்லை என்றே யுரைத்தான்
திருவாளன் செல்லப்பன் தேர். 1

முழுவதும் உண்மை எனமொழிந்தான் முன்னுள்
வழுவில்செல் லப்பன் மதி. 2

நாமறி யோமென்னும் நல்வாக்கு நல்கினான்
சேமநிதி செல்லப்பன் தேர். 3

ஆரறிவா ரென்ன வுரைத்தவென் னைசானும்
பாரறியாச் செல்லப்பன் பார். 4

அப்படியே யுள்ளதென் றோதிய நல்லாசான்
ஒப்பில்லாச் செல்வன் உணர். 5

ஒருமொழி யாலே யுணர்தற்கு வைத்தான்
கருவழியை மீறினேன் காண். 6

காணுகின்ற கண்ணி ற்கலந்துள்ள நல்லாசான்
பேணு மவர்க்குப் பிதா. 7

நற்சிந்தை யென்னும் நறுமலர்சேர் நன்மரமே
கற்பக தாருவெனக் காண். 8

உண்ணவே யுண்ணத் தெவிட்டாத நல்லுணவு
அண்ணல்செல் லப்பன் அறி. 9

விண்ணவர் தாமும் அறியாத வேதியன்
நன்னலநல் லூரான் நவில். 10

பத்துப்பாட் டாமிவற்றைக் கேட்போர் படிப்போர்கள்
பத்தரே யாவார் பணி. 11

*மலர் 18: இதழ் 1—1954*

---

## ஆரறிவார் என்றப்பன் சொல்வான்

" தீராத விளையாட்டுப்பிள்ளை—கண்ணன் " என்ற மெட்டு

ஆரறிவார் என்றப்பன் சொல்வான்—தன்னை
அணைந்துவந்த பேர்களையே ஆதரித்துக் கொள்வான். 1

பாரறியார் இவருடைய தன்மை—பலர்
பைத்திய காரன்என்று பரிகாசம் செய்வார். 2

தேரடியில் எந்நாளும் இருப்பான்—ஆசான்
தெருவாலே வருவாரைப் போவாரை வைவான். 3

ஆரடா நீயென்றே அதட்டி—ஆசான்
அன்பிலான் போலவே துன்புறுத்தி நிற்பான். 4

அப்படியே உள்ளதெனச் சொல்லி—ஆசான்
அந்தரங்க மாகவே பேசிக்கொண் டிருப்பான். 5

எப்படி இவன்தன்மை என்று—எவரும்
எண்ண முடியாமல் சும்மா இருப்பான். 6

பாவலர் நாவலர்கள் தாமும்—ஆசான்
பரிபாஷை அறியாமல் பதறியே போவார். 7

மூவர்களும் ஒன்றாகச் சேர்ந்த—நல்ல
மூர்த்தம் இதுவென்று முகமலர்ந்து நிற்பார். 8

மலர் 18 : இதழ் 2—1954

# நம்மிட மெல்லா நலனுமுண்டு

## கலிவிருத்தம்

நம்மிட மெல்லா நலனு முண்டு
நம்மிட மெல்லா உலகமு முண்டு
நம்மிட மெல்லாக் கலகமு முண்டு
நம்மிட மெம்மைக் காண்பது தொண்டு. 1

நம்மிடம் என்றும் கடவுள் உண்டு
நம்மிடம் நன்மை தீமை உண்டு
நம்மிடம் பிறப்பும் இறப்பும் உண்டு
நம்மிடம் நரக மோட்சமும் உண்டு. 2

தன்னைத் தன்னால் அறிவார் சான்றோர்
தன்னைத் தன்னால் பணிவார் சான்றோர்
தன்னைத் தன்னால் பிறிவார் சான்றோர்
தன்னைத் தன்னால் தேடுவர் சான்றோர். 3

கண்ணைக் கண்ணால் பார்ப்பார் சான்றோர்
பண்ணைப் பாடிப் பணிவார் சான்றோர்
விண்ணை நோக்கி விழிப்பார் சான்றோர்
மண்ணைக் கிண்டி வாழ்வார் சான்றோர். 4

மலர் 18 : இதழ் 3—1954

## கூவு குயில்

கூவுகுயி லேபறந்து கூவு குயிலே
கும்பிடுவார் மனத்தானைக் கூவு குயிலே. 1

நம்பிக்கை யாய்ப்பறந்து கூவு குயிலே
நாங்கள்சிவ மென்றுசொல்லிக் கூவுகுயிலே. 2

ஆதியந்தம் இல்லையென்று கூவு குயிலே
அளந்தறிய ஒண்ணாதென்று கூவு குயிலே. 3

நீதி நெறியைச் சென்று கூவுகுயிலே
நித்தியன்நாம் என்றுசொல்லிக் கூவுகுயிலே. 4

ஊரும் பேரும் இல்லையென்று கூவுகுயிலே
ஒருபொல்லாப்பு மில்லையென்று கூவு குயிலே. 5

ஆரும் அறியார் என்று கூவுகுயிலே
அகம் புறமும் இல்லைஎன்று கூவுகுயிலே. 6

ஐம்பூதம்நா மல்ல வென்று கூவுகுயிலே
ஐம்பொறிநா மல்ல வென்று கூவுகுயிலே. 7

ஆன்மாவே நாமென்று கூவு குயிலே
அங்குமிங் கும்பறந்து கூவுகுயிலே. 8

மாண்புடனே பறந்து கூவு குயிலே
மரணம்பிறப் பில்லை யென்று கூவுகுயிலே. 9

நாமேநா மென்று சொல்லிக் கூவுகுயிலே
நமக்குக்குறை வில்லை யென்று கூவுகுயிலே. 10

போமேபோம் வினையென்று கூவு குயிலே
புண்ணியம்போல் பாவ மென்று கூவுகுயிலே. 11

நல்லூரான் வீதியிற்போய்க் கூவு குயிலே
நல்ல தொண்டர் நாமென்று கூவுகுயிலே. 12

*மலர் 18 : இதழ் 5—1954*

## ஆண்டவன் திருவடி

இராகம்—தன்னியாசி. தாளம்—ஆதி

### பல்லவி

ஆண்டவன் திருவடி வேண்டிக்கொண் டால்என்றும்
ஆறுதல் உண்டாகும்.

### அநுபல்லவி

காண்பதெல் லாம்நிலை அன்றெனக் காட்டும்
காயத்தை வெல்லும்உ பாயத்தை ஊட்டும்.
(ஆண்டவன்)

### சரணம்

பஞ்சப் புலன்வழி போமனத் தினைவெல்லும்
பஞ்சாட் சரத்தை அனுதினம் சொல்லும்
கொஞ்சம்கொஞ்ச மாகச் சினத்தினைக் கொல்லும்
குற்றம் யாவையும் குணமாகக் கொள்ளும்.
(ஆண்டவன்)

பொன்னுசை மண்ணுசை பெண்ணுசை போக்கும்
போக்கு வரவற்ற பொன்னடி நோக்கும்
எந்நாளும் சும்மா இருப்பதைக் காக்கும்
ஏழைகள் பேரில் இரக்கத்தை ஆக்கும். (ஆண்டவன்)

வெட்ட வெளியிலே நின்றிடர் தீர்க்கும்
வேதாந்த சித்தாந்தம் ஒன்றென்று நோக்கும்
கட்டுப் படாத மனத்தினைக் கட்டும்
கங்குல் பகல்அற்ற காட்சிஉண் டாக்கும். (ஆண்டவன்)

சுவாமி யோகநாதன் சொல்லிய பாட்டு
சுந்தர மான வழிதனைக் காட்டும்
ஆவி யுள்ளளவும் அமுதத்தை யூட்டும்
அகம் பிரமாஸ்மி எனமுடி சூட்டும். (ஆண்டவன்)

மலர் 18: இதழ் 6—1954

## வீரம்

### கலிவிருத்தம்

சிவத்தைக் கண்டிடர் தீர்வது வீரமே
பவத்தை நீக்கிப் பணிவது வீரமே
தவத்தைச் செய்து சலிப்பறல் வீரமே
உவத்தல் காய்தல் ஒறுத்திடல் வீரமே. 1

பொறுமை யைப்புறங் காப்பது வீரமே
வறுமை வந்தால் மகிழ்வது வீரமே
சிறுமை நீக்கிச் சிறந்திடல் வீரமே
மறுமை இன்பத்தை நாடுதல் வீரமே. 2

ஐம்பொ றிஷய யடக்கிடல் வீரமே
வெம்ப கையை விடுவது வீரமே
நம்பன் பாதத்தை நண்ணுதல் வீரமே
தம்மைத் தம்மால் அறிவது வீரமே. 3

கண்ணைப் போலறங் காப்பது வீரமே
மண்ணைப் பெண்ணை மறப்பது வீரமே
விண்ணைப் போல விளங்குதல் வீரமே
எண்ணம் யாவும் இறப்பது வீரமே. 4

ஓதி யோதி யுணர்வது வீரமே
சாதி பேதந் தவிர்வது வீரமே
நீதி நூல்வழி நிற்பது வீரமே
ஆதி பாதம் அணைவது வீரமே. 5

*மலர் 18 : இதழ் 7—1954*

## பரமனை எங்கும் பார்

பார்பார் பரமனை எங்கும்
பதையாதேசுகம் இதயத்தில் தங்கும்
ஆர்தான் உனக்குநிகர் ஆவார்
ஐயப்படாதேதெய்வம் உன்னிடம் உண்டு. 1

ஒருபொல்லாப்பு மில்லையென்ற வாக்கு
உணர்ந்துணர்ந் தின்பத்தில் தேக்கு
கருமத்தில் கையைநீ வைத்துக்
கடமையைப் பயமின்றி ஆக்கு. 2

உண்மை முழுதுமென்று சாற்று
உனக்கொரு குறைவில்லை ஏற்று
கண்ணை இமைகாக்கு மதுபோல்
காப்பதுவேஉன் கடமை இனிமேல். 3

வீம்பிடும்பை ஆங்காரம் விட்டு
வேதாந்த நெறியினைக் கட்டு
ஓம்சிவாயநம என்று செபிப்பாய்
உள்ளத்திற் கள்ளத்தை அவிப்பாய். 4

நல்லூரான் திருவடியைப் பாடு
நாமேநாம் என்றுசொல்லி நாடு
கல்லும் கரையக்கவி சொல்லு
காமக் குரோதத்தை வெல்லு. 5

*மலர் 18: இதழ் 8—1954*

## நித்தியம் நாம்

நித்தியம் நாம்என்று சொன்னால் நினைக்கிறோமில்லை
நீநான் அவன்என்று சண்டைபோட்டுக் கொள்ளுகிறோம்
பத்திசெய்துவாழ வழிதேடுகிறோமில்லை
பத்தரி னத்தோடு நாம் கூடுகிறோமில்லை. 1

எத்திசைக்கும் ஈசன்என்று எண்ணுகிறோமில்லை
இரப்பவர்க்கு ஈயாமல் தேடுகிறோம் ஐயே
முத்திக்கு வழிதேட முயல்கிறோமில்லை
மூவாசையாலே மனம் கோணுகிறோம் ஐயே. 2

வித்தாரமாகக் கதைபேசிக் கொள்ளுவோம்
வீணருடன் கூடிவிளை யாடுகிறோம்
சத்திசிவம் ஒன்றான தன்மையைக் காணோம்
சாதனையால் வேதனையைத் தீர்க்கிறோமில்லை. 3

குழந்தை அன்போடுநாம் கும்பிடமாட்டோம்
கூக்குரல் போட்டுநாம் கும்பிட்டுக் கொள்ளுவோம்
தளர்ந்துபோன அடியவரைத் தாங்குகிறோமில்லை
சற்குரு பாதத்தை வணங்குகிறோமில்லை. 4

மதிக்குமதி கொடுப்பவனை மதிக்கிறோமில்லை
மண்ணாசை பெண்ணாசையால் மாய்கிறோமையே
விதியினை வெல்லவழி காண்கிறோமில்லை
விதிவிதி யென்றுசொல்லி விளங்குகிறோமையே. 5

கண்ணுக்குக் கண்ணைநாம் காண்கிறோமில்லை
காதுக்குக் காதுதன்னைக் கருதுகிறோமில்லை
உன்னைப்போல் உலகத்தில் விளங்குகிறோம் இல்லை
வேதாந்த சித்தாந்தம் படிக்கிறோமில்லை. 6

அலங்காரமாக ஆடை அணிந்து கொள்ளுவோம்
அங்கும் இங்கும் நாம்திரிந்து அலைகிறோம்
கலங்காத நன்னெறியிற் செல்கிறோமில்லை
கந்தா முருகா என்று கத்திக்கொள்ளுவோம். 7

*மலர் 18 : இதழ் 9—1954*

## ஒன்றெனக் கும்பிடுவாய்

இராகம்—கமாஸ். தாளம்—ஆதி

### பல்லவி

ஒன்றெனக் கும்பிடுவாய் மனமே இந்த
உலகுயிர் பரமெனு ஒளிரும் மெய்ப்பொருளை
—ஒன்றெனக் கும்பிடுவாய்.

### அநுபல்லவி

உண்டில்லை என்றெவரும் ஓதமுடி யாததாய்
பண்டும் இன்றும் என்றும் அப்படி உள்ளதாய்
—ஒன்றெனக் கும்பிடுவாய்.

### சரணம்

நன்றுக்கும் தீதுக்கும் நடுவாய் உள்ளதாய்
ஞான யோக தியானத்தில் வருவதாய்
கன்றிய காமனைக் கண்ணுல் எரித்ததாய்
கால காலனைக் காலால் உதைத்ததாய்
—ஒன்றெனக் கும்பிடுவாய்.

*மலர் 18 : இதழ் 10—1954*

## பிராணுயாமம்

இராகம்—மாண்டு. ஏகதாளம்

இடைபிங் கலையென்னும்
இருவாசல் அடைத்துவிட்டுக்
கடையிற் சுழுமுனையைக் கபாலந்திறந்து கொண்டு—தங்கமே
காசிதேசம் போவோம் வாராய். 1

நாசி நுனியிலே
நாட்டத்தை வைத்துவிட்டு
வாசிக் குதிரையேறித்—தங்கமே
மாறிமாறிச் சிமிட்டாக் கொடு. 2

ஆசுகவி மதுர்கவி
அழகான சித்ரகவி
பேசுந்திறம் உண்டாகும்—தங்கமே
பிராணு யாமம் செய்திடடி. 3

எட்டுத்தரம் உஸ்வாசித்து
எண்ணெட்டுத் தரம் நிறுத்தி
எண்ணிரண்டு நிஸ்வாசம் செய்—தங்கமே
இஃதோர்வகைப் பிராணுயாமம். 4

பாலும் பழமும் தின்று
பகல்நித் திரையைத் தள்ளு
பாலனைப்போல் தேசுண்டாகும்—தங்கமே
பரமனை நீ பத்தி செய்வாய். 5

இரவு பகலில்லாத
ஏகாந்த வீட்டினிலே
பரவிப் பணிந்திடெடி—தங்கமே
பாரும் விண்ணும் உன்கைவசம். 6

பன்னிரண்டு காற்புரவி
பக்குவமாய் நீயேறி
உன்னிரண்டு காற்கீழே—தங்கமே
உறுதியாய் அடக்கிவிடு. 7

ஆறு படிதாண்டு
அப்பாலே வெள்ளிப்படி
அதுவும்நீ தாண்டிவிட்டால்—தங்கமே
ஆருனக்கு நிகராவார். 8

ஐவருமுன் ஏவல்செய்வார்
தெய்வமுன்னை விரும்பிவிடும்
கைவல்ய முத்தியெடி—தங்கமே
கண்ணைத் திறந்து விடு. 9

கூறும்நாவே முதலாகக்
கூறுங் கரணமெல்லாம்
கோமானுக் கொப்புக்கொடு—தங்கமே
குறைவொன்றும் வாராதடி. 10

சீமானைப் போலிருந்து
செகத்தினிலே வாழ்ந்திடலாம்
ஓம்ஆம்நா மென்றுசொல்லி—தங்கமே
உருவேற்றி நின்றிடெடி. 11

உருவேற வேசெபித்து
ஓங்காரக் கம்பத்திலே
திருவேற நின்றிடெடி—தங்கமே
சீவன் சிவன் ஆச்சுதடி. 12

ஆச்சுதென்று நீசொல்லி
அசட்டை செய்யாதேயெடி
போச்சுதெடி யோகசித்தி—தங்கமே
பூசை செய்ய மறவாதே. 13

மறந்தாலும் பிறந்தாலும்
மாண்டாலும் இருந்தாலும்
மறவாத தெய்வமெடி—தங்கமே
மற்றென்றுமஞ் சாதேயெடி. 14

நாமுமே நாமாகத்
நமக்குள்ளும் நாமாகத்
தாமுமே தாமாகத்—தங்கமே
தனித்திருந்து பார்த்திடெடி. 15

தேவர்கடம் இருப்பிடமும்
திக்குத் திகாந்தமெலாம்
இச்சபையில் உள்ளதெடி—தங்கமே
இருந்திதைப் பாறிடெடி. 16

ஒன்று யிரண்டாகி
ஒருமூன்றாய் நான்கைந்தாய்
நின்ற பராபரத்தைத்—தங்கமே
நீயென்று உணர்ந்திடெடி. 17

கண்டுசர்க் கரைதேனும்
கனிரசமும் சேர்த்தொன்றாய்
நின்றசுவை தெவிட்டுமெடி—தங்கமே
நிறைந்தசிவந் தெவிட்டாதெடி. 18

மண்டலங்கள் மூன்றினிலும்
மருவிநின்ற மெய்ப்பொருளைக்
கண்டவர்கள் சொல்லாரெடி—தங்கமே
காட்சி யெல்லாம் கடந்ததெடி. 19

ஆறத்து வாக்களுக்கும்
அப்பாலாய் இப்பாலாய்
மாறாமல் இருக்குதெடி—தங்கமே
மதிரவியை ஒன்றாக்கெடி. 20

முழுதுமுண்மை ஆச்சுதெடி
மூச்சுப் பேச்சு போச்சுதெடி
பழுதின்றி வாய்ச்சுதெடி—தங்கமே
பாராமற் பார்த்திடெடி. 21

ஐம்பூதம் நீயல்லை
ஐம்பொறியும் நீயல்லை
ஐம்புலனும் நீயல்லை—தங்கமே
ஆன்மா நீ அறிந்திடெடி. 22

என்னையுடை யானவன்
தன்னையுடை யானடியேன்
பின்னைப் பிறப்பிறப்பும்—தங்கமே
பேய்த்தேர்களு அன்றோடி. 23

முன்னை வினைவந்து
மூண்டுதே என்பார்கள்
தன்னை அறியாதார்—தங்கமே
சஞ்சலத்தை நீக்கிவிடு. 24

சஞ்சலத்தை நீக்கிவிடு
தாமரைத்தாட் கபயம்புகு
நெஞ்சில்வஞ்சம் வையாதே—தங்கமே
நித்தியமுன் வீடாமறி. 25

பொன்னின் குடத்துக்கெவர்
பொட்டிட்டுப் பார்த்திடுவர்
உன்னை மறவாதே—தங்கமே
ஊரூராய்த் திரியாதே. 26

ஊருமிலான் பேருமிலான்
உடன்பிறந்தார் சுற்றமிலான்
ஆருமி லான்அவனைத்—தங்கமே
ஆர்தான் அறிவாரெடி. 27

விண்ணும் மண்ணும் தண்ணீரும்
விளங்கொளியும் மாருதமும்
கண்ணுதலின் வடிவமெடி—தங்கமே
கூரண்பாரார் காட்டாவிட்டால். 28

மலர் 18 : இதழ் 11, 12—1954
,, 19 : ,, 2, 3, 4, 8, 12—1955

---

## வாழ்க சிவனடி

வாழ்க சிவனடி வாழ்க சிவனடி
வாழ்க சிவதொண்டன்.. 1

பல்வினை பேர்க்கி நல்லருள் ஆக்கிப்
பல்குக சிவதொண்டன். 2

பாழ்செயும் மாயா காரியம் அகலப்
பணிசெய் சிவதொண்டன். 3

பக்தர்கள் எல்லாம் பாட ஆடப்
பரவும் சிவதொண்டன். 4

ஊழ்வினை போக உள்ளொளி ஓங்க
உயர்க சிவதொண்டன். 5

உண்மை முழுதும் என்றுரை செய்யும்
ஒருவன் கழல் வாழ்க. 6

மலர் 19 : இதழ் 1—1955

---

## உறுதி மொழியிதனை அறிவீரே

சிவதொண்டன் நிலையத்திற் சேரீர்
தியானஞ் செய்துகடைத் தேறீர்
மவுனமா யிருந்திதனைப் பாரீர்
மந்திர மதுவெனக் கூறீர். 1

அவனிவ னுறென அறியீரோ
ஆன்மா நித்தியம் தெரியீரோ
உவமை கடந்தவின்பம் உள்ளீரோ
உண்மை முழுதுமெனக் கொள்ளீரோ. 2

ஐம்பொறி வழியினிற் செல்வீரே
ஐம்புலன் தன்னை வெல்வீரே
வெம்பகை தன்னை விடுவீரே
வேதாந்த சித்தாந்தந் தொடுவீரே. 3

ஒருபொல்லாப்பு மில்லை யுணர்வீரே
ஓம்சி வாயநம தொழுவீரே
உருகியுருகி இன்பம் பெறுவீரே
உறுதி மொழியிதனை அறிவீரே. 4

மலர் 19 : இதழ் 5—1955

---

## குரு மருந்து

அருமருந்தொரு குருமருந்து
அடியார் கண்டு களிக்கும் மருந்து. (அரு)

இருவினையைப் போக்கும் மருந்து
இன்ப நிலையில் நிறுத்தும் மருந்து. (அரு)

ஒருபொல் லாப்புமில்லை என்ற மருந்து
இம்மைமறுமைக்கும் ஏற்ற மருந்து. (அரு)

திருவார் நல்லூரில் வாழும் மருந்து
தேவாதி தேவரும் காணு மருந்து. (அரு)

மலர் 19 : இதழ் 6—1955

---

## ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமிலான்

### நேரிசை வெண்பா

ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமிலான் நல்லூரிற்
குருவாக வந்து குறைதீர்த்தான்—வருவாரை
வையாமல் வைது வரந்தருவான் நாமெல்லாம்
உய்யாமல் உய்வோம் உவந்து. 1

சிவமேநா மாமென்று சிந்திக்கச் சீரார்
சிவமேநா மென்று தெளிவோம்—அவமே
மனமே யுடன்போகும் மற்றுமோர் தெய்வம்
கனவிலும் எண்ணாது காண். 2

### செல்வன்

ஒரு
பொல்லாப்பு மில்லையென்று சொல்வான்—செல்வன்
உல்லாச மாகவே நல்லூரிற் செல்வான். 1

குருசீடம் முறையொன்றுங் கொள்ளான்—செல்வன்
குணாதீத னொருவரையும் கும்பிட்டு நில்லான். 2

அருவென்றும் உருவென்றும் சொல்லான்—செல்வன்
ஆரறி வாரென் றதட்டியே வெல்வான். 3

வருவாரைப் போவாரைத் தெருவில்—செல்வன்
வைவான் சிரிப்பான் மகிழ்ச்சி தருவான். 4

மருமத்தில் மருமமா யிருப்பான்—செல்வன்
மாதவ ரும்மறி யாதம கத்தான். 5

மலர் 19 : இதழ் 7—1955

## ஓடிவாடா தொண்டா

ஓடிவாடா தொண்டா ஓடிவாடா
ஒருபொல்லாப்பு மில்லையென்று ஓடிவாடா. 1

தேடிவாடா தொண்டா தேடிவாடா
சிவனடியார் மனங்களிக்கத் தேடிவாடா. 2

பாடிவாடா தொண்டா பாடிவாடா
பரமபதி ஒன்றென்று பாடிவாடா. 3

நாடிவாடா தொண்டா நாடிவாடா
நாங்கள்சிவ மென்றுசொல்லி நாடிவாடா. 4

கூடிவாடா தொண்டா கூடிவாடா
குழந்தைதக ளோடுசேர்ந்து கூடிவாடா. 5

சூடிவாடா தொண்டா சூடிவாடா
தூயநீறு சூடிக்கொண்டு ஓடிவாடா. 6

ஆடிவாடா தொண்டா ஆடிவாடா
அஞ்செழுத்தை நாவிற்கொண்டு ஆடிவாடா. 7

மலர் 19 : இதழ் 9—1955

---

## மருந்து கண்டேனே

மருந்து கண்டேனே நல்லூரில் நான்—மருந்து
கண்டேனே.

மருந்துகண்டேன் மாறாப் பிறவியை நீக்கும்
மாறாத நோயைத் தீர்த்துடல் காக்கும்—மருந்து
கண்டேனே. 1

அருந்த வர்தம் மோடுற வாக்கும்
ஆமில்லை யென்று சொல்லாமற் காக்கும்—மருந்து
கண்டேனே. 2

திருந்து மடியவ ரோடுற வாக்கும்
சீவன் சிவனென ஆனந்தம் தேக்கும்—மருந்து
கண்டேனே. 3

குருந்த மரத்தடியில் குருவாக வந்து
கும்பிட்ட மாணிக்கற்குத் தீட்சைவைத் தாண்ட—மருந்து
கண்டேனே. 4

அப்பர்க்குச் சமணர்செய் ஆபத்துத் தீர்த்து
அப்பூதி யடிகள்தம் பிள்ளைக்குயிர் கொடுத்த—மருந்து
கண்டேனே. 5

மார்க்கண்டற் காக மறலியை உதைத்து
மாயா மருந்தை அவன்தனக் கீந்த—மருந்து கண்
டேனே. 6

**வேறு**

பார்க்குமிட மெங்கும்சிவ தொண்டராய்ப் பார்க்கவொரு
வார்த்தை சொல்லவந்த மகத்தே சிவதொண்டா. 7

ஆர்க்குங் கடல்சூழ்ந்த அகிலமெலாம் தொண்டரெனக்
காக்கும் கருணைக் கடலே சிவதொண்டா. 8

மூர்க்க குணமில்லை முழுதும்சிவ தொண்டரெனப்
பார்க்கும் அறிவுதந்த அன்பே சிவதொண்டா. 9

*மலர் 19: இதழ் 10—1955*

## கும்பிடவா என் மனமே

ஒருபொல்லாப்பு மில்லையென்றென் உள்ளங்குளிர
வைத்த
குருநாதன் திருவடியைக் கும்பிடவா என்மனமே. 1

உண்மை முழுதுமென உறுதி எனக்களித்த
அண்ணலை நான்வணங்க அதிவிரைவாய் வாமனமே. 2

நாமறியோ மென்று நல்லூரிற் சொன்னவனைச்
சேம முடன்காணச் சீக்கிரம்வா என்மனமே. 3

அப்படியே உள்ளதென அடிக்கடியே சொல்லும்செல்
லப்பனை யான்காண அதிவிரைவாய் வாமனமே. 4

ஆரறிவா ரென்றென் அகங்களிக்கத் தேரடியிற்
பாரறியச் சொன்னவனைப் பாடவா என்மனமே. 5

தவராச சிங்கத்தைச் சற்குருவை நல்லூரில்
எவருமறி யாதவனை ஏத்தவா என்மனமே. 6

கந்தைத் துணியணிந்து காமங் குரோதமற்ற
எந்தை தனைக்காண இசைந்துவா என்மனமே. 7

மந்திர தந்திரமும் மானுபி மானமில்லாச்
சுந்தரனைக் காணத் தொடர்ந்துவா என்மனமே. 8

பிச்சைக்கே இச்சித்துப் பித்தனைப் போல்திரிந்த
அச்சமில்லா ஆசானை அன்புசெய்ய வாமனமே. 9

ஆறுறு தத்துவத்துக் கப்பாலே உள்ளவனை
மாறுக் கருணையனை மருவவா என்மனமே. 10

*மலர் 19 : இதழ் 11—1955*

## ஆசான் அருளால்

### கலிவிருத்தம்

ஆசான் அருளால் அகந்தை அழிந்தது
ஆசான் அருளால் அகம் குளிர்ந்தது
ஆசான் அருளால் அன்பு வளர்ந்தது
ஆசான் அருளால் ஆசானைக் கண்டிலன். 1

அளந்தேன் அருளால் பூதங்கள் ஐந்தும்
அளந்தேன் அருளால் ஐம்பொறி ஐந்தும்
அளந்தேன் அருளால் ஐம்புலன் ஐந்தும்
அளந்தேன் அருளால் ஆன்மாவை அறிந்தேன். 2

சிவதொண்டு செய்தல் செகத்தில் சரியை
சிவதொண்டு செய்தல் செகத்தில் கிரியை
சிவதொண்டு செய்தல் செகத்தில் யோகம்
சிவதொண்டு செய்தல் சிவஞானம் ஆமே. 3

ஆவதும் இல்லை அழிவதும் இல்லை
போவதும் இல்லை புகுவதும் இல்லை
தேவரும் இல்லை திசைகளும் இல்லை
யாவரும் இல்லை யார்தான் அறிவார். 4

அயல்அறி யாத ஆனந்தம் பெற்றேன்
மயல்அறி யாத மௌனத்தில் உற்றேன்
செயல்அறி யாத சிவத்தினைக் கற்றேன்
இயமநி யமாதி யாவையு மற்றேன். 5

ஆணில் பெண்ணும் பெண்ணில் ஆணும்
தூணில் துரும்பும் துரும்பில் தூணும்
காணும் கண்ணும் காணாத கண்ணும்
பேணும் அடியார் பிறப்பற் றாரே. 6

பூவும் மணமும் போலப் பொலியும்
நாவும் சுவையும் போலத் தெளியும்
தேவுக் கடியார் செய்யுந் தொழிலும்
நாவுக் கெளிதோ நாமறி வோமோ. 7

ஒன்றும் இரண்டும் மூன்றும் ஐந்தும்
நன்றும் தீதும் நாளும் கோளும்
ஒன்றில் ஒன்றி இருக்கும் உபாயம்
கண்டு கொண்டவர் கலங்காச் சித்தரே. 8

திங்களுங் கங்கையுஞ் சீறும் பாம்பும்
மங்கையும் மானும் மழுவுஞ் சூலமும்
அங்கியும் உடுக்கையும் அரக்கனும் பொலியும்
சிங்காரங் கண்டார் சிவன் முத்தரே. 9

அகரத்தில் உகரமும் மகரமும் சேர்த்து
சிகரமும் வகரமும் யகரமும் செபித்தாற்
பகரவொண் ணாத பாதம் அணிந்து
தகரா காயத்தில் தனித்து வாழலாம். 10

அகலிடத் தாசான் அருளால் அடியேன்
புகலும் பத்தும் போற்றி ஏத்துவார்
இயல்சேர் இருவினை இடுக்கண் நீக்கிப்
பகல்இர வில்லாப் பதவி யடைவரே. 11

மலர் 20 : இதழ் 1—1956

## காயமொரு சித்திரக் கோயில்

காயமொரு சித்திரக் கோயில்—அது
கண்ணுதல்பெண் உமைவாழ் கோயில்
மாய மெனமதி யாதே—அடடா
மகத்துவஞ்சொல்ல மதிபோ தாதே
தூய குருஅரு ளாலே—நானும்
சொல்லுவேன் கேள்மருள் போமே
மாயன் அயன்மக பதியும்—அடடா
மற்றுமுள்ள தேவர்களும் அரக்கர்களும்
தேயுவுடன் வாய் வப்பு—மண்விண்
சேர்ந்திருக்கும் சித்திரக் கோயில்
ஆதித்தனும் சந்திரனும் இங்கே—இன்னும்
அளவற்ற அண்டங்களும் இங்கே
வேதியரும் சூத்திரரும் இங்கே—விளங்கும்
வேதமும் சூத்திரமும் இங்கே. (காயமொரு)

மலர் 20 : இதழ் 2—1956

---

## நல்லூராசான்

### கலிவிருத்தம்

உலகமும் உயிரும் உம்பர் பிரானும்
கலகஞ் செய்யும் நடனங் கண்டால்
உலகில் பிறந்திறந் துழலா ஒன்று
நலஞ்சேர் நல்லூராசான் நவின்றான். 1

மலர்மிசை யோனும் மாலுங் காணு
அலகிலா ஆட லுடைய அப்பன்
மலர்தலை உலகத்து மானுடன் போல
நலமிகு நல்லூரில் நாடிஆட் கொண்டான். 2

குலநலம் பாராக் கொள்கை யுடையான்
சலன மில்லாத் தத்துவா தீதன்
பலரும் பைத்திய காரனென் றேச
நலமிகு நல்லையில் நாடக மளித்தான். 3

கற்றவர் விழுங்குங் கருணை யாளன்
மற்றவ ரறியா மாணிக்க மாமலை
சிற்றறி வுடையார் தேருச் செல்வன்
நற்றவர் வணங்கும் நல்லூ ரானே. 4

விருப்பு வெறுப்பை வேரறப் பறித்தோன்
திருவடி மறவாச் சீருடை யாளன்
ஒருபொல் லாப்பு மில்லையென் றுரைத்தோன்
குருவடி வாகக் கோலங்கொண் டானே. 5

உண்மை முழுதுமென் றோயா துரைப்பவன்
நன்மை தீமையைக் கடந்த நாதன்
என்னையுந் தன்னையு மொன்றாய்க் காண்பவன்
சென்னியில் சேவடி சூட்டினன் அன்பால் 6

ஆரறி வாரென அடிக்கடி ஓதும்
பேரறி வாளன் பேர்செல் லப்பன்
பாரறி யாத பயித்திய காரன்
தேரடிப் படியில் தினமு மிருப்பான். 7

கார்நிற வண்ணன் கைதலை யணையாய்ப்
பார்மிசை உறங்கும் பண்பை யுடையான்
நீர்வளம் நிலவளங் குறையா நல்லூர்
சீர்பெற வாழ்ந்த தேசிக மூர்த்தி. 8

நாமறி யோமெனும் நல்ல மந்திரம்
சேமமுண் டாகச் செப்புந் திறத்தோன்
காமங் குரோத மோகங் கழிந்தவன்
நாமமோ செல்லப்பன் நல்லூ ரானே. 9

எப்பவோ முடிந்ததென் றெடுத்தெடுத் துரைக்கும்
ஒப்பிலா மாமணி உன்மத்த னெவரும்
இப்படி யென்று இயம்பவொண் ணாதவன்
எப்போதும் முருகன்சந் நிதியில் வாழ்பவன். 10

பாவலர் நாவலர் பணியும்நல் லூரில்
சாவதும் பிறப்பதுந் தவிர்த்தெனை யாண்ட
காவலன் நல்லூர்க் கந்தன் பதியில்
சேவகஞ் செய்யுஞ் செல்லப்ப மூர்த்திகாண். 11

மலர் 20 : இதழ் 5—1956

---

## ஊதூது சங்கே

ஊதூது சங்கே ஊதூது
ஒருபொல்லாப்பு மில்லையென் றூதூது
காது செவிடுபட ஊதூது
கங்குல்பகல் காணுமல் ஊதூது. 1

நல்லூரான் திருமுன்பு நின்றூது
நாமேநா மென்றுசொல்லி ஊதூது
எல்லாஞ்சிவன் செயலென் றூதூது
ஏகமன தாய்நின் றூதூது. 2

அல்லும்ப கலும்அற ஊதூது
ஆணவத்தை நீக்கிநின் றூதூது
வெல்லும்பகை யொழிய ஊதூது
வேறுபொருள் இல்லையென் றூதூது. 3

ஐம்பூதம் நாமலவென் றூதூது
ஐம்பொறிநா மல்லவென் றூதூது
ஐம்புலன்நா மல்லவென் றூதூது
அந்தக்கரணம் நாமலவென் றூதூது. 4

ஆன்மாவே நாமென் றூதூது
ஆசானைப் பணிந்துநின் றூதூது
ஆரறிவா ரென்றுசொல்லி ஊதூது
அன்பே சிவமென் றூதூது. 5

மலர் 20 : இதழ் 7—1956

---

# உருக்கு மொரு மொழியால்

உருக்கு மொருமொழியால் உளங்கொள்ளை கொண்டு
கருக்குழியிற் சேராமற் காத்தான்—திருக்குழாம்
காலையும் மாலையும் கைதொழுது போற்றுநல்
வேலோன் பதியில் விரைந்து. 1

விரைமலரைத் தூவியே மெய்விதிர்த்துத் தொண்டர்
நிரையாய் நினைப்பறவே நின்று—கரையில்லா
ஆனந்தங் கொண்டே அவனேநான் என்றுநிதம்
ஞானத்தாற் சொன்னார் நயந்து. 2

நயப்பார் மிகவியப்பார் நாமறியோம் என்றே
பயப்பா டுடன்பாதம் வீழ்ந்து—சுயபுத்தி
அற்றவராய்ச் சோர்வுமிக அப்பனே யென்றழுவார்
மற்றொன் றறியார் மனத்து. 3

மனத்துயரம் மாற்ற மருந்துண்டோ விங்கு
முனைத்துவருஞ் சூரர் முடியத்—தனித்தவேல்
உண்டே துணையென்றோர்ந் தும்பர்சிறை மீட்டவனைக்
கண்டே களிக்கக் கருது. 4

கருத்தி லிருக்கும் கதிர்காமத் தோனை
வருத்தமுற் றேன்தேடு கின்றாய்—திருத்தியுன்
சித்தமிசை நித்தம் திகழொளியைக் கண்டுருகி
முத்தனென வாழ முயல். 5

மலர் 20 : இதழ் 8—1956

## ஆனந்த நடனம்

### பல்லவி

ஆனந்த நடனம் ஆடினன்
அல்லும் பகலும் நல்லூர் வீதியிற் செல்லப்பன்.
(ஆனந்த)

### அநுபல்லவி

மோனந் திகழுஞ்சிவ யோகியர்தா மறியசர்
முழுவது முண்மையென முகமலர்ந் தோதுவான்.
(ஆனந்த)

### சரணம்

ஈனந் தரும்பிறவி யெடுத்தெடுத் துழலாமல்
என்னைவந் தாண்டுகொண்டான் இன்பத்தில் மாண்டு
கொண்டேன்
தானந் தவமிரண்டுஞ் சரியை கிரியைவிண்டும்
சதுர்வித வுபாயத்தாலே தானாக என்னைச் செய்தான்.
(ஆனந்த) 1

முன்னிலை யில்லையென்றும் முழுவது முண்மையென்றும்
மூடிய மாயவிருள் ஓட வருள்புரிந்தான்
அந்நிலையி லேயுட லாவியவன் வசமாச்சு
ஆகா அதையறிவார் ஆர்தானிவ் வையகத்தில்.
(ஆனந்த) 2

மலர் 20 : இதழ் 9—1956

## திருவுந்தியார்.

அருவாகி நின்றவன் ஆசானாய் நல்லூரில்
திருவருள் செய்தானென் றுந்தீபற
சிவன் சிவனென் றுந்தீபற. 1

ஆசைநி களத்தினை வேரொ டறுத்தவன்
பேசப் பெரியானென் றுந்தீபற
பிறப்பிறப் பில்லையென் றுந்தீபற. 2

இல்லைஉண் டென்று இயம்பவொண் ணாதவன்
நல்லூரில் வந்தானென் றுந்தீபற
நானே அவனென் றுந்தீபற. 3

ஈர்த்தென்னை ஆண்டவன் எழிலாரும் நல்லூரிற்
காத்தெமை ஆண்டானென் றுந்தீபற
கருணைக் கடலென் றுந்தீபற. 4

உளவறிந் தெல்லாம் உன்செயலென் பார்க்கு
அளவில்லா ஆனந்தம் தந்தானென் றுந்தீபற
ஆசை ஒழிந்ததென் றுந்தீபற. 5

ஊரும் பேரும் இல்லான் உவந்தெனைத்
தானாய்வந் தாண்டானென் றுந்தீபற
சஞ்சலம் தீர்ந்ததென் றுந்தீபற. 6

எல்லா உலகமு மான பரம்பொருள்
நல்லூரில் வந்தானென் றுந்தீபற
நாமறி யோமென்றான் உந்தீபற. 7

ஏட்டி லெழுதிக் காட்டவொண் ணாதவன்
நாட்டிற் குருவானான் உந்தீபற
நமக்குக்குறை வில்லையென் றுந்தீபற. 8

ஐம்புல னைந்தையும் ஆட்கொள்ள வல்லவன்
அன்பன்நல் லூரானென் றுந்தீபற
ஐயமொன் றில்லையென் றுந்தீபற. 9

ஒப்புயர் வற்றவன் எப்போது மினியவன்
அப்பன் நல் லூரானென் றுந்தீபற
ஆட்சேபம் இல்லையென் றுந்தீபற. 10

ஓங்காரத்தின் உட்பொரு ளானவன்
ஆங்காரம் தீர்த்தானென் றுந்தீபற
அழிந்தது மாயையென் றுந்தீபற. 11

ஔவிய நெஞ்சத்தால் அறியவொண் ணாதவன்
செவ்வியஅருள் தந்தானென் றுந்தீபற
செல்லப்ப தேசிகனென் றுந்தீபற. 12

*மலர் 20 : இதழ் 11—1956*

---

## வேண்டிப் பணிந்திடடி

அவனன்றி ஓரணுவும் அசையாது எனும்பெரிய
சிவனடியார் தம்மைக் கண்டு—சின்னத்தங்கம்
சிவனென்று வணங்கிடடி. 1

அங்கிங் கெனாதபடி ஆனந்தமாய்க் கூத்தாடும்
சங்கரனை நீ வணங்கி—சின்னத்தங்கம்
சந்தேகம் தீர்த்திடடி. 2

அத்து விதப்பொருளை அறிவுக்கறி வானதொன்றைச்
சித்தத்தி லேநீ வைத்து—சின்னத்தங்கம்
சிந்தை தெளிந்திடடி. 3

அருவாய் உருவாகி அம்பலத்தே கூத்தாடும்
குருபரனை நீ வாழ்த்தி—சின்னத்தங்கம்
கும்பிட்டுக்கொண் டாடிடுவாய். 4

அகம்பிர மாஸ்மிஎன்னும் அரியதிரு மந்திரத்தை
அகத்திலே நீ செபித்து—சின்னத்தங்கம்
ஆறுதலாய் இருந்திடடி. 5

அந்தியும் சந்தியும்நீ ஆசானைச் சிந்தித்து
வந்தனைசெய் திருந்திடுவாய்—சின்னத்தங்கம்
மதியிரவி யுள்ளமட்டும். 6

ஆவதும் இல்லையடி அழிவதும் இல்லையடி
தேவரும் இல்லையடி—சின்னத்தங்கம்
சிவனே முழுதும்உண்மை. 7

ஆசையை விட்டிடடி அதுவேசிவ பூசையடி
காசைக் கருத்தில்வைத்து—சின்னத்தங்கம்
கவலைநீ கொள்ளாதே. 8

ஆன்மாவுக் கயலில்லை அப்படியே உள்ளதடி
வீண்வாதம் விட்டிடடி—சின்னத்தங்கம்
வேண்டிப் பணிந்திடடி. 9

மலர் 20 : இதழ் 12—1956

---

## சிவ சிவ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிவ | சிவ | செல்வக் | கணபதி | ஓம் | ஓம் |
| சிவ | சிவ | செல்வவே | லாயுதன் | ஓம் | ஓம் |
| சிவ | சிவ | செல்வச் | சிவதொண்டன் | ஓம் | ஓம் |
| சிவ | சிவ | செல்வச் | சிவனடியார் | ஓம் | ஓம் |
| சிவ | சிவ | எம்முள் | திருவருள் | ஓம் | ஓம் |
| சிவ | சிவ | செல்வத் | திருமால் | ஓம் | ஓம் |
| சிவ | சிவ | அயன்முதல் | தேவர்கள் | ஓம் | ஓம் |
| சிவ | சிவ | ஐம்பெரும் | பூதங்கள் | ஓம் | ஓம் |
| சிவ | சிவ | சிவ சிவ | ஐம்பொறி | ஓம் | ஓம் |
| சிவ | சிவ | சிவ சிவ | ஐம்புலன் | ஓம் | ஓம் |
| சிவ | சிவ | சிவ தச | நாடிகள் | ஓம் | ஓம் |
| சிவ | சிவ | சற்குரு | நாதன் | ஓம் | ஓம் |

மலர் 21 : இதழ் 1—1957

---

## நல்ல மருந்து

இராகம்—மோகனம். தாளம்—ரூபகம்

('அருமருந்தொரு' என்ற மெட்டு)

நல்ல மருந்தொரு குருமருந்தை நான்
நல்லூரிற் கண்டேனே. (நல்ல)

எல்லையில் லாப்பிணி தீர்க்கு மருந்து
இம்மை மறுமைக்கு மேற்ற மருந்து
இல்லை யெனுது கொடுக்கும் மருந்து
ஏழை யடியார்க் கிரங்கு மருந்து. (நல்ல)

வல்லவன் செல்லப்பன் தந்த மருந்து
வாழ்த்தும் கணபதிக்கு வந்த மருந்து
புல்லர்கள் கண்டும் புசியா மருந்து
புண்ணியன் யோகன் புசிக்கு மருந்து. (நல்ல)

மலர் 21 : இதழ் 2—1957

---

## தாலாட்டு

அன்னைபிதாக் குருவாகி அடியேனை ஆட்கொண்ட
தன்னிகரில் லாதசற் குருவேநீ கண்வளராய். 1

என்னையினிப் பிறவாமல் ஈடேற்றி வைத்தவனே
உண்மை முழுதுமென்ற உத்தமனே கண்வளராய். 2

நாமறியோ மென்று நல்லூரிற் சொன்னவனே
சேமமுட னென்னகத்தில் சீமானே கண்வளராய். 3

அப்படியே உள்ளதென அடிக்கடியே சொல்லியென்னை
இப்படியில் வாழவைத்த எந்தையே கண்வளராய். 4

காணும் கண்ணிற் கலந்தவனே கார்வண்ணு
நானும்நீயு மென்றுரைக்க நாணுவேன் கண்வளராய். 5

சீராரும் நல்லூரில் தேரடியி லேயிருந்து
ஆரறிவா ரென்றுசொன்ன அப்பனே கண்வளராய். 6

எப்பவோ முடிந்ததென எனக்குபதேசம்செய்த
ஒப்பிலா மாமணியே உறவோனே கண்வளராய். 7

ஒருபிடி சோற்றுக்காய் ஊர்ஊராய் நானலையத்
திருவருள் தந்தவனே செல்லப்பனே கண்வளராய். 8

எட்டாத கொப்பில் இருக்குமுனை யாரறிவார்
மட்டில்லா மாமணியே மாதவனே கண்வளராய். 9

கண்ணே உறங்குறங்கு கார்வண்ணா நீயுறங்கு
எண்ணேன் பிறதெய்வம்என் னிதயத்தே நீயுறங்கு. 10

மலர் 21 : இதழ் 3—1957

---

## மறவாதே

மறவாதே யென்றென்றும் செல்வன் மலரடியை
பிறவாய்நீ யென்றும் பிரிந்து. 1

கன்னலுடன் செங்நெல் கலந்தோங்கும் நல்லூரில்
என்னைவந் தாண்டான் இனிது. 2

மண்ணாசை பெண்ணாசை மற்றுமுள ஆசையெலாம்
எண்ணாமல் செய்தான் இவன். 3

ஆசையென்னும் பேய்பிடித்த அடியேனை நல்லூரில்
நேசமுட னாண்டான் நினை. 4

நினைக்க நினைக்கஇன்பம் பெருகுமே நல்லூரைத்
தினைத்துணையும் மறவாமல் சேர். 5

சேர்ந்தவர்க்குத் துன்பமுண்டோ சீரான நல்லூரை
சாந்தனையும் மறவாதே தாழ். 6

சார்ந்தவர்க்குச் சாவா வரம்கொடுக்கும் நல்லூரை
வீழ்ந்தெழுந்து கும்பிடுவாய் விரைந்து. 7

மலர் 21 : இதழ் 4—1957

---

## ஏற்குமோ

### பல்லவி

ஏற்குமோ திருவருளுக் கேற்குமோ

### அநுபல்லவி

என்னையும் உன்னையும் வேறாய்
எண்ணிப் பணிவதற்கு (ஏற்குமோ . . . .)

### சரணம்

கண்ணே கண்ணின் மணியே கனியே கனிரசமே
எண்ணேன் பிறதெய்வம் எல்லாம் உனது செயல்
(ஏற்குமோ)
விண்ணாதி பூதமே வேதவே தாந்தமே
பெண்ணே ஆணே அலியே பேதமில்லாப் பெம்மானே
(ஏற்குமோ)

*மலர் 21 : இதழ் 5—1957*

---

## ஆடு பாம்பே

ஆடு பாம்பே பணிந்தாடு பாம்பே
ஆன்மா நித்தியமென்று ஆடு பாம்பே

மாடுமக்கள் சுற்றமெல்லாம் மயக்க மென்றே
மாதவர்தம் இயக்கத்தை மகிழ்ந்து கொண்டே
தோடுடைய செவியனைத் தோத்திரம் செய்தே
சும்மாயிருந்து கண்ணைத் திறந்து கொண்டே
ஆடு பாம்பே. 1

வீடு நமக்கென்றும் சொந்த மென்றே
வீணாசைப் படுவதெல்லாம் பந்தம் என்றே
தேடும்பொரு ளெல்லாம்சிவ தொண்டுக் கென்றே
தேசமெங்கும் சென்றுண்மை பேசிக் கொண்டே
ஆடு பாம்பே. 2

பாடு படும்போதும் ஆதிபதம் நினைந்தே
பாடிப் பாடித் திருவருளைப் புகழ்ந்துகொண்டே
ஓடும் இருநிதியும் ஒன்ருகக் கண்டே
உண்மை முழுதுமென மன்ருடிக் கொண்டே
ஆடு பாம்பே. 3

மலர் 21 : இதழ் 6—1957

---

## திருவருள் கைகூடுது

ராகம்—சாவேரி. தாளம்—ஆதி

### பல்லவி

திருவருள் கைகூடுது
சிந்தை களிகூருது (திருவருள்)

### அநுபல்லவி

ஒருவரும் எதிரில்லாத
உண்மை முதிருது. (திருவருள்)

### சரணம்

ஒன்ருே இரண்டோ வென்னும்
சந்தேகம் தெளியுது
ஓம்சிவாய நமவென்ன
உள்ளம் குளிருது. (திருவருள்)

அதிர வரும் நமனும்
அஞ்சியே பணிசெய்யும்
அஞ்சுவ தொன்று மில்லை
அஞ்சவ ருவதுமில்லை. (திருவருள்)

மலர் 21 : இதழ் 7—1957

---

## ஆன்மா நித்தியம்

ஐம்புலன் போம் ஆசை தனைத்தடுப்போம்
ஆன்மா நித்தியம் என்று படிப்போம்
வெம்பகையை வென்று வெற்றி எடுப்போம்
வேறுபொருள் இல்லை என்றுதிடப் படுவோம்
நம்பிக்கை யென்னும் கையைநாம் நீட்டுவோம்
நாதாந்த நிலையில் நாம் முடி சூட்டுவோம்
சும்மா இருக்கும் சுகத்தினைக் காட்டுவோம்
சுருதி நிலையில்நிற்கும் சுகம்காட்டுவோம்
இம்மை மறுமை தனைஇங்கு காட்டுவோம்
ஏகாந்த வெளியிலே நம்மை நாட்டுவோம்
தம்மைத் தாமாக உய்யவழி காட்டுவோம்
சஞ்சலமில் லாவழியில் நம்மை நாட்டுவோம்
தும்பிமுகன்ப தத்தைத் தோத்திரம் செய்வோம்
சுவாமி தரிசனம் சூத்திரம் என்போம்.

*மலர் 21 : இதழ் 10—1957*

---

## ஒரு பொல்லாப்புமில்லை

(தெம்மாங்கு மெட்டு)

ஒருபொல்லாப்பு மில்லையென்பான் உண்மை
முழுதுமென்பான்
ஒருவருக்கும் தெரியாதென்பான்—சின்னத்தங்கம்
ஓவியம்போல் இருந்தானடி. 1

அப்படியே உள்ளதென்பான் ஆரறிவா ரென்று
சொல்வான்
செப்படி வித்தையென்பான்—சின்னத்தங்கம்
செல்லப்பன் என்னுஞ்சீமான். 2

கந்தைத் துணியணிவான் கந்தன்திரு முன்றில்நிற்பான்
வந்தாரைப் போவாரைவாயில்—சின்னத்தங்கம்
வந்தபடி ஏசிடுவான். 3

அப்படியே உள்ளதென்பான் அங்குமிங்கு மாயலைவான்
செப்படி வித்தையென்பான்—சின்னத்தங்கம்
தேரடியில் இருப்பானடி. 4

சாதி சமயமென்னும் சங்கடத்துக் குள்ளாகான்
சேதியொன்றுஞ் சொல்லகில்லான்—சின்னத்தங்கம்
சித்தப் பிரமையென்பார் (எல்லோரும்). 5

நீதி அநீதிஎன்னும் நிலைமையொன்றும் இல்லாதான்
மாதிரிகள் ஒன்றுஞ்செய்யான்—சின்னத்தங்கம்
மத்தனைப்போல் திரிவானடி. 6

நீறு மணியான் நெற்றியிலே பொட்டுமிடான்
கூறிய தைக்கூறுன்—சின்னத்தங்கம்
குணமொன்று மில்லானடி. 7

ஆறுதலா யிருமென்னுன் ஆணவத்தை நீக்குமென்னுன்
மாறுபாடாய்ப் பேசிடுவான்—சின்னத்தங்கம்
மதியிழந்தான் என்பாரடி. 8

சின்னத் தனமாய்த் தெருவாலே போவாரை
என்னப்பன் பேசிடுவான்—சின்னத்தங்கம்
இவன்விசரன் என்பாரடி. 9

உல்லாச நடையனடி ஊருராய்த் திரிவனடி
எல்லோரு மிவனைக்கண்டு—சின்னத்தங்கம்
ஏளனஞ் செய்வாரடி. 10

பத்துப்பாட்டுப் படிப்போரும் கேட்போரும் பாரினிலே
வித்தகராய் வாழ்ந்துபின்னே—சின்னத்தங்கம்
விதேகமுத்தி சேர்வாரடி. 11

மலர் 21: இதழ் 11—1957

## அங்கு மிங்கு மெங்கும் ஓடாதே

அங்கு மிங்கு மெங்கும் ஓடாதே
ஆன்மாநித் தியம்அதைத் தேடாதே. 1

பொங்கும் காமக் குரோதமதம் போக்காயோ
பூரண நிட்டையிலே தேக்காயோ. 2

தங்கும் சிவயோ கத்தைத் தேராயோ
தன்னைத்தன் னுலறியப் பாராயோ. 3

மங்கள மான வார்த்தை பேசாயோ
மன்னுயிரைத் தன்னுயிர்போற் பாராயோ. 4

உன்னை யுனக் கொருபோதும் ஒளியாதே
ஒருபொல் லாப்புமில்லை யறிவாயே. 5

செங்நெலுடன் கன்னல் எங்கும் மல்கும்
சீர்பெருகும் நல்லூரில் கல்லும் 6

கரைய ஒருசொற் சொல்லும் செல்வன்
கழலடியை மறவாமற் சொல்லு. 7

செல்வம் அது பெரிய செல்வம்
சிவசிவ என்றுநீ சொல்லு. 8

துள்ளும் மனத்தை யென்றும் வெல்லு
சும்மா விருக்குமநிலை நில்லு. 9

மலர் 21 : இதழ் 12—1957

## ஓம் சிவதொண்டன்

கடவுளை எங்கும் கண்டுகளிப்பார்
மெய்யடியார்கள் ஓம்
காமக்குரோத மோகம்நீக்கிக் கண்டுகளிப்பார்
மெய்யடியார்கள் ஓம். 1
திடமுடன் தியானம் செய்துகளிப்பார்
மெய்யடியார்கள் ஓம்
தீவினை நல்வினை கண்டுகளிப்பார்
மெய்யடியார்கள் ஓம். 2
படமுடியாத துயரம்வரினும் கண்டுகளிப்பார்
மெய்யடியார்கள் ஓம்
பாரும்விண்ணும் ஒன்ருய்ப் பரவுவர்
மெய்யடியார்கள் ஓம். 3
நடமிடும் திருவடி கண்டுகளிப்பார்
மெய்யடியார்கள் ஓம்
நமச்சிவாய வாழ்க வென்றுநவில்வர்
மெய்யடியார்கள் ஓம். 4
ஆதியும் அந்தமும் நமக்கிலையென்பார்
மெய்யடியார்கள் ஓம்
அன்புசெய் பத்தரை என்றும்மறவார்
சிவனடியார்கள் ஓம். 5
சாதிசமயப் பற்றினை விட்டார்
மெய்யடியார்கள் ஓம்
சந்ததம் மோன நிலைதவருதார்
மெய்யடியார்கள் ஓம். 6
மாதிரி ஒன்றும் செய்யாருலகில்
மெய்யடியார்கள் ஓம்
மன்னு இளமை என்றும்மகிழார்
மெய்யடியார்கள் ஓம். 7
ஓதி ஓதி உன்மத்தராவார்
மெய்யடியார்கள் ஓம்
உண்மை முழுதும் என்றுசொல்வார்
மெய்யடியார்கள் ஓம். 8

ஆணும் பெண்ணும் அலியும்அறியார்
மெய்யடியார்கள் ஓம்
அரகர சிவசிவ என்றுமகிழ்வார்
சிவனடியார்கள் ஓம். 9
காணும் கண்ணிற் கலந்ததென்பர்
சிவனடியார்கள் ஓம்
கங்குல்பகலும் இல்லாக்காட்சி காண்பார்
சிவனடியார்கள் ஓம். 10
பேணும் பிறப்பிறப்பு இல்லையென்பார்
மெய்யடியார்கள் ஓம்
பேயர் பித்தர் போலஇருப்பார்
மெய்யடியார்கள் ஓம். 11
நாணும் நன்னெஞ்சில் வஞ்சகந்தீர்ப்பார்
மெய்யடியார்கள் ஓம்
நாதன்நாம நமச்சிவாய வென்பார்
மெய்யடியார்கள் ஓம். 12
ஆவதும் அழிவதும் இல்லையென்பார்
மெய்யடியார்கள் ஓம்.
அஞ்சும் மூன்றும் ஒன்ருய்அறிவார்
மெய்யடியார்கள் ஓம். 13
போவதும் வருவதும் இல்லையென்பார்
மெய்யடியார்கள் ஓம்
புன்னெறி செல்லும் மனத்தைவெல்வார்
மெய்யடியார்கள் ஓம். 14
தேவரும் முனிவரும் சித்தரும்அறியார்
மெய்யடியார்கள் ஓம்
சிவசிவ வென்று தினமும்துதிப்பார்
மெய்யடியார்கள் ஓம். 15
தேவ தேவனை என்றும்துதிப்பார்
சிவனடியார்கள் ஓம்
தீவினை செய்வார் தம்மையுமிகழார்
சிவனடியார்கள் ஓம். 16

ஐம்பொறி வழிபோய் அவனியி லலையார்
மெய்யடியார்கள் ஓம்
ஆணவந் தன்னை அழித்திடுவார்கள்
மெய்யடியார்கள் ஓம். 17
ஐந்தும் அடக்கா அறிவுபெற்றூர்
மெய்யடியார்கள் ஓம்
ஆசை வழிபோய் மோசம்போகார்
மெய்யடியார்கள் ஓம். 18
வந்தது போனது மனத்தே வையார்
மெய்யடியார்கள் ஓம்
வாணுள் ஆசை பேணு திருப்பார்
மெய்யடியார்கள் ஓம். 19
நைந்துநைந் துருகி நமனைவெல்வார்
சிவனடியார்கள் ஓம்
நாளும் கோளும் மனத்தில் வையார்
சிவனடியார்கள் ஓம். 20
அந்த விதமே தோற்றினுன்உலகில் அறிவார்
சிவதொண்டன் ஓம்
அவனியில்நாளும் வளர்மதிபோல வாழ்க
சிவதொண்டன் ஓம். 21
எந்தச்செயலும் சிவன்செயல் என்பான் அறிவார்
சிவதொண்டன் ஓம்
எளிதாயெவர்க்கும் இன்னுரைசொல்வான் எழிலார்
சிவதொண்டன் ஓம். 22
சந்தம்பெருகும் பாடல்பாடுவன் சாமி
சிவதொண்டன் ஓம்.
சரிபிழைபாரான் பொல்லாப்பில்லான் தானே
சிவதொண்டன் ஓம். 23
வந்தபிறப்பை அறுக்கவழிசொல் வளமார்
சிவதொண்டன் ஓம்
வாழ்கவாழ்க நாளும்வளர்ந்து வாழ்க
சிவதொண்டன் ஓம். 24

மலர் 22 : இதழ் 1—1958

———

## கண்டொன்று சொல்லாதே

கண்டொன்று சொல்லாதே கடவு ளொருவன்
உண்டென் றுறுதி கொள்ளவா என்மனமே.
அண்டர் முனிவர்நரர் அன்புசெய்யும் பெருமானைக்
கண்டு களிக்கக் கருதிவா என்மனமே.
பண்டுசெய்த வல்வினையால் பலபிறவி நாமெடுத்துத்
திண்டாட்டப் பட்டோம் சீக்கிரம்வா என்மனமே.
எட்டுணையும் தாழ்ச்சியில்லா இறைவன் திருவடியைச்
சுட்டாமற் சுட்டி சுகம்பெறவா என்மனமே.
பட்டுக்குடை பிடித்துப் பரியேறித் திரிவாரை
எட்டுணையும் நம்பாமல் என்பின்னே வாமனமே.
விட்டகுறை தொட்டகுறை இரண்டும்விட் டேகாந்த
நட்டணையில்* நிற்க நயந்துவா என்மனமே.
முட்டாத பூசைபண்ணி முழுமனமாய் நாம்வணங்கத்
திட்டமிட் டென்பின்னே சேர்ந்துவா என்மனமே.
சிட்டர் பரவும் சிவதொண்டன் நிலையத்தே
கிட்டாமற் கிட்டிநிற்கக் கிருபையுடன் வாமனமே.
அட்டாங்க யோகம் அவத்தையைந்தும் விட்டேகி
மட்டற்று நிற்க மகிழ்ந்துவா என்மனமே.
எட்டாத கொப்பில் இருக்கின்ற தேனமுதை
இட்ட முடன்புசிக்க எட்டிவா என்மனமே.
எட்டும் இரண்டும் இசைந்துவந்த பாமாலை
தட்டாமல் நாம்படிக்கத் தாவிவா என்மனமே.

* நடு+அணை.

மலர் 22 : இதழ் 2—1958

## சிவ சிவ

சீரான வடியரொடு கூடு—சிவசிவ
செல்லப்பன் மந்திரம் நாடு.

ஆராய்ந்து கருமத்தை யாற்று—சிவசிவ
அனைவரையும் அன்பாகப் போற்று.

ஆரென்ன சொன்னாலும் வாது—சிவசிவ
ஆணவத்தை உண்டாக்கும் தீது.

பாரெல்லாம் பகைத்தாலும் சிறிதும்—சிவசிவ
பதையாமல் இருப்பதே பெரிது.

சீவனே சிவனென்று பெரியோர்—சிவசிவ
செப்பிய மொழியைநீ அறிவாய்.

ஆவதும் அழிவதும் உண்டோ—சிவசிவ
ஐம்புலனை வென்றவர்கள் அறிவார்.

கருமஞ் சிதையாமல் உலகில்—சிவசிவ
கண்ணோட வேண்டும்நீ கருது.

அருமையி லருமையெங்க ளான்மா—சிவசிவ
அதையறிந்து வாழ்வதே மாண்பு.

அங்கிங் கெனாதபடி நாங்கள்—சிவசிவ
அம்புவியில் வாழ்வதே பாங்கு.

எங்குநீ யங்குநா னென்று—சிவசிவ
எங்கள்குரு ஓதினான் நன்கு.

மலர் 22 : இதழ் 4—1958

---

## எல்லாரும் வாழியடா

ஒருபொல் லாப்பு மில்லையடா—தம்பி
உண்மை முழுதும் அறிந்திடடா
வருவதைக் கண்டு மகிழாதே—தம்பி
வஞ்சகப் பேச்சைத் தழுவாதே. 1

கருமத் தைக்கை நெகிழாதே—தம்பி
கவலை கொண்டு கலங்காதே
தரும வழியில் வழுவாதே—தம்பி
தன்னை யறிய எழுவாயே. 2

அகர முதல எழுத்தெல்லாம்—தம்பி
அது போல் ஆதி உலகுக்கடா
பகரில் அவனே ஒருவனடா—தம்பி
பக்தி செய்தால் அறிவாயடா. 3

கற்றதனாற் பயன் இல்லையடா—தம்பி
கழல் அடியிணை கண்டிடடா
வெற்றிப் பேச்செல்லாம் விட்டிடா—தம்பி
விதியை மதியால் வென்றிடடா. 4

பொறி வழியினிற் செல்லாதே—தம்பி
போனதை யெண்ணிக் கொள்ளாதே
கிறியும் கீழ்மையும் செய்யாதே—தம்பி
கெட்டவர் மேல் நட்பு வையாதே. 5

புத்தியை ஒன்றிலும் நாட்டாதே—தம்பி
புகழும் இகழும் சூட்டாதே
எத்தொ ழிலைநீ செய்தாலும்—தம்பி
ஈசனுக் கர்ப்பணம் பண்ணிடடா. 6

வித்தாரப் பேச்சையும் விட்டிடடா—தம்பி
விருப்பு வெறுப்பை அகற்றிடடா
செத்தாரைப் போலத்தி ரிந்திடடா—தம்பி
சீவன் சிவனென்ற றிந்திடடா. 7

*வாழி குருநாதன் பாதமடா—தம்பி*
*வாய்மை யடியார் வாழியடா*
*கேளிரும் சுற்றமும் வாழியடா—தம்பி*
*கேட்டவ ரெல்லாரும் வாழியடா.* 8

---

## வருக

### எழுசீர் ஆசிரிய விருத்தம்

*இணைக்கமல மலர்ப்பாத விரலினுனி நின்றெழுகும்*
*இன்னமிழ்த மதனை நாளுந்*
*தனக்குநிக ரில்லாத குகரிணீ! சகலவுயிர்*
*தம்மிற் றெளிக்க வருக*
*மனக்குகைவழி னின்னையா னறியாதிருக்கவே*
*மறைவா யிருந்த தெல்லாம்*
*எனக்கரிதொன் றில்லையே யென்னவே நின்னருள்கொண்*
*டெளிதினிற் காட்ட வருக.* 1

*கனக்குழற் பாவையே! காருண்ய வதியுனைக்*
*காண்டலே பெரிய தவமாம்*
*நினக்குரிய இல்லமாம் ஆதார கமலமதை*
*தேர்வந் தடைந்த பொழுதே*
*வனப்பினொடு சுற்றியே வளைந்துமண் டலமிட்டு*
*வளர்துயில் புரியு மன்னாய்!*
*எனக்கரிதொன் றில்லையே யென்னவே நின்னருள் கொண்*
*டெளிதினிற் காட்ட வருக.* 2

---

## கூறுவார்

### வஞ்சி விருத்தம்

கூறுவார் கோடி பாவம்
நீளுமே நெஞ்சி லெண்ண
ஆளுவா ரகத்தி லீசன்
சேருமே சிந்திப் பாயே. 1

சிந்தித்துத் தெளிந்தார் தம்மை
பந்திக்க மாட்டா பாவம்
பொறிவழி போகார் நல்லோர்
அறிவினு ரறிவார் திண்ணம். 2

இருவினை சேரா தீசன்
திருவடி சேர்வார் தம்மை
குருவருள் கொண்டார் தம்மைத்
திருவருள் சேரும் மெய்யே. 3

இருவங் காணு வீசன்
அருவமு முருவு மாவான்
இணங்கியே யேத்து வாரை
வணங்குமே மண்ணும் விண்ணும். 4

---

## தாலாட்டு

சீரார் இலங்கைநகர் சிறக்கவந்த செல்வமே
பேரார் பிறைசூடும் பெருமானே கண்வளராய். 1

ஆராயும் வேதம் அறியாத மெய்ப்பொருளே
பேராயி ரம்படைத்த பெம்மானே கண்வளராய். 2

ஆருத காதல்சேர் அடியார் அகத்தூறும்
மாருத இன்பமே·மகாதேவனே கண்வளராய். 3

நீறார் திருமேனி நிமலர் உனையல்லால்
வேறார் துணைசொல் விமலனே கண்வளராய். 4

என்னா ருயிரே எனக்கினிய மெய்ப்பொருளே
பின்னார் துணையாவார் பெருமானே கண்வளராய். 5

ஆக்கைநிலை யாதனவே அறிந்து பிரிந்திருந்த
நீக்கமற்ற அன்பர் நிறைவேநீ கண்வளராய். 6

எங்கெங்கே பார்த்தாலும் எல்லாம்நீ என்றுகண்ட
துங்க அடியார்தம் துணைவனே கண்வளராய். 7

சித்தத்தி லூறும் தெவிட்டாத தெள்ளமுதே
அத்தனே ஆருயிரே ஆண்டவனே கண்வளராய். 8

மத்தம் மதிசூடி மழவிடையின் மீதேறி
எத்திசையுஞ் செல்லும் இறைவனே கண்வளராய். 9

கருத்திற் கருத்தே என் கண்ணுக் கினியவனே
நிருத்தமிடுஞ் சோதியே நின்மலனே கண்வளராய். 10

வருத்தமற்ற மெய்யடியார் மனத்திற் குடியிருக்கும்
ஒருத்தனே உன்னையன்றி உண்டோநீ கண்வளராய். 11

காமக் கடல்கடந்து காட்சிபெற்ற நல்லடியார்
சேம நிதியே சிவனேநீ கண்வளராய். 12

அன்பிற் குழைந்து குழைந்தையா எனஅரற்றும்
அன்பற் குகந்த அரசேநீ கண்வளராய். 13

மண்ணாதி பூதமெல்லாம் வகித்த உனையன்றி
எண்ணவே றுண்டோ இறைவனே கண்வளராய். 14

ஆதார மாறும் அகன்ற பழம்பொருளே
பேறான செல்வப் பிரானேநீ கண்வளராய். 15

எட்டுத் திசையும்மற் றெவ்விடத்தும் நின்னையன்றிச்
சுட்டவே றுண்டோ சுவாமிநீ கண்வளராய். 16

அந்திசந்தி உன்அடியை வந்திக்கும் மெய்யடியார்
சிந்தனையி லூற்றேற் செழுஞ்சுடர்நீ கண்வளராய். 17

குற்றமெல்லாம் போக்கிக் குணமாக்கி எனையாண்ட
தற்பரனே என்குருவே சாமிநீ கண்வளராய். 18

ஆருக் கவலையெல்லாம் நீருக்கி அடிமையெனை
பேருக்கி வைப்பாய் பிரானேநீ கண்வளராய். 19

---

## கடவுள் வாழ்த்து

அருவா யுருவா யருவுருவாய் நிற்கும்
ஒருவனே தெய்வ முணர். 1

அந்தமு மாதியு மில்லா வொருவனே
சிந்தையிலும் நிற்குந் தெரி. 2

ஆருயிர் தோறு மதுவதுவாய் நின்றருளுஞ்
சீருடையா னேஎங்கள் தேவு. 3

இருப்பு நெருப்புப்போ லெவ்வுயிரினுள்ளும்
இருக்கு மிறைவன் இயம்பு. 4

இல்லையுண் டென்னு மியல்புடையான் காணவனே
தொல்லையுளா னென்று துணி. 5

இம்மை மறுமைக் கிறைவ னொருவனெனத்
தம்மையுணர்ந் தார்சொன்னார் தாம். 6

கல்லார்கற் றூர்க்குங் கடவுளொன் றுண்டென்று
நல்லா ருரைத்தார் நடு. 7

பிறப்பிறப் பில்லாப் பெருமானே யெங்கள்
சிறப்புடைத் தெய்வமெனத் தேர். 8

அறிவுக் கறிவாகி யங்குமிங்கு மெங்கும்
செறியுமொன் றேஎமக்குத் தேவு. 9

பெருமை சிறுமையில்லாப் பெம்மானே எங்கள்
அருமை யுடையதெய்வ மாம். 10

## வான் சிறப்பு

மண்ணொடு விண்ணு மறிகடலு மாயுமே
நண்ணுந் தண்ணீரின்றே னொடு. 1

அறத்தோடு பூசை அழிந்தொழிந்து போமே
புறத்து மழை பெய்யா வெனின். 2

வான மருளை வழங்காது விட்டக்கால்
தானந் தவமிரண்டும் தாழ்ம். 3

தண்ணீர்க் கடவுளித் தாரணியைக் காய்ந்திட்டால்
என்னீர்மைத் தாமுலக மிஃது. 4

மழையென்னு மன்னவன் மன்னுயிர்கா வாக்கால்
விளையும் பசிநோய் விரைந்து. 5

மாரி யுலகை மறந்துபோ யிற்றென்னாற்
காரியமு முண்டோ கழறு. 6

ஆறு குளமேரி யழகுபெறு மோமாரி
மாறுபடு மாயின் மதி. 7

விரிந்த வறிவுடைய வேதியரென் செய்வார்
சொரிந்துவிடா தாயின்வான் சொல். 8

பொன்னும் பொருளு மிருந்தாவ தென்னேசொல்
மன்னு மழை குறைந்தால் மற்று. 9

மன்னுதவ மாமகமு மோயுமே வையகத்திற்
துன்னு மழை பொய்ப்பிற் றுணி. 10

## நீத்தார் பெருமை

அகலிகைகல் லானு ளருமுனி சாபத்தால்
மகபதியுந் துன்புற்ருன் மான்று. 1

அஞ்சு மடக்கு மறிஞரே யிவ்வுலகிற்
சஞ்சலத்தை வென்றுயர்வார் தாம். 2

அறவோ ரெனப்படுவா ராரென்ருல் வையத்
துறவோரே யாமென்று சொல். 3

தண்ணீர் குளிர்மோ தழலுஞ் சுடுமோதான்
மண்ணிற் றுறந்தோர்க்கு மற்று. 4

மாசற்ற நெஞ்சுடைய மாதவர்தா மண்ணகத்தே
ஆசற்ற நற்றுறவோ ராம். 5

வேண்டுதல் வேண்டாமை யில்லா விழுமியோர்
மாண்ட துறவோர் மதி. 6

எண்ணமெலாம் விட்டுவிட் டேகாந்த மோனநிலை
நண்ணுமவ ரேதுறந்தோர் நாடு. 7

இரவுபக லற்றதனி யேகாந்தக் காட்சி
விரவுமவ ரேபெரியோர் மேவு. 8

தத்துவ மெல்லாஞ் சடமென்று தாங்கண்ட
வித்தகரே சித்தர் விரும்பு. 9

காமமுத லாறுங் களைந்த பெரியோரே
சேம முடன் வாழ்வார் சிறந்து. 10

## இல்வாழ்க்கை

இல்லாளுந் தானு மிசைந்தொன்றாய் வாழ்வதே
நல்லாறென் பார்பெரியோர் நாடு. 1

ஏனை யறங்களினு மேமாப் புடையதே
யீனமில் லாவில் லறம். 2

தானந் தவமிரண்டுந் தானுற்ற வல்லது
ஞான வற மென்னலாம் நன்கு. 3

அரனு முமையு மறநெறி நின்றார்
பெறலரிய தோன்றிதெனப் பேசு. 4

பேசரிய சீர்ச்சனக னேனைப் பெரியோர்கள்
நேசமுட னின்னிலைநின் றார். 5

இல்லறத்தில் நின்றொளிரும் ஏந்திழைநல் லாளொருத்தி
நில்லென்றாள் சூரியனை நேர். 6

இல்லற மென்பதி யார்க்கும் துணையதனால்
நல்லற மென்னலாம் நாம். 7

கொல்லார்பொய் சொல்லார் குறிப்பறியு மில்லறத்தார்
எல்லார்க்கு மேலென் றிசை. 8

இன்சொற் றவறா ரிழுக்குரையா வில்லறத்தார்
பொன்பெற் றுயர்வார் புகழ். 9

பொறிவென்றார் தாமும் பொருவரோ நல்ல
நெறியில் லறத்தாரை நேர். 10

## அரியதிலரியது ஆன்மா

அரியதி லரியது ஆன்மா வதுதான்
பெரியதிற் பெரியது பேத மற்றது
கருமை செம்மை வெண்மையைக் கலந்து நிற்பது
பிரிவறியாதது பின்முன் அற்றது
பொறிவழி போகாப் புண்ணியர்க் குரியது
நெறியெலாங் கடந்து நிற்கும் நெறியது
அறிவுக் கறிவாய் ஆனந்தந் தருவது
குறிகுண மற்றது கூத்தாட வல்லது
துரியாதீ தத்தில் தூய்மையா யுள்ளது
மரித்துப் பிறவா மாண்பை யுடையது
திரிபுர மெரித்தது தேவர்சிறை மீட்டது
நரியைக் குதிரை யாக்கி நயந்தது
விருப்பும் வெறுப்பும் அற்றவர் பாலது
கருப் போகா தென்னைக் காத்து நிற்பது.

---

## உற்ற துணை

### வெண்பா

சேவித்தும் சென்றிரந்தும் சீவன் சிவனென்று
பாவித்துக் கொண்டாலிப் பாரினிலே—ஆவிக்கே
உற்ற துணையென் றுறுதிகொண்டு நல்லூரில்
நற்றவனை நாடுவோம் நாம். 1

நாம் அந்தி சந்திதொறும் நல்ல சிவநாமம்
சேம முறப்பாடிச் சிந்தையிலே—காமமுதல்
கட்டறுத்து நிட்டையிலே கங்குல் பகலின்றி
இட்டமுடன் வாழ்வோம் இனிது. 2

இனியே தெனக்குன் அருள் வருமென் றெண்ணு
கனிகாய் அருந்திக் கடும்பசிக்குத்—தனியே
இருந்து முத்தி சேர்வதற் கெண்ணுவதே யல்லால்
பொருந்துவனே பூவிற் புகுந்து. 3

போதுகொண்டு போற்றேன் பொறிவழியே
போயலேயேன்
தீது செயும் மனத்தைச் சேர்ந்திடேன்—யாதுக்கும்
அஞ்சேன் அவரிவரை அண்டிடேன் எஞ்ஞான்றுந்
தஞ்சமென்று வீழேன் தனித்து. 4

கைதடி—12-6-51

---

## கற்றவர்கள் நாடும் சிவதொண்டன்

சற்குருவைப் போற்றித் தரணியி லேசீரடியார்
பொற்பதத்தைப் போற்றிப் புகலுவேன்—கற்றவர்கள்
நாடும் சிவதொண்டன் நாங்கள் சிவம் என்று சொல்லி
ஓடி வருவான் உவந்து. 1

உவந்து வருவான் ஓம் என்றுருவேற்றிப்
பவம்வெந்து போகஅருள் பாலிப்பான்—தவஞ்செய்வார்
கண்டு மகிழுவார் காதலுடன் ஆதரிப்பார்
பண்டுபோல் என்றும் பரிந்து. 2

பரிந்தன்பர் பாதத்தில் பாங்குடனற் போது
சொரிந்துசிவ தொண்டன் தொழுது—கரங்கூப்பிச்
சீவன் சிவனுச் சிவநாமம் பாடுவான்
தேவர் புகழ நிற்பான் தேர்ந்து. 3

கைதடி—24-6-51

---

## ஓம் சிவாயநம

ஓம் சிவாயநம என்று சொல்லு
உண்மை முழுது மென்று வெல்லு
நாம் நாம் நாம் என்று நில்லு
நரக மோட்சம் நாடாமல் தள்ளு
போம் போம் வினையென்று கொள்ளு
பூரண நிஷ்டையிலே நில்லு
வீம்பிடும் மை அகங்காரம் கல்லு
விண்ணும் மண்ணும் கைவசமாய்த் துள்ளு. 1

சற்குருவின் பாதத்தைப் போற்று
தன்னைத் தன்னால் அறிந்து தேற்று
நிர்க்குண நிஷ்டையிலே ஏற்று
நீ நான் என்பதை மாற்று
மல்லாகத்தில் சுன்னாகத்தான் வீற்று
மாசற் றிருப்பான் என்று சாற்று
பொல்லாப் பிங்கில்லை யென்று போற்று
போக போக்கியம் எல்லாம் மாற்று. 2

அன்பருடன் கூடிநீ வாழ்த்து
புண்ணிய பாவத்தை வீழ்த்து
போக்கு வரவில்லை என்று தேற்று
எல்லாரி டத்தும் அன்பு காட்டு
ஏகனனேகன் என்று நாட்டு
நல்லூரான் திருவடியே பாட்டு
நமச்சிவாய வாழ்க என்று சூட்டு. 3

---

## நல்லெண்ணம்

சங்கர சங்கர சம்போ—சிவ
சங்கர சங்கர சம்போ.

அரியது மானுட யாக்கை—அதை
அருள்வது முன்புசெய் புண்ணியச் சேர்க்கை
பெரியதிப் பேறுள்ள போதே—வினைப்
பிறவி கெடநினைப் பேணுநல் லெண்ணம். 1

பெறுதற் கரியதிப் பேறு—எனினும்
பெரிது மவதி யிதன் நிலை பேறு
அறிதற் கரியது மரணம்—வரும்
அதற்குமுன் சிவனருள் தேடு நல்லெண்ணம். 2

புண்ணியம் மேனிலை யுய்க்கும்—செயும்
பொல்லாத பாவங்கள் கீழ்நிலை வைக்கும்
புண்ணியம் மூவிதம் வாக்கு—மனம்
பொறிகளி னுல்வரும் பொருந்துநல் லெண்ணம். 3

வாக்கும் உடம்பிற்கும் மூலம்—உள்ளும்
மனமென்று சொல்லும் மதித்திந்த ஞாலம்
ஆக்கு மனத்தினைத் தூய்மை—பின்னர்
அவைகளுந் தூயன வாகுநல் லெண்ணம். 4

கண்ணுக்குக் கதிரவன் வேண்டும்—ஒரு
கடவுளரு ளென்று முயிருக்கு வேண்டும்
அண்ண லருள்நினை என்றும்—அவன்
அருளின்றி யாவு மடையாநல் லெண்ணம். 5

பிறர் பொருள் நஞ்செனத் தள்ளு—சிறிதும்
பிறர் செய்த நன்மையை எழுமைக்கு முள்ளு
பிறர் துயர் உன்துயர் கொள்ளு—கொடும்
பிறவிக்கு வித்தவா பேணுநல் லெண்ணம். 6

அழுக்காறு பொல்லா நெருப்பு—தவம்
ஆசார மருள்வித் ததிலவை விருப்பு
வழுக்கா தினியசொற் சொல்லு—நல்ல
வாய்மை கடைப்பிடி மருவுநல் லெண்ணம். 7

உயிரினு மொழுக்கத்தை வேண்டு—உயிர்
ஓடு மிடமெல்லா முடன்வரு மாண்டு
அயர்வின்றி மானத்தைக் காக்க—உடல்
அழியினும் புகழ்நிற்கு மரியநல் லெண்ணம். 8

காலையும் மாலையும் ஓது—சிவன்
கதிதருஞ் சேவடி கழிந்திடும் தீது
ஆலயம் சூழ்எழுத் தைந்தும்—தினம்
அறைந்திடு சிறந்திடு மரியநல் லெண்ணம். 9

சிவசிவ சிவவென்று பேசு—நீறு
திருவருட் பேறெனவே தினம் பூசு
அவமறு மடியரைப் பேணு—உயிர்க்
கன்னங் கொடுசிவ னருளுநல் லெண்ணம். 10

---

## தங்கப்பாட்டு

கண்டவரும் விண்டதில்லை விண்டவரும் கண்டதில்லை—
தங்கம்
வேறுபொரு ளில்லையெடி. 1

பண்டயனும் மாலும்தேடி பகர்வதற்கு நின்றாரடி—
தங்கம்
என்றுமே உள்ள தெடி. 2

பட்டதுபட் டேற்றுமென்று பட்டினத்தார் சொன்னா
ரடி—தங்கம்
இருந்தபடி இருக்கு தெடி. 3

பொறியஞ்சும் வென்றவர்தம் பூஷணமாய் உள்ள
தெடி—தங்கம்
நெறியாய் இருந்ததெடி. 4

சித்தத்திலே தித்திக்கும் தேனைநீ யுண்டிட—தங்கம்
தீராநோய் தீருமடி. 5

அட்டாங்க யோகத்திற்கும் அப்பாலே யுள்ளதடி—தங்கம்
ஆரறிவா ரென்றுரரடி. 6

கட்டுப்ப டாமனத்தைக் கட்டிவிட்டால் பூமியிலே—தங்கம்
தட்டுப்பா டில்லையெடி. 7

வலமிடமா யோடுகின்ற வாசியின் நிலையறிந்தால்—தங்கம்
வாழ்வுனக் குண்டாமெடி. 8

தச்சன்கட்டா வீட்டிலே தாவுபரி கட்டிவிட்டால்—தங்கம்
அச்சமினி யில்லையெடி. 9

பிறப்பிறப் பில்லாத பெருமான் திருவடியை—தங்கம்
மறக்க முடியுமோடி. 10

ஐந்தெழுத்தை நெஞ்சகத்தில் துஞ்சாமல் சொலு
மவர்—தங்கம்
துரியத்தில் வாழ்வாரெடி. 11

இன்சொல் விளைநிலனாய் ஈதலே வித்தானால்—தங்கம்
இன்பம் பெருகுமெடி. 12

துட்டச்சம ணர்கள்தம் துடுக்கை அடக்கினவன்—தங்கம்
மட்டில்லாத் தெய்வமெடி. 13

நன்மையும் தீமையும் நாமல்ல வென்றுகண்டால்—தங்கம்
மயக்க மொழியுமெடி. 14

சுருதியோ டாகமங்கள் சொல்லமுடி யாதபொருள்—தங்கம்
கருத்தி லிருத்திடெடி. 15

விருத்தனாய்ப் பாலனாகி வேடிக்கை செய்தவனை—தங்கம்
வேண்டிப் பணிந்திடெடி. 16

### வேறு

அகம்பிர மாஸ்மிஎன்னும் அரியதிரு மந்திரத்தை
அகத்திலே நீ செபித்து—சின்னத் தங்கம்
ஆறுதலாய் இருந்திடடி. 1

அத்துவி தப்பொருளை அறிவுக்கறி வானதொன்றை
சித்தத்தி லேநீவைத்து—சின்னத்தங்கம்
சிந்தை தெளிந்திடடி. 2

ஆன்மாவுக் கயலில்லை அப்படி யுள்ளதடி
வீண்வாதம் விட்டிடடி—சின்னத்தங்கம்
வேண்டிப் பணிந்திடடி. 3

25—2—57

---

### நாதாந்த முடிவில் நடனம் புரிவது

கண்ணாலே காணொணாதது கண்ணுக்குக் கண்ணாயுள்ளது
காதாலே கேட்கொணாதது காதுக்குக் காதாயுள்ளது
கையாலே எடுக்கொணாதது கைக்குக் கையாயிருப்பது
காலாலே நடக்கொணாதது காலுக்குக் காலாயுள்ளது
வாயாலே பேசொணாதது வாய்க்கு வாயாயிருப்பது
மனசாலே எண்ணொணாதது மனத்துள் மனதாயிருப்பது
மூக்காலே முகரொணாதது மூக்குக்கு மூக்காயிருப்பது
முன்னொடு பின்னில்லா முதலது மூப்புப்பிணி
இல்லாவடிவது
தாயுந் தந்தையுமான உருவது தானே தானாய்த்
தனித்து நிற்பது
ஒன்றிரண் டென ஓதவொண்ணாதது ஓவியராலும்
எழுத வொண்ணாதது
நன்று தீதிற்கு நடுவாய் நிற்பது ஞானியர் நெஞ்சில்
என்றும் உள்ளது
வேதாந்த சித்தாந்த வேறொணாதது நாதாந்த முடிவில்
நடனம் புரிவது.

7—2—57

---

## திருவுந்தியார்

உண்டில்லை யென்று சொல்ல வொண் ணுதவன்
எங்கள் பெரு மானெனன் றுந்தீபற
எல்லா மவனெனன் றுந்தீபற. 1

காண்பான் காட்சி காட்சிப் பொருளுமாய்
தோன்ருத் துணையா முந்தீபற
சுரிகுழல் பங்கனெனன் றுந்தீபற. 2

புன்னகை யாலே புரமூன் றெரித்தவன்
என்னைவந் தாண்டானெனன் றுந்தீபற
எனக்கொரு குறைவில்லை யுந்தீபற. 3

எல்லை யிலாக் கருணை யுடைய எம்பிரான்
நல்லை நகரானெனன் றுந்தீபற
நாமறியோ மென்று னுந்தீபற. 4

மாமது ரைத்தெரு வளையல் கொண்டுவந்தான்
சோமசுந் தரனெனன் றுந்தீபற
சுன்னுகத் தானெனன் றுந்தீபற. 5

குருந்த மரத் தடியில் குருவாக வந்தவன்
இருந்தபடி யிருந்தானெனன் றுந்தீபற
இமையோர்கள் தேவனெனன் றுந்தீபற. 6

மாமனுய் வந்து வழக்குரைத் தானெங்கள்
சோமசுந் தரனெனன் றுந்தீபற
சோதி சொரூப னென் றுந்தீபற. 7

வாணிச்சிக் காக மண்சுமந் தடிபட்டான்
பாணினிக் கருள்செய்தான் உந்தீபற
பரம்பொரு ளாமென் றுந்தீபற. 8

தக்கன் வேள்வி தகர்த்தவன் கூடற்
சொக்க நாதனென்றுந் தீபற
சுகமே சொரூப மென்றுந் தீபற. 9

சுந்தரற் குத்தூது பரவைபாற் சென்றவன்
கந்தனைத் தந்தானென் றுந்தீபற
கருணைக் கடலென் றுந்தீபற. 10

19—2—57

---

## பாங்கிமாரே

ஐம்பூதம் நீவிரல்லிர் பாங்கிமாரே
ஐம்பொறியும் நீவிரல்லிர் பாங்கிமாரே
ஐம்புலனும் நீவிரல்லிர் பாங்கிமாரே
அந்தக் கரணம் நீவிரல்லிர் பாங்கிமாரே. 1

ஆதியந்தம் உங்கட்கில்லைப் பாங்கிமாரே
ஆன்மாவே நீவிர்காணும் பாங்கிமாரே
வந்ததிலும் போனதிலும் பாங்கிமாரே
மனத்தை வையாமல் வாழ்ந்திடுவீர் பாங்கிமாரே. 2

ஆதாரம் ஆறும் விட்டுப் பாங்கிமாரே
அப்பனை வணங்கிடுவீர் பாங்கிமாரே
பாதார விந்தம் காண்பீர் பாங்கிமாரே
பகலும் இரவுமில்லைப் பாங்கிமாரே. 3

முன்னிலை உங்கட்கில்லைப் பாங்கிமாரே
முனையில்வைத்துச் சீராட்டும் பாங்கிமாரே
அன்னியம் உங்கட்கில்லைப் பாங்கிமாரே
ஆச்சரியம் ஒன்றுமில்லைப் பாங்கிமாரே. 4

நீயேநீ யாயிருக்கப் பாங்கிமாரே
நித்தியத்தைத் தேடுவதேன் பாங்கிமாரே
தாயைப்போ லிருக்கவேண்டும் பாங்கிமாரே
சங்கற்பம் விட்டிடுவீர் பாங்கிமாரே. 5

வையகம் முழுதுநீங்கள் பாங்கிமாரே
வார்த்தையொன்றும் பேசாதீர் பாங்கிமாரே
கையில்நெல்லிக் கனிபோலப் பாங்கிமாரே
கடவுள்நம் மிடமுண்டு பாங்கிமாரே. 6

---

## தம்மையன்றி வேறொன்றுங் காணார்

தம்மைத்தம் மால்அறிந்த சாலப் பெரியோர்கள்
தம்மையன்றி வேறொன்றும் தாம்காணார்—பின்னைப்
பிறப்பும் இறப்புமில்லைப் பேய் பித்தர் போல்வார்
மறப் பின்றி வாழ்வார் மகிழ்ந்து. 1

மதியும் இரவியு மன்னும் சமாதி
பதியும் படியாக்கிப் பாழ்த்த—விதிவென்று
வாழ்வாரை வாழ்த்தி வளரும் அடியவர்க்குத்
தாழ்வுண்டோ தம்பிநீ சாற்று. 2

சாந்தம் பொறுமை தயைதவந் தானமிகு
மாந்தருக்குத் துன்ப மருவுமோ—சாந்தனையும்
அன்னார்பால் அன்புவைத்து ஆரறிவார் என்றகுரு
தன்னுணை போற்றல் தவம். 3

தவத்திற் சிறந்தார் தமதுயிர் போலெண்ணி
உவப்புடனே யோம்பியொரு பொல்லாப்பு
மில்லையென்றான்
தாளிணையைப் போற்றிச் சகத்துடன் கூடியே
வாழக் கருதுவதே மாண்பு. 4

மாண்டார் மனத்தானை மண்விண் ஒன்றாகி
நீண்டானை நெஞ்சமே நீநினைப்பாய்—வேண்டாமை
வேண்டுவார் வீடுபெறுவார் வையத்தை
ஆண்டாலும் என்னும் அறி. 5

## பேராயிர முடையான்

(பித்தா பிறை மெட்டு)

பேராயிர முடையான்பிறை சேரும்திருச் சடையான்
காரார்குழல் உமையாதிருக் கணவன்கறைக் கண்டன்
ஆராகிலும் நினைவார்தமக் கருள்செய்கின்ற அப்பன்
சீரார்லங்கை நகர்மேவிய சிவனுரிவ ராமே. 1

மண்ணாகிய பூதம்ஐந்தும் வகுத்தான்மறை தொகுத்தான்
எண்ணாதவர் புரமூன்றினை எரித்தான்கரி யுரித்தான்
பெண்ணாகிய உமையம்மையைப் பிரியான்எனக் குரியான்
விண்ணோர்தொழும் லங்காநகர் விமலர்இவ ராமே. 2

வண்டுமது வுண்டுகளி கொண்டுதுயில் கின்ற
கொண்டல்தவழ் முண்டுபொழில் குன்றமெங்கும் கொழிக்கும்
தண்டாரள மோடுமணி எண்டிசையுந் தயங்க
அண்டர்தொழும் லங்கைநகர் அண்ணலிவ ராமே. 3

### கலிவிருத்தம்

இடுக்கண்கள் பலப்பல எய்தியக் காலும்
நடுக்கப் படார்நல் அடியார் ஆதலின்
அடைக்கல மாகவுன் திருவடி அடைந்தேன்
விடைக்கு கந்தவனே இலங்கைநல் வேந்தே. 1

அடிக்கடி மிடியால் அயர்வெய்தி னாலும்
பிடித்த மலர்ப்பதம் பேசுவ தல்லால்
அடித்தலம் பெயர்க்கிலேன் அயலவர் மனைதிருப்
பொடிப்புனை இலங்கையெம் பொன்னக ரானே. 2

## நமச்சிவாய மாலை

சிவநெறிச் செல்வர் தங்கள்
சிந்தையே கோயில் கொண்ட
உவமையில் லாதவொன்றே
உமைபங்கா நமச்சி வாய. 1

தேகம்நீ யல்ல வென்ற
திடமெனக் கருளிப் பொல்லா
மோகத்தை முனிந்தாட் கொண்ட
முதல்வனே நமச்சி வாய. 2

தத்துவந் தொண்ணூற் றாறுஞ்
சடமெனக் காட்டி யென்னைத்
தத்துவா தீத னுக்குந்
தாணுவே நமச்சி வாய. 3

புலன்வழிச் செல்லும் பொல்லாப்
புந்தியை நீக்கி யாண்ட
விமலனே விண்ணோர் போற்றும்
வித்தகா நமச்சி வாய. 4

ஆதார மாறுந் தாண்டி
அப்பாலே சென்ற பேர்க்குப்
பாதார விந்த மீந்த
பரமனே நமச்சி வாய. 5

சூதான வெளியி லென்னைச்
சுகம்பெற நிறுத்தி வைத்த
வேதனே விண்ணோர் போற்றும்
வேந்தனே நமச்சி வாய. 6

தேடிநான் காணும் வண்ணந்
திருக்கோலங் காட்டி யென்னைக்
கூடியே யடிமை கொண்ட
கொற்றவா நமச்சி வாய. 7

நாடியோ ரிரண்டி னாலும்
நடத்திடும் வாசி தன்னை
நீடிய சுழுமு னைக்குள்
நிறுவினாய் நமச்சி வாய. 8

காலைநீ தூக்கி யாடுங்
காட்சியைக் கண்டபேர்கள்
வேலைசூழ் நிலத்தில் வந்து
வீழ்வரோ நமச்சி வாய. 9

காயமே கோயி லாகக்
கண்டிடும் மாந்த ருக்குத்
தாயகம் நீயே யன்றோ
சங்கரா நமச்சி வாய. 10

---

## காயமேகோயில்

### அகவல்

காயமே கோயில் கடிமன மடிமை
நேயமே பூசை நீயிதை அறிந்தே
உபாயமாய் நடந்தா லுனக்கொரு குறைவிலை
ஆயநான் மறையும் இப்படி அறையும்
எள்ளள வேனும் பிரியா இறைவனைக்
கள்ள மனத்தவர் காண மாட்டார்
உள்ளமே கோயில் உயிரே விளக்காம்
உள்ள உள்ள உண்மை உதிக்கும்
பகைவர் உறவோர் என்று பகரும்
வகையை நீக்கிச் சிவசிவா வென்ன
உவகை யுன்னை விழுங்கிக் கொள்ளும்
தகைமை இதுவே சாதனை செய்யே
சாதனை செய்வோர் தன்னை யறிவார்
பேதபுத் தியைத்தவிர் பெம்மான ருளால்
நீர்மேற் குமிழியிவ் யாக்கை வாழ்வே

ஆதலா லன்பர் பணியே அறமாம்
பணியப் பணியப் பாவ மகலும்
அணிமா வாதியாம் சித்திக ளெய்தும்
பிணியும் அகலும் பேரின்பம் வாய்க்கும்
துணிவுண் டாகும் சொல்லொணுச் சுகமே
எல்லா உயிரையும் சிவனென எண்ணி
நல்லறம் புரிவோர் நாடுவார் பரகதி
அல்ல லறுப்பார் ஆனந்தம் பெறுவார்
தில்லை நடேசனைச் சேருவார் திண்ணமே
உடல்பொருள் ஆவிஉன் னடைக்கல மென்றே
திடமுட னுப்புக் கொடுப்போர் தமக்கு
நடராஜ வள்ளல் நளினபொற் பதத்தை
உடனே கொடுக்கு முண்மை யிதுவே
ஓடவும் வேண்டா உலரவும் வேண்டா
பாடவும் வேண்டா பணியவும் வேண்டா
தேடவும் வேண்டா சிந்திக்க வேண்டா
ஆடகப் பொன்னடி சூடிய காலை
ஒழுக்க முயிரினு மோம்பப் படுமென
வழுத்திய பெரியவன் மறைமொழி தன்னை
அழுத்த அழுத்த ஆனந்த ஈஸ்வரன்
வழுத்தொணு மலரடி வாழ்த்திவாழ் வேண்டுமே.

## அன்பில்லேன்

"முத்தி நெறி" மெட்டு

அன்பில்லேன் பொறுமையில்லேன் அடியார்தம்
உறவுமில்லேன்
என்புருகப் பாடுகில்லேன் என்னையுமோர் பொருள்படுத்தி
மண்ணுலகில் மானிடனாய் மறைந்துவந்து வழிகாட்டி
இன்னல் தவிர்த்தாண்டு கொண்டான் எழிலாரு
மிலங்கையிலே. 1

குணமில்லா மூர்க்கரொடுங் கூடியே திரிகின்ற
மணமில்லா முருக்கமலர் அனையேனை மகிழ்ந்து வந்து
தினையளவு போதினிலே சிவமாக்கி யாண்டு கொண்ட
இணையில்லா இறையவனை இலங்கை நகர் கண்டேனே. 2

என்னையெனக் கென்னாலே அறிவித்த வெம்பெருமான்
அன்னையினும் மிக்வினிய னருயிருக் குறுதுணைவன்
பொன்னை நிகர் மேனியான் பூங்கமலத் திருத்தாளான்
தென்னை பனை சேரிலங்கை மாநகரிற் கண்டேனே. 3

நஞ்சை வென்ற கண்டத்தான் நால்வேதம் நவில்வாயான்
பஞ்சை வென்ற மெல்லடியாள் பாவைஉமை பாகத்தான்
அஞ்சை வென்ற வடியார்கள் அகங்கோயில் கொண்டபிரான்
மஞ்சை வென்ற மலைபொலியும் இலங்கை நகர்
கண்டேனே. 4

ஆவதொன்று ம[illegible]கில்லேன் அந்திசந்தி தொழுகில்லேன்
சாவதையுங் கருதுகிலேன் சஞ்சலமே மிகவுள்ளேன்
போவதுவும் வருவதுவும் இல்லாத புண்ணியனே
தேவர் குழு(உத்) தொழுதேத்தும் சிரிலங்கை
கண்டேனே. 5

இடுவதுவோ சிறிதுமிலேன் எவர்மாட்டு மன்புமிலேன்
சுடுவதுபோற் சொல்லவல்லேன் தூயோரைப் பணிகில்லேன்
கெடுவதுவோ மிகவுள்ளேன் கேவலமாய்க் கிடக்கின்றேன்
நடுவிகவா நாயகனே நம்மையாள் வதுகடனே. 6

4-4-45

## அகப்பே

அங்கிங் கலையாதே அகப்பே
ஆண்டவன் அருள்பெறவே
எங்குமவன் காணடி—அகப்பே
ஏத்தி ஏத்தித் துதிப்பாய். 1

பொன்னாசை மண்ணாசை அகப்பே
புத்தி சிதைக்குமடி
மன்னான மன்னவனை—அகப்பே
மனத்து நினைத்திடடி. 2

கொஞ்சம் கொஞ்ச மனத்தை அகப்பே
கொண்டுவா சித்தப்படி
அஞ்சாதே ஒருவருக்கும்—அகப்பே
ஆண்டவன் உன்னுளடி. 3

துஞ்சாதே தூங்காதே அகப்பே
துரியநிலை சாரடி
ஒன்றுமற நில்லடி—அகப்பே
ஓமென்று செபித்திடடி. 4

பண்டுசெய் வல்வினைநோய் அகப்பே
பாரில் பறக்குமடி
மீண்டுமனம் விடடி—அகப்பே
வேதாந்தநெறி நில்லடி. 5

என்று மிருந்தபடி அகப்பே
இருந்தபொருள் நீதாண்டி
குருநாதன் சொல்லை—அகப்பே
தூய்மையாய்ப் போற்றிடடி. 6

கைதடி—6-12-53

## ஆசான் வாசகம்

### ஆசிரியத் தாழிசை

முழுவது முண்மை யெனமுன் சொன்ன
பழுதில் வாக்கியம் பரகதி காட்டும்
தொழுது வணங்கிச் சுகமாய் வாழுதி. 1

அப்படி யுள்ளதென் ருசான் சொன்ன
ஒப்பில் வாக்குநல் உணர்வை அளிக்கும்
கைப்போது தூவி எப்போதும் வாழுதி. 2

### வெண்செந்துறை

ஆரறிவா ரென்ற ஆசான் வாசகம்
பேரறி வைத்தரும் பேணி வாழுதி. 3

நாமறியோ மென்ற நலம்திகழ் வாக்குச்
சேம மளித்துச் சிவகதி யாக்குமே
தாமத மின்றிச் சார்ந்து வாழுதி. 4

முடிந்த முடிபென்னும் முனிவன் வாக்கு
படிந்த மனத்தில் பரகதி காட்டும்
விடிந்த மலரிட்டு விரும்பி வாழுதி. 5

ஆசான் மலரடி அயரா அடியவன்
பேசுஞ் செந்தமிழ் பிறவிநீக் கும்மே. 6

## சேமமொடு வாழ்வாய்

அன்பி னுருகி அவனேதா னென்றென்றே
இன்பக் கடலில் இளைப்பாறித்—துன்பமற்று
எந்நாளும் வாழ்வாய் இறப்பும் பிறப்புமில்லைச்
சொன்னே னிதுவே சுகம். 1

ஐம்பூதம் நீயல்லை ஐம்பொறியு நீயல்லை
ஐம்புலனும் நீயல்லை ஆன்மாநீ—உண்மையிலே
செம்மையாய் வாழ்ந்து சிவன் சீவனென்றமுழு
உண்மை யறிவாய் உகந்து. 2

உகந்து மனங்குவிந்து ஒன்றுக்கு மஞ்சாது
அகந்தை அவாவெகுளி யாற்றிச்—சகந்தனிலே
தாமரையிற் றண்ணீர்போற் சாராமற் சார்ந்துநற்
சேமமொடு வாழ்வாய் தெளிந்து. 3

---

## நல்லூர் வீதியில்

இராகம்—பிலஹரி. தாளம்—ரூபகம்

பல்லவி

எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினல்
இடர்கள் எல்லாம் போமே.

அநுபல்லவி

அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்தஇடம்
அதுவாதலாலே அதிசயம் மெத்த உண்டு

சரணம்

வேதாந்த சித்தாந்தம் கற்றதனுலென்ன
வேடிக்கைக் கதைகள் பேசினுலென்ன
வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே. 1

சத்தியம் பொறுமை சாந்தம் அடக்கம்
நித்தியா நித்தியம் தெரியும் நிபுணர்
பத்திசெய் உத்தமர் பரவும் நல்லூரில்
நித்தியம் வந்து பார்த்தால் முத்தி நிச்சயமே. 2

---

## பாதார விந்த மெங்கே

இராகம்—தன்யாசி. தாளம்—ஆதி

பல்லவி

ஆதார ஆதேயமுழுதுமான அப்பனுக்கு
பாதார விந்தமெங்கே பார்த்துப் பணிவதெங்கே

அநுபல்லவி

பூதாதி ஐந்துமவன் பொறிபுலன்க ளெல்லாமவன்
தாதாவும் பெற்றெடுத்த தாய்தந்தை தானுமவன்

சரணம்

தாந்தீமி திமிதீமி ததிங்கினதொம் என்று
தானே தானாய் நின்று சலிப்பற நடஞ்செய்யும். 1

வாழ்நாளை வீணாகக் கழியாதே என்று சொல்வார்
நானுரோ இதைக்கேட்டு நாமெங்கே நாதனெங்கே. 2

தேனூரும் நல்லூரில் சீவன் முத்த னாய்வாழ்ந்த
கோனாகும் செல்லப்பனைக் கும்பிடும் மாணாக்கன். 3

பூனகரி—9-8-53

---

## நினைமின் மாந்தர்காள்

நினைமின் மாந்தர்காள் நினைமின் மாந்தர்காள்
நீடூழி சிவதொண்டன் வாழ்க. (நினைமின்) 1

அனைவரும் ஒன்றாய்க் கூடி யவனை
ஆதரித் தன்பு பாராட்டி
புனைந்து பூமாலை சூட்டிப் புகழ்ந்து (நினைமின்) 2

தினைத்துணைப் போதும் மறவாது சிந்தித்து
தேவாரம் திருவாசகம் ஓதி. (நினைமின்) 3

முனைத்து வரும் பெரும் கூற்றை உதைத்த
முதல்வனை திங்கள் தோறும் நும்மனை. (நினைமின்) 4

அணைந்து வந்து ஆசான் செப்பிய
அரியவாசகம் தரும் சிவதொண்டனை. (நினைமின்) 5

கனைக்கும் கடல்சூழ் இலங்கைத் தீவில்
கதிரொளி போல் ஒளிபரப்பும் தொண்டனை.
(நினைமின்) 6

வினைப்பகை வெல்ல விருது கட்டிய
வேதம் ஓதும் வித்தகத் தொண்டனை. (நினைமின்) 7

சுனைக்கும் நல்லூர் தூயசற் குருவின்
துணையடி மறவாத் தொண்டனை. (நினைமின்) 8

கைதடி—27-9-53

---

## நல்லூரான் திருவடி

நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி கிளியே இரவு பகல் காணேனடி. 1

ஆன்மா அழியாதென்று அன்றெனக்குச் சொன்னமொழி
நான் மறந்து போவேனோடி கிளியே நல்லூரான்
தஞ்சமெடி. 2

தேவர் சிறைமீட்ட செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி கிளியே கவலையெல்லாம்
போகுமெடி. 3

எத்தொழிலைச் செய்தாலென் ஏதவத்தைப் பட்டாலென்
கத்தன் திருவடிகள் கிளியே காவல் அறிந்திடெடி. 4

பஞ்சம்படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்கள்எடி கிளியே ஆறுமுகன்
தஞ்சமெடி. 5

சுவாமி யோகநாதன் சொன்னதிருப் பாட்டைந்தும்
பூமியில் சொன்னாலெடி கிளியே பொல்லாங்கு தீருமெடி. 6

---

## சிந்தை தெளிந்தேனே

### பல்லவி

தேடித் தேடித் திரிந்தலைந்து நான்
சிந்தை தெளிந்தேனே.

### சரணம்

சிந்தையிற் கண்டே நின் தீவினை போச்சுது
சிவபெருமான் தன் இணையடி வாச்சுது
இந்த உலகம் கனவாய்ப் போச்சுது
எல்லாம் எந்தன் கைக்குள்ளே யாச்சுது. (தேடி) 1

கருவி கரணங்கள் ஓய்ந்து போச்சுது
காணாத காட்சிகள் காண லாச்சுது
ஒருவரு மெதிரில் லாமற் போச்சுது
ஓ ஓ மாயை பறந்து போச்சுது. (தேடி) 2

நில்லென்று சொல்லி மனத்தை நிறுத்துவேன்
நேர்மையான வழியிற் செலுத்து வேன்
வல்லவம் பேசி யாரையும் வெல்லுவேன்
வாணாளாசை வீணெனச் சொல்லுவேன். (தேடி) 3

---

## நல்லூர்த் தேரடியில்

### நேரிசை வெண்பா

பழம் பாக்கு வெற்றிலை பச்சரிசி தேங்காய்
இளநீர்தே னேந்தி யெழிலார்—அளவிலா
மங்கையரு மாடவரு மல்குநல்லூர்த் தேரடியில்
எங்குருவைக் கண்டே னினிது. 1

காரார் குயில்பாடக் கார்வண்டு பண்பாட
ஆராத காத லடியரெலாஞ்—சீராகச்
சென்னியிலே கைகுவித்தார் தேரடியிற் றேசிகனை
என்னையவன் பார்த்தா னினிது. 2

இன்றைக்கோ நாளைக்கோ இன்றுநாட் சென்றிடுமோ
என்றடியா ரேத்து மினியவொளி—நன்றுடைய
நல்லூரிற் றேரடியில் நான்கண்டு போற்றினேன்
சொல்லுந் தரமோ சுகம். 3

காலன் வலிதொலையக் காலெடுத்தான் றந்தருளும்
பாலன்வாழ் நல்லைப் பழம்பதியிற்—கோலமுடன்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
ஆரென் றறிவா யடா. 4

உவமை கடந்தவின்ப மெல்லார்க்கு முண்டு
தவஞ்செய்வார் தாமறிவர் தப்பார்—சிவனருளை
நோக்கென்றான் நோக்க நொடியளவி லேயின்பம்
தேக்கிற்றென் சிந்தை தெளிந்து. 5

---

## அருள் நீ தாதாவே

இராகம்—கரஹரப்பிரியா. தாளம்—ஆதி

### பல்லவி

அருள் நீ தாதாவே—எனக் கார்தான் துணை வேறே

### அநுபல்லவி

இருள் சேர் வினையாலே இடரே படலாமோ. (அருள்)

### சரணம்

ஆசாபாச தோசம் நீக்கி—ஆரவார மார போத
தந்திர ரூபனே—நேச வாசம் தந்து வீடருள் தேவ-தேவ
சாலம் செய்யலாமோ அநுகூல கோல கால
லீல விநோத—ராஜராஜ நீ—வளர்த்தி வளர்த்தி
உண்டி ஊட்டி முழுதும் உண்மை. (அருள்)

---

## வீர மாமயில் ஏறும் வேலவ

இராகம்—கரகரப்பிரியா. தாளம்—ரூபகம்

பல்லவி

வீர மாமயில் ஏறும் வேலவ—விளங்கு
கௌரி பாலகா—வா. (வீர)

அநுபல்லவி

கானக் குறத்தி மகிழும் பாதா—காக்கும்
கடவுள் துதிக்கும் நாதா. (வீர)

சரணம்

எனக்கும் உனக்கும் பேத மேனோ
எடுத்துச் சொன்னால் போதம் போமோ
மணக்கும் சோலை நல்லூர் வாசா
வணங்கும் யோகசுவாமி நேசா. (வீர)

---

## தேவாதி தேவ

இராகம்—மோகனம். தாளம்—ஆதி

பல்லவி

தேவாதி தேவ அடியார் இடர் பொடிபட
அருள் தரு. (தேவாதி)

அநுபல்லவி

ஆபாச மாபாச ஆழி வீழடியவரும்
கோபாலனும் மற்றுங் கோகனதத்தானும் துதி.
(தேவாதி)

சரணம்

காலும் புன லனலும் வானும் நெடுநிலனும்
சசி ரவியுமான மாவடிவா
மேலை யெழுவிடத்தை மிடற்றி லடக்கி வைத்த
விகிர்தன் எனையுடையான். (தேவாதி)

கலகம் செய்யும் இருண்ட காலனும், நெஞ்சமஞ்ச
உலகங்களும் நடுங்க நடனமிடும்
துதி மிகு யோகசுவாமி சொன்ன கீதம்
விளங்கச் சதுர் வேத முழங்கத் தாண்டவமாடும்.
(தேவாதி)

---

## ஆன்மா நித்தியம்

"பூமியில் மானிட" மெட்டு. தாளம்—ஆதி

ஆன்மா நித்தியம் ஆன பொருளென
ஆசான் சொல்லக் கேட்டிருந்தோம்
அதையே மறந்தோம் பிறந்தோம் இனிநாம்
அதுவே நாமென எண்ணிடு வோம். 1

அநுதினம் சாதனை செய்யச் செய்ய
ஆனந்த மான மோட்ச வீட்டை
அடைவோம் இதிலோர் ஐயமும் இல்லை—ஆனால்
அடக்கமும் பொறுமையும் வேண்டுதுமே. 2

குழந்தை அன்பொடு குருவின் பாதத்தைக்
கும்பிடும் பாக்கியம் உண்டானால்
கோடா கோடி பாவத்தைப் போக்கும்
நாட்டத்தைச் சிவத்தில் வைப்போமே. 3

கௌரியை இடத்தில் வைத்தவன் பாதம்
கைதொழும் அடியார்கள்
காலனை வென்று ஞாலம் தன்னில்
கவலையை நீங்கி வாழ்வாரே. 4

---

## கண்டேன்

நில்லாத நீர் சடைமேல் வைத்த நிமலனை
நினைக்கு மடியவர் மனங் கோயில் கொண்டானை 1

எல்லாமு மல்லவு மாயிருப்பானை
என்னா ரமுதினை எளிவந்த பிரானை 2

கொல்லானை யின்னுரி போர்த்து கந்தானை
கூடலிற் பரியெல்லாம் நரியாக்கினானை 3

செல்லார் வரைகளும் அருவியும் பொழில்களும்
தேங்கும் இலங்கை மா நகரானே 4

எண்வகை ஒருவனை ஏந்திழை பாகனை
மண்முதற் பூதங்கள் வகுத்த பிரானை 5

கண்ணுக்குக் கண்ணாய கடவுளை
மன்னு மிலங்கை மாநகர் கண்டேன் 6

தித்திக்கும் அமுதினைத் தெளிந்த தேறலை
எத்திக்கு மாகிய என்னா ருயிரினை 7

பத்திக்கு மடியவர் பாட்டிற் குகந்தானை
முத்துக்கள் சேரும்முது லங்கையிற் கண்டேன் 8

சாந்தம் பொறுமை அன்பு தாங்கொண்ட அடியார்
மாய்ந்து போகா வண்ணம் அருள் தரும் ஒருவனை 9

காந்தள் முல்லை கானார் மல்லிகை
ஏந்திருக்கும் நல்ல இலங்கையிற் கண்டேன் 10

பொன்னார் மேனி புரிசடை அண்ணலை
பூதங்கள் ஐந்தும் பொருந்தி நிற்பானை 11

தென்னா தென்னா வென வண்டு பாடும்
சீரார் இலங்கை மாநகர் கண்டேன். 12

## என் மனக் கண்ணி

அன்பே சிவம் என்ற அடியார் திருவாக்கை
இன்பம் என்று போற்ற இசைந்து வா என்மனமே. 1

ஆரறிவார் என்னும் ஆசான் திருவாக்கைப்
பாரறியச் சொல்லிப் பணியவா என்மனமே. 2

இது அது என்றெண்ணுமல் எல்லாம் சிவமயமாய்ப்
பொதுவில் நடங்காணப் புகழ்ந்துவா என்மனமே. 3

ஈசன் ஒருவனென எண்ணியெண்ணி யேயுருகிப்
பூசை செய்ய என்பின் புறப்படுவாய் என்மனமே. 4

உன்மத்தன் போல உலகறிய நல்லூரில்
என் அப்பன் வாழ்ந்த இடம் போகவா என்மனமே. 5

ஊரும் பேரும் இல்லா ஒருவனே நல்லூரில்
சீருடனே வாழ்ந்த திறம் தெரியவா என்மனமே. 6

எண்ணிப் பணிவார் இடர் அகற்ற நல்லூரில்
கண்ணியமாய் வாழ்ந்த கழல் காணவா என்மனமே. 7

ஏதும் அற நில்லென் றெனக்குரைத்த செல்வன்தாட்
போதுகொண்டு போற்றப் புறப்படுவாய் என்மனமே. 8

ஐயமெலாம் தீர அன்புடனே நோக்கி எனை
வையகத்தில் வாழவைத்த வரம் காணவா என்மனமே. 9

ஒரு பொல்லாப்பு மில்லையென உவந்து எனக்குச்
சொன்னகுரு
திருவாக்கைக் காணச் சிறந்து வா என்மனமே. 10

ஓடும் இருநிதியும் ஒன்ருகக் காணவைத்த
கேடு படாத் திருவடியைக் கிட்டவா என்மனமே. 11

ஔவியத்தை நீக்கி அகம் தூய்மை யாக்கி வைத்த
திவ்விய பாதம்தெரி சிக்கவா என்மனமே. 12

அஃகமும் காசும் தேடி யலையாமல்
நஃகுதல் செய்த நல்லான் நண்ண வா என்மனமே. 13

கைதடி—10-6-51

# எல்லாம் நீயே

அகர வரிசைப்பாடல்

(மந்திரமாவது மெட்டு)

அப்பனும் அம்மையும் நீயே அரிய சகோதரர் நீயே
ஒப்பில் மனைவியும் நீயே ஓதரும் மைந்தரும் நீயே
செப்பில் அரசரும் நீயே தேவாதி தேவரும் நீயே
இப்புவி யெல்லாம் நீயே என்னை ஆண்டதும் நீயே. 1

ஆறு வைத்ததும் நீயே அம்பிகை பாகனும் நீயே
கூறும் வேதமும் நீயே குற்றங் குணமெல்லாம் நீயே
நீறு பூசினோன் நீயே நெற்றிமேற் கண்ணனும் நீயே
பேறுபெற்றவன் நீயே பின்னென்னை ஆண்டதும் நீயே. 2

இந்திர னாதியோர் நீயே இருடி கணங்களும் நீயே
சந்திரன் சூரியன் நீயே தாணுவாய் நின்றதும் நீயே
மந்திர தந்திரம் நீயே மறுமையும் இம்மையும் நீயே
சுந்தர மாவதும் நீயே துணையா யிருப்பதும் நீயே. 3

ஈறில் லாதவன் நீயே எந்தை பெருமானும் நீயே
மாறில் லாதவன் நீயே மனத்திலி ருப்பதும் நீயே
கூறில் லாதவன் நீயே கொள்கைக ளெல்லாம் நீயே
தேறித் தெரிவதும் நீயே திருத்த மாவதும் நீயே. 4

உண்மையும் இன்மையும் நீயே ஊனும் உயிர்களும் நீயே
அண்மையும் சேய்மையும் நீயே அன்பா யிருப்பதும் நீயே
பண்ணு மிசையும் நீயே பாட்டிற் பொலிவதும் நீயே
எண்ணு மெழுத்தும் நீயே என்துணை யாவதும் நீயே. 5

ஊதிய மாவதும் நீயே உயிருக் குறுதுணை நீயே
நீதி அதிபதி நீயே நேற்றின் றுவதும் நீயே
ஓதி உணர்வதும் நீயே உத்தமர் சித்தமும் நீயே
சாதி சமயமும் நீயே தானென்னை ஆண்டதும் நீயே. 6

எல்லாப் பொருள்களும் நீயே ஏந்திழை பங்கனும் நீயே
வல்லமை உள்ளதும் நீயே வாழ்நாட் கலகது நீயே
பல்லோர் புகழ்வதும் நீயே பரிமேல் வந்ததும் நீயே
நல்லோர் உள்ளமும் நீயே நானு யிருப்பதும் நீயே. 7

ஏற்றில் வருவது நீயே என்புக ழாவது நீயே
கூற்றை உதைத்தது நீயே குருவாய் வருவது நீயே
சாற்ற அரியது நீயே தானு யிருப்பது நீயே
போற்ற அரியது நீயே புத்தியிலுள்ளதும் நீயே. 8

ஐயம் கொடுப்பது நீயே ஐயம் ஏற்பதும் நீயே
வையக மெல்லாம் நீயே வாணுதல் கணவனும் நீயே
பையர வணிவது நீயே பரவ இனியது நீயே
செய்ய மேனியன் நீயே சித்தத்திலுள்ளதும் நீயே. 9

ஒன்று யிருப்பதும் நீயே ஊர்பேரில் லாததும் நீயே
நன்று யிருப்பதும் நீயே நானே யாவதும் நீயே
குன்றும் கடலும் நீயே குவலய மெல்லாம் நீயே
மன்றுள் நிற்பதும் நீயே மாசில் லாததும் நீயே. 10

ஓமெனும் ஒண்பொருள் நீயே உருப மற்றதும் நீயே
ஆமென நிற்பதும் நீயே அல்லவென்பதும் நீயே
தாமத மற்றதும் நீயே சத்தியமுள்ளதும் நீயே
சேம முள்ளதும் நீயே சிவர்க ளெல்லாம் நீயே. 11

ஔவிய மற்றதும் நீயே ஐந்தெழுத் தானதும் நீயே
நவ்வி உடையதும் நீயே நானய் நிற்பதும் நீயே
செவ்விய மனமெலாம் நீயே சிந்தையில் நிற்பதும் நீயே
திவ்விய மாவதும் நீயே சீஷனுங் குருவும் நீயே. 12

## கேளாய்

அனைவருக்கும் தெய்வம் ஒன்றே—அதை
அறிந்துலகில் வாழ்வது தொண்டே. 1

மூண்டு நிற்கும் காமக்குரோதம் போக்கி—பின்பு
மூவரையும் தேவரையும் ஏவலாக்கு. 2

நெஞ்சுருகும் அடியார்கள் கூட்டம்—இந்த
நீணிலத்தில் நன்மையெல்லாம் கூட்டும். 3

வினைப்பகையை வெல்வதற்கு மார்க்கம்—குரு
வேந்தன் தந்ததிரு வாக்கு. 4

தினைத்தனைப் போதும்மற வாமல்—சிவத்
தியானத்தில் தினந்தினம் மூழ்கு. 5

மனத்துயரை நீக்கநல்ல மருந்து—குரு
வாக்கியமொரு பொல்லாப்பு மில்லை. 6

நினைத்தபடி நீணிலத்தில் வாழ்வோம்—நாங்கள்
நித்தியரா மென்பதை நீ கேளாய். 7

மலர் 22 : இதழ் 5—1958

---

## இலங்கை நம் நாடு

வெண்பா

தூண்டு சுடர்ச்சோதி தொல்லுலகில் வந்துநமை
யாண்டுகொண் டானுகு மார்க்குங் குடியல்லோம்
வல்வினையும் போச்சு வரம்பிலின்ப மேயாச்சு
நல்வினை சேரிலங்கை நாடு. 1

வேண்டுதல் வேண்டாமை யில்லான் விரும்பிவந்து
ஆண்டுதான் கொண்டானு மார்க்குங் குடியல்லோம்
பொய் பேசு கில்லேம் புறங்கூறுகில்லேம் யாஞ்
செய்யா ரிலங்கை நம் தே. 2

இல்லையென்று சொல்கிலோம் யார்பாலு மன்புடையோம்
எல்லை யில்லா வின்ப மெவர்க்கும் குடியல்லோம்
தில்லை வாழ் தெய்வத் திருவடியைச் சிந்தித்து
நைவோ மிலங்கைநம் நாடு. 3

தீமையெவர் செய்தாலும் சித்தத்திற் கொள்ளேம் யாம்
ஆமைபோ லைந்து மடக்குவோம்நா மார்க்குங்
குடியல்லேம்
செய்வோம் சிவபூசை தீங்கவிகள் பாடுவோம்
உய்வோ மிலங்கைநம தூர். 4

அச்ச மொடு கோபத்தை ஆகா வெனத்தடுத்தோம்
இச்சை யெல்லாம் விட்டோம் எவர்க்குங் குடியல்லோம்
நெஞ்சிற் பஞ் சாக்கரத்தை நேச முடனுரைப்போம்
மஞ்சு தவழிலங்கை வைப்பு. 5

ஆதியு மந்தமுமில்லை நமக் கென்றுமென
ஓதி யுணர்ந்தோ மொருவர் குடியல்லேம்
ஆறுங் குளமும் மணியார் பொழில்களுஞ்
சேருநம தூரிலங்கை தேர். 6

சிந்திக்க நெஞ்சும் தெரிசிக்கக் கண்ணிரண்டும்
வந்திக்கச் சென்னிபிறர் வைத்தகுடி நாமல்லோம்—
அந்திசந்தி
வாழ்த்தி வணங்குவோம் வாயாரப் போற்றுவோம்
தாழ்த்திநிற் போமிலங்கை தாள். 7

எல்லார்க்கு மாங்கடவு ளொன்றென் றியம்புவோம்
பொல்லாங்கு செய்யோம் பிறர்குடி யல்லேம்
கொலைகளவு கோபத்தைக் கொள்கிலோம் நெஞ்சில்
நிலையென் றிலங்கை நினை. 8

நிற்போம் சமாதியிலே யென்றும் நிலைத்திருப்போம்
பெற்றோே மறிவுபிறர் வைத்தகுடி நாமல்லோம்—சுற்றந்
துறந்தோம் பிறவாத தொல்பதியைச் சேர்ந்தோம்
சிறந்தோ மிலங்கை தெரி. 9

செல்வம்நிலை யாதென்று தேர்ந்தோம் சிவபெருமான்
நல்ல பதமறவோம் நாமார்க்கு மாளல்லோம்—அல்லலுற
மாட்டோ மவனி மதித்தாலு மின்புறோம்
வேட்டோ மிலங்கை வெளி. 10

இலங்கைவாழ் தெய்வ மெமையாளுந் தெய்வம்
கலங்க விடாத்தெய்வம் கைகாட்டுந் தெய்வம்—புலன் வழியிற்
செல்ல விடாத்தெய்வம் தேவர் தொழுந்தெய்வம்
நல்லதெய்வம் நாடோறும் நாடு. 11

எல்லாந் தருந்தெய்வம் எல்லாமா குந்தெய்வம்
எல்லாந் தொழுந்தெய்வ மெந்தெய்வம்—நில்லா நீர்
செஞ்சடைசேர் தெய்வம் சிரஞ்சீவி யானதெய்வம்
அஞ்செழுத் தானதெய்வ மாம். 12

நிலனாகிக் காற்றாகி நீராகுந் தெய்வம்
அலகி லருக்கனு மம்புலியு மற்றும்—பலபல்வாம்
வேடங் கொளுந்தெய்வம் வேதாளஞ் சூழ்தெய்வம்
மாட மலியிலங்கை வாழ்வு. 13

## தியானமாலை.

### கலிவிருத்தம்

அகரத்தில் உகர மகர மமரும்
உகரத்தி லகரம் மகர முறையும்
மகரத்தி லகர மகரம் மயங்கும்
சிகரத்தில் கண்டு தெளிந்தவன் சித்தனே. 1

ஆதார வாதேய முழுது மானவன்
நாதா நாத னுய் மன்னி நின்றவன்
பூதாதி ஐந்துமாய்ப் பொலிந்த புண்ணியன்
பாதார விந்தம் பரவிக்கண் டேனே. 2

இன்றுளோர் நாளை யில்லாமை கண்டும்
பொன்று முடலைப் பொன்போற் போற்றி
நன்றுதீ தென்று நாட்டங் கொண்டோர்
என்று காண்பரோ ஈச னிணையடி. 3

ஈயாத மாந்தர் இருந்தென் னிறந்தென்
ஓயாக் கவலையி லுடலஞ் சலித்து
மாயா விகார மனைமக்க ளுறவெனும்
பேயாற் பிடிபட்டுப் பிதற்றிமாண் டாரே. 4

உம்பர் தலைவனை ஊழி முதல்வனை
வெம்பந்தம் நீக்கும் வேதாந்த விளக்கை
சம்பந்த மாக்குந் தத்துவா தீதனை
நம்பந்தம் நீக்கி நாங்கள்கண் டோமே. 5

ஊரும் பேரு மில்லா ஒருவனை
ஆரு மறியா அறிவுக் கறிவை
நீருந் தீயுங் காலுமா னவனை
சாருந் தீரும் சஞ்சலம் முற்றுமே. 6

என்னு ளொளியை ஏந்திழை பங்கனை
மின்னுஞ் சடைமுடி விகிர்தனைச் சிவனை
கண்முன் னுடைய கடவுளைக் கங்கை
தன்னை வைத்தவனைச் சாரும் தவமதே. 7

ஏகநா யகனை எல்லாம்செய் சித்தனை
போகநா யகனைப் புணர்முலை பங்கனை
மோகமார் புரத்தை முனிந்த முதல்வனைத்
தேகம் விழுமுன் சிந்தைசெய் வோமே. 8

ஐவர் செய் வினையில் அயர்ந்து விடாமல்
பொய் வினை நீக்கிப் புண்ணியந் தேக்கி
கையும் மெய்யும் கலந்து வணங்கி
நையு மன்பில் நான்தொழு தேனே. 9

ஒன்பது வாயிலும் ஒக்க வடைத்து நின்று
என்ப துருகி இளகிக் கசிவுற்
றின்ப துன்ப மெல்லாங் கடந்தால்
பொன் பொதி செஞ்சடைப் புனிதன் வருமே. 10

ஓங்காரக் கம்பத்தி னுன்னத மேடையில்
பாங்கான வீட்டின் பள்ளி யறையைத்
தூங்காத் துறவுகோல் கொண்டு திறந்தால்
நீங்காச் சிவகதி நிச்சயமாமே. 11

ஔவிய நெஞ்சை அறவே ஒழித்து
நௌவியு மழுவு மேந்தும் நம்பனை
செவ்விதின் வணங்கிற் சித்தி முத்திகள்
எவ்வம தின்றி யெய்திடலாமே. 12

அஃகா மனத்தா லறிவை யெழுப்பி
வெஃகாக் குருபதம் மென்மேலும் போற்றி
எஃகு போல இளகிக் குழைந்தால்
இஃதேபே ரின்பம் இடரிலை என்றுமே. 13

கங்குல் பகலற்ற காட்சியிற் பிரியார்
எங்குஞ் சிவமென் றறிவா ரிவரை
தங்கும் பிறவியிற் சாராத் தவத்தினால்
எங்குங் கண்ணுற் றிறைஞ்ச வினிதே. 14

நமச்சி வாயவே நான்மறை யாகமம்
நமச்சி வாயவே மந்திர தந்திரம்
நமச்சி வாயவே நம்முட லுயிர்பொருள்
நமச்சி வாயவே நற்றுணை யாகுமே. 15

நாதனிருப்பது நற்றவர் நெஞ்சிலே
நாதனுரையது நான்மறை யாகமம்
நாதனை நாடினர் ஞான மெய்துவர்
நாதனை நாடி நாமறிந்தோமே. 16

நினையும் நினைவும் நீயன்றி வேறில்லை
அணையும் சுற்றமும் அப்பனு மாகிய
தனையறி வார்கள் தற்பரமாவர்
பினை யொன்றும்பேச விடமில்லைக் காணே. 17

நீயும் நானும் அவனும் அதுவும்
காயும் தீயும் காலும் வானும்
பேயும் பூதமும் பிரானும் பிறவும்
ஆயும் பொழுதில் அவனாய் விளங்குமே. 18

நுண்ணிடை அவளொடு நடங்கும் பித்தனை
விண்ணிடை விடைமேல் விளங்கு மொருவனை
கண்ணிடைக் கண்டு களித்த மானிடர்
மண்ணிடை வராரென ஓதும் மறையே. 19

நூதன விவேகியர் நுழைந்துங் காண்கிலர்
சீதள கமலச் செல்வனுங் காண்கிலர்
வேத வாகமம் தாமும் விளம்பில்
சாதனை யுள்ள சத்துக்கள் காண்பரே, 20

நெற்றி நாட்டத்தார் நிமிர்புன் சடையர்
பெற்றமொன் றேறுவர் பேயுட னாடுவர்
கற்றைவார் குழலுமை காட்சிக் கெளியர்
விற்றூண் என்றில்லா விமல ரிவரே. 21

நேச யோகத்தர் நெறியில் லாதவர்
பாச மியல்பாய்ப் பற்ருத பான்மையர்
பேச வொண்ணுப் பெருமையர் பேரிலர்
தாசன் யோகன் தலைவன் இவரே. 22

நையும் மனிதர்தம் நானென்னு மகந்தையைக்
கொய்யும் சூலப் படையை யுடைய
கையு முடையவன் காலர்க்கு நாதன் காலன்
தெய்வ மிவனென்று சேர்க்குது மிவன்பதம். 23

நொந்தவர் தம்மை நொடியினிற் காக்கும்
பைந்தொடி யுமையாள் பங்கன் துங்கன்
கந்துக மதகரிப் போர்வையன் கறைசேர்
கண்ட னண்டத்தவர் கூருக் கடவுளே. 24

அந்தியும் சந்தியும் அன்பினி லவனை
சிந்தையி னினையச் சிறப்புடை யவராய்
பந்தம் யாவும் பற்ருது ஒழித்து
நந்தா வின்ப நாடடை வாரே. 25

---

## நடந்து போவோம்

இராகம்—பைரவி. தாளம்—ரூபகம்

### பல்லவி

நல்லைப் பதிக்கு நேராய்
நடந்து போவோம் நாமெல்லாம் வாரீர் சீராய்.

### அநுபல்லவி

அல்லற்றுயர் தருசூழ் மெல்ல
அகன்று போம் நீ வா. (நல்லை)

கல்லொத்திடு மனங்கணத்தில்
கரைந்து போம் விரைந்து வா. (நல்லை)

நில்லன் பொடுநினைந்து நினைந்து
நீ நான் அறநின்று மகிழ்ந்து. (நல்லை)

### சரணம்

செல்லப் பனைத்தினம் சேவிக்கும் நற்றவன்
செல்வச் சிவயோக நாதனுக் குற்றவன்
தில்லையம் பலம்சே விக்கும்பொற் பாதன்
தித்தித் தகுதகு கிடதோம்
தளங்கு தரிகிட கிடதோம்
தித்தித்தா திமிதிமி யென
நித்தஞ் செய் மயி லேறிய
சத்திதான் தரு மைந்தன் வாழ் (நல்லை)

## ஓம் தத்சத்

இருவரும் தேடிக் காணு இறைவன் என்போல்
உருத்தாங்கி
இணங்கி யெவரும் வணங்கும் நல்லையில் இன்னான்
இவனென்ன
ஒருவரு மறியா தோடி உலாவி உவகை பூத்த
முகத்தினராய்
ஒருநாள் என்றனை உற்று நோக்கினார் பொல்லாப்பு
மில்லை யென்று
அருவமுங் காட்டி உருவமுங் காட்டி அப்பாற் கப்பாலாம்
அருள்நிலை காட்டிக் காட்டிக் காட்டி அந்த மாதி யில்லாச்
சொரூபமுங் காட்டிச் சும்மா விருக்கும் சூழ்ச்சத்தில்
மாட்டிவிட்டான்
துன்பம் இறந்தன இன்பம் இறந்தன சோதிசோதி
சிவசோதி. 1

சிவத்தினை வளர்க்கும் பாக்கிய மெமக்குச் சித்தித்த
தினிமேலே
தெய்வம் வேறே உண்டென வெண்ணும் சிந்தையு
மிறந்ததுவே
அவத்தினிற் செல்லும் மனத்தினை வெல்வோம்
ஐம்பொறி வழிச்செல்லேம்
அழியா மெய்ப்பொருள் ஆகிய ஆன்மா அறிவோம்
நாம்நன்றாய்
தவவழிச் செல்வோம் குருமொழி கொள்வோம் தன்னைத்
தானறிவோம்
சாந்தம் பொறுமை ஏய்ந்த நற்பணி சந்தத
மணிந்துகொள்வோம்
உவத்தலுங் காய்தலும் ஓடி ஒளித்தன ஒன்றுங்
குறைவில்லேம்
உண்மை முழுதும்நீ ஓதுக தினமும் ஓம் தத்சத் ஓம். 2

கதிரவன் எழுமுன் காலை யெழுந்து கை கால் முகங்கழுவு
கடிமல ரெடுத்து மாலை தொடுத்துக் கடவுளைப்
பூசனை செய்
அதிர வராமுன் மனத்தினை யடக்கி ஐம்பொறி
வழிச் செல்லாது
ஆண்டவன் திவ்விய பாதத்தை வேண்டி ஆசையை
வென்றிடலாம்
முதிர முதிர முழுவது முண்மை யெனமுனி
சொன்ன மொழி
முகமுக மாகக் கண்டு தெளிந்து முத்தியிற் சேர்ந்திடலாம்
இதிலே ஐயம் இல்லை இல்லை எல்லா மவன்செயலே
இரவும் பகலும் இதய வெளிக்குள் ஏத்துக
ஓம் தத் சத். 3

எண்ணி யெண்ணிப் பணிவார் நெஞ்சே ஈசன்
உறைகோயில்
இருந்துங் கிடந்தும் நடந்துந் தொடர்ந்தும்
ஏத்திப் பணிவோமே
புண்ணிய பாவ மிரண்டுங் கற்பனை போக்கொடு
வரவில்லாப்
பொருளே நாங்கள் அருள் கொண் டறிநீ புத்தியை
நாட்டாதே
மண்ணில் வந்து பிறந்ததும் வாழ்ந்ததும் மாமாயை
யிதனை
மாதவ ரறிவார் மற்றவ ரறியார் மதியா தேயிதனை
எண்ணில் காலம் உயிரோ டிருப்போம் ஏதுக்கு மஞ்சாதே
இயைந்த படிநீ நடந்துகொ ளென்றும் ஏத்துக
ஓம் தத் சத். 4

## நல்ல மலர்

நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தோடு நாம் பணிந்தால்—நல்ல மயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில்முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி. 1

தெளியுமே நின்சிந்தை செல்வனருள் பொங்கி
வளியுமே வானவரும் தானவரும் ஓயாமல்
வந்து வணங்கும் வளஞ்சேரும் நல்லூரிற்
கந்தவெனச் சொல்லிக் கருது. 2

கருத்திற் கருத்தா யிருக்குங் கழற்றுள்
விருத்தர்களும் பாலர்களும் வேண்டிப்—பெருத்த
மயிலிவரும் வேலா! விமலா! வெனச் சொற்
பயிலவறு மெங்கள் பவம். 3

பவம்நீங்கும் பன்னிருகை வேலா வெனவே
தவமோங்கும் சாந்தம் பொறுமை சிவமாம்
மனமு மடங்குமே மாசனைத்தும் தீருமே
சினமு மடங்குமே தேர். 4

தேரடியிற் சென்று தெரிசித்தாற் போதுமெனப்
பாரறியச் சொன்ன பழங்கதையை—நீரறிய
மாட்டீரோ நின்று மனங்கசிந்து பாடீரோ
நாட்டீரே கேளீர் நலம். 5

நலமறிய மாட்டாமல் நானென்று சொல்லிப்
பலபேசும் பாவீ! பணிவோர்—நிலவுலகில்
நல்லூ ரெனும்பதியை நாடித் தெரிசித்தாற்
பல்லூழி வாழலாம் பார். 6

பாராயோ வென்னைநீ பார்த்துக் கவலையெலாம்
தீராயோ செய்ய திருவேலா—வாராயோ

மாமயி லேறி மகிழ்ந்து வரந்தந்து
சேம முடன் காப்பாய் சிறப்பு. 7

சிறப்புக் குறைவிடமே தேவர் பெரும!
மறக்குறத்தி வள்ளி மணாள!—நிறக்கொடிகள்
ஆடும் அழகுடைய நல்லூர் வாழ் ஆண்டவனே
நீடும் அருள்தருவாய் நீ. 8

நீயேநா னென்று நினைக்கு மடியார்க்குத்
தாயே எனப்பெரியோர் தாம்வணங்கும்—நீயே
துணையல்லால் வேறு துணையொன்றுங் காணேன்
இணையில்லா நல்லூரா வின்று. 9

இன்றிருளை நீக்கி யெழுந்த கதிரவன்போல்
அன்றென் அகவிருளைத் தீர்ப்பதற்குக்—குன்றுபோல்
வந்தா னொருவன் வளஞ்சேரும் நல்லூரில்
தந்தா னருளெனக்குத் தான். 10

---

## கிளிக்கண்ணி

ஆன்மா ஒருபோதும்—கிளியே
அழியாதது நாங்கள்
வீண்பாவம் விட்டிடடி—கிளியே
விளங்குநல்லூர் தெரியுதடி. 1

காண்பானும் காட்சியும்போய்க்—கிளியே
கண்டபல பொருளும்விட்டு
மாண்பாகச் சிந்தையிலே—கிளியே
வடிவேலைப் போற்றிடடி. 2

ஊண்பொருளும் ஒழியுமடி—கிளியே
உலகமெலாம் அழியுமடி
சேண்பொலியுந் திருவடியைக்—கிளியே
சிந்தையிலே போற்றிடடி. 3

சங்கோசை கேட்குதடி--கிளியே
தாளமேள முழங்குதடி
எங்கெங்கும் வெளிச்சமடி—கிளியே
ஏந்திழாய் நடந்துவாடி. 4

சண்பக மரத்தடியிற்—கிளியே
சாதுக்களின் கூட்டமடி
மண்போட்டால் மண்விழாதே—கிளியே
மனிதரெல்லாம் கூடிக்கொண்டார். 5

மாறிப் பொறிவழிபோய்க்—கிளியே
மாருட்டம் நீகொள்ளாதே
ஆறி நடந்துவாடி—கிளியே
அதிசயங்கள் மெத்தவடி. 6

தேர்முட்டிப் படிமேலே—கிளியே
செல்லப்ப னென்ற சீமான்
ஆர்வமுடன் இருக்கிறான்டி—கிளியே
அங்குபோவோம் வந்திடடி. 7

கிட்ட நெருங்கையிலே—கிளியே
கிடுகிடென்று நடுங்குதடி
முட்டாளைப் போலேஅவன்—கிளியே
முகமும் விளங்குதடி. 8

பித்தனெனப் பலபேரும்—கிளியே
பேசிப் பேசி இகழ்வார்கள்
ஏத்தினாலும் அவன் மனமோ—கிளியே
எள்ளளவுங் கலங்காதே. 9

பத்தியுடன் வந்திடடி—கிளியே
பார்த்தவுடன் அஞ்சாதே
வித்தகஞ்சேர் திருவடியில்—கிளியே
விழுந்துநீ கும்பிடடி. 10

நாமறியோ மென்றுசொல்லிக்—கிளியே
நகைசெய்வான் நாணுதே
தாமதம் பண்ணுதே—கிளியே
சடிதியாக் கும்பிடடி. 11

கோணுத சிந்தையுடன்—கிளியே
கும்பிட்டு நின்றிடடி
வீணுன ஆசை யெல்லாம்—கிளியே
விட்டோடும் வெற்றியடி. 12

ஆரறிவா ரென்றுசொல்லிக்—கிளியே
அதட்டுவான் அஞ்சாதே
பாரறிந்த பித்தனடி—கிளியே
பட்சமுடன் பணிந்துநட. 13

கண்டார் நகைப்பரெனக்—கிளியே
கண்மணிநீ அஞ்சாதே
பண்டார வேடமடி—கிளியே
பாடிப் பணிந்திடடி. 14

ஒண்டொடியே வந்திடடி—கிளியே
உள்வீதிக்கும் போவமடி
வண்டிவண்டி யாய்இளநீர்—கிளியே
வந்து குவியுதடி. 15

வகைவகையாய்ப் பச்சரிசி கிளியே
வாழைக்குலை தேங்காய்கள்
உவகையுடன் கொண்டுவந்து—கிளியே
உதவுகிருர் பார்த்திடடி. 16

கற்பூரப் பெட்டிகளும்—கிளியே
கட்டுக்கட்டாய்க் கரும்புகளும்
பொற்பூவும் சந்தனமும்—கிளியே
பொலியுதடி வீதியெல்லாம். 17

கண்டாயோ கார்மயிலே—கிளியே
கந்தன்விளை யாட்டுக்களை
மண்டலங்கள் நடுங்குமடி—கிளியே
மணியோசை கேட்குதடி. 18

பந்திபந்தி யாயிருந்து—கிளியே
பார்ப்பார்க ளெல்லாரும்
விந்தைசேர் மந்திரத்தைக்—கிளியே
விளம்புகின்றார் கேட்டிடடி. 19

பச்சைப் பசுங்கிளியே
பார்த்தாயோ கதவுகளை
அச்ச மின்றி மூடிவிட்டார்—கிளியே
அபிடேகம் ஆகுதடி. 20

ஏக மனதாகிக்—கிளியே
எல்லாரும் நிற்கையிலே
வேகமுடன் கதவுகளைக்—கிளியே
வேதியர்கள் திறந்துவிட்டார். 21

அஞ்சடுக்குத் தீபமுதல்—கிளியே
அடுக் கடுக்காய்த் தீபமெல்லாம்
அந்தணர்கள் காட்டுகிறார்—கிளியே
அன்புடனே கும்பிடடி. 22

அங்கையிலே பூவெடுத்துக்—கிளியே
அந்தணர்கள் ஆசீர்வாதம்
சங்கையின்றிச் சொல்லுகிறார்—கிளியே
சண்முகனை வேண்டிடடி. 23

திருநீறும் சந்தனமும்—கிளியே
தீர்த்தம்பரி மாறுகிறார்
செங்கமல மடமாதே—கிளியே
சேவித்துநீ வேண்டியணி. 24

அத்தசாமப் பூசைக்குநாம்—கிளியே
ஆரணங்கே நிற்பமென்றால்
மெத்தநேர மாகுமடி—கிளியே
வீட்டிலேஆ ளில்லையடி. 25

விரைவாய் நடந்துவாடி—கிளியே
வீணர்தங் கூட்டமடி
மாரிக்கால மானதனுல்—கிளியே
மாகவன மாய்நடடி. 26

ஓடாதே வழுக்குமடி—கிளியே
உரைத்திடடி ஐந்தெழுத்தை
வாடாதே வீட்டுவாசல்—கிளியே
வந்தோமே திறந்திடடி. 27

---

## முத்தி நெறி

நல்லூர்ப் பதியிலே ஞான நெறிகாட்டச்
செல்லப்பன் என்னும் திருபெயரான்—பொல்லாப்பிங்
கொன்றுமே யில்லையென ஓதினுன் ஓதயான்
கண்டுமெய் தேறினேன் காண். 1

காண்பதெலாம் பொய்யென்று காட்டினுன் காட்டயான்
வீண்பா வனையெல்லாம் விட்டொழிந்தேன்—
மாண்புடனே
நீயும் மனத்தில் நினைத்தால் வினையெல்லாம்
மாயும் இதைநீ மதி. 2

மதிக்கும் மதிகொடுக்கும் மானிலத்தை யாள
விதிக்கும் விமலனடி சேர்க்கும்—துதிக்கும்
அடியவர்கள் துன்பம் அகற்றி அருளுங்
கடிமலராற் பூசித்துக் காண். 3

காணுவார் தொண்டர் கருதுவார் சொன்னசொற்
பேணுவார் பேணிப் பெரிதுவப்பார்—சாணு
வளர்க்க வழிதேடி வையத் தலையார்
கலக்கமறக் கண்டு களி. 4

களிபெருகும் காமக் குரோதமெலாம் குன்றுந்
தெளிவுண்டாம் சித்தத்தில் தீமை—விளியுமே
ஆரறிவா ரென்றதனை அந்திசந்தி சிந்தித்தாற்
பேரறிவு தான்வருமே பின். 5

பின்னுமுன்னு மில்லை பிரமமே யுள்ளபொருள்
என்னு மொழிதம் இதயத்தில்—மன்னுபவர்
சாந்தம் அடக்கம் தயவுடனே வாழ்ந்தினிது
சேர்ந்திடுவார் முத்தி தெரி. 6

---

## சற்குரு தெரிசனம்

இராகம்—சாமா. தாளம்—ஆதி

பல்லவி

சற்குரு தெரிசனம் சகலபாக்கிய சுகம்
தாளிணை பணிநீ தினம்

அநுபல்லவி

தாம்தன்னை அறியுமே
சாந்தமும் செறியுமே (சற்குரு)

சரணம்

பேரன்பு பெருகிடும் பேதமை கருகிடும்
பிரியாப் பிரிய மெல்லாம் பேசாம லகன்றிடும். (சற்குரு)

ஆகம விதமுறை அகத்தினில் பொருந்திடும்
ஆசாபாச மகலும் நேசானு பூதி வரும். (சற்குரு)

தேவாதி தேவர்களும் செய்வார் பணிவந்து
சீவன் சிவனென்னும் தெளிவு முண்டாகுமே. (சற்குரு)

## பொறி வழிப் புகுத்துதே

இராகம்—பைரவி. தாளம்—ஆதி

### பல்லவி

பொறி வழிப் புகுத்துதே பொல்லாத மனம் ஐயோ
போக்கு வர வில்லாப் புண்ணிய னேகண் பாராய்.

### அநுபல்லவி

அறிவை அறிவாலே அறியெனப் பெரியோர்தாம்
அன்று சொன்னார் அதை ஐயையோ மறந்து. (பொறி)

### சரணம்

கிறியும் கீழ்மையும் செய்து கீழும் மேலும் சென்று
நெறிவழிச் செல்லாமல் நெஞ்சு கலங்குதே
நீயே நானென்ன வெண்ணி நேசிக்க எனக்குன்றன்
நிசசொரூபங் காட்டி நேரில் முன் வாராயோ. (பொறி)

---

## வேண்டும்

நமச்சிவாய வாழ்கவென நயந்து பாடவேண்டும்
நயந்து பாடவேண்டும்
நமனுக்கிட மில்லையென வியந்து கூடவேண்டும்
இமைப்பொழுதும் மறவாமல் ஏத்தி விடவேண்டும்
ஏத்தி விடவேண்டும்
எமக்குக்குறை வில்லையென வாழ்த்தி விடவேண்டும். 1

சமயநெறி கடவாமல் தான் வாழ வேண்டும்
தான் வாழ வேண்டும்
தன்னைப்போற் பிறரை யெல்லாம் நேசித்திட வேண்டும்
உமையம்மை திருவடியைக் கும்பிட்டிடவேண்டும்
கும்பிட்டிடவேண்டும்
உடன் பிறந்தா ரோடுறவு கொண்டாடவேண்டும். 2

## விருத்தம்

தெய்வமே யானெனதெ னுஞ்செருக் கால்மனது
 தீயவழி செல்லு தையோ
செய்வதொன் றறிகிலேன் தேவாதி தேவனே
 திருவருட் பார்வை சாத்தி
உய்யவழி காட்டுவாய் உன்னையல் லாதுதுணை
 யுலகத்தில் எவருமுண்டோ
வையகம் புகழ்நல்லை வாழும்வடி வேலனே
 மயிலேறு தம்பிரானே. 3

## காப்பு

ஒரு பொல்லாப்பு மில்லை யென்னும்
ஓசை யோடு உவந்து நோக்கி
திருவருள் தீர்க்கை செய்த
செல்வன்சீ ரடிகள் காப்பு. 1

ஆரறி வாரென்றுன்னும்
அரியமந் திரத்தைத் தந்த
பேரறி வுடைய செல்வன்
பெய்கழ லென்றுங் காப்பு. 2

முழுவதும் உண்மை யென்று
முகமலர்ந் தெனக்குச் சொல்லிப்
பழுதற ஆண்டு கொள்ளும்
பாதபங் கயனே காப்பு. 3

பாராதி பூத மெல்லாம்
பரமன்தன் வடிவ மென்றே
சீராக எடுத்துச் சொன்ன
செல்வன்தா ளென்றுங் காப்பு. 4

காயமே கோவி லாகக்
கண்டுபா வனைசெய் யென்று
நேயமாய் எனக்குச் சொன்ன
நிமலன்தாள் என்றுங் காப்பு. 5

பற்றினாற் பிறந்தி றந்து
பாரினில் சுழன்ரு யந்தப்
பற்றினை விடுவா யென்ற
பரமன் தாள் என்றுங் காப்பு. 6

---

## பித்தனைக் காப்பாய்

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் பொறுப்பாய் ஓம்
காலனைக் காலாற் ருக்கிய பரனே அரனே ஓம்
எல்லாம் செய்ய வல்லபம் உடையாய் எந்தாய் ஓம்
எழில் சேர் நல்லை வாழும் குருவே இறைவா ஓம்
பொல்லா வினைகள் போகும் வண்ணம் புரிவாய் ஓம்
பூவார் மலர்கொண் டடியார் போற்றும் பொருளே
எல்லாம் உன்செயல் ஆமெனும் எண்ணம் தருவாய் ஓம்
ஏத்தும் நல்ல பித்தனை யென்றும் காப்பாய் ஓம். 1

மாறிப் பொறிவழி போகா மனத்தார் இனத்தாய் ஓம்
மாலோ டயனுங் காணு ஒளியே மணியே ஓம்
ஆறும் பிறையும் சூடிய ஐயா மெய்யா ஓம்
ஆதியு மந்தமு மில்லாய் உள்ளாய் அறிவே ஓம்
தேறித் தெளிவார் சிந்தையி லூறும் அமுதே ஓம்
செயசெய வென்று பணியும் தேவர்கள் தேவா ஓம்
கூரிய சூலப் படையினை யுடையாய் கோவே ஓம்
கும்பிடும் நல்ல பித்தனை யென்றும் காப்பாய் ஓம். 2

போற்றியென் வாழ்முத லாய பொருளே அருளே ஓம்
புண்ணியர் நண்ணும் பூரண வடிவே புகலே ஓம்
தோற்ற மறைக்குங் காரணமாகிய தொல்லோய் ஓம்
சோதிச் சுடரே தோகைக் கிடமீ துணையே ஓம்
நீற்ருெடு பொலியும் நெற்றிக் கண்ணு நிமலா ஓம்
நீதி வழுவா மாதவர் தங்கள் நெறியே ஓம்
ஆற்ருெடு தும்பை அம்புலி சூடிய அரனே ஓம்
அன்புசெய் பித்தனை யென்றும் ஆளக்கடவாய் ஓம். 3

---

## உன் நினைவு

இராகம்—காப்பி. தாளம்—ஆதி

பல்லவி

உன் நினைவல்லாலில்லை
உயிர்த் துணைவோனே—உம்பர் கோனே. (உன் நினை)

அநுபல்லவி

அன்னை பிதா வாசான் நீயே வன்ம
மேனே வினைதானே. (உன் நினை)

சரணம்

என்னகச் சோதியே
இனி உன் பணிகதியே
இன்பசா கர மோன
மெனும் வடிவே என்கோனே. (உன் நினை)

உரையற்ற ஊமர் போலாய்
உள்ள முவந்து மேலாய்த்
தரை தனில் யோகசுவாமி
தான் கடைத்தேற ஈடேற. (உன் நினை)

---

## கருத்தில் கருத்தாகி

இராகம்—எதுகுலகாம்போதி. தாளம்—மிஸ்ரம்

பல்லவி

கருத்தில் கருத்தாகி யிருக்கின்ற தெய்வமே
கடைக்கண் பார்நீ தெய்வமே. (கருத்தில்)

அநுபல்லவி

ஒருத்தர் துணையுமில்லை உன்றுணை யல்லாமல்
உலகுயிர் பரமாகி நடிக்கின்ற செல்வமே. (கருத்தில்)

சரணம்

எங்கெங்கு சென்றாலும் அங்கங்கும் நீயே
ஈசா மதுராபுரி வாசா மீனாட்சி
நேசனே சொக்கநாதா யோகனுக்கருள் தாதா
நின்றும் இருந்துமுனை யென்றென்றும் போற்றநான்.
(கருத்தில்)

---

## செழுமலர்த் திருவடி

இராகம்—காம்போதி. தாளம்—ஆதி

பல்லவி

செழுமலர்த் திருவடி தெரிசிக்கலாம்
வாராய் தீய மனமே. (செழுமலர்)

அநுபல்லவி

தொழுமடியார் பழவினைகள் கழுவித்தள்ளி
துரியநிலை அருளவல்ல நல்லை நாதன். (செழுமலர்)

சரணம்

முழுது முண்மையென முனிமுன் சொன்னமொழி
மோகந் தீர்க்குமதை முற்றிலும் நம்பி
அடுத்து வந்தவெனை ஆதரித் தாண்டுகொள்
அம்புவி மீது நம்பினேனே. (செழுமலர்)

அடியவர் குடியா ஆளும் அரனே
அரகர சிவசிவ சங்கர சம்போ
அழுதும் தொழுதுமடி பாடி யரற்றி
அதிவே கமா யோடி வாராய். (செழுமலர்)

---

## ஈசனே

இராகம்—கமாஸ். தாளம்—ஆதி

**பல்லவி**

ஈசனே நல்லூர் வாசனே
இனிய வேல்முருகா உனைநம்பினேன் வாவா.
(ஈசனே)

**சரணம்**

பண்ணினேர் மொழியாள்
பாலசுப்பிர மணியா
எண்ணும் எண்ணமெல்லாம்
நண்ணும் வண்ணம் வாவா. (ஈசனே)

தாசனுன யோக சுவாமி
சாற்றும் பாவை
கேட்டுக் கிருபை கூர்ந்து
வாட்டம் தீர்க்க வாவா. (ஈசனே)

---

## அவனே நான்

இராகம்—பைரவி. தாளம்—ஆதி

**பல்லவி**

அவனேநா னென்று சொல்லித் தியானஞ்செய்
வாய்தினமும்
ஆசையெல் லாமொழியும் ஈசன் அருள் பொழியும்
(அவனே)

**அநுபல்லவி**

அஞ்சாதே அஞ்சாதே பஞ்சாய்ப் பறக்கும் பாவம்
பஞ்சாட்சரத்தை நெஞ்சில் துஞ்சாமலே செபி.
(அவனே)

சரணம்

கொஞ்சம் கொஞ்சமாய் மனத்தை
கூடுமட் டுமடக்கு
குருநாதன் திருவடியைக் கும்பிட்டு நீதொடக்கு
கோபம் பொறாமை தள்ளு கொலை களவை எள்ளு
கூடிப் பாடி ஆடு சிவனடி யாரோடு. (அவனே)

ஆதியோ டந்தமுமில் லாதஆன் மாவென்று
அடிக்கடி நீபடி துடிதுடிப் பாய்நடி
அயலுனக்கில்லை ஆரறி வார்நல்லை
ஆசான் சொன்ன மொழி முழுவது முண்மை. (அவனே)

பலபல வானசித்தி பாரினிற் கைகூடும்
பத்தி நெறி விட்டிடாதே பத்தர் சொல்லைத் தட்டிடாதே
பைரவி ராகம் பாடிப் பணிசெய்யும் யோகசுவாமி
பாவமெல் லாமோடப் பாரினில் ஈடேற. (அவனே)

---

## திருவருள் தருவாயே

இராகம்—மோகனம். தாளம்—ஆதி

பல்லவி

தெய்வமே திருவருள் தருவாயே நீ. (தெய்வமே)

அநுபல்லவி

வையக மீதில் வணங்க அறியேன்
பொய்யும் புலையும் கொலையும் தவிரேன். (தெய்வமே)

சரணம்

கையும் மெய்யும் கருத்துக் கிசைய
ஐயா தந்தனை அதையா னறியேன்
மெய்யா உன்றன் மெல்லடிக் கபயம்
மேலும் மேலும் உனைநான் வேண்டுவன். (தெய்வமே)

செங்நெலுங் கன்னலும் செறியும்நல் லூரில்
தேசிகன் தாசன் யோகசுவாமி
சொல்லுங் கீதம் சொல்லுவார் கேட்பார்
துன்பம் நீங்கி இன்பம் ஓங்கும். (தெய்வமே)

---

## ஆள வேண்டுமே

இராகம்—சங்கராபரணம் தாளம்—திரிபுடை

### பல்லவி

சஞ்சல மிகவும் மிஞ்சுதே சற்குருநாதா
தமியேனை யாள வேண்டுமே. (சஞ்சல)

### அநுபல்லவி

வஞ்சம் பொறாமை கோபம் வரவர நெருக்குதே
வாழ் நாளினுசை மிகமிகப் பெருக்குதே. (சஞ்சல)

### சரணம்

எப்படிச் சொன்னாலும் நீ ஏனென்று கேளாமல்
செப்படி வித்தை செய்தல் திருவருட் காகுமோ
ஒப்புவமை யில்லாத அப்பனே செல்லப்பனே
உன்றுணை யல்லாமல் ஒருவரு மில்லை ஐயா. (சஞ்சல)

---

## அடுக்குமோ வினை

இராகம்—நாட்டை. தாளம்—ரூபகம்

### பல்லவி

அடுக்குமோ வினை நம்மைக்—கெடுக்குமோ

### அநுபல்லவி

ஆன்மா அழியாதென்ன
    ஆசான்பால் கேட்டபின். (அடுக்குமோ)

### சரணம்

அடுத்தடுத்துச் சொல்வதினுல்
    ஆம்பயன் ஒன்றுமில்லை
அன்பேசிவ மென்றடியார்
    அருள்வாக்கை மறவாதே. (அடுக்குமோ)

ஒன்ருே இரண்டோவெனும்
    சந்தேகந் தனைநீக்கி
ஓம்சிவாய நமவென
    உள்ளத்துட் டெளிந்துகொள். (அடுக்குமோ)

தவஞ்செய்யும் யோகநாதன்
    சாற்றும்நாட் டையைக்கேட்டு
சஞ்சலமில் லாமல் நெஞ்சில்
    தானுன தன்னையறி. (அடுக்குமோ)

மலர் 22 : இதழ் 8—1958

## கிழமை வணக்கம்

அங்கையிற் போதுகொண் டெப்போதும் போற்றும் அடியவர்கள்
தங்குறை தீர்க்கும் தயாநிதி யேசத்தி வேல்முருகா
பங்கைய னைக்குட்டி முன்சிறை வைத்திட்ட பாலகனே
திங்கட் கிழமை வருவாய்நல் லூரில்வாழ் தேசிகனே. 1

ஒவ்வா தெனச்சொல்லி ஊரூர்கள் தோறும் உலைந்தலையும்
இவ்வீணற் காக்க இனிவரு வாய்இள வேல்முருகா
தெய்வானை வள்ளி தினமும் மணிசெய்யும் சேவகனே
செவ்வாய்க் கிழமை வருவாய்நல் லூரினிற் றேசிகனே. 2

பதமலர் போற்று மடியவர் தம்மைப் பரிவுடனே
இதமுடன் காக்குங் குருமணி யேஎழில் சேர்முருகா
சதமுனை யன்றி ஒருவரு மில்லையித் தாரணியிற்
புதனெனும் வாரம் வருவாய்நல் லூரில்வாழ் புண்ணியனே. 3

தயாநிதி யேயென்று தாள்போற்றும் அன்பர் தமக்கு வரும்
வியாதி வறுமை விலக்கு மருந்தே விழுப்பொருளே
தியான நிலையி லுனைக்கண்டு தேறித் தெளிவதற்கு
வியாழக் கிழமை வருவாய்நல் லூரில்வாழ் வேலவனே. 4

புள்ளிக் கலாப மயிலேறும் வேலவ புண்ணியனே
தெள்ளித் தெளிந்தவர் சித்தத்தி லூறும் தெளியமுதே
வள்ளிக் குகந்தவ னேமுரு காமற வாமலனே
வெள்ளிக் கிழமை வருவாய்நல் லூரில்வாழ் வேலவனே. 5

இனியே தெனக்குன் னருள்வரு மோவென வேங்கிமனம்
தனியே யிருந்து வருந்து தையோசத்தி வேல்முருகா
கனியே கனியி ரசமே அடியனேன் கண்களிக்கச்
சனிவாரம் தன்னில் வருவாய்நல் லூரில்வாழ் சண்முகனே. 6

தாயினு மன்பு தழைத்த குருவே தயாபரனே
தீயினு மிக்க திருமேனி யும்முன் திருவடியும்
நாயினு மிக்க கடையேனை ஆள நலமுடனே
ஞாயிறு தோறும் வருவாய்நல் லூரில்வாழ் நாயகமே. 7

---

## திங்கள் வணக்கம்

### கலிவிருத்தம்

செய்ய மேனிய னேசிவ னேயுனைக்
கையு மெய்யும் கருத்திற் கிசையவே
வைய கந்தனில் வாழ்த்தி வணங்கிடத்
தையில் வந்தருள் தான்செய்ய வேண்டுமே. 1

மாசில் மாதவர் மனத்திற் கினிமையே
பேசில் இன்பம் விளைக்கும் பெருமையே
வாசி யாம்பரி ஏறும் வலவனே
மாசி மாதம் வருக வருகவே. 2

பங்கில் மங்கையை வைத்த பராபர!
இங்கும் அங்கும் இருக்கும் இறைவனே
துங்க மால்விடை யேறுநற் சோதியே
பங்கு னிதனிற் பாங்கின் வருகவே. 3

செத்தா ரென்பு திகழ்திரு மார்பனே
அத்தா வென்றடி போற்றுவார்க் கன்பனே
கத்தா உன்னைநான் கண்டு களித்திட
சித்தி ரைதனிற் சீக்கிரம் வருகவே. 4

தேகா திதனை மெய்யெனச் சிந்தைசெய்
மோகா திபதி யாகிய மூர்க்கனை
ஏகா திபதி நீயெனை யாளுவான்
வைகா சியெனும் மாதம் வருகவே. 5

ஆணி ரைதனை மேய்க்கு மரியொடு
நாணி லந்தரு நாதனுங் காண்கிலர்
வானு லாவும் மதிவைத்த அப்பனே
ஆனி மாதம் வருக வருகவே. 6

பாடி யாடிப் பணியு மடியவர்
கூடிக் கூடிக் கும்பிடுவா ரவர்
வாடிப் பின்னர் மகிழச் செய் வள்ளலே
ஆடி மாதம் வருகஅன் பாகவே. 7

பாவ ணிசெய்து பாடும் அடியவர்
நாவ ணிசெய்து நிற்கும் நலஞ்சுடர்
பூவ ணிசெய்து போற்றுவார் சிந்தையில்
ஆவ ணியருள் மாதம் வருகவே. 8

அரட்டு மன்பர்க் கருள்செய் யிறையவன்
அரக்க னுக்கருள் செய்தவன் என்னையும்
புரக்கு மாறடி யேன்புகழ் போற்றிடப்
புரட்டா சிதனில் புண்ணியன் நண்ணுமே. 9

துப்பி சைந்த இதழ் மடத் தோகையாள்
அப்பி சைந்த அணிமுடி ஆண்டவன்
செப்பி சைந்து திறலுடன் என்முனம்
ஐப்ப சியெனு மாதம் அணுகவே. 10

கார்த்தி கேயனைக் கண்ணுத லிற்றறு
கீர்த்தி வாய்ந்த கிருபா சமுத்திரம்
தோத்திரம் செய்வார் துன்பந் துடைத்திடக்
கார்த்திகை யெனும் மாதத்திற் காணுமே. 11

மார்க்க நன்னெறி சென்றிடு மாந்தர்கள்
மூர்க்க மான குணத்தை முனிந்திடும்
போர்க்கு றிப்புடைப் புங்கவன் புண்ணிய
மார்க் கழியில் வருக வருகவே. 12

## இலங்கை வாழ்வான்

### திருத்தாண்டகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தான் கண்டாய்
பாவிப்பார் பாவம் அறுப்பான் கண்டாய்
நீரொடு மதிசூடி நின்றான் கண்டாய்
நேரிழையாள் ஒருபாகங் கொண்டான் கண்டாய்
காரொடு நேர்பொருவும் கண்டன் கண்டாய்
கருதுவார் கருத்தினி லிருப்பான் கண்டாய்
சீரொடுசேர் திரையிலங்கை வாழ்வான் கண்டாய்
சிவனென்னும் பெயருடைய செல்வன் றானே. 1

பத்திசெய்யும் உத்தமர்தம் மனத்தான் கண்டாய்
பண்டுகடல் நஞ்சுண்ட கண்டன் கண்டாய்
நித்தியனாய் நின்மலனாய் நிற்பான் கண்டாய்
நினைந்துருகும் அடியவரை ஆள்வான் கண்டாய்
தித்திக்கும் தேனொடுபா லானான் கண்டாய்
செழுவரையை வில்லாக வளைத்தான் கண்டாய்
எத்திசையும் புகழிலங்கை வாழ்வான் கண்டாய்
என்னை யென்றும் பிரியாத செல்வன் றானே. 2

கல்லானை கன்னலுண்ணச் செய்தான் கண்டாய்
கயிலாயம் எடுத்தவனை நெரித்தான் கண்டாய்
எல்லாமா யல்லவுமா யிருப்பான் கண்டாய்
என்னையொரு கணமேனும் பிரியான் கண்டாய்
சொல்லாலே துதிப்பவர்தந் துணைவன் கண்டாய்
தொல்லைநாட் செழுஞ்சுடராய் நின்றான் கண்டாய்
செல்லாரு மிலங்கையிலே வாழ்வான் கண்டாய்
சிவனென்னும் பெயருடைய செல்வன் றானே. 3

---

# குருநாதன் அருள்வாசகம்

## ஒரு குறைவுமில்லை

நமது உயிருக்குயிராய் இருப்பவர் கடவுளே.

ஆகையால் நாம் அவருடைய உடைமை.

அவருடைய அடிமை.

நம்முடைய அசைவெல்லாம் அவருடைய அசைவே.
நாம் அவரை ஒருபோதும் மறந்திருக்க முடியாது.

நமக்கு ஒரு குறைவுமில்லை.

நாம் என்று முள்ளோம்.

எங்கு மிருக்கிறோம்.

எல்லா மறிவோம்.

இப்படியே நாம் இடையறாது சிந்தித்துச் சிந்தித்துக் கீழ்மையான குணங்களைப் போக்கி மேலான தெய்வ தத்துவத்தை அடைவோமாக.

'சந்ததமு மெனதுசெயல் நினதுசெயல் யானெனுந்
தன்மைநினை யன்றியில்லாத்
தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த
சமரச சுபாவமிதுவே.'

என்னும் தாயுமானவர் அருமைத் திருவாக்கே இதற்குப் போதிய சான்று.

சிவதொண்டன் மலர் 1: இதழ் 3—1935

## சிவனடியார்

நாங்கள் சிவனடியார்;

ஆதியுமந்தமும் இறப்பும் பிறப்பும் இரவும் பகலும் சுகமும் துக்கமும் எங்களுக் கில்லை யென்னும் திருமந்திரத்தை எவனொருவன் மறவாமல் தியானஞ் செய்கிருனே அவனுக்கு ஒரு குறையும் வராது.

எதை நீ பாவனை செய்கிருயோ அது நீ யாவாய்.

இதற்கெல்லாம் விடாமுயற்சி, அதாவது சலியாமை வேண்டும்.

பாடுபட அஞ்சுபவனுக்கு ஒரு பிரயோசனமு முண்டாகாது; பாடின்றிப் பட்டங் கிடையா தென்பது உலக வழக்கம்.

காரியசித்தி எய்தும் வரையும் விடாமுயற்சி செய். நீ ஏன் ஓயாமல் கெட்ட காரியங்களைச் சிந்திக்கிருய்? அச்சிந்தனையை விட்டு முழுமனத்தோடு தெய்வத்தை வணங்கு. உனக்கு விதிவசத்தாற் பொருந்துவனவற்றை உவகையோடு ஏற்று நடத்து. இறுதியில் யாவும் ஜெயமாகும்.

அது அப்படி யுள்ள காரியம் என்பதைச் சதா நெஞ்சிற் பதித்துக் கொண்டு இயல்பாய் உனக்கு வரும் வேலைகளையும் கடமைகளையும் செய்து கொண்டிரு;— அல்லது அவற்றை விட்டிரு. எதுவும் சரியே.

செய்தலிலும் செய்யாமையிலும் அது தங்கியிருக்கவில்லை. கருமம் இல்லாமையை விரும்பாதே. கருமத்தைப் பற்ருதே. செய்தல் செய்யாமை இவற்றுள் இயல்பாய் எது உனக்கு அமைகின்றதோ அதையே பற்றி நில்.

## உபதேசம்

ஒழுக்கம் உயிரினுஞ் சிறந்தது. ஒழுக்க முடையார் எல்லாமுடையார். ஒழுக்கங்களாவன கொல்லாமை, கள்ளாமை, பிறர் வசை உரையாமை, பிறர் பொருள் கவராமை, தாழ்மை, பொய்யுரையாமை முதலியனவாம்.

எக்கருமத்தைச் செய்யும் பொழுதும் ஊக்கத்தோடும் சிரத்தையோடும் மனமகிழ்ச்சியோடும் செய்து பழகுதல் வேண்டும். அப்படிச் செய்து பழகிவந்தால் மன உறுதி உண்டாகும். அஃதாவது மனம் ஏகாக்கிர சித்தத்தைப் பொருந்தும். பொருந்தவே ஆன்ம சக்தி அதிகரிக்கும். நினைத்த காரியம் நினைத்த மாத்திரத்திலே உண்டாகும். இவர் பகைவர், இவர் உறவினர் என்ற பாகுபாடு சித்தத்திற் புகுந்து கவலையை உண்டாக்காது.

எல்லாம் என்னிடத்தே உண்டாகின்றன; எல்லாம் என்னிடத்தே நிலைத்திருக்கின்றன; எல்லாம் என்னிடத்தே ஒடுங்குகின்றன என்ற தூய்மையான எண்ணம் உடையவராய் இருத்தல் வேண்டும். மேலும் எனக்கொரு குறைவுமில்லை; என்னிடத்திலே எல்லாரும் அன்பாய் இருக்கிறார்கள்; நானும் எல்லாரிடத்திலும் அன்பாய் இருக்கிறேனென்று அடிக்கடி நினைந்து நினைந்து சாதிக்க வேண்டும். இப்படியே இடைவிடாமற் பழகி வந்தால் எல்லா மறியும் ஆற்றலும் எல்லாஞ் செய்யும் வல்லமையும் எளிதிற் கைவரும்.

|| ஓம் தத் சத் ஓம் ||

மலர் 3 : இதழ் 10—37

## சன்மார்க்கம்

குரங்குபோல் மனங்கூத்தாடு கின்றதே.

இதன் கூத்தை எப்படி யடக்குவதென்று தெரிய வில்லையே. நன்று சொன்னாய். இதற்கு நல்ல மருந்துன் னிடமுண்டு. நீ அதை மறந்து போனாய். சொல்லுகி றேன் கேள்.

சிவத்தியான மென்னு மருந்தைத் தினந்தோறுஞ் சாப்பிட்டு வா. மனக்குரங்கின் பிணி மாறும்.

அதைச் சாப்பிடும்போது அனுபானத்தைக் கூட்டிச் சாப்பிடு. அதுவு முன்னிட முண்டு.

அது என்னவென்றால்: நாவடக்கம், இச்சையடக்க மென்னுஞ் சரக்கோடு சேர்த்துச் சாப்பிடு.

இதுவும் போதாது.

பத்திய பாகத்திலே தான் முற்றுந் தங்கி யிருக்கிறது. அதுவு முன்னிட முண்டு.

அது என்னவென்றால்: மிதமான ஊண், மிதமான நித்திரை, மிதமான தேக அப்பியாசம் என்பவையே. வெற்றி நிச்சயம்.

ஆன்ம லாபத்தின்பொருட்டிதைச் செய்.

மனத்தை ஒருவன் அடக்கி வெற்றி கொள்ள முழு மனத்தோடு விரும்புவனானால் சிவத்தியானத்தைத் தினந் தோறும் செய்து வரக் கடவன்.

படிப்படியாக அவன்மன மொடுங்கி வருவதை அவன் கண் கூடாகக் காணுவான்.

சாந்தம், பொறுமை, அடக்கம் முதலிய நற்குணங்கள் அவனிடத் துதிக்கும்.

அவன் மன மெந்த நேரமும் மகிழ்ச்சி யுடையதாகவே இருக்கும். இகழ் புகழிரண்டினாலும் இழிவடையான். அந்தராத்மாவிலே சுகிப்பான். பிறர் சுகம் தன் சுக மென்ற எண்ணம் பெருகும்.

கைவிளக்கை யொருவன் கொண்டு செல்வானானால் இராக்காலத்தில் அவன் மனங் கலங்குவானா? கலங்கான். அப்படியே சிவத்தியானத்தைச் செய்து வருவானானால் மாயவிருள் அவனை யடையுமா? அடையா.

போதனையிலுஞ் சாதனை சிறந்தது.

ஒரு பொல்லாப்பு மில்லை.

ஆன்ம லாபமே பொருளெனக்கண்ட அறிஞர் அநித்தியமான இந்த உலக இன்ப துன்பத்தின் மயங்காது தாமரையிலையில் நீர் போற் சகத்துடன் கூடிவாழ்வார். ஆன்ம லாபத்தைப் பெற நினையாதவர் இந்த உலகத் துன்ப இன்பத்தினாற் கலங்கித் தியங்கித் திரிவார்கள். ஆன்ம லாபத்தையே குறிக்கோளாகக் கொண்டு நன்மை தீமையை வென்று நான் என தென்னும் அகங்கார மமகாரங்களைக் களைந்த அறிஞர் இறைவன் திருவடி நிழலில் பிறப்பிறப்பற்றுப் பேரின்பத்துடன் வாழ்வார்.

அஃதறியா அறிவிலிகளே துன்பக் கடலிலே வீழ்ந்து எரிவாய் நிரயத்துக் காளாவார்.

வண்டுகள் பூவைக் கிண்டித்தேனை உண்டு ஒன்று மறியாது கிடப்பது போல் பக்தனும் சித்தமாகிய பூவைச் சிவத்தியானத்தினால் கிண்டி ஆங்கு வருமானந்தத்தேனை யுண்டு ஒன்று இரண்டு, நன்று தீதென்றறியாமற் தேக்கிக் கிடக்கிறான்.

ஒரு கமக்காரன் தன்னுடைய நிலத்திலே நல்ல வித்தையிட்டு அதிலுண்டாகுங் களையைக் களைந்து, விளையுந் தானியத்தை யொன்று சேர்க்கிறான்.

அதுபோலப் பக்தனும் சிவமாகிய நிலத்திலே பக்தி யென்னும் வித்தை வித்திக் காமக்குரோத மோக மத மாச்சரிய மென்னுங் களையைக் களைந்து சிவபோக மென்னுந் தானியத்தைச் சேர்த்து வைத்துப் புசிக்கிருன்.

பூலோகமாகிய நந்தன வனத்திலே சீவர்களாகிய மலர்கள் மலர்ந்து கிடக்கின்றன. சிவன் அதைக்கண்டு மகிழ்கிருன்.

பொற்கொல்லன் பொன்னை யெடுத்துப் பல பூண் களைப் படைக்கிருன்.

சிவனுகிய பெரிய பொற்கொல்லன் ஆன்மாவாகிய பொன்னை யெடுத்துச் சீவர்களாகிய பலபணிகளையு மாக்குகிருன்.

வைத்தியன் பல மூலிகளையு மெடுத்து ஒன்ருக்கி நோய்க்கு மருந்து கொடுத்து நோயை மாற்றுகிருன்.

பெரிய ஞான வைத்தியனும் தனு கரண புவன போகங்களை ஆன்மாவுக்குக் கொடுத்து அதன் நோயை மாற்றி இன்ப வீட்டில் வைக்கிருன்.

தாய் தனது குழந்தைகளுக்கு விளையாட்டுச் சாமான் களைக் கொடுத்து மகிழ்விக்கிருள்.

சிவபெருமானுந் தன் குழந்தைகளாகிய எங்களுக்குப் பலவிதமான இன்பங்களையுந் தந்து மகிழ் விக்கின்ருன்.

பொறி வழியே போந்து மனம் அலைய அறிஞர் இடங் கொடார். ஏனெனில் ஆத்மாவே தானென அறிந்தவர்கள்.

ஆசை நோய்க்கு இடங்கொடுப்பாரா? அன்று.

அவர் தம்பெருமையை வேத சிவாகமங்களும் புகழ் கின்றன.

இவர்களைக் கண்டால் கல்லுங் கரையும்.

அனைத்திலும் வெற்றி யுண்டு.

---

## சிவத்தியானம்

ஓ மனிதனே! நீ உண்மைப் பொருள்.

கேடற்றவன். உனக்கு ஒருவருங் கேடு விளைக்கமுடியாது.

நீ இங்கும் அங்கும் எங்கும் உள்ளவன். நித்தியன்.

உறுதியுடனே சிங்கங் கானகத்தில் திரிவதுபோல் உலகமாகிய கானகத்தில் திரி.

எந்த விதத்திலும் தளர்வடையாதே.

ஒரு நூதனமு மிங்கில்லை. முழுதுமுண்மை.

ஒரு பொல்லாப்புமில்லை.

ஓ மனிதனே! வானம் வந்தாலும் பூமி வந்தாலும் ஆட்சிசெய்யக் கருதாதே.

சாட்சியாயிரு. மாட்சி உன் பிறப்புரிமை.

அது என்ன வுபாயத்தாலு மடையப்படுவதொன்றன்று. அப்படியுள்ள காரியம். மற்றனைத்துஞ் செப்படி வித்தை. அறிவு, அறியாமை உன்னிடமில்லை.

நீ பரமாத்மா.

|| ஓம் தத் சத் ஓம் ||

ஓ மனிதனே! சற்றுப் பொறுமையாயிருந்து பார். நீ யாரெனத் தெரிந்து கொள்ளுவை. துயருறத் தகாத காரியங்களில் துயருறாதே. துன்பமு மின்பமும் உலக நடவடிக்கைகள். நீ சித்துப் பொருள்.

உன்னை ஒன்றும் தாக்கமாட்டாது. எழுந்திரு. விழித்துக்கொள். சிவத்தியான மென்னுந் திறவுகோலால் மோக்ஷவீட்டின் கதவைத்திறந்து பார். எல்லாம் வெளியாகும்.

|| ஓம் சாந்தி சாந்தி சாந்தி ||

ஓ நண்பனே! உன்னை யார்தான் பாவியென்று சொல்ல வல்லான். ஏன்?

நீ சிவத்தின் அம்சமல்லவா? மறந்து போனாய். ஓம் தத் சத் ஓம் என்று ஓயாமற் சொல்லு. உன் முழுமனத் தோடும் இறைவனுக்கு உன்னை ஒப்புக்கொடு.

சிவத்தியானத்தை அசட்டை பண்ணுதே. ஈற்றில் யாவும் நன்மையாய் முடியும். சோம்பலுக்குஞ் சோம் பலின்மைக்கும் நீ கட்டுப் படாதே.

அதிகப் பேச்சில் என்ன பயன். பண்படுத்தப்பட்ட தரையிலன்றோ நல்ல பயன் வரும். அஞ்சாதே.

நாங்கள் சிவனடியார். சிவபெருமான் என்றுள்ள வரோ அன்று நாமுள்ளோம்.

வெப்பந் தட்பம், இன்பம், துன்பம், இளமை, முதுமை இயற்கையின் குணங்கள்.

இவைகளின் தீண்டுதலால் நாமேன் கவலைப்படுவான். இவைகள் தோன்றி மறைவன. நாமோ தோன்றுவது மில்லை. மறைவது மில்லை.

உண்மை இன்மை யாகாது. இன்மை உண்மை யாகாது.

எல்லாஞ் சிவன் செயலென்ற எங்களுக்குக் குறைவு முண்டோ? நிறைவு முண்டோ? நாம் சிவபெருமானென்ற நூலிலே கோக்கப்பட்ட பல நிற முள்ள மணிகளை யொப் பவர். நூலறுவது மில்லை. நாங்கள் சிதறிப்போவது மில்லை. பலபடப் கூறுவதால் பயனில்லை.

|| ஓம் சாந்தி சாந்தி சாந்தி ||

ஓ சினேகிதா! நீ சிவனடியானென்று முழுமனத் தோடும் நினை. எல்லா வெற்றியு முன்னிடமுண்டு. அதற்கு மேல் வேறொன்று மில்லை.

யாவு முன் காலடியில்.

|| ஓம் சாந்தி சாந்தி சாந்தி ||

## குருவாசகம்

ஆத்துமா நித்தியமானது, பிரிவில்லாதது, பூரண மானது. சரீரமோ அழியுந் தன்மையுள்ளது. பிரிவுள் ளது, இப்படி யிருக்கையில் நாங்கள் இவ்விரண்டையும் சரி யென்று சொல்ல முடியுமா? அப்படி நாங்கள் சொன் ஞல் இதிலும் பெரிய பாவமும் பழியும் வேறுண்டோ?

ஆத்துமா எல்லாத்துக்கு மாதியாயுள்ளது. யாவை யும் ஆளுகின்றது.

சரீரமோ தொடக்க முடையது. ஆள்ப்படுந் தன்மை யுடையது.

இப்படி யிருக்கையில் நாங்களிவ்விரண்டையும் ஒன் ருேடொன்று ஒப்பிட்டுப் பார்க்க முடியுமா? அப்படி யொப்பிட்டால் இதிலும் வேறு பழி கிடையாது.

இயற்கையிலே ஆத்துமா அறிவுடையது. தூய்மை யானது. சரீரமோ அறியாமை யுடையது. தூய்மை யற்றது. இவ்விரண்டையும் ஒப்பிட்டால் இதிலும் அஞ் ஞானம் பிறிதுண்டோ?

ஆத்துமா பிரகாசமுடையது. அதாவது சுயம்பிர காச முடையது.

சரீரமோ இயற்கையிலே இருள் மயமானது. இவ் விரண்டையு மொப்பிடலாமா?

யாரொருவன் தன்னைச் சரீரியென்று நினைக்கிருனே ஐயோ, அவனிலுங் கீழ்மகன் யார்?

யார் ஒருவன் தன்னுடைய சரீரமென்று சொல்லுகி ருனே அவன் மட்பிண்டத்தைத் தன்னுடையது என்று சொன்னது போலிருக்கும்.

யார் ஒருவன் தன்னைப் பூரணனென்றும், நித்தியன் என்றும், இயற்கை அறிவுடையவ னென்றும் நினைக்கி ருனே அவன் உண்மை யறிவாளி. அவனுக் கிணையாக ஒரு தெய்வமு மில்லை.

யார் ஒருவன் தன்னை ஓர் அழுக்கும் பற்றமாட்டா வென்றும், மாறுபாடில்லாதவனென்றும், தூய்மையிலுந் தூய்மை யென்றும் நினைக்கிருனே அவனை அறிவாளிகள் ஞானி யென்று சொல்லுவார்கள்.

வேதம் ஆகமம் யாவும் இந்த உலகம் முழுதும் தெய்வமே நிறைந்திருக்கிற தென்றும் அதைவிட வேறுயாதுமில்லை யென்றும் முறையிட நாங்கள் எப்படி உலக மிருக்கிறது சரீர மிருக்கிறதென்று நினைக்கலாகும். அப்படி உலகம் சரீர வேருக இருக்கிறதென்ருல் இதைவிடப் பழி பிறிதுண்டோ? ஆன்ருேரும் 'நின்னுவார் பிறரின்றி நீயே ஆனுய்' என்று சொல்லி யிருக்கிருர்கள்.

இன்னேரன்ன பல காரணங்களாலும் கடவுளைத் தவிர வேருென்றுமில்லை. யாவு மவன் செயல்.

சொல்லெல்லாம் மோனம்
தொழிலாதியும் மோனம்
எல்லாம் நன்மோன நிறைவே.

---

## நான் யார்

நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று, நீ ஆத்மா.

ஆத்மா ஒரு நாளும் அழியாது. இது மகான்களுடைய அநுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்ருய்ப் பதியக் கடவது.

ஆனுல் நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அதாவது தருமநெறியிற் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் முன்னிலை என்று சாதனை செய். கடவுள் உள்ளும் புறம்பும் உள்ளவர்.

இப்படிக்கு
அவனே—நானே

## பாட்டின் அகர வரிசை

### அ


| | பக்கம் |
|---|---|
| அகரத்தில் உகரமகர மமரும் | 246–249 |
| அகரமாம் எழுத்துப்போல அனைத்திலும் கலந்து | 42 |
| அகலிகைகல் லானாளருமுனி சாபத்தால் | 213 |
| அங்கிங்கென் றெண்ணாதே அவனிவனென்று | 157 |
| அங்கும் இங்கும் எங்கும் திருக்கூத்து | 160 |
| அங்கு மிங்கும் எங்கும் ஓடாதே | 201 |
| அங்கையிற் போது கொண்டெப்போதும் | 269 |
| அடுக்குமோ வினை | 268 |
| அடியவர் மனத்தை நீங்கா அப்பனே | 63–64 |
| அண்ட சராசரம் அவன் திருமேனி | 16 |
| அண்ணன் மாரே தம்பிமாரே ஆச்சிமாரே கேளீர் | 67 |
| அத்துவா மாாக்கமாறும் அகற்றியே யடியனேனை | 40 |
| அத்து விதப் பொருள் காப்பாம் | 57 |
| அந்த வாக்கும் பொய்த்துப் போமோ | 109 |
| அந்தம் ஆதியும் இல்லான் அடியரை | 8–9 |
| அந்தமும் ஆதியும் அகன்றோன் வருக | 22 |
| அந்தி சந்தியுஞ் சிந்திக்கு மெய்யன்பர் | 139–140 |
| அப்பனும் அம்மையும் நீயே | 241–242 |
| அப்பனே ஆருயிரே யன்பே யென்னுதரவே | 83–84 |
| அரியதிலரியது ஆன்மா வதுதான் | 215 |
| அரியயனுந் தேடி யறியாத் திருப்பாதம் | 58 |
| அருமருந் தொரு குருமருந்து | 180 |
| அருவாகி நின்றவன் ஆசானாய் நல்லூரில் | 192 |
| அருவாயுருவாயருவுருவாய் நிற்கும் | 211 |
| அருள் நீ தாதா வே—எனக்கார்தான் | 236 |
| அவனே நானென்று | 265 |
| அவனன்றி ஓரணுவும் அசையாது எனும் பெரிய | 193 |
| அறஞ் செய விரும்பென ஔவையார் தந்த | 113 |
| அறிவுடைய ரெல்லா முடையரெனவே | 91–93 |

பக்கம்
அன்பர் பணிந்தேத்தி நிற்கும் நாடெங்கள் நாடே . 12
அன்பர் தஞ்சிந்தையில் உறைவோனே . . . 102
அன்பில்லேன் பொறுமையில்லேன் . . . 228–229
அன்பினுருகி அவனேதானென் றென்றே . . 231
அன்பு சிவ மென்றருளார் சொன்ன மொழி . . 137
அன்பு நெறியு மருணெறியு மறியாதேனை . . 49
அன்புடனே ஐந்தெழுத்தைச் சொல்லு—வேல் வேல் . . . . . . 151
அன்பே சிவம் அறிந்திடடா . . . . 126
அன்பே சிவமென்ற அடியார் திருவாக்கை . . 240
அன்பே சிவமெனு மான்றோர் வாக்கை . . . 139
அன்பே யுருவா யமர்ந்த அடியவருக்கின்பம் . . 110
அன்பே வடிவாய் அமைந்த துறவீ ! . . . 82
அன்னைபிதாக் குருவாகி அடியேனை ஆட்கொண்ட . 195
அன்னை பிதாக் குருவாகி ஆண்டு கொண்ட தெய்வம் . . . . . . 18–19
அன்னை பிதாக் குருவாய் ஐயனை . . . 10
அன்னை பிதாக் குருவானன்—அரன் . . 116
அனைத்துஞ் சிவன்செய லென்றறிந்த பெரியோர்க்கு . . . . . . 25–26
அனைத் துயிரும் நீயே தம்பி . . . . 121
அனைவருக்கும் தெய்வம் ஒன்றே . . . . 243

## ஆ

ஆசான் அருளால் அகந்தை அழிந்தது . . . 185–186
ஆசானைக் கண்டேன் அருந்தவர் வாழ் நல்லூரிற் . 158
ஆடுமயிலே பணிந்தாடு மயிலே . . . . 45
ஆடுபாம்பே பணிந்தாடு பாம்பே. . . . 197
ஆடுவர் பாடுவர் அந்தியும் சந்தியும் . . . 135
ஆண்டவன் திருவடி வேண்டிக் கொண்டால் . . 170
ஆதியு மந்தமு மில்லான்—தம்பி . . . . 117
ஆரகத்தினுஞ் சென்றவர் உண்கிலர் . . . 38–39
ஆரறிவார் என்றப்பன் சொல்வான்—தன்னை . . 167
ஆவதோ ஒன்றுமில்லை அழிவதோ ஒன்றுமில்லை . 119
ஆன்மா ஒருபோதும்—கிளியே . . . . 254–257
ஆன்மா நித்தியம் ஆன பொருளென . . . 238

பக்கம்

ஆனந்தக் கூத்தாடினான் தொண்டன் . . . 146

ஆனந்த நடனம் ஆடினான் . . . . 191

இ

இடைப்பிங்கலை என்னும் இருவாசல் அடைத்து விட்டு . . . . . 175–178

இணைக் கமல மலர்ப்பாத விரலினுனி . . . 208

இராஜாதி ராஜன் ஸ்ரீநடராஜன் . . . 63

இரு நிலனொ டிரவி மதியாயினான் காண் . . 95–97

இருவரும் தேடிக்காணா இறைவன் என்போல். . . 251–252

இல்லாளுந் தானுமிசைந் தொன்றாய் வாழ்வதே . 214

இல்லையென்னாமல் இரப்போர்க் கொன்றீவரேல் . 153

இளம்பிறை சூடிய எந்தை பெருமான் . . . 68

இன்பதுன்பம் இவையே மாயை . . . 7

இன்றாகி நாளையா யிருப்பானை எப்பொழுதும் . . 76–77

ஈ

ஈசனே நல்லூர் வாசனே . . . . 265

ஈழநாடு வாழவந்த எழில் மிகுந்த தொண்டன். . 118

உ

உண்டில்லை யென்று சொல்ல வொண்ணாதான் . 222

உண்ணாதே உறங்காதே ஊருராய்த் திரியாதே. . 154

உண்மை முழுதுமென ஓதுமொரு மொழியால் . . 62

உருக்கு மொரு மொழியால் உளங்கொள்ளை . . 190

உலகமும் உயிரும் உம்பர் பிரானும் . . . 187–188

உலக முவக்கவும் உன்மனங் களிக்கவும் . . 78

உவமானங் கடந்த கடவுள்—கேண்மின் . . 164

உன் நினைவல்லால் இல்லை . . . . 143

உன் நினைவ்லா லில்லை . . . . . 263

ஊ

ஊதூது சங்கே ஊதூது . . . . . 189

ஊனுமவனே உயிருமவனே . . . . 80

எ

எங்கள் குருநாதன் எழில்நல்லை வாசன் . . 51

எங்களை யாள்குரு நாதா—நின் . . . . 52

பக்கம்
எந்தையே! எந்தையே! என்றேத்து மெய்யடியார் . 35–36
எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினல் . 232
எல்லாம் நீயென எண்ணுதல் இன்பமே . . 105–106
எல்லாமவனேயா மெல்லாமவன் செயலே . . . 47
எல்லார்க்குந் தம்பிரா னென்னை வந்தாண்டு கொண்டான் . . . . . 88
எல்லாஞ் செயவல்லபிரான் இங்கு வருமாகில் . . 29–30
எழுக புலருமுன் ஏத்துக பொன்னடி . . . . 6
எள்ளுக்கு ளெண்ணெய் போல் . . . . . 69
எனக்கினியான் பிறர் யாவர்க்கு மினியான் . . 87
என்னை யெனக் கறிவித்தா னெங்கள் குருநாதன் . 1–3
என்னை யென்னு லெனக்கறிவித்தவன். . . 104

ஏ

ஏற்குமோ திருவருளுக் கேற்குமோ . . . 197

ஐ

ஐம்புலன் போம் ஆசைதனைத் தடுப்போம் . . 199
ஐம்பூதம் நீவிரல்லிர் பாங்கிமாரே . . . 223
ஐயனே சற்குரு நாதா—உனை . . . . 41

ஒ

ஒரு சொல்லால் உளந்தூய்மையாச்சே—சிவசிவ . 150
ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமிலான் நல்லூரிற் . 181
ஒரு பொல்லாப்பும் இல்லையென்றே உரைத்தான் . 166
ஒரு பொல்லாப்பு மில்லையடா—தம்பி . . . 207
ஒரு பொல்லாப்பு மில்லையென்பான் உண்மை முழுதும் . . . . . . 199–200
ஒரு பொல்லாப்பு மில்லை யென்றுரைத்தவன் . . 33
ஒரு பொல்லாப்பு மில்லை யென்றென் உள்ளங் குளிர . . . . . . 184
ஒரு பொல்லாப்பு மில்லை யென்னும் ஓசையோடு . 261
ஒரு பொல்லாப் பில்லையென ஓதும் திருவாக்கால் . 155–156
ஒழுக்கம் விழுப்பந்தரும் தம்பிமாரே . . . 66
ஒன்றெனை இரண்டென எண்ணவும் மாட்டேன் . 120
ஒன்றெனக் கும்பிடுவாய் மனமே இந்த . . . 174

ஓ


| | பக்கம் |
|---|---|
| ஓங்கார மேடையின் மேலேறி நின்றேன் | 144–145 |
| ஓடிவாடா தொண்டா ஓடிவாடா | 182 |
| ஓதிஓதி உணர்வதுந் தன்னையே | 11 |
| ஓம் சிவாய நம என்று சொல்லு. | 217 |


க


| | |
|---|---|
| கங்கை சடையுடைய கடவுளைக் கும்பிட்டால் | 27 |
| கடவுளை எங்கும் கண்டு களிப்பார் மெய்யடியார்கள். | 202-204 |
| கண்டவரும் விண்டதில்லை விண்டவரும் | 219-220 |
| கண்டொன்று சொல்லாதே கடவுளொருவன் | 205 |
| கண்ணாலே காணொணாதது கண்ணுக்கு | 221 |
| கருத்தில் கருத்தாகி யிருக்கின்ற தெய்வமே | 263 |
| கருத்தில் நினைந்துருகிக் கைகூப்பும் | 85 |
| கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் | 262 |


கா


| | |
|---|---|
| காட்டகத்தே வாழுங் கருங்குயிலே—கேளாய் | 123 |
| காணுங் கண்ணிற் கலந்து நிற்பது | 122 |
| காயமே கோயில் கடிமனம் அடிமை | 227 |
| காயமொரு சித்திரக் கோயில்—அது | 187 |
| காலை எழுந்திருந்து கைகால் முகங்கழுவி | 134 |


கு


| | |
|---|---|
| கும்பிடுவார் நன் மனத்தைக் கோயிலாய் | 48 |
| கும்மியடி பெண்ணே கும்மியடி | 107-108 |
| குரு பக்தியே பெரும் பேறு | 146 |


கூ


| | |
|---|---|
| கூத்தாடுதே மனமென்ன கொடுமை | 128 |
| கூவுகுயிலே பறந்து கூவுகுயிலே | 24 |
| கூவுகுயிலே பறந்து கூவுகுயிலே | 169 |
| கூறுவார் கோடி பாவம் | 209 |


ச


| | |
|---|---|
| சங்கர சங்கர சம்போ – சிவ | 218 |
| சஞ்சல மிகவும் மிஞ்சுதே சற்குரு நாதா | 267 |

| | பக்கம் |
|---|---|
| சற்குரு தெரிசனம் சகலபாக்கிய சுகம் | 259 |
| சற்குருவைப் போற்றித் தரணியிலே சீரடியார் | 216 |

சா

| | |
|---|---|
| சாந்தம் உப சாந்தம் | 5 |

சி

| | |
|---|---|
| சிவ சிவ செல்வக் கணபதி ஓம் ஓம் | 194 |
| சிவதொண்டு செய்வார்க்குச் செல்வமுண்டு | 28 |
| சிவதொண்டன் நிலையத்திற் சேரீர் | 180 |
| சிவத்தைக் கண்டிடர் தீர்வது வீரமே | 171 |
| சிவ நாமஞ் சொல்லித் தெளியோமோ | 46 |
| சிவ நாம மைந்தெழுத்துஞ் சிந்தித்திடவேண்டும் | 43-44 |
| சிவ நெறிச் செல்வர் தங்கள் | 226 |
| சிவனடிக்கன்பு செய்குவர் பெரியர் | 17 |
| சிவனடியாரைச் சிவனென வணங்கும் | 32 |
| சிவனடியார்கள் சீராய் வளர்க்கும் | 56 |
| சிவனடியைச் சிந்தை செய்வோமே | 152 |
| சிவனொருவனே திசைமுகனுனன் | 136 |

சீ

| | |
|---|---|
| சீரார் இலங்கை நகர் சிறக்க வந்த செல்வமே | 209-210 |
| சீரான வடியரொடு கூடு—சிவ சிவ | 206 |

சூ

| | |
|---|---|
| சூரியன் வருவது யாராலே | 115 |

செ

| | |
|---|---|
| செய்ய மேனியனே சிவனே | 270 |
| செல்வக் குருநாதா! சிந்தை தடுமாறு தெடா | 70 |
| செல்வச் சிவதொண்டன் சீரடியார் தங்கள் | 55 |
| செல்லப்பன் என்னுந் திருவுடையான் தேரடியில் | 147-148 |
| செழும்மலர்த் திருவடி தெரிசிக்கலாம் | 264 |
| சென்றன சென்றன வாழ்நாள் அனைத்தும் | 14 |

சே

| | |
|---|---|
| சேவித்தும் சென்றிரந்தும் சீவன் சிவனென்று | 215 |

சொ

பக்கம்
சொல்லால் வருங் குற்ற மெல்லாம் . . . 133
சொல்லு சிவமே சொல்லு சிவமே . . . 50

த

தம்மைத் தம்மால் அறிந்த சாலப் பெரியோர்கள் . 224
தன்னை அறிந்தால் தவம் வேறில்லை . . 132
தன்னைத் தன்னால் அறிந்திட வேண்டுமே . . 130

தா

தாமரையில் நீர்போற் சகத்திலே தம்பி நீ . . 87
தாவித் தாவிச் செல்லும் மனத்தைத் தம்பி கேளடா . . . . . 124
தானமிடுங்கள் தவம் புரியுங்கள் . . . 71–75

தி

திங்கட் சடையாய் எங்களையுடையாய் சிவனே ஓம் . 129
திங்களுங் கங்கையும் சென்னியிற் றாங்கிய . . 34
திருநீறும் ஐந்தெழுத்தும் வேண்டும்—வேல் வேல் . 15
திருவருள் கைகூடுது சிந்தை களிகூருது . . 198

தூ

தூண்டு சுடர்ச் சோதி தொல்லுலகில் . . 243-245

தெ

தெய்வம் எல்லோர் சித்தத்தினு முண்டு . . 131
தெய்வமே திருவருள் தருவாயே . . . 266

தே

தேடித் தேடித் திரிந்தலைந்து நான் . . . 235
தேடி நின் திருவடியை செல்வமென நாடி வந்தேன் . . . . . . 144
தேவாதி தேவ அடியார் இடர் பொடிபட . . 237
தேனுந்து முக்கனித் தீஞ்சுவையர் போலும் . . 94

தை

தையலார் மையலிற்றான்மயங்கும் மாந்தர்காள் . 86

தொ


| | பக்கம் |
|---|---|
| தொண்டர் நாங்களே—சிவ . . . . . | 4 |
| தொண்டுசெய் வாருக்குண்டே—ஞானம் . . | 103 |


ந


| | |
|---|---|
| நமச்சிவாய வாழ்கவென நயந்து பாடவேண்டும் . | 260 |
| நம்மிட மெல்லா நலனு முண்டு . . . . | 168 |
| நல்ல சமயம் இது தம்பி . . . . . | 149 |
| நல்ல மருந்தொரு குருமருந்தை நான் . . . | 195 |
| நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப் போய் . . | 253 |
| நல்ல மழை பெய்யாதோ நாடு சிறவாதோ . . | 165 |
| நல்லூரான் கிருபை வேண்டும்—நாம் எந்நாளும் . | 99 |
| நல்லூரான் திருவடியை நான் நினைத்த . . | 234 |
| நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு அதனாலே . . | 100 |
| நல்லூர்ப் பதியிலே ஞான நெறி காட்ட . . | 258 |
| நல்லூர் வெளியிலே பொது நடம் புரிகிறான் . . | 114 |
| நல்லைப் பதிக்கரசே நல்லவழி காட்டி . . . | 59 |
| நல்லைப் பதிக்கு நேராய் நடந்து போவோம் . . | 250 |


நா


| | |
|---|---|
| நாமஞ் சொல்லுவோம்—சிவநாமம் . . . | 138 |
| நாற்றிசையுஞ் சென்று நல்ல சிவதொண்டன் . | 60 |
| நானே நீ நீயே நான் . . . . . | 159 |


நி


| | |
|---|---|
| நித்தியம் நாம் என்று சொன்னால் நினைக்கிறோ மில்லை . . . . . . | 173 |
| நித்தியர் நாமென்னும் நினைவு தடுமாறுமற் . . | 113 |
| நில்லாத நீர் சடைமேல் வைத்த நிமலனை . . | 239 |


நே


| | |
|---|---|
| நேசத்தாலரன் நீள்கழல் போற்றுவார் . . | 89-90 |


ப


| | |
|---|---|
| பவ வருடம் மார்கழியிற் பார்தனிலே யெங்கள் . | 65 |
| பழம் பாக்கு வெற்றிலை பச்சரிசி . . . | 235 |

பா

பக்கம்
பாரொடு விண்ணாய்ப் பரந்தான் கண்டாய் . . 272
பாரையனே கடைக்கண்ணால் பாரையனே . . 23
பார்ப்பதெல்லாம் சிவமாகவே கண்டு . . . 162
பார்ப்பார் பரமனை எங்கும் . . . . 172
பாவம்போம் பொல்லாப் பழிபோகும் . . . 81

பி

பிறியென்றான் பிறியாமற் பிறியென்றான் . . 163

பெ

பெரியதிற் பெரியது சிறியதிற் சிறியது . . 118

பே

பேராயிர முடையான் பிறைசேரும் திருச்
சடையான் . . . . . 225

பொ

பொறிவழிப் புகுத்துதே பொல்லாத மனம் . 260
பொறிவழியே போய்ப்புகுந்து புலம்பித்திரிவேனை . 53-54

ம

மண்ணையும் விண்ணையும் மற்றுளயாவையும் : . 37
மண்ணொடு விண்ணும் மறிகடலு மாயுமே . . 212
மதியும் நதியும் வைத்த சென்னியன் . . . 79
மத்த மாமலர் வைத்த வள்ளலை . . . 21
மருந்து கண்டேனே நல்லூரில் நான் . . . 182-183
மறவாதே யென்றென்றும் செல்வன் மலரடியை . 196

மா

மார்க்கம் சன்மார்க்கம் . . . . . 127
மானும் மழுவுங் கரந்து மண்மிசை . . . 31

மு

முத்திக்கு வழியை மொழியக் கேண்மோ . . 13
முழுவது முண்மை யெனமுன் சொன்ன . . 231
முழுவதும் உண்மையென்று மோனமுனி . . 61

யோ

பக்கம்

யோக மறியேன் யான் யோகியரையும் அறியேன் . 111–112

ர

ரங்கனின் திருவருள் தரலாகாதா—ஸ்ரீ . . . 101

வ

வருவார் வருவார் வரம் தருவார் சுவாமி . . 161

வறுமைப் பிணிக்கு மருந்தொன்றிருக்குது . .

வா

வாச மலரடி பேச இனியது . . . . 20

வாழ்க சிவனடி வாழ்க சிவனடி . . . 179

வீ

வீர மாமயி லேறும் வேலவ— . . . . 237

வே

வேடிக்கை செய்கிறுனே பரமபிதா . . . 160

வேண்டில் வேண்டாமை-வேண்டிட வேண்டுமே 141–142

வேத சாத்திரங் கற்றிடல் இன்பமே . . 125

வேலைத் தூக்கி விளையாடுந் தெய்வமே . . 98

919